போகமுனிவர் வைத்திய காவியம் 1000



தாமரை நூலகம்
சென்னை-600 026

போக முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

வயித்திய காவியம் - 1000

பதிப்பாசிரியர்

எஸ்.பி. இராமச்சந்திரன்

தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு

வடபழனி, சென்னை - 600 026

தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 118

முதல் பதிப்பு : பிப்ரவரி- 1869

இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் - 1994

மூன்றாம் பதிப்பு : டிசம்பர் - 2000

நான்காம் பதிப்பு : ஆகஸ்டு - 2015

ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 2022

நூலைப்பற்றி

நூலின் பெயர் : போகமுனிவர் வைத்திய காவியம் 100

நூலின் தன்மை : சித்த மருத்துவம்

பதிப்பாசிரியர் : எஸ்.பி. இராமச்சந்திரன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : டிசம்பர் 2022

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

தாளின் தன்மை : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 224

பிரதிகள் : 1000

நூலின் விலை : ரூ. 140.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

91/4

மு. பரமசிவம்
இ. ஆ. ப.
ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று
ஆராய்ச்சி நிறுவனம்

த. நா. ஆவணக்
காப்பகம்
எழும்பூர்,
சென்னை-8.

கடித எண்: 3222/ஆநா/94 நாள்: 22-4-1994.

அனுமதிக் கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலக—""போக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய காவியம் 1000" நூல் மறுபதிப்பு செய்தல்—அனுமதிவழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ் நூல்களைக் காப்பாற்றி, மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ் நூல்கள் மறுபதிப்புத்திட்டம் ஒன்றினை தமிழக அரசு கல்வித்துறை அரசாணை (நிலை) எண்: 372 (கல்வி) நாள்: 20-4-92ல் வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின்படி "போக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய காவியம் 1000" என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அனுமதி வழங்கப் படுகிறது. மேலும், மறுபதிப்பு செய்யப்படும் இந்நூலின் தங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், அரசின் தமிழ் எழுத்துக் கொள்கை, பொது மக்கள் படிக்கவும், புரிந்து கொள்ளவும் வசதி ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கீழ்க்காணும் மாற்றங்களைச் செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கப்படுகிறது:—

1. தமிழ் எண்களுக்கு பதிலாக இந்தோ—அரபிஎண்கள்.
2. பழைய தமிழ் எழுத்துகளுக்குப் பதிலாக அரசு அறிமுகப்படுத்தியுள்ள சீர்திருத்த எழுத்துக்கள்.
3. சங்கிலித் தொடர் பாடல்களை எட்டுப் வரிப்பாடல் களாக மூலத்திலிருந்து மாறுபடாமல் மாற்றிக் கொள்ளல்.
4. நூலின் கடைசியில் கடின சொற்கள் / பரிபாஷை சொற்களுக்குப் பொருள் விளக்கம் கூறும் பகுதி ஒன்றை சேர்த்துக் கொள்ளல்.

மேற்குறிப்பிட்டள்ள மாறுதல்களைத் தவிர, மூல நுலி னின்றும் வேறு எவ்வித மாற்றமும் செய்ய அனுமதி இல்லை என்பதும் பதிப்பாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள
மு. பரமசிவம்
ஆணையர்.

மறுபதிப்பின் முன்னுரை

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய தமிழ் என்று—வரலாறு படைத்த தமிழ்மொழியில் சித்தர்கள் விட்டுச் சென்றுள்ள இலக்கியச் செல்வம் எண்ணில் அடங்கா.

எவ்வெத் துறையிலும் முதல் மனிதனாக நிற்க வேண்டிய தமிழ் மகன் காலத்தின் கொடுமையால் பின்னால்—மேலும் மேலும் பின்னால் தள்ளப்பட்டு—அன்னிய மோகத்தில் அமிழ்ந்து மூழ்கிப் போய்—தன்னையும் தன் பாரம்பரியத்தையும் மறந்து—இருந்தும் இல்லா நிலையில் தாவரம் போல் வாழ்ந்து கிடந்த நேரத்தில்—

அவனுக்குள்ளே முடங்கிக் கிடந்த உணர்ச்சிப் புயல் உந்தித்தள்ள, அணையும் தருவாயிலிருந்த ஆன்மசக்தி சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்க – தன்னைத்தான் உணர்ந்து கொள்ளும் தவிப்பின் முதல் மூச்சாக சித்தர்களின் நூல்களை இனங்கண்டு கொள்ளத் தொடங்கியிருக்கிறான்.

இந்த வேளையில் தமிழக அரசின் ஆணை மூலம் அழிந்து போகும் நிலையில் இருந்த தமிழ் இலக்கியச் செல்வங்களை மீண்டும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது தமிழ் மகனின் – தமிழின் – நற்பேறு என்றே கொள்ள வேண்டும்.

ஆவணக் காப்பகத்தின் அனுமதியுடன் உங்கள் கைகளில் தவழ்வது போக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய வைத்திய காவியம் 1000.

முனிவரின் சிறப்பையோ நூலின் பெருமையையோ கூறமுற்படுவது அவசியமற்றவேலை. தமிழ்மக்கள் நூற் பயன் உணர்ந்து நற்பயன் அடைவார்கள் என்று நம்புகிறோம்!

பதிப்பாசிரியர்.

எஸ். பி. இராமச்சந்திரன்

உ

சிவமயம்

போகமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய காவியம் 1000

இஃது

மதுரை புதுவை சென்னை யிச்சங்கங்களில்

தமிழ்த் தலைமைப் புலமை நடத்திய

களத்தூர்

வேதகிரிமுதளியார்-குமாரர்கள்

ஆறுமுக முதலியாராலும்

அயுள்வேத பாஷ்கரன்

கந்தசாமி முதலியாராலும்

பற்பலவேட்டுப் பிரதிகளைக் கொண்டாராய்ந்து

பிழையறப் பாரிசோதிக்கப்பட்டு

அ. வீராசாமி நாயுடு

அவர்களால்

திருவொற்றியூர்

இருசப்ப முதலியார்-குமாரர்

பரசுராம முதலியாரது

பரப்பிர்மமுத்திராக்ஷரசாலையிற்

பதிக்கப்பட்டது.

****

1869 வருடம்-பிப்ரவரி மாதம்

ரிஜிஸ்டர்-காபிறயிட்

போகமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய வயித்திய காவியம் 1000

91/4

உ

சிவமயம்

போக முனிவர் திருவாய்மலர்ந்தருளிய வயித்திய காவியம் 1000

காப்புகள்

ஆனந்தமாய் நிறைந்த ஆயிபாத
மகண்டபரி பூரணமாமையர் பாதம்
வானந்த மாகிநின்ற கணேசன்பாத
மருவியதோர் மூலத்தில் நந்திபாதந்
தானந்த மாகியதோர் காலாங்கிபாதஞ்
சனகருடன் வியாக்கிரமர் பதஞ்சலியின் பாதம்
போனந்த மாகியதோ ரிஷிகள் பாதம்
போற்றியா யிரத்திரட்டுப் புகலுவேனே. 1

புகலுவேன் வாதியென்ற பேர்களுக்குப்
போற்றரிய மெய்ஞ்ஞானம் வரவேவேண்டும்
நிகலுகின்ற வாதாரமறிய வேண்டும்
நீக்கரிய காயத்தை நிறுத்தவேண்டும்
பகலுகின்ற பராபரையைப் பூசிக்கவேண்டும்
பானமென்றால் தூசிக்காப் பருவம்வேண்டு
மகலுகின்ற குருமுறையுங் கைம்முறையும்வேண்டு
மனுகாட்டா லிதெல்லாம் வாதம்போச்சே. 2

போகாமல் வாதத்தை நிறுத்தவென்றால்
போக்கோடே சவர்க்கார குருவைப்பண்ணு
வாகாகு முப்பைநன்றாய்க் கட்டியாடு
மருவியதன் பூரத்தையுப் புப்பண்ணு
தாகாகுந் தாளகத்தை நீறுபண்ணு
சமர்த்துடனே வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
வேகாத துரிசியைத்தான் குருவாப்பண்ணு
விளங்கியதோர் வாதமெல்லாங் கைக்குள்ளாச்சே. 3

கரிமுகவன் பதம்போற்றி கடவுள்பதம் போற்றி
கடாட்சித்து யெனையீன்ற ஆயிபதம்போற்றி
அரிஅயன் பதம்போற்றி வாணிபதம்போற்றி
அருள்தந்த லட்சுமி தானாயிபதம்போற்றி
தூரியமாம் பாட்டரென்ற மூலர்பதம்போற்றி
துணையான காலாங்கிஐயர் பதம்போற்றி
நிருவிகற்ப சமாதியுற்ற ரிஷிகள் பதம் போற்றி
நிறைந்து நின்ற சரணமே காப்புத்தானே. 4

நூல்

தானான யேழுலட்சஞ் சிவந்தான்சொன்ன
சாத்திரத்தின் கருவெல்லாந் தரிக்கப்பண்ணி
கோனான குருநூலா யேழுகாண்டம்
கொட்டினேன் வாதமென்ற முறைகடன்னை
பானான பாட்டரைத்தான் கருக்கள்கேட்டுப்
பயின் றெடுத்த ஆயிசொல்லப் பண்புகேட்டு
தேனான காலாங்கி ஐயரையுங்கேட்டு
செப்பினே னேழு ஆயிரந்தான்காணே. 5

(முக்கோணச் சக்கர மகிமை)

காணவே மூலமது அண்டம்போலக்
காரணமாய் திரிகோணமாக நிற்கும்
பூணவே மூன்றின்மேல் வளையமாகும்
பிரம்பாக யிதழது தானாலுமாகும்
நாணவே நாக்கமலத் தட்சரத்தைக்கேளு
நலமான வ-ய-ந-சி-ரீரியாகு
மூணவே முக்கோணத் துள்ளொளி வோங்கார
முயற்சியா யதற்குளே யகாரமாமே. 6

அகாரத்தின் மேலாகக் கணேசனிற்பார்
ஆதியொரு கோணத்தில் உகாரம்நிற்கும்
உகாரத்தில் வல்லபையாள் சத்திநிற்பாள்
ஒடுங்கியதோர் முனையொன்றில் கதலிப்பூவாய்
புகாரமாய் முகங்கிழ் குண்டலியாஞ்சத்தி
பெண்பாம்பு போல்சுருட்டிச் சீறிக்கொண்டு
சுகாரமாய்ச் சுழிமுனையோ டுருவிநிற்பாள்
துரியா தீதமென்ற அவத்தைதானே. 7

அவத்தைக்கு மிருப்பிடமு மூலமாகும்
அழகான கதலிப்பூ யெட்டிதழாய் நிற்கும்
நவத்தைக்கும் நந்தியனுள் வாயில்நிற்பாள்
நற்சிவமாஞ் சிகாரத்தில் கோடிபானும்
வவத்தைகளும் வாய்திறவான் மலரால்மூடும்
மைந்தனே யெட்டிதழி லெட்டுசத்தி
பவத்தைக்குச் சத்தியெட்டின் பேரேதென்றால்
பாங்கான அணிமாவும் லகிமாத்தானே. 8

தானான லகிமாவும் கிரிமாவோடு
தங்குயீ சுரசத்து சத்தில்சத்தி
பூனான பிராதசத்தி பிரகாமிசத்தி
பேரெட்டுத் தேவதையுந் தளத்தில்நின்று
ஏனான யிதழாலே மூடிக்கொள்வார்
ஏத்தமாம் நந்தியைத்தான் காணோயாமல்
வானான வஸ்துவை நீபானம்பண்ணி
வங்கென்று வாங்கியேகும் பித்தூரதே. 9

ஊதினா லென்வாசுத்தில கிரியாலே
உவாவுவா ரிதழெல்லாந் திறந்துவிட்டு
போதினா லாயிசொன்ன யேவல்கேளப்பா
பூத்துபார் நந்திகண்டால் யோகமாகும்
வாதினால் பத்தான வருவித்துக்கும்
வாசலையே திறவாமல் மூடிக்கொள்வா
னேதினா லிதுக்குள்ளே வாசிமாட்டு
யிடத்தோடி வங்கென்று உள்ளேவாங்கே. 10

வாங்கியே நந்திதனில் சிங்கென்று கும்பி
வலத்தோடில் சிங்கென்று உள்ளே வாங்கி
தாங்கியே வங்கென்று யிருத்திக் கும்பி
தளமான தெளிவாறும் வெளியாக் காணும்
ஓங்கியே மாணிக்க வொளிபோலத் தோன்றும்
உத்தமனே மூலத்தி னுண்மைகாணுந்
தேங்கியே வல்லபையாஞ் சத்திதானுஞ்
சிறந்திருந்தாள் பச்சைநிற மாகத்தானே. 11

பச்சைநிறம் வல்லபையைப் பணிந்துபோற்று
பாங்கான ஆறுக்கும் பருவஞ்சொன்னாள்
மொச்சையாய் மூலமது சித்தியானால்
மூவுலகுஞ் சஞ்சரித்து திரியலாகும்
கச்சை நிறக் காயமுமோ கனிந்து மன்னுங்
கசடகன்று ஆறுதலந் தன்னில் தோன்றும்
துச்சைநிற வாதமது சொன்னபடி கேட்குந்
துரியத்தின் சூட்சமெல்லாந் தோன்றும்பாரே. 12

பாரென்று புரியட்ட நாலில்சேர்க்கும்
பளிச்சென்று மூலத்தில் சோதிகாணும்
காரென்ற தீபவொளி கண்ணோகூசுங்
கணபதிதான் கண்முன்னே நிர்த்தஞ்செய்வார்
ஊரென்ற யோகத்துக் குறுதிசொல்வார்
உற்பனமாம் வாதத்தி னுண்மைசொல்வார்
தேரென்ற சதாசிவத்தி நிலையுஞ்சொல்வார்
நீச்சென்று விட்டாக்கல் யோகம்போச்சே. 13

போச்சென்று விடுகாதே மூலந்தன்னைப்
போகையிலு மிருக்கையிலு மனத்தையூணு
பேச்சென்ற பிரசத்தங் கேளாப்பக்கம்
புறத்திருந்து லட்சியத்தைப் பூட்டிவாங்கு
மாச்சென்று வாசியைநீ தவறொட்டாதே
மனந்தன்னை மூலத்தில் மருவிச்சேர்க்கும்
வேச்சென்று கடினம்போல் முன்னேகாணும்
விடுகாதே மாச்சலாய் விரைந்துஉன்னே. 14

உன்னியே பழகுமட்டுங் கடுசாய்க்காணு
முட்புகுந்து பார்த்துவந்தா லுறுதிகூடும்
வன்னியே துலங்கமட்டு மனச்சலைக்கு
மாசற்ற வொளிவுகண்டால் மகிழ்ச்சியாகும்
பின்னியே பின்கலையி னிடையில்கூடும்
பேரான சுழினைதன்னில் நெட்டிட்டேறும்
நன்னியே நமன்வெருண்டு அப்பாற்போவா
னாளெல்லாங் கடிகையுமாய் நாட்டமாமே. 15

வாசியோகம்

நாட்டமாய் லகுவாக மூலம்பாரு
நலமான வாசிகொண்டு ஊதியூதி
ஊட்டமாய் சாக்கிரத்தில் நின்றுநின்று
உத்தமனே நந்திகண்டால் வாதங்காணும்
தூட்டமாய் வெறும்பேச்சால் வார்த்தைசொன்னால்
சுடுகாட்டுப் பிணமான சொல்லுக்கொக்கும்
பூட்டுவாய் மூலத்தி னொளிகாண்மட்டும்
பொற்கொடி போற் சுழிமுனையுந் திறந்துபோமே. 16

சுழிமுனையே திறந்தாக்கால் மனமொடுங்குஞ்
சுழியிலே யகப்பட்ட துரும்புபோலாம்
வழிமுனையே ஆதார மேறலாகு
மகத்தான சித்தியது யெட்டுமாகும்
சுழிமுனையாஞ் சுழித்தியுள்ளே யழித்திடாது
கணக்கோடே வாசியென்ற குதிரையேறு
இழிமுனையி லிறந்தாக்கா லங்கொன்றுமில்லை
யேறுவது கடினமெத்த யிதத்தோடேறே. 17

ஏறவே ஐம்புலனு முலக்கையாக
விடும்பான ஆங்கார முரலுமாக
ஆறவே ஆசையது உருவமாக
அழும்பான மனதையுள்ளே மாட்டிக்கொண்டு
மூறவே ஆசையதை யடித்துச் சண்ணி
முழுமோச மாக்கியல்லோ பிரளப்பண்ணும்
தேறவே யோகமுதல் ஞானம்ரண்டுந்
தெரியாதே யிறந்தவர்கள் கோடிதானே. 18

கோடியென்ற நாற்செனன மண்ணாசையாலுங்
குணமான் ஆசையுட னியாலு
மோடியென்ற மோகத்தில் பெண்ணாசையாலு
மோகத்தால் பூட்டுகிற பொன்னாசையாலும்
தூடியென்ற சுகயோக சுகியினாலுந்
துலையாத பாசத்தின் மயக்கத்தாலும்
வாடியென் றுலகமெல்லா மயக்கமாச்சு
மக்களே வாய்ஞானப் பேச்சுமாச்சே. 19

ஆச்சென்ற பேச்சாலே யொன்றுமில்லை
அரிதான சாத்திரத்தை யாராய்ந்துபார்த்து
மூச்சென்ற மூச்சாலே சகலசனமிறந்தார்
மூச்சடக்கிச் சாகாமல் முயற்சிகேளு
நாச்சென்ற நடுமூலங் கண்டத்தூன்றி
நலியாமல் வாய்வுட வீட்டில்கட்டி
தோச்சென்ற தேசியெங்கு மோடாதப்பா
சோடசத்தில் சீவகளை யிருப்புமாமே. 20

இருப்பான மூலத்தில் கணேசன்பாதம்
இருத்தியே வாசியைநீ யதற்குள்மாட்டு
தருப்பான பிராணாயந் தவறிற்றானால்
தம்பித்து வரவழைத்து தளத்தில்ரேசி
குறிப்பான மாத்திரைதா னேரேயேறக்
குறிகளெல்லாங் குறிப்பாக வறிவில்தோன்று
மறிப்பான வாசியது தழுவுச்சானால்
மனிதரல்ல மாடென்ற வார்த்தையாமே. 21

வார்த்தையால் தர்க்கத்தா லொன்றுமில்லை
வல்லமையா யைம்புலனை மறுத்துக்கட்டி
ஆர்த்தையா லக்கரத்தை விழிரண்டில் வைத்து
அறிவான மனந்தன்னை யதற்குள்நாட்டி
தேர்த்தையால் தேசியென்ற குதிரைதன்னைச்
சிக்கெனவாய்ச் சிங்கென்று கடிவாளம்பூட்டி
மூர்த்தையால் மூலத்தில் மறிந்துகட்டி
முனையான சுழினையிட்டு மூட்டிப்பாரே. 22

மூட்டியே மதுவுண்ணுங் கற்பமுண்ணு
மூதண்ட கவசத்தைச் சித்திபண்ணு
காட்டிலே கனமான மூலிகையையுண்ணு
கசடகற்றுங் கழுசனத்தில் கண்ணொளிதான்மீறும்
ஆட்டியே அண்ணாக்கில் கபத்தைத்தள்ளு
அடுக்காறு தலத்திலுள்ள ஆம்நீக்கு
வாட்டியே ஐம்புலன்ன வாளால்வீசு
மறவாதே யிரவுபகல் வாசிமாட்டே. 23

மாட்டவே மார்க்கமாய் மூலத்தினில்லு
 மறவாதே யொன்றிநின்று தேறினாக்கால்
ஆட்டவே யடிமரத்தைத் தொத்தியேற
 ஆச்சரியம் நுனிமட்டு மேறலாகும்
மூட்டவே மூலமது பழகினாக்கால்
 முகிந்தவிட மாறுகடந் தப்பால்தாண்டி
தூட்டவே துவாதசாந் தத்தில்சொக்கில்
 சுருதிமுடிந் திடமிறிந்து சேரலாமே. 24

சேரவே சகஸ்திரமா முண்டகத்தில்பூவைச்
 சேர்த்தேறிச் சந்திரமண் டலத்தில்புக்கி
ஆரவே அறிவென்ற மனதால்கொய்து
 ஆனைமுகன் வல்லபைக்குங் குண்டலியாந்தாய்க்கும்
பாரவே பதத்தில்வைத்து யர்ச்சித்துத்தூபம்
 பலதூபம் பணிமாறி விவேகத்தாலே
தூரவே சோமப்பா லுகந்தளித்துத்
 தூயதால் மூலத்தில் குதிரைமுனைக்கட்டே. 25

கட்டியே அஞ்சல்பண்ணி குண்டலியாந்தாயைக்
 கருத்தில்வைத்து கணபதியை வல்லபையைத்தானு
மூட்டியே முகிழ்திறந்து வழிதாவென்று
 முனையான சத்தியென்பாய் மயக்கந்தீரத்
தெட்டியே வஸ்துவைத்தான் பானம்பண்ணிச்
 செயலறிந்து கபாடமது திறப்பாரப்பா
எட்டியே நந்திபத மிறைஞ்சிப்போற்று
 ஏற்றமாந் தொழிலெல்லா மெளியிலாமே. 26

எளியிலே நந்திவந்து யிரக்கமாகி
 யெட்டெட்டா மறுபத்து நாலுமிராற்
றெளியிலே வாதங்கை கட்டிநிற்கும்
 நீச்சான குருவகைகள் நிசமாய்த்தோன்று
களியிலே காயமது சித்தியாகுங்
 கருத்தூணித் தான்வாய்க் கக்கலந்துபோவாய்
அளியிலே ஆலமுண்டா னாட்டுக்கானு
 மாச்சரியாஞ் சிலம்பொலியு மயிக்கமாமே. 27

அயிக்கமாய் விழுகாதே காமத்தியி
 லனுதினமும் வேதாந்த முடிவைப்பாரு
ஒயிக்கமா யொருவருடன் வாயாடாதே
 உண்மைபோ லிருந்துஉன்னி லுன்னிப்பாரு
தியக்கமாய்ப் பொய்கொலைகள் செய்திடாதே
 சேர்ந்தேறு வாசியென்ற தேசிதன்னில்
மயக்கமாய் வஸ்துவைநீ பானம்பண்ணி
 மதத்தாலே யழியாதே மாய்கைநீக்கே. 28

நீக்கியே ஐம்புலனை யறுத்துச்சாடு
நித்திரையைத் தள்ளிவிட்டுக் காலையுண்ணு
தூக்கியே ரேசகபூ ரகத்தைத்தானுஞ்
சுயம்பான கும்பகமுங் கணக்காய்ச்சூட்டு
தாக்கியே அமுர்தவெள்ளந் தன்னையுண்ணு
சங்கற்ப விகற்பமென்ற சட்டைநீக்கு
வாக்கியே பிராணாயம் வரிசைதன்னை
மறவாமல் மாட்டுதற்கு மார்க்கஞ்செய்யே. 29

செய்துமே யுற்றுப்பார் கருத்தையூணித்
திகையாதே புலங்களொடு கணேசன்காண்பர்
கொய்துமே பூசைபண்ணிக் குட்டிக்கொண்டு
கூர்ந்துமே வாசிதன்னை யிருத்திவைத்து
ஒய்துமே ஓம்சிறியும் இறியுங்கிலியும்
உயர்செங்கெங் கணபதியென் றுச்சரிக்க
நய்ந்துமே நந்தியவர் கொடிகதிர்க்கொப்பு
நற்சுழியி லொளிகண்டால் நமனாடானே. 30

நாடாமற் போவதென்ன யென்றுகேட்க
நற்சத்த பரிசமொடு ரூபங்கெந்தி
தாடாமல் சத்தோடு பொறிகளஞ்சுந்
தனக்கேற்ற வழிபோகில் மனந்தானோடும்
வீடாமல் வலிபொற்றால் போகொட்டாமல்
மீட்டுதே புனல்ரெட்டி வீசிப்போடு
தோடாமல் காதையைநீ போற்றினாக்கால்
சொல்லொன்றுங் கேளாது சூட்டிப்பாரே. 31

சூட்டிப்பா ரின்னமுநீ பரிட்சைகேளு
துடிதன்னை போற்றிடிலோ ரூபங்காணார்
ஆட்டிப்பா ரமுதத்தனை யடைத்துக்கொண்டால்
வளமான வாசமொன்றுந் தோற்றிடாது
ஊட்டிப்பார் வாய்தன்னி லுப்பையிட்டால்
உருகரிச்ச உப்பென்ற ருசியேகாணும்
ஓட்டிப்பா ரெரும்பது முடலிலூ ர்ந்தா
லேற்றமா மறிவாலே பரிசமாச்சே. 32

ஆச்சிந்த மனம்வேறாய் நின்றாயானால்
அறிவுமகா மந்திரியின் விவேகமாச்சு
ஒச்சிந்த மனத்துணித்தம் பிராணாயாமம்
உசந்தேறி வாசியைநீ பிடித்தேபூரி
மூச்சிந்த மூலத்தில் முதிர்ந்துகும்பி
முனையான வயமுமாச்சு தவறிடாமல்
காச்சிந்த மூலத்தில் நின்றுநின்று
கரைகண்டு தெரியுமே மேலேயேறே. 33

றியே பாரென்று ஐயர்சொன்னார்
எனையீன்ற ஐயர் காலாங்கிநாயர்
பாருயிது வழியென்று பக்குவத்திற்சொன்னார்
பதஞ்சலியும் வியாக்கிரமர் சிவயோகமுனியும்
மீறியே யேறுதற்கு விளக்கஞ்சொன்னார்
மிக்கபரா பரத்தாயு மிதுவேசொன்னாள்
ஆரியே நான்பார்த்த ஆனுவத்தை
அனுபவிச்சே மூாயிரத்தி லமைத்திட்டேனே. 34

அமைத்திட்ட சிரமென்ற அட்சரத்தா
யழும்பாகான் வெளியில் வாகனமேசெய்வார்
குழைத்திட்டங் கொள்ளாத போதந்தன்னைக்
கூறுவார் வெளிதன்னில் கூகூகூகூ
நமைத்திட்ட ஒருசொல்லா லேழுகோடி
நரகமெனும் பிறவியென்ற கடலில்வீழ்வார்
சிமைத்திட்ட சித்தரெல்லா மூலத்துள்ளே
சிங்கென்று உன்னியே தியானிப்பாரே. 35

தியானித்து உள்ளடக்கிப் பூசைசெய்வார்
செயகண்டி சங்கோசை காதில்கேட்கும்
தியானிப்பார் சிலம்பொலியி னயிக்கங்கேட்குஞ்
சிதம்பரமா நடனத்தின் செயலுங்காணும்
தியானிப்பார் சச்சிதானந் தவெள்ளந்
திகட்டாம லுண்டிருப்பார் தேவியீவாள்
தியானிப்பா ரனுதினமுஞ் சிவன்தேவிபதத்தில்
திடமாக மனவிலங்கு மாட்டுவாரே. 36

காட்டியே மனவிலங்கைப் பூட்டிக்கொண்டு
மகிழ்ச்சியா யானந்த மயமுமாகி
பூட்டியே வாசியைத்தான் கும்பித்துக்கொண்டு
புரளாமல் தம்பித்து நிற்பாரையா
நாட்டியே மனமொன்றாய்த் திடாகரித்து
நாதாந்தப் பெருவழியே நாடுவார்கள்
தூட்டியே துவாத சாந்தத்தில்புக்கி
சுருதியந்தத் துள்ளிருந்து துதிசெய்வாரே. 37

துதிசெய் மூலத்தைத் தாண்டியப்பால்
துடியான நாலங் குலமேதாண்ட
பதிசெய்த பிரமனுட வீடுமாகும்
பகர்ந்த சுவாதிஷ்டான மென்றுபேரு
அதிசெயநால் வட்டக வளயஞ்சுத்தல்
ஆறிதழ்தா னட்சாத்தை யறியக்கேளு
பதிசெய்த பாம்புரமா யாகவந்தால்
பாங்கான நடுபீசம் லங்நங் ஆமே. 38

நகாரமென்ற யெழுத்ததுவும் பிரமர்க்காகும்
லாவென்ற யெழுத்ததுவும் பிரிநிவிபீசம்
வகாரமென்ற துரியாதிக் கிருப்பிடந்தான்
புகழ்கின்ற யிருக்கான வேதமாகும்
அகாரமென்ற அன்னமாம் வாகனந்தா
னதினுடைய நிறம்பொன்னி னிறமுமாகும்
மகாருகின்ற இவருடைய தொழிலின்கூறு
மயிரெலும்பு யிறைச்சிதோல் நரம்போடஞ்சே. 39

அஞ்சான பொன்னினிறம் பிரமன்பக்க
லடங்காத வாணிநிற்பா ளறிந்துகொள்ளு
தஞ்சான சதுர்முகமு மபையவரதந்
தண்டுகமண்டலமும் அட்சத மாலையோடு
பஞ்சான பதுமதளமம் மணிமாலை
பகர்ந்தநவ ரத்தினமாங் கிரீடத்தோடு
திஞ்சான தியானத்து தேசியைத்தான்
சிறந்தசபா மந்திரத்தைச் செபித்துவுண்ணே. 40

உண்ணியே சரஸ்பதியைத் தியானித்தூதி
உறுதியாய்ப் பெறுதற்கு உண்மைகேளு
கண்ணியே சகலவித்தை தருந்தாய்நீயே
தாயநிதியே சிங்குவையில் தரிக்குந்தாயே
முன்னியே நீபிரிந்தால் மோடனாவான்
முனிந்துநீ முன்னின்றால் மூத்தனாவான்
கன்னியே யோகசித்தி வாதசித்தி
காயசித்தி ஞானசித்தி கடாட்சியென்னே. 41

என்றுமே தியானித்து வாசிவைத்து
யிழுத்துமே நங்கென்றுயி ருத்திக்கும்பி
நன்றுமே நகாரத்தால் பிறப்பித்தார் கோடி
நல்வினைக்குந் தீவினைக்கு மெடுத்தகாடா
என்றுமே தியானித்து யிருக்கநன்று
ஏத்தமா மலர்கொண்டு அர்ச்சித்தேத்த
அன்றுமே நான் முகன்றன் பதியைவிட்டு
அடியளந்த மாலினுட பதியிலாக்கே. 42

மாலினுட வீடதுதா னறுவிரலின்மேலே
மாசற்ற பிறைபோலே கோட்டையாகு
மாலினுட வளையம்போல் பத்திதழ்தான்
பத்தமு னட்சரத்தின் பயனைக்கேளு
தாலினுட ஜனகமாக முனியின்தாகந்
தயங்காத நரபர்ப்பர் தண்மையாகும்
ஆலினுட மங்க நடுவில் பூதம்அப்பு
அதன்பீசம் வங்கென்று அறியலாமே. 43

மணிபூரகம்

அறிந்தமணி பூரகத்தின் வீடுமாகும்
அப்பனே துரியமது யிருப்பிடந்தான்
பிறிந்தேசர் வேதமுமாம் படிகவர்ணம்
பிரியாம லட்சரந்தான் வாமபாகம்
கறித்தஅறு சுவையுமங்கே காணலாகும்
கதித்த மச்சையொடு உதரமூளை
வெறிந்ததோர் விந்துவொடு அஞ்சுமாகும்
மிக்கசங்கு சக்கரமுங் கருடவாகனமே. 44

வாகனமாய் லட்சுமியு நீசமேதபக்கல்
வாசியொடு மங்கென்று யிருத்திக்கும்பி
ஆகனமா யரிநமோ நாராயணாவென்று
அனுசரித்துச் செபஞ்செய்து அஞ்சல்பண்ணு
தேதனமாய்ச் செகமெல்லாம் ரட்சிக்குந் தாய்தான்
திரோதகையும் பக்கத்தில் சுழற்றுமேதான்
மோகனமாய் மோகமெல்லா மானவீடு
மூக்கணச்சி குடியிருந்து முதிர்ந்தவீடே. 45

வீடாக திரோதகையு மிருந்தவீடு
வெகுயோகங் காமியத்தை விடுத்தவீடு
வாடாத மனங்கலங்கி நின்றவீடு
மாயமெல்லாங் குடிகொண்ட மகத்தாம்வீடு
பேடாகக் கருத்தழிந்து பெண்ணைத்தேடி
பேய்க்கூத்தாய் நின்றலைந்த பெரியவீடு
சாடாக வரம்பழித்த சாதிவீடு
தன்வசமாய் வாசிகொண்டு தாக்கிடாயே. 46

தாக்கியே சந்திர மண்டலத்தில்பூவை
சாஸ்திரமா மிதழாலே தரிக்கப்பண்ணி
பாக்கியே பலபல தூபந்தானும்
பண்பாக மனதாலே பாவகமேபண்ணி
ஆக்கியே மேலேற அருள்தாவென்று
அஷ்டசித்தி தந்துமே அனுப்பநன்று
போக்கியே ஐம்புலனைப் பொறியின்பக்கல்
போகாமல் நிறுத்தவென்று போற்றிசெய்யே. 47

செய்யவே மாலோடு லட்சுமிதானுஞ்
சித்தமகிழ்ந்த போது சித்தியீவார்
பையவே யேறுதற்குப் பலனுஞ்சொல்வாள்
பலபலவாந் தொழிலினுட பக்குவமேசொல்வார்
உய்யவே யிருக்காமல் சட்ந்தானிருக்க
உறுதியாம் யோகத்துக் குண்மைசொல்வார்
ஐயவே அட்டாங்க மனைத்தும்பார்க்க
அதற்கதற்கு அங்கமெல்லா மறிவிப்பாரே. 48

போகமுனிவர்

அநாகதம்

அறிவுக்கு மேலேறி யெட்டங்குலத்துக்
கப்பால நாகதத்தின் வீட்டைக்கேளு
முறிவுக்கு முக்கோண மாகிநிற்கு
முதிர்வளயம் பனிரண்டு யிதழுமாகும்
பிறிவுக்கு காகா கா காஙா ச சா
பேரான சச ஞடா டடாவாகுமே
இறிவுக்கு யிதழில்நிற்கு மட்சரந்தான்
ஏற்றுமாஞ் சுழுத்தியதுக் கிருப்புமாமே. 49

ஆமென்ற சிகாரத்தி னெழுத்துநடுவாகும்
ஆண்மையாம் பூதமது தேயுதானாம்
தேனென்ற செம்மைநிறச் சிகப்புமாகுந்
தேய்வுட பீசமது றவ்வுமாகும்
ஓமென்று வொளிகோடி பானுவாகும்
ருத்திரனும் ருத்திரியும் நடுவேநிற்பார்
கோமென்ற அவருடைய குணமேதென்னில்
கொடும்பொசிப்புஞ் சோம்லோடு பயமுந்தூங்கே. 50

தூங்கவே யெழுப்பிமெள்ளப் பெண்ணைச் சேர்க்கும்
சுகமஞ்சுஞ் சிவன்கைக்குள் தொழில்தானப்பா
ஓங்கவே ரத்தின சிம்மாசனமுமாகும்
உமாசத்தி யாகுமடா அஸ்திமாலை
மாங்கவே மான்மழுவும் வரிப்புலித் தோல்
மகாகொடி சூரியப்பிர காசமாகும்
காங்கவே விபூதிதா தேவதேவா
காப்பாக ணந்தரித்த தாயார்தாமே. 51

தாமென்று தியானித்து வாசியைநீவைத்து
தம்பித்து ஓம் ஆம் அ-உ-ம சிவாயநமாவென்று
ஓமென்று உன்னியே உத்தமிதாய்பதத்தை
உறுதியாய் மனந்தன்னை ஒவ்வப்பண்ணி
ஆமென்று ஐம்புலனை யறிவால்தள்ளி
ஆதியந்த மில்லாத தாயேயென்று
காமென்று கடாட்சித்து அருள்தாவென்று
கருத்தாக மனந்தன்னை யொளியில் வையே. 52

ஒளியான நந்திவா கனமுமாகும்
ஒருசாம வேதத்தி னுருப்புமாகும்
களியான காமப்பால் மாச்சல்செய்து
கடுநரையுந் திரையோடு கண்புகைச்சலாகி
வெளியான சடமழிந்து விந்தையூற்றி
வெறுங்கூத்தாய் ஞானமெல்லாம் விழலாய்ப்பண்ணும்
தொளியான யிவருடைய கூத்தையெல்லாங்கண்டு
கும்பித்துக் குறியோடே கூர்ந்திடாயே. 53

கூர்ந்திட்ட நடுவணையில் காந்திதானுங்
கூகைக்கு மார்க்காலங் குறிகண்டாப்போல்
ஆர்ந்திட்டு அவர்பதத்தில் மனவிலங்குமாட்டி
அறிவோடே யசையாம லதற்குள்நின்று
ஏர்த்திட்டு யேறுதற்கு வழியைக்கேட்டு
எட்டெட்டு சித்துக்கு மியல்பூவாங்கி
வார்த்திட்டு வாதத்தின் கருவெல்லாங் கேட்டு
வகையான காயசித்தி மார்க்கங்கேளே. 54

கேளுமே சந்திர மண்டலத்தில் புக்கி
கெடியான மலர்வாங்கப் பதத்தில்வைத்து
தேறுமே சிவனோடு சத்திக்குந்தான்
சிதையாமல் மனந்தன்னைத் திருவடிசேவித்து
வாழுமே மந்திரத்தை யுன்னியுன்னி
வாசியை நீ மறவாமல் மருவிப்பூட்டி
மாளுமே நீயகற்றித் தூப தீப
மமர்ச்சித்து விடைதரவே சுழிக்காயேறே. 55

விசுத்தி

ஏறியே பன்னிரண் டங்குல மேதாண்டி
யேற்றமாம் விசுத்தியென்ற தலமுமாகும்
மாறவே யறுகோண வளையமொன்று
மகத்துவமாம் பதினாறுயிதழுமாகும்
ஆறவே யிதழுக்கு ளட்சரந்தான்
அ-ஆ-இ-ஈ-உ-ஊ
வாறமது வெயிரோயில்லோ யில்லோ
துளையான எ-ஐ-ஒ-ஔ-அம்-ஆம். 56

ஆம்முதலாய் பதினாறு யெழுத்துமிட்டு
அறுகோண நடுவேதான் வகாரம்நிற்கும்
வாமுதலாய் மயேஸ்பரனு மயேஸ்பரியும் நிற்பார்
மகத்தான சொர்ப்பனத்துக் கிருப்புமாகும்
பூமுதலாய்ப் பூதமது வர்யுவாகும்
புகழான பீசமது அங்குமாகும்
நாமுதலா யதர்பண வேதந்தானாகும்
நல்லமனோ வாகனமாய் நாடலாமே. 57

நாட்டமா யிவருடைய தொழிலினன்றாய்
நடத்தலொடு ஓட்டல் மயங்கிக் கிடத்தல்
நீட்டமாய் நிறுத்தலொடு கலங்காமலிருந்தல்
நிலையஞ்சின் விபரத்தை நிலைக்கக்கேளு
பூட்டமாய்ப் பொசித்தலொடு ராகங்கேட்கல்
பொங்கியே கோபஞ்சண்டை சிமையைத்தாங்கல்
ஓட்டமா யோங்காரம் உன்னைக்கண்டால்
உய்ர்வாயைத் திறந்திடுதல் உறுதிகாணே. 58

உறுதியாம் ருசியாறும் வாயினுள்ளே
உரிசைதான் வாயிலுக்கு ளப்பாலில்லை
பருதியாம் பரமென்ற பீடமப்பா
பரத்தினடி யென்றுமே பண்புமாகும்
பிறிதியா மைம்பொறியின் களையைவாங்கி
பிசகாமல் நாலதனி லொக்கச்சேர்த்து
அறுதியா மாதார மெல்லாம்பார்த்து
அப்பனே நாலுக்கு ளளைத்திடாயே. 59

அளைத்திட்ட நாலுக்குள் சிங்கென்றூணு
ஆதியாம் ஓம்-நமசி வாயாவென்றே
துளைத்திட்டு வாசியை நீவாயினிலூட்டில்
சுறுக்கிட்டுக் கட்டிடவே ஓடாதப்பா
பழைத்திட்டுப் பதினாறு தளத்தில்தானும்
பாங்கான சீவகளை யிருப்புமாகும்
திளைத்திட்ட சீவகளையி ருந்ததாலே
சிறப்பாகப் பாடிவிக்குந் திறமையாமே. 60

திறமையா யுரிசையோடுண் ணப்பண்ணுஞ்
சீவகளை யிருந்துகொண்டு யெட்டுநாளாய்
புறமையா யிருந்துகொண்டு நாவும்பாழாய்ப்
புத்தியுள்ள சீவகளைமதி போல்தேய்ந்து
நறுமையாய் நரைதிரையாய்ச் சேரமாண்டு
நலமான சீவகளைபோகு வதைக்காணார்
குறமையாய் நாதமது கண்டத்திற்காணும்
குறிப்பான திரோதகையின் கூற்றுதானே. 61

தானானவாய் வுடவீட் டில்நின்று
தம்பித்து ஆத்தாளைத் தான்விலங்குபூட்டி
போனான சந்திர மண்டலத்தில் பூவால்
போற்றியே அடிவணங்கி வாசிபூட்டி
தேனான மேலேற வழிதாவென்று
சுத்தசை தன்னியத்தைத் தோத்தரிச்சு
வானான வாதசித்தி யோகசித்தி
மகாசித்தி யோகசித்தி மார்க்கங்கேளே. 62

மார்க்கமாய் மந்திரத்தை யுன்னியுன்னி
வாசியை நீமறவாமல் மருவிப்பூட்டி
ஆர்க்கமாய் வங்கென்றுகும் பித்துநிற்கில்
ஆத்தாளுமை யருமே யகமகிழ்ந்து
மார்க்கமாய் வாதத்தின் வழியுஞ்சொல்லி
வரிசையோடே அதற்குவழி யுஞ்சொல்வார்
ஊர்க்கமா மியேஸ்பரத்தின் பதியைவிட்டு
உயர்ந்தேறி பதினோரங் குலமேலேறே. 63

ஆக்கினை

மேலேறி ரண்டு புருவமத்தியில்
மிகையான அண்டம்போல் நிற்குமப்பா
வாலேறி வட்டமாம் வீடுபோலே
வளையமொன்று ரண்டிதழ்தான் ஷர ஷிரி-வாகும்
ஆளேறி அங்கென்ற அட்சரந்தானடுவே
ஆகாச பூதமாம் பூதபீசம்
மாலேறி மனோன்மணியுஞ் சதாசிவனும்நிற்பார்
மவந்தைதான் சாக்கிரத்தின் வீடுமாமே. 64

வீடுமாம் வர்னமது மேகவர்னம்
விளங்குகின்ற தொழிலது தான்காமக்குரோதம்
வாடுமாம் லோபமொடு மோகமாகு
மதமான மாச்சரியத் தோடஞ்சாகும்
நாடுதான் முகன்மாலுஞ் சிவன்மயேச
னலமாகக் காப்பார்கள் திகைத்துத்தானும்
தாடுசதா சிவன்றானுந் தளவாயாகுந்
தளவாயைக் கண்டாக்கால் சகலமாமே. 65

தளவாயை கண்டாக்கால் சம்சயத்தான் றிருஞ்
சங்கற்ப விகற்பமென்று சட்டைநீங்கும்
தளவாயைக் கண்டாக்கால் தாயோடே சேர்ப்பார்
சச்சிதானந்தத் தின்றண்மை காண்பார்
தளவாயைக் கண்டாக்கால் சகலசித்துமாகும்
தளவாயோ டெடுத்தகள் ளனைந்துநிறமாகும்
தளவாயை ஐம்பத்தொன்றில் காணாதப்பா
சங்கமா யுரைத்துநீ வாசிமாட்டே. 66

உரைத்துமே ஆக்கினையாஞ் சாக்கிரத்தில்
உகந்துமே மனோன்மணியை யுச்சரித்து
மரைத்துமே மந்திரத்தைச் சொல்லக்கேளு
மருவுகா எ இள் கூ ஆகள இரியுமாகும்
அரைத்துமே அசகள் இரியுமாகு மாகு
மதின்பின்பு அதிசக மாயிரமுமாகு
முரைத்துமே முக்கண்ட பஞ்சதேசாவிலுச்சரியே
முனிந்துமே வுச்சரித்து மூட்டுநீயே. 67

மூட்டியே தாயினுட பதத்தைக்கண்டால்
முஷ்கரமா மாய்கையொல்லா மொழிந்துபோகும்
நாட்டியே யெட்டோடே நாலுங்கூட்டு
நாதாத்தச் சித்தியெல்லாஞ் சணத்திலாகு
மாட்டியே தமருக்குள் புகுதலாகு
மயிர்ப்பால நெருப்பாறு கடக்கலாகும்
நீட்டியே நிராதார மறியலாகும்
நிச்சயமாய்க் குறிக்ளெல்லா நினைக்கலாமே. 68

நினைக்கவே ஐம்புலனு மொடுங்கிப்போகும்
நோய்முப்புச் சாக்காடு நரைதிரையும்போகும்
கனைக்கவே காயசித்தி வாதசித்துங்காணுங்
கண்ணிமைக்குள் போறவுயிர் கடிகிமீளும்
அனைக்கவே சாக்கிரத்தி லிருந்து கொண்டு
ஆயியொடு அப்பனுந்தான் கூத்தும்பார்த்து
தனைக்கவே சரிதையொடு கிரிகையோகம்
சார்ந்ததோர் ஞானமெல்லாந் தானானாரே. 69

தானான மனோன்மணியைத் தாண்டியப்பால்
தனித்ததோ ரெட்டுவிரல் மேலேகேளு
கோனான குருபதந்தான் கூட்டிப்பாரு
குறிப்பான யிதழ்காணோ மாயிரத்தெட்டு
ஆனான நடுமையம் ஐங்கோணமாகும்
அகாரமா வுகாரமொடு மகாரமாகும்
நானான நாதமொடு விந்து அஞ்சும்
நலத்தவைங் கோணத்தில் நிற்கும்பாரே. 70

பார்க்கவே உகாரமா நடுமையத்தில்
பரிசுத்த வொளியாகி வுதிக்கும்பாரு
பார்க்கவே நிகாரத்த நிர்மலன்றன் வடிவாம்
பார்த்ததொரு வாசினத்தான் அதற்குள்வைத்து
நேர்க்கவே யோடாமல் நிறுத்திப்பாரு
நிலையாத பிறவியறும் பூரணமுட்கொள்ளும்
ஆர்க்கவே யடிவாழ வேதாந்தத்தி
னாதியென்ற பொருளொருவர்க் கறியொண்ணாதே. 71

அறியொணப் பிரமரந்திர மென்றுபேரு
அதினுடைய நிறந்தானும் படிகவர்ணம்
நெறியொன்ணாக் காயத்ரி யாசலின்னா
நித்யநித்ய நிருபமாகும் நித்யசுத்த
பறியொண்ணாப் பரிபூரண சச்சிதானந்த
பகரரிய நிரஞ்சனாய் வித்துவங்கே
நெறியொண்ணா நிற்பாசா யதிமசியாம்
நெறிவதுனு சூடதம் பிரசோதயாதே. 72

ஆதாரதெரிசனம் காயத்திரி

தேயென்ற விருபத்து நாலாய்நின்ற
தெளிவான காயத்திரி தனைச் செபித்து
வாயென்று வாசியைநீ யிருத்திவைத்து
மனந்தன்னைப் போறவழி போகொட்டாமல்
தேயென்று யிருத்தியே கும்பித்துக்கொண்டு
சிற்சொரூப் காயத்திரி தனைச்செபிக்க
பூவென்ற பிறவியற்று பூரணத்தி லயிப்பாய்
போக்குமில்லை வரவுமில்லை பொருளுமாச்சே 73

பொருளாக மேலேறித் துவாதசந்தான்
போக்கோடே பதினொன்றாய்ப் பிரித்துப்பாரு
அருளான வுன்மனை யிலெட்டுசத்தி
யருளான பரையொன்று பரந்தானொன்று
தெருவான பதினொன்றுஞ் செப்பினேனான்
செப்பரிது காரணந்தா னடியேன் காணேன்
நருளான நந்தியே மூாயிரத்தில்
நாட்டினார் நல்லறிவை நான்காணேனே. 74

காணாத மார்க்கமெல்லாங் காணும்நேராய்
கடுசாக முனைமுத்தில் கடிந்தால்சாரும்
ஊணாதே வூணினால் பிடரிக்குள்ளே
வுறுதியொடு நற்சிவமாம் ருத்திரனுங்காணுங்
கோணாத குண்டலி யோகத்தை நோக்கிக்
கூர்ந்துபார் பதினொன்று மொன்றுகாணும்
நாணாதே நடுமையம் நோக்கினாக்கால்
நலமான காலாந்தகன் கோடிபானே. 75

பானான நூல்சொன்ன படியேவாய்க்கும்
பறந்தோடும் வாசியொடு பழகினாக்கால்
வானான வார்த்தையால் பார்த்திட்டாக்கால்
வளமாகக் காய்தருமே நீர்காய்தானும்
நானான நாய்க்குமே தேங்காய்தானும்
நலமான யோகசித்தி பார்க்குங்காலம்
கோனான பரத்தினுட முடிவைப்பாரு
குடியிருந்த வாசியுட முறையைக்கேளே. 76

கேளுநீ மூலத்தில் குமட்டு வகாரத்தை
கிழமர்த்தி சிகாரத்தைப் போகாமல்ரேசி
நீளுநீ ரேசித்து பூரித்துப்பாரு
நிர்மலமாம் குண்டலியில் நந்திகாணும்
வாளுநீ நந்திவந்து வசனிப்பார்பார்
மகத்தான சித்தியெட்டு ஞானந்தானும்
நாளுநீ வாசிவைத்து மந்திர மகாரத்தை
நலமாகக் கண்டிட்டே நாட்டிடாயே. 77

நாட்டிட்ட மூலத்தைத் தாண்டிப் பின்னர்
நலமான கஞ்சனுட பதியிற்கூடி
ஒட்டியே வகாரத்தை உருத்திநோக்கி
ஒளிவான சிகாரத்தால் உள் ரேசிக்க
பாட்டியே பண்டான பிறவியறலாகும்
பண்பாக நான்முகனைக் கண்டதாலே
மாட்டியே கஞ்சனுட பதியைத்தாண்டி
மாலிருக்கும் பதியூடி மருவிநில்லே. 78

மருவியே வகாரத்தை யுட்பூரித்து
மாதவமாஞ் சிகாரத்தை உள்ளேரேசி
பருவியே பஞ்சநரையெல்லாம் போக்கிப்
பாலனுமாய்ப் பதினாறு வயசுமாவார்
உருவியே மால்கடந்து ருத்திரன் தன்பதியில்
உணர்வான வாசியைநீ உறுத்தித்தாக்கு
தருவியே சிகாரத்தை உள்ரேசிக்கச்
சடந்தானுஞ் சிவப்போடி சித்தியாமே. 79

சித்தியாம் ருத்திரன்றன் பதியைத்தாண்டி
தெளிவான மயேசனுட பதியில்புக்கி
அத்தியாம் வகாரத்தை அசையாமற் பூரி
யதுக்குள்ளே சிகாரத்தை உள்ரேசிக்கட
பத்தியாஞ் சிறுபிள்ளை தானாவார்கள்
பாருள்ளங் கைநெல்லிக் கனிபோலாகும்
துத்தியாஞ் சிவயோகம் வைத்துப்பாரு
துடியாகுங் குளிகையெல்லாஞ் சுருக்கிலாமே. 80

சுருக்கான மயேஸ்பரத்தின் பதியைத்தாண்டி
(சூ) என்ற சாதாசிவ மிடத்தே காலையூன்றி
மருக்கான சிகாரத்தை வைத்துப்பாரு
மகத்தான சித்தோடு கெவுனமாகுஞ்
செருக்கான மனோன்மணி மாதாவின் பாதந்
திறமான வாசிவைத்துப் படியேபார்க்க
மெருக்கான மெய்ஞ்ஞான நீராதாரந்தான்
மெய்யான வாசினைதான் தானும்நீயாமே. 81

நீயான குருபதத்தில் நின்றாயானால்
நீயான சிவயோக வாசியூட்டு
தாயான பூரணமுஞ் சகலதெரி சனமாஞ்
சதமான வகார சிகாரத்தின் மார்க்கம்
வாயான வாலுவைத்தான் வைத்துமங்கே
மதியோடே பார்மனதில் மகத்தாஞ்சித்தி
தீயான நீக்கயிட மத்துநின்ற
சிறந்திடுமே பூரணந்தான் சித்துமாமே. 82

சித்தாகப் பாய்ந்தே நானண்டந்தன்னில்
தெளிவான ரண்டத்தில் திறஞ்சொன்னார்நந்தி
அத்தாக அண்டியஞ்சு தனித்தஅடுக்காக
அதுதாண்டி யிருந்ததுதா னடுக்குமாகி
பத்தாக நுழையென்றார் பாட்டர்தாமும்
பாலித்த சுருபத்தை வாயில்வைத்து
கத்தாக கமலினியைக் கரத்தில் கட்டி
கனல்சோதி யண்டம்போல் நுழைத்திட்டேனே. 83

நுழைத்திட் டேனிருவிகற்ப நிறையானயோகி
நேர்ஞானி சதகோடி சித்தர்கோடி
நிழைத்திட்டுத் தெவிட்டாதே பார்த்து நின்றேன்
சித்துதா னியுனக்கெந் நாளாச்சுதென்றார்
குழைந்திட்டு கோடி யறுபதுமாச் சென்றேன்
குறித்த யிளஞ்சித் தின்னம்பா ரென்றார்கள்
மழைத்திட்டு நுழைந்தேன் பின்னோரண்டத்தில்
மகத்தான சித்தரைக்கை கூப்பினேனே. 84

. கைகூப்பிக் கூடியதோர் பதுமைபோலக்
கையினால் தடவினேன் கைதட்டாது
ஐகூப்பி நீள்காரத்தடைந்த பெரியோர்க
ளறியோரைக் கண்டுநானஞ் சிவலம்வந்தேன்
பைகூப்பிப் பரிவான அடுக்கொன்றுதன்னில்
பாய்ந்தேநான் முடியேறிப் பரிந்துபோந்தேன்
சேய்கூப்பி அண்டமெல்லாஞ் சோதித்தேனான்
சுருக்காக மறுஅண்டம் பாய்ந்திட்டேனே. 85

பாய்ந்திட்டே னண்டத்தில் நுழைத்துபார்த்தேன்
பலர்கோடி சித்தர்கள் பாசித்தார்கள்
ஆய்ந்திட்டு அளைந்திடும் நூலார்தான் சொன்னா
ரையனே யெனக்கேட்டே னடிவணங்கி
சாய்ந்திட்ட சிவன்தானுந் தாய்கண்டு சொன்னார்
தனியேழு லட்சத்தைக் கரைகண்டு பார்த்தோம்
தோய்ந்திட்ட யிந்தநூல் பெருக்கமெத்த
சுருக்காதே போனதென்ன வெனக்கேட்டேனே. 86

கேட்டதுக்கு உத்தரந்தான் சித்தர்சொன்னார்
கிரந்தத்தைச் சுறுக்குதற்குச் சிவனாலுமாகா
மாட்டதுக்கு ஒன்றான சாஸ்திரத்தில்
மகத்துவமாஞ் சுறுக்குண்டோ வென்றுகேட்டார்
சூட்டதுக்குச் சித்தர்கள் தான் சொன்னமார்க்கஞ்
சுருதிநந்தி தொகுப்பெல்லாந் தேர்ந்துபார்த்து
ஏட்டதுக்கு ளேழுலட்ச மியல்புதன்னை
யேற்றகல்லு வெட்டுப்போ லிசைந்திட்டாரே. 87

இசைந்திட்டா ரேழுலட்சத் தியல்பையெல்லா
மெளிதான ஆயிரமா யிசைத்துவைத்தார்
பசைந்திட்ட நூலெங்கே யிருக்குதெனப்பகர்ந்தார்
பாங்கான தெட்சண பாகத்தில்தானும்
அசைந்திட்ட நூற்றறுபதா மண்டலத்தி
லமைத்துவ்வைத்தார் சித்தர்கள் படிப்பாரேடு
கசைந்திட்ட யேடுதனில் கருவென்ன சொல்லுங்
கருமத்தைக் கடாட்சித்துச் சொல்லென்பாரே. 88

என்றதோர் படிக்கின்ற நூலில்தானும்
ஏற்றமாய் பயனெல்லாஞ் சொல்லுமோவென்ன
கண்டதோர் நூல்தன்னில் சாறணையுங் குருத்தான்
சுருக்குமே பதினாறு அங்கந்தானுந்
நின்றுமே யெட்டெட்டு பலசித்தொடு
தியங்காம லாடலாமற் றோர்க்குக்கிட்டா
நன்றுமே தேங்காமல் தெங்குறாசிவயோகம்
நலமான பூரணமு மயிக்கம்பாரே. 89

அயிக்கமே பூரணத்தில் தூங்காமல் தூங்கும்
அன்பான சொரூபத்தைக் காட்டும்பாரு
அயிக்குமே நூலாரர் கையிலுண்டு
அவருடைய பேர்தன்னைச் சொல்லுமென்றார்
கயிக்குமே வாசிக்குங் குருவுமான
காரணமாம் நந்தியவர் காட்டில்நூலை
தியக்குமே சித்தருக்குக் கொடுத்தார்நூலை
திருமூல ரறைந்தநூல் திடமென்பாரே. 90

திடமான நூல்தன்னில் செப்பினதுசொல்லாய்
தியங்காத சாரணைதான் காட்டுமார்க்கங்
குடமான குடோரியொடு சிராவணந்தான்
கொடிதான பரிக்குருவுஞ் செந்தூரங்கள்
தடமான லவணமொடு சத்துச்செம்பு
தனிபுகண்ட குளிகையொடு செயநீராகும்
கடமான திராவகமும் இனக்கூட்டந்தான்
கடிதான மூலிமகா அவுஷ தந்தானே. 91

அவுஷதமொடு வவுஷதவகை பதினேழா
மடங்கலுஞ் சொன்னாரெண் ணாயிரத்தினுள்ளே
எவுஷதமொடு யேழுலட்சுக் கிரந்தப்போக்கை
இடித்துமெண் ணாயிரமா யென்பாட்டர் சொன்னார்
கவுஷ்தமெண் ணாயிரத்தைத் திரட்டித்தானுங்
கதித்த ஐயாயிரமாய்ப் பின்புசொன்னார்
முவுஷிக மூவாயிரமும் பின்புசொன்னார்
முன்னூறு முப்பத்து மூன்றென்றாரே. 92

என்றாரே சாற்றினதோர் தாலேழிற்றா
னேழுலட்சங் கிரந்தத்தின் போக்கெல்லாந்தான்
கன்றாரே கரும்பான பாகபோலே திரட்டி
கருவெல்லாங் கண்டுணர்ந்த படியேசொன்னார்
தன்றாரே தந்தை காலாங்கிநாயர்
தாமுமே சகலநூல் பார்த்துத்தேர்ந்து
அண்டாரே.யகண்ட.ம்போ ல ஞ்சுகாண்டஞ்சொன்னார்
ஆயிரத்தெட்டன்।। மெல்லா மளாவினேஜோ ०२

அளாவினே நூற்றறுபதா மகைடத்தில்
ஐயர்நந்தி சாஸ்திரமு மாராய்ந்து பார்த்தேன்
துளாவினேன் பாட்டருட னென்னூலைத்
துதிசெய்தேன் சுருதியாம் வாக்கியத்தைக்
களாவினேன் காலாங்கி ஐயர்நூலைக்
கருத்திருத்திச் சனகாதி நால்வர்நூலும்
விளாவினேன் ரிஷிசித்தர் நூலையெல்லாம்
வெட்டவெளி யாய்த்திறந்து வீசினேனே. 94

வீசினே னேழுகாண்ட முடுக்காய்ச் சொன்னேன்
வெட்டவெளி யாகுதற்கு நிகண்டுசொன்னேன்
தூசினேன் சூத்திரந்தா னெழுநூற்றுச்சொச்சஞ்
சொல்லரிய நிகண்டதுவும் பதினேழுநூறு
பூசினேன் யோகத்துக் குறுதிசொன்னேன்
பூட்டுகிற லட்சியத்தின் போக்குஞ்சொன்னேன்
ஒதினோன் மந்திரத்தி னுறுதிசொன்னே
னுறுதியாம் வாசியென்ற யோகந்தானே. 95

தானான காயத்தை யுறுதிபண்ணு
தனித்தேநல் வாசிவைத்து வைத்தங்கங்கே
பானேயெந் நேரமுந்தான் பழக்கமாகிப்
பார்த்துநீ தேர்ந்தாக்கால் தேகந்தூக்கும்
தேனாகத் தெளியாத காலத்தில்தான்
சித்தோடு மெய்யாது சித்திக்காது
வானாக வாசிவைத்து உரைக்காதார்க்கு
மருவாக பூரணந்தான் வெளியாகாதே. 96

வாசியோகம்

வெளியான வாசியைத்தான் வரவழைத்து
வீட்டுக்கு ளங்கங்கே வைத்திட்டுத்தான்
தனியாக வைத்திட்டுச் சாதித்தாக்கால்
சாதித்து வாசியு மீசனுமொன்றாகும்
வளியாக வாசியைப்போல் சித்தொன்றுமில்லை
மாசித்து சிவனவனாம் வாசியொன்றில்
ஒளியாக வாசியது உயிரைமீட்கும்
உறுதியாம் சிவயோகத் துண்மைதானே. 97

உன்மையா யிதைப்போலே யேறுகில்சித்தி
உத்தமனே மற்றொன்று மில்லையேதான்
பண்மையாய்ப் பல்லுயிராங்காலமெல்லாம்
பார்த்தாலுங் கிட்டாது பாரிலில்லை
துண்மையாய்ச் சொல்லுயர்ந்த வாசிதானுஞ்
சுருதி முடிந்திடஞ் சூட்சமாகும்
வண்மையாய் வாதிசித்த ரிஷிகள்யோகி
வாசியைப்போல் சித்தியில்லை பரிந்துநோக்கே. 98

நோக்கவே சோம்பினால் நுட்பங்காணு
    நுணுக்கத்தில் வாதம்வந்து யெய்திடாது
பார்க்கவே சோம்பிநீ நின்றாயானால்
    பரமுந்தான் கிடையாது பாழாஞ்சென்மம்
பூர்க்கவே வாசியைத்தான் விட்டாயானால்
    பிறவியாஞ் சரக்கிரத்தி லமுந்திப்போவாய்
நீக்கவே வாசியைத்தான் நிறுத்திநோக்கு
    நிட்களமாய்ச் சோதியொளி யாகுங்காணே. 99

காணவே பதத்தினடி கண்ணேயாகுங்
    காண்பதரி தரிதுமே கண்ணெட்டாதென்றீர்
பாணவே பரத்தினடி யார்க்குமார்க்கம்
    பண்பட்ட கண்ரண்டு வைச்சுமுனைமூக்கில்
காணவே காலசை யாமல்நோக்கிக்
    கதிக்கின்ற நாவிலொன்று சேரில்வெறும்பாழாம்
பாணவே மனோன்மணித்தாய் பட்டப்பகலாவாள்
    பகரரிய ரவிகோடி ஒப்புமாமே. 100

ஒப்பல்ல ஒப்பல்ல கதிந்துபூரணந்தான்
    உகமையாங் கரையில்லை பாய்ந்திட்டாக்கால்
கப்பல்ல களங்கற்ற பூரணந்தான்
    கரையற்று நின்றவொளி மகாபோதந்தான்
நிப்பல்ல நின்றபெண் பிள்ளைகாட்ட
    நிறையற்ற நிர்க்குணந்தான் மௌனமாகும்
முப்பல்ல மோனமாஞ் சமாதியுற்று
    முனைநாசி யூடினால் முத்தியாமே. 101

முத்தியாக் கானகத்தி லிருந்தாலென்ன
    முகையான கடுவூரில் வாழ்ந்தாலென்ன
தத்தியாந் தானமென்ன தனமென்ன
    சாவென்ன பிழைப்பென்ன சாந்தியானால்
வத்தியாம் வானமென்ன அண்டமென்ன
    வாரிதியும் பொய்யாச்சு மனஞ்செவ்வானால்
புத்தியாம் பொய்யாமோ கண்கண்டதெல்லாம்
    பிறிதியுற்ற சாங்கற்றால் பொய்யென்பாரே. 102

என்பதே கண்ணாறக் கண்டதெல்லாம்
    எய்யாமற் காணுதே போனதென்ன
அன்பதே ஐயர்பதம் வாசிவைத்து
    அடைந்தார்க்குக் காணுமது அசைவில்லாட்டால்
நன்பதே காணாது நடனந்தானும்
    நலமாகப் பூணவே திசைநாதங்காணும்
துன்பதே சுருதிமுடி திடமுந்தோற்றுஞ்
    சுத்த சைதன்னியமாம் போதமாமே. 103

போதமே நோக்கவுந்தா னெளிதோசொல்லு
    புக்கியே வாதிவைத்து நிலைத்துப்பாரு
நீதமே மவுனமாய் நிலைத்து உண்ணு
    நிமையான கண்ணுக்கு அடுக்கடுக்க
சாதகமே முறையோடே தப்பாதேநில்லு
    தப்பாமற் பார்க்கவுந்தான் செயலோனந்தி
ஓதகமே உன்செயலா லூடியொளியாகும்
    உறுதிமுப்பாழ் வெளிதாண்டி முடிவுமட்டே. 104

முடிவுமப்பா வுனக்குமே லாதியொன்றில்லை
    மிக்கான பராபரமு மில்லைகண்டாய்
எடிவுயென்றா ளிதுக்கொக்க பின்னொன்றுமில்லை
    யேகமென்பார் காணார்க ளெல்லையெல்லை
துடிவுசொன்ன வழிகேளு சூட்சந்தன்னால்
    தூய்தான கண்டத்தின் மனவடிவைவைத்தான்
படிவுபன்னி யெட்டுள்ளாய் பகுந்தமுடிபாத்தான்
    பயனறிந்து சாதிக்க வல்லோர்தானே. 105

வல்லோர்கள் பார்ப்பார்கள் வாட்டியன்தானாய்
    வாய்க்குமோ யெல்லோர்க்கு மெளிதாச்சோஞானம்
பல்லோர்கள் மாமாய்கை வாட்டியதான்பார்பார்
    பாங்கான மயிர்ப்பாலம் நெருப்பாறுந்தாண்டத்
தல்லோர்கள் வாசினையைத் தவுடுபொடியாக்கி
    தரிக்கின்ற வாசியைத்தான் சந்ததம் பண்ணி
மல்லோர்கள் மார்க்கமாய் ஆறுதலந்தாண்டி
    மந்திரியா மர்க்கடக மழிந்து போமே. 106

மர்க்கடக ஐம்புலந்தான் மாண்டுபோகில்
    மாசற்ற சிற்பரைதான் சுடர்கோடிபானு
கர்க்கடகங் கண்டிடுநீ கடந்தவெளிபாரு
    கடுவெளிக்கு மடியில்லை முடியுமில்லை
உர்க்கடக ஒளிக்கு முடியில்லைகாணும்
    யூணவே யடியில்லை யுன்மனந்தானுன்னு
புர்க்கடக மனந்தானோ மகுத்துவமித்தனையும்
    பெரிதான வழிதாண்டி கூடிற்றுதானே. 107

நரக சொர்க்காதி

கூடிற்று மனந்தானே மாயத்தில்மருவி
    குளபின்பே யலைந்து கொண்டு குறிகூடாது
வாடிற்று மனந்தானே போதத்தில்சொக்கி
    மாறாத கருணைக்குள் வாழ்ந்தோர்சித்தர்
காடிற்று மனமாளுங் கருணையாலே
    கண்டிக்க வாய்க்குமெளி தாமோசொல்லு
[illegible] மாறாத கருணையாலும்
    [illegible]கதே மெய்ஞ்ஞான சித்திதானே. 108

சித்தியா மாறாத கருணைக்குள் நின்று
செகச்சால வித்தையென்று தெளிந்திட்டார்கள்
சித்தியா மவுனயோகத்தில் நின்று
தெளிந்திட்டார் தெளிந்திட்டார் சைதன்னியத்தில்
சித்தியாம் பெரியோர்க்கு மற்றொன்றுமில்லை
சிகராம் வாசியது சொன்னபடி கேட்கும்
சித்தியா மனவாக்குப் பெரியோர்களுக்கு
சொல்லரிதாம் பிர்மைநிட்டை விசாரமாமே. 109

பிரமவிசா ரத்தைத்தான் பேசிடும்வேதாந்தம்
பேசுமறை நூலதுதான் பிரமவிசாரத்தை
பிரமவிசா ரத்தையே பேசும்பதினெட்டு
பேரான அறுபத்து நாலுகலைதானும்
பிரமவிசா ரத்தைப்பேசுந் தொண்ணூற்றாறும்
பிரமவிசா ரத்தையே பேணுமற்றஞானம்
பிரமவிசா ரத்தினுட பேரறியார்மாண்பர்
பேயான மாய்கைதனி லழுந்துவாரே. 110

அழுந்துவார் தானென்ற ஆங்காரத்தி
னவ்வேரைப் பிடுங்காதா ரறியமாட்டார்
வழுந்துவார் வாசியென்ற மவுனியோர்கள்
மாசற்ற பிரம்மவிசா ரத்தைக்காண்பார்
மழுந்துவார் பிறப்பில்லை மரணமில்லை
வாசியுமே சித்தித்த மகத்தோர்க்குந்தான்
எழுந்துவார் காயசித்தி யோ கசித்தி
யெழிலான வாதசித்தி யேத்தந்தானே. 111

ஏத்தமாய் சித்தரச வாதிதன்னை
யிடும்பாகக் காணாமல் தூசித்தாக்கால்
சூத்தமாம் ரவிகோடி நரகில்வீழ்வார்
கொடும்பசியால் வறுமையால் திகைத்தேங்குவார்கள்
நாத்தமாம் நரகமொடு சொர்க்கந்தானும்
நன்மையா யிதுரண்டுஞ் சொல்லக்கேளு
மாத்தமா மலத்திலே கிருமிச்சகிருமி
மகத்தாகச் செனித்ததுபோல் நரகந்தானே. 112

தானென்ற கோபத்தால் வந்தமுறையாலே
தாக்கான செனனமும் பலபலவுமாகும்
தேனென்ற செனனமாய்ச் செனிப்பதெல்லாம்பாவந்
திகைப்பான கோபமது கொடும்பாவந்தான்
மானென்ற சோகத்தின் வழிதானேது
மகத்தான மானிட னாகச்செனித்து
பானென்ற முன்செய்த பலாபலத்தின்குறையால்
பராபரத்தோ டொன்றினால் மகாசொர்க்கந்தானே. 113

தான்னான பூரண மருத்துவ நீபாரு
தளிரான தீடம்போல் தான்முளைந்ததேகம்
கானான கண்டிப்பு கண்டிக்கப்படாது
கத்தியது நடுவோடு வரைதட்டாது
கோனான மனந்தானும் வாசியோடொன்றில்
கூறாத பூரணமுங் குறிப்பாய்த்தோன்றும்
நானான சாய்கையுங்கண்டங்க முந்திப்போகும்
நலமான நிர்மலங் கற்பூரத்தீயே. 114

கர்ப்பூரத் தீபம்போ லொளியுமாகுங்
கடிதான பூரணமும் வாவென்றேகூவும்
பர்ப்பூரம் பாலொத்த வாசிதான் போகும்
பலபலவாந் துன்பமொடு யாவற்றும்போம்
அர்ப்பூரக் காயமது அழியாதாகும்
அதிமாயை யில்லையந்த கண்டத்தில்தான்
உர்ப்பூரத் தோயவே சித்தருக்கு
உறவாடல் மெத்தவுண்டு உண்மையாமே. 115

உண்மையாய்ப் பலியாது யோகந்தானும்
உறுதியாம் பசுவான நீசருக்கு
பண்மையாம் பாவமாங் கோபிக்குந்தான்
பலியாது கொலைசெய்த பாவிக்கேர்க்க
வண்மையாய் மத்திபமாம் புத்தியானோன்
மருளான மகாமோகி மகத்தானமுடன்
எண்மையாய்த் தாட்சிகளு மேற்றுப்பொய்யோன்
இடும்பனாம் அளிம்பனொடு சோம்பன்தானே. 116

தானான பெண்ணைப்பார்த் தேங்கிப்பின் செல்வோன்
தாகான கர்மவரை தப்புமாபாவி
தூனான சோகைவிகா ரந்தான்சோம்பன்
துணையான மூத்தோரைத் தந்தைதாயை
ஆனான அசங்கமில்லா தேதான்வைவோ
னதிகமாம் வீணார்ப் பரானதூரன்
வேனான வெறுங்கைவெகு துட்டன்மூர்க்கன்
வெகுபுல்லன் குருதோஷிக்கும் பொய்யாமே. 117

ஆமே ஆகாமியந்தா னடங்காக்காமன்
அளிம்பான னெரிமுகத்தான் அதியபாண்டி
தூமை துடக்கின் சுதியில்லாச் சண்டாளன்
சிவவேடந் தெரிசிக்கில் தூசிப்போன்தான்
வாமேவு கோள்பொய்யன் லோபியீனன்
மகத்தான யீனாங்கன் வாதிதர்க்கன்
மாமேவு மாங்கிஷத்தை வருந்தித்தின்போன்
மதுவாகி யிவர்களுக்கு யோகம்பொய்யே. 118

யோகத்தா லிவர்களுக்கு யீய்ந்தாற்பாவம்
உடனேதான் நரகெய்தி யுழலுவான்பார்
யாக நூா லிவர்க ளர்ச்சிக்கலாகா
அதிசயமாய்ப் பிர்மத்தி யணுகும்பாரு
காகநூல் கற்பகத்தைச் சூட்டலாகா
கண்காணா தூரத்தே சமராய்நில்லு
நாகநூல் ஞானத்தை விழத்தலாகா
நாட்டினால் நரகெய்தி நலங்குவாரே. 119

நலங்கவே ஆருக்குக் கொடுப்பதென்றால்
நாதாந்தி வேதாந்தி பிரமவிசாரத்தார்
மலங்கவே அவதூதி கர்மிகூர்மி
மகத்தான சிவயோகி மதிமார்க்கத்தார்
துலங்கவே சுத்த சைதன்னியத்தோர்கள்
சொல்மொழியால் மறவாத தூய்மையாளர்
கலங்கவே தர்மமனுட்டித்தோர் சார்ந்தோர்
கற்புடைய மங்கையரைக் கருதார்தாமே. 120

தாமென்ற தந்தைதாய் பூசிப்போர்கள்
தமையடைந்த பேர்களையே தற்காப்போர்கள்
ஏமென்று எவ்வுயிருந் தம்முயிர் போலென்று
மிரங்குவோர் வரம்புதப்பி யிகழ்ந்திடாதார்
வாமென்ற வாசியுடன் வாதித்தாடு
மகத்தோர்கள் வாமத்தின் வழியில் நிற்போர்
ஆமென்ற அப்புனுடன் உப்புபோல்
அடைந்தோர்க்கு அடங்கலும் போதிக்கலாமே. 121

போதித்து யோகத்தின் பொருளைக்காட்டி
பேரான ஞானத்தின் பொருளைச் சொல்லு
ஆதித்து அமர்ந்தாக்கா லதில்பிழைப்பான்
அல்லாட்டால் பேயானவான திஷ்ட்டயீனர்
சோதித்து நாள்வரைக்குங் கற்பஞ்சூட்டு
துடியான வாதத்தின் சூட்சஞ்சொல்லு
காதித்து கைகாட்டு அருளோடுபொருளுங்
கைம்முறையாய்க் குளிகையொன்று சூட்டிநீட்டே. 122

நீட்டுகின்ற அசச்சையது நிரந்தரமுங்காட்டு
நீங்காத பூரணத்தை அத்துமதுபாரு
நாட்டுகின்ற யெட்டுநா லதனில்சேர்ந்து
நடித்துமே கண்டத்தை நின்றுகூடி
ஆட்டுகின்ற ஆடிச்சு நிறைந்தகத்திருக்க
ஆண்மையாங் கதிரேது முனைமூக்கில்நின்று
ஊட்டுகின்ற யோகிக்குத் தன்னிடத்தேயோடு
முதிக்கின்ற ஞானிக்கு மதுபதமாமே. 123

பதமான லோகத்தா ரிந்தமுறைகேளு
பதியான அம்புலியில் முழங்குஞ்சீவன்
நிதமான நித்திரையில் நெடுவீதியோட்டல்
நிறைந்த சையோகங் கொட்டாவியேக்கத்தால்
இதமான முப்பதுமா யறுபதுமாயாடும்
இயலான புரியஷ்ட்ட மொவ்வொன்றாக
நதமான நாளுக்குநாள் சீரணிச்சு
நாடியே நமன்பதிக்கு யெய்துவாரே. 124

நாடுமிறந் தோடியே நமனுக்கெய்வார்
நலமான வாசிநிறைத் துள்ளேவாங்கில்
ஆடுதிரு நடனமு மம்பலமுங்காணும்
ஆட்டுனுட குறிப்புத்தான் மேலோகிலோ
நாடு மூலாதாரஞ் சபைதொந்தோமென்றே
நாட்டியே தலமாறு முருகிச்சுழியோடே
பூடுகபாலம் புகுந்து குருபதத்தில்மேவி
புகுந்த மண்டலத்திதழ்தா னாயிரத்தினெட்டே. 125

எட்டாகக் கருமண்டல மூட்டிக்கவிழ்ந்து
இதமாகக் கைகண்ட யோகங்காணும்
கட்டாகக் கபாலத்தைக் கடந்துமெய்யென்று
கதிர்போலே புகையோடி துவாதசாந்தத்தை
உட்டாக உண்டிருந்துஅச் சபையைத்தான் மறித்து
உயரமா முகடேத்த கபாலங்கல்லாம்
இட்டாகக் கடுங்கனலே மிகவுமுண்டு
எல்லாந்தான் தெரிசனமா யேறுங்காணே. 126

ஏறுமே லேன்றீர்கண் மூக்கிலேதாச்சு
ஏறியே வாசிகொண்டு மனத்தோடுனு
ஊறுமங் கென்றுன்னி னாலுருகும்பாழில்
ஒளியோடு பூரணந்தான் கோடிபானு
தேறிதிபச் சுடரில் திக்கெல்லாங்காணுந்
தெவிட்டாத முனைநாசி சிறக்கும்நாலு
வீறுயுறைந் திடுயோகத்தாலே மூட்டிட
மிகக்கடந்தபொருள் தானும்ஞானமாமே. 127

ஞானந்தா னாலான பதவொளியுமாச்சு
நலமான வாதந்தான் யோகமாச்சு
பானந்தான் பாருமதினல் லூரலாகும்
பரவுமுப்பாழ் கடத்துமே பாருந்தியைத்
தானந்தான் பார்த்திடவே பரம்வெளியாச்சு
சாதித்து யேறிடவே வெறும்பொய்யாச்சு
தோனந்தான் தோத்தரித் துசுருதிமனோன்மணியே
சுகமுற்ற பூரணத்தைக் கண்டிட்டேனே. 128

போகமுனிவர்
புரியஷ்ட்டம்

கண்டிட்டு சுழிமுனையில் மனைமோட்டி
கண்மூடி விழிரண்டும் நினைவில்நோக்க
பண்டிட்ட நினைகாரம் பளிச்சென்றுதோணும்
பராபரமா மணித்தாயும் பரியொன்றீய்ந்தாள்
அண்டிட்டுயேறினா லகண்டவெளிகாட்டும்
ஆண்மையாம் போதத்தி லடுத்துவிக்கும்
துண்டிட்டு பரத்தினடி தன்னிற்காட்டுஞ்
சுருதி மனோன்மணித்தாயும் வாவென்பாளே. 129

வாவென்ற சடமெல்லாம் பிரமன்கூறு
மறைந்து நின்ற ரத்தசல மாலின் கூறு
போவென்ற திதற்குள்ளே புரியஷ்டந்தான்
பேரான சூட்சமென்ற தேகங்கேளு
சேவென்று காசிரமாம் சிவன்தானொன்று
சேர்ந்ததின் மேலாதாரமா மயேஸ்பரந்தானொன்று
தாவென்ற யகாரமாம் சதாசிவன் தானொன்று
சார்ந்துநின்ற விந்துவதின் மேலுமாமே. 130

மேலான விந்துவின் மேல்நாதமொன்று
மிக்கவதின் மேல்சத்தியொன்று கேளு
ஓலான விதின்மேலே சிவன்தானொன்று
உற்றசிவ னாரென்னில் வராட்டியந்தான்
பாலான வதின்மேலே பரைதானொன்று
பாருயிந்த யெட்டல்லோ புரியட்டந்தான்
மாலான விதினெட்டால் பிறப்பிறப்புமாச்சு
வாரான புரியஷட்ட மார்க்கந்தானே. 131

மார்க்கந்தான் புரியஷ்ட்டக்கூத்தே கூத்து
மகத்தான கோடி சென்ம மெடுத்துஆடும்
ஏர்க்கத்தா புரியட்டத் தெழுவகைத்தோற்றம்
எங்குமது விரிந்தாடப் பிரபஞ்சமாச்சு
பார்க்கத்தான் புரியட்ட பரவான் கூத்து
பண்பாக விதையறிந்து கூர்ந்துபாரு
தீர்க்கந்தான் பார்த்தறிந்த பெரியோர்தாமும்
திறத்தோடே தள்ளியதின்மேல் நிற்பாரே. 132

நிற்பார்கள் பரைமேலே முப்பாழ்கேளு
நீங்கியோ நடுவெளிப் பாழாமதுக்குமேலே
ஒற்பார்களொ ளிபாழாய் நிற்கும்பாரு
உயர்ந்து மேலதைத்தாண்டி யுரைக்கக் கேளு
விற்பான வெளியொளிப்பா ழ்விரைந்துபாரு
மிகுமூன்று வரைதாண்ட உன்மனத்தாய்நிற்பாள்
கற்பான மொழியுடை யாள்தமரின்வாசல்
தனிப்பந்தான் போதமது ஒன்றாய்ப்பாரே. 133

போதமது தானென்று மவள்க்கேபேரு
　　போரான தீகண்ட மென்றவிளக்கேபேரு
சேதமென்ற தவன்கடுக்க அவளேபோதஞ்
　　சேர்ந்தணுகில் தமர்க்குள்ளே சேரலாகும்
ஆதமது கண்டவர்கள் கண்டவீதி
　　ஆதியில்லை யந்தமில்லை யறியப்போகா
நேதமது போதமது யென்னவாகும்
　　நேரரிது மனக்குறவர் நேரொட்டாதே. 134

மறுபிறவியில்லாமல்

நேராது யென்றுசொல்லி சிவயோகிதானும்
　　நிலைத்து உன்னிப்பரையளவு மோடனாலுங்
காரான பிறவிவந்து யெய்துமெய்தும்
　　கருவில் பிறந்தாலும் சிவயோகியாவான்
பாரான பரையளவும் புரியஷ்ட்டமாச்சு
　　பண்பான வரைகடந்து வெளிப்பாமுற்றால்
ஆரான வெளிப்பாழை யண்டமென்று
　　அர்ச்சித்துப் பார்த்தாக்கால் பிறக்கொட்டாதே. 135

ஏதென்று பிறக்காம லதற்குள்ளேநின்று
　　இன்னமொரு வரையேறி யிதுவேயென்பான்
வாதென்று அதற்குள்ளே மயங்கியேங்கி
　　மற்றுமொரு வரையேறியிது தானென்பான்
நீதென்று மூன்றுவரை திறந்துயேறி
　　சிறந்துநின்று உம்மனையை யிதுதானென்பான்
பாதென்று ரவிகோடி வன்னிகோடி
　　பரிவான மதிகோடி பரிந்துபாரே. 136

பரிந்துபார் முதற்பாழில் பூதபூதம்
　　பரியாகச் சித்தித்தால் வாதியாவான்
எரிந்துபாரண்டான் பாழடுத்திட்டாக்கா
　　லெட்டெட்டுமறு பத்துநாலாஞ்சித்தன்
முரிந்துபார் வீனான பாழ் புக்கினாக்கால்
　　மூச்சான வாசியது பிறந்ததானம்
நரிந்துார் நால்பரிஞ்சு போனவிடங்கண்டால்
　　நமனடுங்கிப் போனவிடம் நாட்டிடாயே. 137

நாட்டியே நிராதாரந் தன்னில்சொக்கி
　　நலமாகக் குழைந்துள்ளே புகுந்தாயானால்
தாட்டியே தானென்றநாமம் போச்சு
　　சாஸ்திரத் தாலாராய்ந் தபொருளும்போச்சு
சூட்டியே சுழுத்தியைப் போலுறக்கமாச்சு
　　தூங்குவார் மாடுபோ லொன்றுங்காணார்
தாட்டியே சடம்போன சுழுத்தியினில் புகுந்தகால்
　　தனித்தசிவன் போலாவாய் நீயுங்காணே. 138

காணவே ஆடியதோர் கூத்தைப்பார்த்து
கருத்துரைத்த பின்புதான் வாதம்பாரு
பாணவே யாதார நோக்கியேறு
பாதத்தா லாடியதோர் கூத்தைக்காணும்
நாணவே வாசியுட நடப்பைக்கண்டால்
நடனமாங் கூத்ததுவுங் கண்முன்காணும்
தாணவே நடனத்தின் கூத்துகண்டால்
தடித்ததோர் சாவதும் பொய்யாய்ப்போமே. 139

போமென்று சொன்ன ஆராதாரத்தில்
போக்கான தளத்தில்நிற்கும் அட்சரந்தான்
ஆமென்று சேரஐம்பதட் சரமேயாச்சு
அப்பனே ஒன்றெங்கே காணோங்காணோம்
ஆமென்று ஆசானை யடுத்துக்கேளு
அதுவறிந்து சொன்னாக்கால் குருவேயாகும்
தாமென்று மறியனென்றால் ரண்டுகேட்டி
னலமான ரண்டுகெட நாதநாமே. 140

நாமென்றே போகிறதும் வருகிறதும் ரண்டாம்
நலமான ஒரெழுத் துயெங்கேயென்றால்
கோமென்ற குருபதத்தி லயிக்கியமாகக்
கூடியே மருவிநின்று ஹரியென்றாகி
வாமென்றே வாசியினால் சிகாரமாகி
வாசியோ டொன்றியே சிங்கென்றாச்சு
தேமென்ற வோரெழுத்தால் வாசியாச்சு
சீவனாச்சு சடமாச்சு அண்டமாச்சே. 141

ஆச்சென்ற வோரெழுத்தால் கோபமாச்சு
அரகரா உற்பனமுமொடுங் கினமுமாச்சு
ஒச்சென்ற வெழுத்தாலே யொளியுமாச்சு
உள்ளடங்கச் சோதியைப்போல் நந்திநந்தி
தேச்சென்ற யெழுத்தடங்கில் சோதிகாணும்
தேகமுமோ விளக்கொளியாஞ் சிந்தையில்லை
தாச்சென்ற சந்திரனுஞ் சூரியனுமொன்றாத்
தயங்காதே சுழிமுனையில் பேணிக்கூடே. 142

கூடுவது முப்பாழு மூன்றுவீதி
குறிப்பாக முனையுமணி கூடிச்சேர்க்கும்
நாடவே நாலுக்கு ளடங்கும்பாரு
நலமாக யேணிபழுவா கக்காணும்
ஏடவே தளத்தோடு யெழுத்துபாரு
ஏறினால் முப்பாழுங் கட்ந்துபோகும்
மாடவே பராபரத்தில் மனோன்மணியாந்தாயும்
பரிவான வமுர்தமொடு பாலிப்பாளே. 143

பாலிப்பாள துகடந்தால் நிராகாரந்தான்
பார்த்துமே தெளிந்தபின்பு பரத்தேயேகில்
போலிப்பாள் தெளிவான போதம்போதம்
போக்கோடே யென்குருவு மதற்குள்சென்றார்
ஏறிப்பாழிது கடந்து ஏறிப்போனே
னிளைப்பாறி யிதுகடந்து அந்தத்தேரில்
சோலிப்பான சிலம்பொலியில் புக்கினேன்யான்
சுகமெல்லாங் காலாங்கி ஐயர்க்காச்சே. 144

ஐயரென்ற காலாங்கி நாயனார்தா
னறியாத சிறியோர்க்கு அறிவுதந்தார்
உயிரென்றவுடல் பொருளாவியுந் தான்மூன்றாம்
உலகத்தார் கொண்டவர்க்குப் பலந்தானென்ன
செய்யரென்ற சிலம்பொலிக் குளவரும்வந்தார்
சிரசுவைத்து அவர்பதத்தில் சரணஞ்செய்தேன்
எய்யரென்று யெனையாண்டு ஞானங்காட்டி
யெளிமையாஞ் சஞ்சலத்தை யோட்டினாரே. 145

சஞ்சலத்தை யொட்டியே வாதங்காட்டி
சார்ந்திட்டு யெனையாண்டு குளிகைகாட்டி
மஞ்சலத்தில் வாசியென் றகுதிரைகாட்டி
மனமடங்கப் பூரணத்தினந் தங்காட்டி
தெஞ்சலத்தில் சித்தரெல்லாம் பணியக்காட்டி
தேதிகரா மென்குருவு மண்டத்தெய்தில்
சஞ்சலித்துக் கண்களித் தேவுன்கருணை கூர்ந்தேன்
கருணைதந்தா யென்றுரைத்து கடாட்சித்தாரே. 146

ஆரேஐம் புலனறுத்தால் மனமொன்றாச்சு
அதிகமன வாய்வுவெனப் பூசித்தெங்கும்
போரென்ற வாயுமேல் மனதுயேறி
பொறிகடந்து நெறிகடந்து போக்குந்தாண்டி
கூரென்ற ஆறொடுக்குளப் பதமுந்தாண்டி
கொடிதான முப்பாழின் போக்குத்தாண்டி
மாரென்று மணித்தாயைச் சரணம்பண்ணி
வைத்துப்பார் நாலுக்குள் மருவிப்பாரே. 147

மனம்பெருமை- மவுனயோகம்

மருவியே முந்திமுந்தி மூலம்நீதான்
வாசிகொண்டு பாய்ச்சியதில் மாட்டிப்பேரு
உருவியே குறியின்மேல் கொண்டாயானால்
உற்பானநாலை விட்டா லெக்குமில்லை
அருவியே முன்பின்னுங் கீழுமேலும்
அழலென்ன தழலென்ன மதிதானென்ன
கருவியே கனங்கொள் ளாக்காட்சியாகுங்
கனங்கொள்ளாப் போதத்தைக் கண்டிடாயே. 148

கண்டிட்ட மனத்தாலே தவமுமாச்சு
கவர்ந்த வுயிரதுவு மனமேயாச்சு
மண்டிட்ட வாயுமேல் மனமுமாச்சு
மகத்தான சஞ்சலத்தால் மனம்பேயாச்சு
அண்டிட்ட தீபம்போல் மனமே சென்று
அகண்டத்திற் சேர்த்துதென்றா லதுதான்போதம்
மண்டிட்ட மனம்விட்டால் ஞானம்போச்சு
வாசியைத்தா னழுவவிட்டால் யோகம்போச்சே. 149

யோகத்தை விடுகாதே மவுனமார்க்கம்
உற்பனமாய்ப் புத்திசொல்லியுள்ளா னென்றுசொல்லிக்
காகத்தைக் காலாங்கி நாயனார்தாமும்
கடாட்சித் துமுன்னேதான் பிராணாயாமம்
மோகத்தை முதிர்ந்தபின்பு மொழிந்தசொல்லுகேளு
முந்தினதோர் மூலத்தில் அகாரமீசன்
தாகத்தை உகாரமது சத்தியாச்சு
தனித்தரண்டுங் கூடுவது மவுனமாமே. 150

மவுனமா மூலத்தே முந்திமுந்தி
மருவினால் பளிச்சென்று லிங்கங்காணும்
நிவுனமா லிங்கமது நந்திநந்தி
நேராக யெட்டிதழும் விரிந்துகாணும்
உவுனமா மதத்தைவிட்டுச் சுழிமுனையினோடே
ஓகோகோ அநாகதத்தில் மவுனமொட்டு
கவுனமா மசைந்து நிததமவுனத்தாலே
சிரசுசடை யசைந்தாட நடனங்காணே. 151

காணப்பா மேலேறி ஆக்கினியினுள்ளே
கருத்தா நீ மவுனத்தைத் தாக்கினாக்கால்
நீணப்பா சதாசிவன்றான் நிர்த்தஞ்செய்வார்
நிலையாக சிவகாமி யிருந்துபார்ப்பாள்
ஆணப்பா அவனிடத்தில் கவர்ந்துநித்தம்
அணுகினாலம் பலத்தி னடையலாகும்
மூணப்பா அதைவிட்டு அறிவின்மூல
முதிர்ந்தே றவாசியுட முறைமைகேளே. 152

முறைமையாய் நடுவுக்குள் மவுனமூன்றி
முதிர்ந்துமனந் தேறவிட்டுத் திறமாய்நில்லு
திறமையா யறிவென்றா லெழில்சேர்மைந்தா
தேறுவதுந் தவறுவது மதுக்குள்பாரு
அறமையா யறிவினுட மூலங்கண்டால்
அசடில்லை க்ர்ப்பூரத் தேகமாச்சு
செருமையா யாலயத்துச் சிவன்றான்வந்து
திரட்டி யன்னங்கொடுக்கை யிலேயுண்ணலாமே. 153

உன்னலா மென்றுநித்த மூலத்துள்ளே
உறுதியா யொவ்வொன் றாயுரைத்துக்காணும்
என்னலா மினத்தோடே வரிசையோடே
யேமாற லில்லாம லெத்தியாடு
கன்னலா மட்சரத்தில் கருத்தைவைத்துப்பாரு
கருநின்ற மந்திரத்தைச் சேர்த்துவுண்ணு
பொன்னலாம் புலன்றன்னை யவரவர்களிருக்கும்
பேரான வீட்டில் வைத்துப்பூட்டுப்போடே. 154

பூட்டிட்டு நாலாக வெளியினுள்ளே
புகழ்கின்ற சோதியைப் பார்பொருளேதோன்றுங்
கூட்டிட்டு ஒவ்வொன்றாய்க் கடிந்துகூடுங்
கொள்கியதோர் மூன்றாந்தா னரைதானுள்ளே
மாட்டிடமேற் கண்ணின் மணித்தாயப்பா
மருவிநின்ற கொலுக்காணகண்ணுண் டோசொல்
மீட்டிட்டு மேலான பத்மிதானஞ்சென்றால்
வேதாந்த முடிவான வெளியுமாச்சே. 155

ஆச்சென்ற வெளியென்றா லிருண்டவெளியல்ல
ஆதியாம் உன்மனைத்தாய் விளக்காய்நின்றாள்
ஓச்சென்ற ஒளியென்றா லொளியுமல்ல
ஓகோகோயிரு வருந்தானொன்றில்நிற்றார்
காச்சென்ற நிராகாரங் காணுங்காணுங்
கண்டுடனே மண்சூரிகலந்து போகும்
வாச்சென்ற விளக்கொளியில் வீட்டில்வீழ்ந்து
மாண்டதுபோல் மனஞ்சென்று மருவுந்தானே. 156

மருவினால் முத்திமுத்தி மைந்தாகேளு
மற்றதெல்லா முத்தியல்ல மருவுமார்க்கம்
புருவினால் மனஞ்செயித்தால் போக்குமில்லை
பூணாட்டால் பேய்க்கூத்தாம் பொல்லாமாய்கை
உருவினால் யோகத்துக்கிது வேமார்க்கம்
உண்மையாய்ப் பார்த்தபடி யுறுதிசொன்னேன்
இருவினாலிந்த முறை யேத்துவாசி
யேறாட்டால் யோகமெல்லா மிழக்குந்தானே. 157

தானான நாதவொலி நின்றுவோங்கா
சமர்த்தான பூரணத்தே தளர்ந்துமொக்கி
லானான மனமிரத நிராகாரத்தை
வாய்திறந்து சொல்லுதற்கு நாமமேது
பானா னநிர்க்குணமோ காணேன்காணேன்
பாங்கான கரையில்லை பதியோகாணேன்
ஊனான மூலத்தை நின்றுயேற
ஓட்டினே னுற்பவத்தைக் கண்டிலேனே. 158

உற்பனமாம் பூரணத்தில் கரையோகாணே
னுயர்ந்து நின்றசன காதிநால்வர்காணார்
நிற்பனமா மூலகுரு தானுங்காணார்
நிலைமை யாஞ்சுகர் முதலாய்ச்சித்தர்காணார்
நிற்பனமாம் நிட்களத்தின் கரையேசொல்ல
நிலையான வேதாந்தம் விளம்பக்காணேன்
அற்பனமாம னமோடி யண்டிற்றானால்
அவிடத்தே லயிச்சுநின்று அழுந்தலாமே. 159

லயிச்சுநின்று அழுந்துவது யெவ்வாறென்னி
லன்னமிஞ்சவ வஸ்துவுண்ட ஆண்மைபோல
சுயிச்சிநின்று சொக்குவது யெவ்வாறென்னில்
சோதியா மமுர்தமுண்ட தூய்மைபோல
குயிச்சுநின்று அழுத்துவது யெவ்வாறென்னில்
கோரக்கர் கற்பமிஞ்சுங் கூர்மைபோல
இயிச்சுநின்று யிம்மூன்று மொப்புமல்ல
ஏத்தமா மானந் தபோதைதானே. 160

தானெங்கே பார்ப்பதென்றால் மூலமாகுந்
தருகுரும்பமிலேச் சருக்குங் காணுஞ்சோதி
ஆனங்கே ஆதாரத் தளமுங்காணும்
ஆட்டான முப்பாழுங் கடந்துபோகுங்
கோனெங்கே தமர்வாசற் குள்ளேபுக்கில்
கோடிமதி கோடி ரவியெண்ணொண்ணாத
பூனங்கே பூரணத்தின் கரையோகாணோம்
பூத்துடனே காந்தயம்போல் பொருந்தும்பாரே. 161

பொருந்துவ யெவ்வாறு யென்றுபேசில்
பொருந்திப முடைதிரிபோல் நெய்யுமாகும்
வருந்துவது வருணசலம் ரவியுண்டாப்போல்
மகா அஞ்சுவர்ண முண்டபடிகம்போல
தருந்துவது சலத்தடங்குங் குமுளிபோலச்
சேத்தமவண் கூப்பிட்டுக் கேட்டாப்போல
ஒருந்துவது மொடுங்குவது மிதுவேமார்க்கம்
உத்தமனே மதத்தோடு உன்னுஉன்னே. 162

உன்னுதன்மை ஞானத்துக் காதாரமாச்சு
உண்மையாஞ் சாந்த மல்லோயோகச்சார்வு
வன்னுவண்மை விவேகமென்ற வாழ்வுமாச்சு
வாய்திறக்கா மவுனமென்றே மனதுக்கின்பம்
நண்ணவுண்மை ஞானத்துக் கோடும்வீதி
நலிவில்லாத் திடமல்லோ மகத்தாம்வீரம்
புண்ணுவுண்மை பூரணமாம் பொறியைத்தள்ளு
போக்கோடே மவுனத்தில் பூட்டிநில்லே. 163

நில்லாமல் மடவார்பால் மாயத்தூடில்
நிருத்தலையாங் கொள்ளிமையத் தெறும்புபோல்வாய்
கல்லாமல் காமுகனாய்த் திரிந்திடாதே
கடிதான பாழாசை தொடந்துதானால்
வல்லாமல் விழிகண்டு வலையிற்சிக்கி
மற்றது மேசமாதி விட்டுக் கழண்டாயானால்
அல்லாம லொன்றுமில்லை நீயுங்கேட்டார்
யநிஷ்ட முனக்கில்லை யென்று அறிந்து கொள்ளே. 164

கொள்ளென்ற யோகமார் பார்த்தாரென்றால்
குணமான சூடாலையென்ற பிணந்தான்
வள்ளென்ற மூடர்பிள்ளை சுவாலமூர்த்தி
வண்மையா யவருக்கு முபதேசித்தார்
புள்ளென்ற வாசியெல்லாம் போகொட்டமாற்
போக்கோடே குண்டலியிற் கருத்தைப்பூட்டி
வெள்ளென்ற வயதெல்லாம் விருத்தியாக்கி
விளங்கியே அரசருக்கு அருள்செய்தாளே. 165

செய்தவளை பெண்ணென்று அறியான்மன்னன்
செகத்துவச னவளாலே சேர்ந்தார்ஞானம்
பைதவளப் பதினாறு யுகக்கற்பந்தான்
பரத்தோடே யொன்றாகப் பரிந்துபோனால்
தொய்பவளத் துவாபரமாம் யுகத்தில்தானுஞ்
சேர்ந்துமே யிருவருந்தான் கலந்து போனார்
கைதவளப் போக்கியவளு தவும்பெண்தாய்
கற்புடைய பெண்ணானா லணையநன்றே. 166

அணையவே பெண்ணவர்க்கு வந்ததேது
அதிகமாம் நால்யுகத்திற் செய்ததவப்பயன்நான்
பிணையவே பெண்ணான ரூபமாச்சு
பேதித்த குருவாச்சு பெண்மூராச்சு
மணையவே பதக்கமுத்தாரப் பெண்தன்னோடே
பரவியே மூலமா முறுதியோகம்
கணையவோ பெண்ணைவிட்டா லாகாதெண்ணிக்
கனவாலே காயப்பெண் கலவாளப்போ. 167

கலந்துமே விண்ணான துறவியென்றார்
காமமாம் பெண்ணைவிட்டு நிங்குநீங்கு
அலந்துமே காலாங்கி ஐயர்தாமும்
அடித்துமே பெண்ணாசை தள்ளிவிட்டார்
புலந்துமே பிள்ளைகளை வேறேவேறே
போயெங்குந் திரியுமென்று விடையுமீய்ந்தார்
கலந்துமே கருவூரார் தெற்கே சென்று
கடிய ரிஷிகயில்சாபங் கொண்டிட்டாரே. 168

கொண்டிட்ட பின்புதாஂ போதுமப்பாவென்று
கொடிதான காந்தி : திக் குள்ளேசென்றார்
என்றுயெனை யாண்ட காலாங்கிநாயர்
ஏகவெளியம் பலத்தேயேகிநின்றார்
பண்டுபா ரபரனால் கடாட்சத்தாலியான்
பாய்ஞ்சு மேவிண்ணேறி யோங்கிவந்தேன்
மண்டுமணித் தாயோடு பழக்கமாகி
மன மூணித்திரும்பி வந்தேன்மக்காள்பாரே. 169

சுண்டாயோகம்

வந்தேறி நெஞ்சினுள்ளே நினை வையோட்டி
வளர்ந்த பனிப்புதைபோலே யிழைந்துவோடும்
பந்தேறி நினை வையுன்னிப் பற்றிப்பாரு
பரிஞ்சுமே மேல்கொண்டா லுன்னிப்பாரு
மந்தேறி மகேசரத்தை நின்றுபாரு
மருவவே யிதற்குள்ளே நாலைக்கூட்டி
புந்தேறிச் செய்தவரா ரென்றால்கேளு
புசுண்டர் செய்தார்சதா நித்தம்பூட்டியாடே. 170

ஆடவே யவார்செய்தவகை யேதென்னில்
ஐயமாங் கும்பகந்தா னறுபத்துநாலு
பூடவே பூரகந்தான் முப்பத்திரண்டு
புகையான ரேசகந்தான் பதினாறாகும்
ஆடவே யவரிருந்து பெற்றார்பேறு
அழகான கற்பக மரத்தின்மேலே
காடவே காகமென வுருவைக்கொண்டு
கண்டிருந்தார் கோடியுகங் கரைகாணேனே. 171

கரைகாணா கோடி பிர்மா கண்டாரையா
கரையற்ற விஷ்ணுமயங் கோடிகண்டார்
கரைகாணாச் சங்காரங் கோடிகண்டார்
தாக்கோடே மயேஸ்பரத்தைத் தாண்டிநின்று
துரைகாணாச் சதாசிவன் தானொடுங்கிச்சத்தி
துலையாத நாதமுடன் விந்துஅற்று
திரைகாணா சிவன்சென்று சிற்பரையிற்சேர்ந்து
தெளிகடந்த பூரணத்தில் சொக்கினாரே. 172

சொக்கியே புசுண்டரு மேயவளைத் தொட்டு
சுழுத்தியென்ற சினேந்திரன் றானுநின்றார்
பக்கியிந்திர சாலவித்தை போட்டாளாகில்
பரிந்து மேசணப் பொழுதிற் பிணியும்வந்து
நிக்கிநிச மெனவிரித்தாள் கூடாரத்தை
நிமிஷத்திலண்ட மெல்லா மயர்ந்து போச்சு
சுக்கியிதை வேணுமென்றால் துடைக்கவல்லாள்
சுருதிக்கு வித்தான முத்திதாயே. 173

முத்தியிலே நின்றுவந்த புசுண்டமூர்த்தி
முன்போலே கற்பக மேயாவாவெ ் றார்
பத்தியிலே யதுமேலே கூடாரமென்றார்
பார்க்கையிலே கூட்டோடே விருட்சமாச்சு
நித்தியிலே நின்றுரைத்த சித்தைப்போல
நிலவரமாக் கூட்டுக்குள மர்ந்துநின்றார்
கத்தியிலே நிற்கிறதோர் பூவைப்போல்
கண்டத்தே நின்றுரைத்துக் கருதினாரே. 174

உரைத்துமே புசுண்டருட பிறப்பைக்கேளு
உகந்துமது நடனங்கள் களிக்கும்போது
பரைத்துமே பரிதிமுதற் சோமனையுந்தரித்து
பராபரமும் பார்வதியும் பார்த்தாரத்தை
நிரைத்துமே சிவகளையைக் காமம்போல்
நேர்ந்தணைய அன்னமங்கே நிறைகெற்பமாச்சு
இரைத்துமே யிருபத்து ஒன்றுபிள்ளை
யீசனுட களையாலே புசுண்டராச்சே. 175

ஆச்சென்ற விருபது பேர்கர்மத்தாலே
யநேக நாளிருந்துமே சுழிந்துபோனார்
போச்சென்று அவர்பிடித்தார் பிராணயோகம்
பேரான சீவகளை பூந்ததாலே
பேச்சென்ற ஆணவம் பிறந்தால்யார்மேற்
பேறுபெற அவர்போல யாருக்காகும்
மூச்சென்று முந்திமுந்தி மூலயோகம்
ஒளிவுகண்ட மட்டுமே நெஞ்சிற்பாரே. 176

பாரென்ற நெஞ்சில்நிற்கும் நடுமூலந்தான்
பரிநேராய்ப் பார்த்துமே பழக்கமாகி
பூரென்று வந்து தென்றார் புசுண்டமூர்த்தி
பொரிநெருப்பு பஞ்சுபட்டாப் போலேயாகும்
போரென்ற பரத்தேறும் போகரேயப்பா
பின்குஞ்சிலிற கொடிந்து காலும்போனால்
ஏரென்ற வினத்தோடே கூடாததாய்போல்
இளமையிலே மூலத்தைக் கூடிடாயே. 177

கூடாட்டா லரிதரிது பிராணனென்றார்
கூறியதோர் சொன்னமொழி கேட்டுப்பொங்கி
ஆடாட்டா லடியற்றமரம் போல்யானும்
அவர்பதத்தில் வீழ்ந்தெழுந்தே னாண்மையாக
நாடாட்டா லையரன்று போகமூர்த்தி
நம்போலே வாழ்ந்திரென்று யெடுத்தாரையா
மூடாட்டால் சொன்ன மொழிமூலமாதி
முதிர்ந்து நின்ற பிராணனைத் தானறிந்திட ாயே. 178

அறிந்திட்ட ஓயரெங்கே யிருப்பதென்றால்
அதிகயா மேருவுக்குத் தெற்கேயாகும்
முறிந்திட்ட வாதமுண்டு ஞானமுண்டு
மூர்க்கமாம் யோகமுண்டு சித்தெல்லாமுண்டு
பிறந்திட்ட பிராணனைத் தானறியப்பண்ணி
பூரணந்தான் லயிக்கின்ற போதங்காட்டி
உறிந்திட்ட மரவாச லுணர்வுகாட்டி
யுபதேசத் துண்மைதானுரைத் திட்டாரே. 179

உரைத்திட்டு அழிக்கிறதும் படைக்கிறதுஞ்செய்தார்
உரையான சிவயோகம் ஆண்மையாலே
வரைத்திட்டு அனுப்பியே விடைகொடுத்து
மாசற்ற மூர்த்தியே போய்வாருமென்றார்
தரைத்திட்டு ஐயருமே சாகைக்குப்போனார்
சாங்கமாப் பிள்ளைகட்குத் தண்மைசொல்லி
புரைத்திட்டுப் பிராணனைத் தானறியுங்கோளென்று
போதித்தேன் பிள்ளைகட்குப் புத்திதானே. 180

தானான ரண்டெழுத்தை யூட்டியேறிச்
சதிரான சிவயோகங் கையிற்சிக்கும்
ஆனான விசுத்தியிலே நின்றுகொண்டு
அப்பனே நினைவாலே மூலம்பாரு
கூனான சுழிமுனையுங் குழலாய்க்காணுங்
குறிப்பாக வாசிவைத்துக் காலையாட்டு
பானான பதிசென்று நந்திகாந்தி
பண்பான மதுவையுண்டு பரிந்துபாரே. 181

பரிந்து நின்று கண்டத்தைப் புருவமையம்பாரு
பண்பான சுடர்போலே பகுந்துகாணும்
குரிந்துநின்ற குருபதத்தைத் துவாதசத்தைப்பாரு
கூர்மையாய்ப் பதியினொன்றுங் கடந்துதோன்றுங்
கரிந்து நின்று கண்டத்தில நாகதத்தைப் பாரு
கலங்காமல் பிராணனுமோ நிலைத்துக்காணும்
அரிந்துநின்று அநாகதத்தை மாலோடுபிரமன்
அடுத்துப்பார் வெட்டவெளி யல்லலாமே. 182

அல்லலாந் தேகத்தை யறியவென்றால்
அடுத்தேறி யுன்மனையில் நின்றுபாரு
கல்லலாங் கீழ்நோக்கக் கண்டிப்பந்து
கையினால் பிடித்தவிட மொன்றுமில்லை
வல்லலாம் லெட்சியங்கள் வழியாச்சானால்
வாராது நித்திரையும் பசியுங்கேளு
புல்லலாம் பிறசத்தங் கேளாப்பக்கம்
பிறந்திருந்து லெட்சயத்தைப் பூட்டிமூட்டே. 183

பூட்டையிலே பிறசத்தங் கேட்டுதானால்
புலன்களது முஷ்க்கரமாய் முறித்துப்போடும்
மாட்டையிலே மனதுசற்றே வழுவிச்சானால்
மடையனாய்க் கடித்தவெள்ளெலும் பாய்ப்போவாய்
நாட்டையிலே மனமலைக்குஞ் சூட்டொட்டாது
சோதனையாங் குறிகளெல்லாஞ் சுழற்றிப்போடுங்
காட்டையிலே வேதைநெல்லிக் கனிபோலாகுங்
கனமாய வாசிவைத்துக் கருத்தையூணே. 184

ஊணிப்போங் கப்பலுக்கு நங்கூரம் போட்டால்
உறுகின்ற வாசியை நீயுரைத்துக்கட்டி
ஆணிப்போ மசையாமல் மனத்தை மாட்டி
யடியோடே யடுக்காறு தளத்திலோட்டி
நாணிப்போம் புலன்றன்னை நாட்டிநாட்டி
நரிபரிக்குக் கடிவாளம் பூட்டிக்கூட்டி
மூணிப்போ முளையடித்துக் குருபதத்தில் பிடிக்க
முனிந்த நிராகாரத்தில் முட்டி யோடே. 185

ஓட்டியே மூலத்தால் முத்திபெற்றார்
உத்தமனே பாட்டனென்ற மூலநாயர்
நாட்டியே நத்தியல்லோ வுபதேசித்தார்
நலமான மூலத்தில் நந்திநந்தி
ஏட்டியே மூலத்தால் முத்திபெற்றார்
ஏத்தமா பாட்டரென்ற யெட்டுபேரு
மூட்டியே விதுகடந்த மூலம்மூலம்
மூலமென்று மூச்சுவிட்டுப் பேசொண்ணாதே. 186

பேசொண்ணா மூலத்தே யெல்லாந்தோன்றும்
பொருளாக விரித்துநின்று பிரபஞ்சமாகிப்
பேசொண்ணாப் போகமெல்லா மனுபோகித்துப்
பெரிதான மூலத்தே வந்துசேரும்
பேசொண்ணாக் கேசரத்தே யுர்ப்பனமும்பயமும்
போக்கொன்று வரத்தொன்று ரண்டுஞ்சொல்வேன்
பேசொண்ணா அகாரமது உற்பனத்தைப்பண்ணும்
பிரிந்துகொள்ளு முதாரத்தா லயமுமாமே. 187

லயமான நிஷ்களமா மகாரமொன்றில்
நந்தியென்பாரதின்பேரு அதுவே போதம்
ஓயமான ஓங்கார மதிலேநின்று
ஓராறு தலமூறி யுயர்ந்து தாழ்ந்து
நியமான பனிரண்டாய் நின்று ஆடி
நிலைத்துநின்ற யெட்டினுட களையைவாங்கி
ம்யமான காமப்பா லிரைத்திரைத்து
மாண்டு போங்கள் எருடன் மருவிடாதே. 188

மருவது தானெதையென்றால் மூலத்தீயை
மாட்டினால் வாசினையுங் கைவிட்டேகும்
கருவது வாய்ப்பேச்சால் கருதிடாதே
காமப் பேய்யிடித்தது போக்கேயூணு
உருவது தான்மனமொத்து உள்ளேபார்த்தா
லுற்றகள்ள ரைவருந்தானோடிப் போவார்
முருவது தான்முன் பின்னையென்றாயானால்
மூலத்தில் காலனாங் காலனில்லைத்தானே. 189

தானான காலனுண்டேன்று லகோர்சொல்வார்
தனிக்காலன் வேறில்லை மூலன்காலன்
ஆனான ஆலமுண்டான டனஞ்செய்தா
ரதைக்கண்டு பதஞ்சலியு மன்புகூர்ந்தார்
கோனான பிரபஞ்சத்திற் றில்லைக்குள்ளே
கூப்பிட்டு ஆட்டுவித்துக் கூத்துகண்டார்
ஆனான கன்னியன்று ஆலங்காட்டி
லாட்டிவித்தாள் திருநடனஞ் சிவனைத்தானே. 190

சிவசத்தி வுந்திலே தானாய்நின்று
சேர்ந்து நின்றயீடபாகத்துத் துரியவீடு
அவசத்த அபானமது நின்றுகொண்டு
அதிகமலஞ் சலங்கழித்து அருந்தல்கேட்கும்
தவசத்த சமானனதிற் கூடிக்கொண்டு
சாப்பிட்ட பதார்த்தமெல்லாஞ் சமனாய்ச்செய்யும்
துவசத்த நெஞ்சான சுழுத்தியுள்ளே
துலங்கிய தோரென வாசத்தியீசன்றானே. 191

ஈசனென்ற யிடத்துள்ளே யிதனைக்கேளு
யீராறு அதினுள்ளே காவலாச்சு
தாச்சென்ற பதினொருவர் கருவிகூட்டந்
தனித்துநின்ற பிராணனங்கே நிற்கும்பாரு
கோச்சென்றுங் கொலுவிருந்தார் சத்தியீசன்
கொள்கின்ற சொற்பனத்தின் வீட்டைக்கேளு
பாச்சென்ற பரத்தினுட அடியுமாச்சு
பாங்கான வுதானனங் கேபாரித்தானே. 192

பாரித்துப் பதினாறு கருவிகூட்டம்
பண்பாகக் கொலுவிருந்தார் பரமன்சத்தி
வீரித்துயவ் விடத்தே நின்றவரனார்
விராடன் மதலுறைந்தால் முன்பின்னிரண்டுங்காணும்
ஏரித்து யெட்டினுட களையைவாங்கி
யிடிகுரை விட்டவிட மெத்திப்பாரு
பூரித்துகடந்து வெள்ளப் புருமையத்தே
பேரான சாக்கிர மாந்தல மிதாச்சே. 193

ஆச்சென்று பதினாலு கருவிகூட்ட
மதினின்றார் சதாசிவனு மணித்தாயாரு
வேச்சென்ற லியானனங்கே விரைந்துநின்றான்
மேலான கொலுவாச்சு பிரபஞ்சமாச்சு
தேச்சென்ற கருவியங்கே தொண்ணூற்றாறு
சுயம்பாக வதினுடைய தொழிலைச்செய்யு
மாச்சென்ற மறந்ததெல்லாந்தோற்றமாகு
மணங்குவிந்து பூரணத்தின் கொலுவிதாமே. 194

தாமென்ற கொலுக்கண்டு கருவிக்கூட்டத்
தனித்தங்கே யிந்திரியக் கூத்து கண்டு
மாமென்ற மாமாயை பெண்ணினாசை
மகத்தான படுகுழியில் மாய்ந்துகாண்பார்
ஆமென்ற வடிவெடுத்து ஆங்காரங்கூட்டி
யழிம்பான மயக்கத்தானக மேலாக்கி
பாமென்ற பாவத்தைத் தலைமேற்கொண்டு
பாங்கான வாசனையிற் புகுருவாரே. 195

புகுருவார் நரகத்தில் மூலங்கண்டு
புகுந்துமே தீயொளியிற் கூடக்கூடி
கருருவார்களை யிருந்த பானுவீட்டில்
கலங்காமல் கலந்து அந்தவொளியுங்கண்டு
தகுறவே சந்திரனார் வித்துவீட்டில்
தாமதமாய் வித்தணலை மேவப்பண்ணி
அகுறவே ஆரண சோனைபோல
அமுந்தவே வுடல்குளிர்ந்து புளகமாமே. 196

ஆமென்ற சாம்பவிமுன் திரையைக்காட்டி
ஐங்கோணக் குருபதத்திற் புகழைக்கண்டு
நாமென்ற நாதவிந்தா மீசன்சத்தி
நற்கமல மாயிரத்தெட் டிதழின்மையம்
தாமென்ற ரவிகோடி மதிதான்கோடி
சார்ந்துநின்ற மூலத்திற் சதமாங்கோடி
வேமென்ற அவ்வொளிக்கு நின்றுமேலே
விருக்கிறதே தேவுவென்ற பிரமன்தானே. 197

பிரமமாம் பிரமமென்பார் போதமென்பார்
பிரகாச சுத்தவெளிசார வென்பார்
நிரமமாம் வேறொன் றிலாதநிர்க்குணந்தான்
நிர்மலமாங் கடந்துநின்ற வேதாந்தமென்பார்
பிரமமாம் பிரபஞ்சமெல்லாம் விளைந்துதென்பார்
வெளியாக நின்மயமாய் நிறைந்துதென்பார்
வர்ம்மமாங் கடந்துவழி வெளிதானென்பார்
வாய்ப்பேச்சே யல்லாமல் வரைகாணாரே. 198

வரைகாணாப் பூரணத்தி ரெனாளியைச்சொல்ல
மதியேது ததியேது தீய்தானேது
நிரைகாணா நிரஞ்சனமா மொழியைக்காண
நிசமாகக் கேசரியால் நீட்டிப்பாரு
புரைகாணாப் புல்லருக்கு வொன்றுமில்லை
புத்தியுள்ள சித்தருக்குப் பொருள்தான்மேலே
உரைகாணார் மூலத்தே பார்த்துயென்ன
வுறுதியில்லா துண்ணியே வுளரிப்போச்சே. 199

ஆசனத்தி லப்பியாசிக்க முறை

உண்ணவே அகார முதலன் பத்தொன்று
முறுதியாம் பதினாறிற் பிரிந்துதப்பா
பண்ணவே அகாரமது யீசனாச்சு
பதிக்கடுக்க ஆர்த்திகஞ் சத்தியாச்சு
எண்ணவே யிப்படி பதினாறீகரமும்
ஏத்தமாஞ் சிற்சத்தியாக நின்று
முண்ணவே யிதனாலே முப்பத்தஞ்சாச்சு
மூவுலகோ ரெழுத்தாக முதிர்ந்தவாறே. 200

முதிர்ந்த வன்பத்தோ ரெழுத்தால் வேதமாச்சு
முக்யமாம் புராணமொடு சாஸ்திரங்களெல்லாம்
விதிர்ந்த பின்புபதற்குள்ளே விரிந்துதப்பா
மிக்கசச்சி தானந்த விரிவினாலே
நதிர்ந்தாறு நதிகளெல்லாஞ் சமுத்திரத்திற்புக்கி
நகர்ந்தாப்போல் பூரணத்தி லபிச்சுப்போகும்
ஓதிர்ந்துதே யொன்றுமில்லை தீயுமில்லை
யோங்கியதோர் நாலுமில்லை யொளிதான்காணே . 201

ஒளியான வாசியைத் தானுன்னிக்கொண்டு
உருண்டாலும் பிரண்டாலு முன்னுமூலம்
அளியான ஆணியடித்தாப் போலக்கூடும்
அப்பவொரு விக்கினங் களணுகிடாது
குளியான முழங்கால்மேல் குதிகால்போட்டுக்
கொடுஞ்சுறுக்காங் கோமுகா சனத்திற்கூட்டு
வெளியாக வணுத்தாக்கால் வலக்கால்மேலே
விபரமா மாசனத்தில் கூடிடாயே. 202

ஆசனத்தில் கூடயிலே வாசினைகண்டி
லத்துடைமேல் ரண்டான பதத்தைவைத்து
பாசனத்தில் பர்பாசன மாய்க்கட்டிப்
பதிவாக நுனிமுக்கைப் பரிந்துபாரு
வாசனத்தில் சுழிமுனையில் வாசிகூடு
மருவுகின்ற வாசினை தானோடிப் போகும்
ஏசனத்தி லிதுமார்க்கந் த்ரனையக்கண்டு
இருக்கலாம் பூரணத்தி லெய்தலாமே. 203

எய்தினால் சிவயோகி ஞானியாவ
னிருகியே வாசியெல்லா முடலிற்சேரும்
அய்தினால் மூலத்தி லொளியேவீசு
மாறுதலக் கிரந்தியெல்லா மற்றுப்போகும்
கொய்தினால் கும்பகத்தே மிநக்கலாகுங்
கொடிதான தணலாலே யசைக்கப்போகார்
மைதினால் வாய்வுவெண்மை சகமாச்சு
மறந்தந்த சித்தருங் கண்டவாரே. 204

வாரான மூலத்தை அவ்வென்றூணு
மருவியபின் முனைகொண்டால் வங்கென்றூணு
பாரான பளிச்சென்றால் சிங்கொன்றூணு
பற்றியே மூன்றுவகை காணுங்காணு
மிரான மின்னினுட வொளிபோல்காணு
மிரளா தேமனமுள்ளே சாரமுண்ணு
ஆரான ஆலமுண்ட சிவன்முக்கண்போல்
ஆங்காரத் தீயொளியை அழுந்திப்பாரே. 205

தீயொளிதான் பளிச்சென்றால் பிரண்டையிலேஊது
சித்தித்தால் யோகமங்கே சித்தியாச்சு
காவொளியாங் கும்பகமு முனைக்கேறாது
கொடிதான வாயுவங்கே மவுனமாகும்
சாவொளிதான் சமைப்பதற்குத் தீயும்வேண்டாம்
சமர்த்தான சிகாரத்தை வூதப்பற்றுஞ்
சூழொளியாஞ் சுழுத்தியங்கே நெடும்பாதையோடு
சுளுகாக யிம்முறையை யாடிப்பாரே. 206

ஆடியங்கே பார்ப்பதற்கு முறையைக்கேளு
ஆடவெல்லாஞ் சொல்லுகிறே னறிந்துகொள்ளு
ஈடியங்கே யிடகலையில் பூரித்துநின்று
எழிலாக மூலத்தே நினைவாய்க்கும்பி
நீடியங்கே பின்கலையி னுள்ளேரேசி
நேர்ப்பாக நேர்ப்பாக யேத்திவாநீ
தூடியங்கே வுரைத்தாக்கால் சுத்திநாடி
திரமான வாதபித்தஞ் சிலேட்டுமமும்போமே. 207

திரமான மூன்றுவகை நோயும்வெந்து
சித்தியாய்க் காயந்தானி ருக்கும்நன்றாய்
நறமான நல்வினையுந் தீவினையும்நீறும்
நலியான ஐம்புலனும் விரைந்துபோகும்
உறமான ஓங்கார நாதமேலே
ஒருகோடி யிடிபோலே ஓங்குமோங்கும்
அறமான திப்படியே யணைஞ்சுகண்டே
னறிந்துமே நாங்களு மிப்படிதான்பாரே. 208

பாருநீ அவ்வென்றா லுப்புக்கூடும்
பாவியதோர் மகாரமதில் சேர்ந்துநின்றால்
ஊருநீ உகாரமாய் மேலேயேறு
மிதுகாணும் பிரசாத மென்றமார்க்கம்
நாருநீ பளிச்சென்றால் நந்திகாந்தி
நயமாக யிதினோடே வாசிசேரு
ஆருநீ யச்சரமு மகாரத்தோடு
அணைந்ததோர் வாசிரண்டு நாதவிந்தே. 209

நாதமென்றும் விந்துவென்றும் வாசிக்கேபேரு
ரவிமதியுஞ் சிவசத்தி யென்றுபேரு
வாதமென்றும் போதமென்று மிதுக்கேபேரு
மனமென்றும் போதமென்று மிதுக்கேபேரு
நீதமென்றும் பூமியென்று மிதற்கேபேரு
நிலையான வேதமென்று மநந்தமென்றும்பேரு
காதமென்றும் தாரமென்று மிதற்கேபேரு
கண்ணொளியாய் நின்றதி துரண்டுந்தானே. 210

ரெண்டையுந் தானுற்றுற்றுப் பார்க்கப்பார்க்க
நிறையற்று உரையற்று வுணர்வுமற்று
அண்டையுந் தானறந்தற்றுப் போனதெல்லா
மடங்கிற்று வுட்புகுந் தந்தநாலில்
தண்டையுந்தான் சித்தொத்துத் தெளிவுமொத்து
செயலற்று நிஷ்களமாய்க் காணுங்காணும்
பண்டையுந்தான் பற்றற்ற சிற்பரந்தான்
பணிந்திடு மென்று சொல்லிப்ப கர்ந்திட்டாளே. 211

பகர்ந்திட்ட வாசியது யென்றபேச்சு
பண்பாக வாய்க்குமெத்த யெளிதோசொல்லு
திகர்ந்திட்ட தேசிதான் ஞானதேசி
சேர்ந்திதைத்தான் மனமொத்து யேறுவோர்க்கு
புகர்ந்திட்ட புருவத்தில் நின்று ஆடும்
பொருளான மனோன்மணியாம் பெண்ணைப்பாரு
இகர்ந்திட்ட காசிகங்கை யமுனைமூன்று
மேகமாய்க் கண்டிடுந்தான் புருவமென்னே. 212

என்னவே சிகாரமது நெருப்பாரப்பா
யிசைந்து நின்ற வுகாரமது மயிர்ப்பாலமாம்
உன்னவே ரண்டும்விட்டா லொன்றாமொன்றில்
ஓங்கியேதோர் சிகாரத்தை யொளிக்கநன்று
மன்னவே யோகார முந்தில் வரவுமுந்தும்
வருந்தியேயி துரண்டுந் தள்ளநன்று
தன்னவே ரண்டடொளித்தால் சாந்தியாவான்
தனித்தரண்டு மாறுக்குந் தள்ளநன்றே. 213

நன்றான சிகாரத்தால் கோபமெய்தும்
நானென்ற வானுவத்தால் ஒகாரந்தாக்கும்
பென்றான விதுரண்டும் பெரியோரையா
பிறப்பதற்கு மிறப்பதற்கும் பெரியவித்து
உண்டான உகாரமது வுடலேயாச்சு
ஓங்கியதோர் சிகாரமது வுறைந்தேபுக்கி
என்றான பிறப்பிறப்பும் ரண்டுமாச்சு
எழுத்துரண்டு மேத்தமா மிருத்திப்பாரே. 214

இருத்தியே பாரென்று யென்னையாண்ட
யேத்தமாங் காலாங்கி ஐயர்தாமும்
பருத்தியே பக்குவம் பார்த்தெனக்குச் சொன்னார்
பாரென்றார் வாசியைத்தான் பூரணத்திலயிக்க
மருத்தியே கண்ணிமைக்குள் வாயில்வந்துகலக்கு
மருவிரண்டும் பிறந்திறந்த வித்திதென்றார்
மறித்துமே மவுனத்தை விடாதேயென்றார்
மகத்தான விதுரண்டால் பிறப்புமாச்சே. 215

பிறவாமல் ஞானத்தில் கூடுகூடு
பிறத்தியாந் தூரமல்ல புகழ்ந்ததாலு
மறவாம வெந்நாளும் வாழ்வாய்நீதான்
மாசற்ற நாலைப்பார் சரமோடாது
கறவாமல் கண்டத்தைக் கருத்தைவைத்துக்
கனிந்துமே யோடுறதைக் கடுகிப்பானு
நறவாமல் கைக்கனிபோல் நாலுந்தோன்றும்
நாதாந்த மணித்தாயு மழைப்பாள்பாரே. 216

பாரென்ற நாலையே பார்க்கவென்றால்
பண்பாக் வகையெல்லாஞ் சொல்லக்கேளு
கானென்ற காலையே மாலைவேண்டாங்
கடியதோர் கூட்டங்கள் கலக்கவேண்டாம்
நானென்ற நிசியான நடுச்சாமத்தில்
நலங்காம லசைவற்று யிருந்துபாரு
கோனென்ற கோலத்தைக் கூட்டிப்பார்த்துக்
குறுமுனியாந் தலத்தில் நின்று குறித்துநோக்கே. 217

நோக்கியே நிலைத்துநின்று கண்டத்துள்ளே
நுட்பமா மட்சரந்தான் பதினாற்தன்னில்
ஒக்கியே ஒன்றிநின்றா லுயிரேயாகும்
உள்ளாறில் வகாரம்நிற்குஞ் சாவுபொய்யாம்
நாக்கியே கைக்கெட்டா நாலுங்காணும்
நாலதனிலே நின்று வாசியோட்டி
மூக்கியே தாய்காண்பாள் மூன்றும்வீதி
முப்பாழெல்லாம் வெளியா முன்பின்னாமே. 218

பின்னாகப் புக்கியிருவென் பாள்தாயும்
போந்த மொழியிருவென்ற சொல்லைக்கேட்டு
முன்னாகக் குதிரைநான் பார்த்தேன்காணேன்
மூலமா மாதாரத்தள மெல்லாங்காணேன்
கொன்னாகக் குருவென்ற மொழியுங்காணேன்
குறித்திட்ட பொறியோடு நெறியுங்காணேன்
மன்னாக மறுவென்ற தாயுங்காணேன்
மட்டற்ற போதத்தில் உன்னினேனே. 219

உன்னியே சமாதியஞ்சி னுறுதிகேளு
உகப்பான தத்துவல்ய சமாதியொன்று
முன்னியே தத்துவங்கள் முப்பத்தாறும்
முனிந்த கலாப்பூதங் களைந்ததாகும்
துன்னியே சூட்சமத்தில் தானடக்கி
சூட்சுமத்தை நம்பெரியவரசன் போலாக்கி
கன்னியே காரணமாஞ் சரீரத்திலடக்கிக்
கருதியிதைப் பிரகிருதியிலே கலறப்பண்ணே. 220

கலறவே புருடனையுந் திட்டானமாகக்
கலந்துநின்ற சைதன்னிய மாகக்கண்டு
ஒலறவே கருத்தழிந்து ஒன்றேயாகி
உள்ளறையில் காற்றசையா விளக்குப்போல
அலறவே யலைச்சலற்றுத் தானேதானா
யகண்ட மேறப் பூரணமாய் நின்றுபின்னை
துலறவே தோற்ற மற்றுயிருப்பதானே
சுத்தமாம் தத்துவல்ய சமாதியாச்சே. 221

சமாதியாஞ் சவ்விகற்பச் சமாதிகேளு
தனித்தடுத்தால் ரண்டுவகை யதிலேயுண்டு
சமாதியாஞ் சத்தானு வித்தையுண்டு
தரிப்பான திரிசானுவித்தை யொன்று
பெமாதியாஞ் சத்தானு வித்தைமார்க்கம்
பெரியதொரு தத்துவசமா திக்குத்தான்
பமாதியாஞ் சத்தங்கள் பட்சியோசை
படுகிறது உன்மனத்தைப் பருவங்கேளே. 222

பருவமாஞ் சத்தானு வித்தையொன்று
படியான சவ்விகற்ப மென்றுபேரு
துருவமாந்திரி சானுவித்தைமார்க்கஞ்
சூட்சியா யந்தநிலைக் குள்ளேநின்று
தருவமாந் தன்னையனு சந்தானம்பண்ணி
ச்ஞ்சரிக்கில் திரிசானு வித்தையாகு
மருவமாம் சவ்விகற்பச் சமாதிமார்க்க
மருவியதோர் சங்சாரத் திருக்கில்பாரே. 223

பாரென்று நிருவிகற்ப சமாதிகேளு
பாங்கான தத்துவலைய சமாதிமுத்தி
தாரென்ற சத்தானு வித்தைமுத்தி
தன்னைத்தான் மறந்து தூக்க முறுமயக்கம்போல
வாரென்ற பிறசத்தங் காதிற்கேளா
மருவியந்தப் பூரணத்தே லயிச்சசித்தம்
நேரென்ற சைதன்னியமாகப் போனால்
நிருவிகற்ப சமாதியென்ற நேர்மையாச்சே. 224

நேர்மையாய்ச் சமாதிவிட்டுச் சஞ்சரிக்கில்
நினைவாகச் சமாதியிலே யிருக்கும்போது
தீர்மையாய்க் காலமென்ற திரையத்துள்ளுஞ்
சிதைந்த பிரபஞ்சமெல்லாம் பொய்யென்றெண்ணு
வேர்மையாய் விவகாரத்தாலே தோன்றி
விரிந்த பிரபஞ்சத்தின் பாசந்தள்ளி
நேர்மையாய் நிருவிகற்பமாக நின்றால்
நெளிவான நிருவிகற்ப மிதுவேவாச்சே. 225

ஆச்சென்ற தத்துவல்ய சமாதிமுத்தி
அறிவான நிருவிகற்ப மாகும்போது
நீச்சென்ற நிருவிகற்ப சமாதிக்குள்ளே
நேரான விக்கினங்கள் நாலதுண்டு
தூச்சென்ற தெதுவென்றால் சொல்லக்கேளு
சுருத்திலயம் விட்சேபஞ் சட்சேபமாகும்
காச்சென்ற கரசமாஞ் சுவாசமொன்று
கருத்தூணிச் சொல்லுவது நாலுதானே. 226

நாலென்ற திதுக்குள்ளே லயத்தைக்கேளு
நனிந்துவின்ற நித்திரை தான்விட்சேபந்தான்
காலென்ற ராகமுறுங் கலகத்தாலே
கலந்துவரும் வாசினையுங் கரணத்தாலே
மாலென்ற மனோ கராச்சியத்தினாலே
வருகுந்தான் சங்கேபநித் திரையுமல்ல
ஆலென்ற மனோகராச்சியமுமல்ல
அரவான சொரூபங்கள் மறக்குமதுவே. 227

அதுமறந்து மிடமாக யகண்டுநிற்கு
மத்தியதிலாச் சரியஞ்சு வாசமாகும்
கதுநமக்கு மனமொழிந்த கனுவில்நின்ற
கருதுகின்ற சுரூபத்தே சந்தோஷித்துச்
சதுமறந்து தனித்துயர்ந்த சமாதியுள்ளே
தனித்துநின்ற ஆனந்தமனு போகத்தை
நதுமறந்து போம்நாலு விக்கினமுமற்று
நலமுற்ற சொரூபத்தி லயிக்கநன்றே. 228

லயிக்கவே நன்றானவ கண்டவிருத்தி
நாடாத காற்றில்லா விளக்குப் போல
ஐயிக்கவே யலைச்சலற்றுத் தண்ணீருமுப்பும்
அடங்கிநின்ற வாறதுபோல முத்திநிற்கும்
தயிக்கவே பிரமன் மாலுருத்தி ரனுங்கேட்டு
தனித்து மேவேற்றுருவாய்ப் பிரமன்றானும்
அயிக்கவே யிப்படிதான் கடிகையொன்று
அறு நேரங் கடிகையற்றால் பதத்தைக்கேளே. 229

கேளுமே யசுவாதி யாகங்கோடி
கிருபைபண்ணி செய்ததோர் பலனுக்கொக்கும்
மூளுமே யிப்படிதான் சமாதிமுட்டில்
முனையாகச் சுழுத்தியென்று யெண்ணவேண்டாம்
தேளுமே சுழுத்திக்குச் சித்தந்தானுந்
தியங்கிநின்ற வத்துமே நசித்துப்போகும்
ஆளுமே சமாதிக்கு நாம்பிரமமென்று
ஆண்மையா யருவிருத்தி யிருக்கும்பாரே.

பாரென்று சொல்லுகையால் ரண்டுக்கும்பேதம்
பண்பான நிருவிகற்பச் சமாதிமார்க்கம்
தாரென்ற சஞ்சாரச் சமாதிகேளு
சார்ந்துநின்ற நிருவகற்பம் விட்டேயப்பா
பேரென்று யெழுந்திருந்து பிரபஞ்சத்தைப்பார்த்து
பிரிவாக லிவகரிக்குங் காலமெல்லாம்
ஆரென்ற பிரபஞ்சமெல்லாஞ் சமுத்திரத்தி
லதில்நிற்குந் துறைபோலமா யந்தானே. 231

தானான மாயமூன்றுசிலந்தியுட வலைபோல்
தயங்குகின்ற கூர்மத்தி னங்கம்போல
ஆனான தோயமுத்த ஆகாசம்போ
லமுந்துகின்ற சொற்பனத்தின றிவைப்போல
தானான தம்மிடத்தே யுண்டாச்சையா
தம்மிடத்தே யிருந்துகொண்டு மாயம்புக்கி
கானான வறிவழிந்து போறதானால்
கலந்து நன்மைவிடவொன்றுங் காண்கிலேனே. 232

காண்கிலேன் சகலமும் யானேன்று நின்று
கலந்து நாமொன்றல்லோ வேறொன்றில்லை
பூண்கிலே னென்னிடத்தே பிறந்ததெல்லாம்
பேயாக அழிந்தெல்லா மெண்ணிலெய்தும்
ஏண்கிலே னென்னைவிட்ட தொன்றுமில்லை
யியல்பாக வுறைந்துநில்லு யெந்நேரந்தான்
மாண்கிலேன் மனத்தோடு சந்தானித்து
மருவியே யுள்ளிட்டு வரைதல்நன்றே. 233

உரைத்திட்டார் சாதாரப் பயந்தான்வந்தும்
உறப்பெரிய பிராணனுருப் பயந்தான்வந்து
மரைத்திட்டு மானடங்க மகத்தாய்வந்து
மயக்கமாய்க் கண்முன்னே தேவதைகள்வந்தும்
குரைத்திட்டுக் குருவினுட கோபம்வந்துங்
கோளுநகையும் விகற்பமென்ற மறியரியுமாகி
பரைத்திட்டுப் பரியாசந் தள்ளிப்போட்டு
பதவிகற்பமான திங்கேயில்லை யென்னே. 234

என்னவே யென்னிடத்தே யொன்றுங்காணே
னியல்பாக நானொருவ னென்னாலெல்லாம்
பொன்னவே நான்கண்டதெல்லாம் பொய்பொய்
பேரான சத்தியுட யிந்திரஜாலம்
மன்னவே மனமுரைந்து சஞ்சரித்தால்
மகத்தான சஞ்சார சமாதியாச்சு
அன்னவே யாரூட சமாதிதன்னை
யாய்ந்துமே சொன்னபடியறிந்து கொள்ளே. 235

கொள்ளென்ற தேவதைகள் வந்தாலுந்தான்
குவித்துசட்டை பண்ணாதே யகண்டமாய்நில்லு
அள்ளென்ற அத்துவித நெறியிற்கூடி
அறிந்துமே சஞ்சார்த்த சமாதிக் குள்ளுந்
தெள்ளென்ற திடப்பட்ட பின்புகேளு
தெளிந்துமே சகலத்தில் சம்சயம் போக்கித்
துள்ளென்ற சுட்டசட்டி விட்டாப்போலே
தோற்றமாந் தேவதையை யசத்தாய்க்காணே. 236

காணவே தேவதையை மனதிலெண்ணிக்
கலங்காமல் மலைபோலே யசைவுமற்று
நிணவே தேவதைகள் காற்றுபோலென்று
நிச்சயித்து வொன்றாக நில்லுநில்லு
ஆணவே யத்துவித நிலைநாமென்று
அறிவோடே திடப்பட்டு திறத்தில்நில்லு
ஊணவே சாதகத்தினி லையைக்கூட்டி
யுத்தமா மாரூடச் சமாதியாச்சே. 237

சமாதியெல்லாம் பார்க்குமுன்னே சாதகத்தைக்கேளு
தம்பித்து வாசியைநீ பூட்டிமூட்டு
உமாதியா மூலங்கண்டு ரைத்தபின்பு
யோகமெல்லாம் ஒவ்வொன்றா யூட்டிப்பாரு
வமாதியாய் மாயமெல்லாந் தள்ளிப்போட்டு
வகையாகச் சமாதியைந்தும் வாய்க்கும்வாய்க்கும்
நமாதியாய் நாலுமங்கே முன்னேதோன்றும்
நாடினால் சமாதிக்கு முறையிதாமே. 238

முறையான மவுனமான சமாதிகேளு
    மொழிந்து நான்சொல்வேதக் குருசொல்லவேணு
மறையான மாய்கையறு மனஞ்செம்மையாகு
    மாசற்றா ராசமென்ற யோகந்தானும்
அறையான மனஞ்சென்று அறிவில்கூடு
    மதிதமாங் கண்டவெளி காந்திகாணும்
பறையான யதுக்கெல்லாம் படுநீபற்றும்
    பண்பான மவுனத்தைப் பரையிறேனே. 239

பரையிறேன் அகாரமது மூலத்தில்நிற்கும்
    பண்பான உகாரமது கண்டத்தில்நிற்கும்
வரையிறேன் மகாரமது மனோன்மணியில்நிற்கும்
    வாகாகயிமுத்து மொன்றாய்க் கூட்டினாக்கால்
நிரையிரேன் மவுனமது யறிவில்கூடு
    நின்றுரைக்கில் கண்டந்தானுள்ளே கொள்ளும்
இரையிறேன டக்கையிலு மிருக்கையிலுமைந்தா
    யிருந்துரைக்கப் பிரபஞ்சமெல்லா மெளிதாய்ப் போச்சே. 240

போச்சுதே பாழாச்சு முன்பின்னில்லை
    பெரும்பரியாந் திசைநாதங் காதில்கேட்கும்
ஆச்சுதே மதிகோடி வன்னிகோடி
    யடங்காத ரவிகோடி காந்தியாகும்
பாச்சுதே தினந்தோறும் பார்க்கக்கிட்டில்
    பண்பான முழுகிப்போ மவுனப்பாம்பு
தேச்சுதே சடத்துக்குச்சி தைவுகாணுஞ்
    சடந்தானுஞ் சித்தியாய்ந் திடமாய்ப்பண்ணே. 241

திடமாகப் பண்ணினால் சடம்போகாது
    சிதையாது மவுனத்தைத் திடமாய்நில்லு
மடமாக மவுனத்தாலா வியைப்பாரு
    மனமொன்றில் கண்டத்தி லொளியேகாணும்
புடமாகச் சடங்காணும் பிடிக்கப்பொய்யாம்
    பெரிதான கற்பூரதீபம் போல்நிற்கும்
சடமாகக் கண்ணினால் சாய்கைநில்லை
    சச்சிதா னந்தமென்ற தேகமாமே. 242

தேகமே ஆறுதலை யாறுகாலாய்ச்
    சித்திமுத்திகண்டு நின்றபா னுவுக்குள்
மாகமே யிப்படியே மதியைப்பார்த்தால்
    மகத்தான வமுர்தமென்ற தேகமாகும்
பூகமே பொன்போலே வானமாகும்
    பொருள்கடந்து அண்டத்தில் புக்கலாகுஞ்
சோகமே சோமப்பாலுண்டுசட்டைத்
    தோலுரியு மவுனத்தின் சூட்சந்தானே. 243

தானென்ற சமாதியைத்தான் முன்னே
　　சாதித்து வப்பியாசம் பண்ணக்கேளு
ஊனென்ற ஓகாரமாமு தாசனந்தாந்தள்ளு
　　உத்தமனே சிகாரமென்ற கோபம்போக்கு
வானென்ற வாயில்வந்தால் மனதுட்கொள்ளும்
　　மகத்தான துவைதமென்ற வாசினைதான்முந்தும்
தேனென்ற விஃதிரண்டுஞ் செயிக்கமாட்டார்
　　திறமாகத் தள்ளிவிட்டுச் சமாதிசேரே. 244

சேராக முந்தினது தத்துவத்தைப்பாரு
　　சேர்ந்தபின்பு ஏமமென்ற சரிதையைத்தான்பாரு
பூராக கிரிகையென்ற நேமத்தைப்பாரு
　　புகழான யோகமென்ற பிராணாயாமம்
பேராக வுண்ணியபின் பிரத்தியாகாரம்
　　பெரிதான தாரணையும் யோகமாச்சு
தாராக சமாதி ஐந்தும் ஞானமாச்சு
　　சாதகமாயி தனாலுஞ் சார்ந்துபாரே. 245

சார்ந்துமே நாலுமுறைபார்ப் பதற்குமுன்னே
　　தனிபஞ்ச கிர்த்தியமெல்லாஞ் சாதித்தேறி
மார்ந்துமே மவுனமாஞ் சமாதிக்குள்ளே
　　மாசற்ற சிவமான தெரிசனையைக்கண்டு
சார்ந்துமே தத்வல்ய சமாதிபார்த்து
　　தனிப்பின்பு சஞ்சார சமாதிசென்று
சேர்ந்துமே நிருவிகற்ப சமாதியானால்
　　சிறந்தபின்பு ஆருடச் சமாதியாமே. 246

ஆமென்ற வேதாந்தஞ் சிந்தாந்தத் தோடே
　　ஆண்மையாஞ்சு மதாந்தமற் பியாசமார்க்கம்
ஊமென்ற நாதாந்த யோகமார்க்கம்
　　உற்றுநின்ற போதாந்த ஞானமார்க்கம்
காமென்ற காலாங்கி வைக்குமாம்மார்க்கம்
　　வகைமுறையா யிதுவாறுங் காணுங்காணும்
ஊமென்ற வுடம்பெடுத்து விட்டகுறைவந்தா
　　துயர்ந்து நின்றவகண்ட முன்னேயுண்ணுந்தானே. 247

தானென்ற உண்ணுவது தவளை சற்பம்போலுந்
　　தனித்துநின்ற கெருடன் கைக்கோழிபோலும்
வேனென்ற வேங்கைகை யிலாடுபோலும்
　　விரவியதோர் கிரியின்வாய் சற்பம்போலும்
மானென்ற யிடிவிழுந்த மலையைப்போலு
　　மகத்தான துஷ் டர்கையில் செந்துபோலும்
பானென்ற போதமுன்னைப் பாய்ஞ்சிறைஞ்சிப்
　　பருரமே தீயானால் பண்ணுந்தானே. 248

பண்ணவே தத்துவத்தைப் பரிந்துபாரு
பாங்கான யோகத்தில் மாய்ந்துபாரு
குண்ணவே மவுனத்தில் கூடிப்பாரு
கேசரிதானே னென்றால் கூர்ந்துக்கேளு
நண்ணவே ரவிமதியாம் வன்னிமூன்றும்
நாடிநின்ற ததுவல்லோ கேசரிதான்மைந்தா
அண்ணவே யானந்த வேதாந்தம்பார்த்தே
னதிலொன்றுக் கேசரியை யார்ந்திலேனே. 249

ஆர்ந்துவது யெவ்வாறு வேதாந்தமார்க்கம்
அறிவான மூன்றெழுத்தினுட நேசமுண்ணே
நார்ந்துவது எழுத்துகண்டாத் திட்சைபாரு
நலம்பெறவே ஐந்தெழுத்து மூன்றாந்திட்சை
போர்ந்துவது ஆறெழுத்து நாலாந்திட்சை
பேரான யெட்டெழுத்து ஐந்தாந்திட்சை
பார்த்துவது பத்தெழுத்து ஆறாந்திட்சை
பதினைந்து அட்சரந்தா னேழுமாச்சே. 250

ஏழோடு பதினாறு யெட்டாந்திட்சை
ஏற்றலாஞ் சத்தியுடபிர சாதவித்தை
ஊழோடு வொன்பதுதான் பின்புகேளு
உத்தமனே பரமான பிரசாதவித்தை
மாழோடு பத்தாச்சு திட்சைமார்க்க
மருவியதோர் பதினொன்று மவுனதிட்சை
மூழோடு ஆடாது யெட்டிச்சேரு
மூதண்ட மவுனத்தை மெள்ளவறிவில்சேரே. 251

சேருநீ குருசொன்ன வெழுத்தாகயொட்டி
திறமான வறிவிலே யகண்டத்தைப்பாரு
ஆருநீ யண்டமது வுன்னைத்தூக்கு
மறிவிலே மனஞ்செல்ல நாதமோங்கு
மாருநீ மவுனத்தைச் சொல்லாராசான்
மகத்தான வகண்டத்தில் சொக்கிப்பாரு
வாருநீ மந்திரம் பொய்வாயைமூடு
மாசற்ற பதினோ ராந்திட்சைதானே. 252

தானென்ற குருபதந்தான் தாமரைபூப்போல்
சகஸ்திரத்தி லெட்டிதழாய்த் தயங்கிநிற்கும்
நானென்ற நடுவேதான் வட்டமாக
நலமான ஐங்கோணம் நிற்கும்பாரு
தேனென்ற நடுவேதான் சிவசத்தியொன்றாய்ச்
செயலற்று யருவமற்று வெளியாய் நிற்கும்
கானென்ற ரவிகோடி காந்தியாகுங்
கண்கூசுமின்ன லொணிகண் கண்டாயே. 253

கண்டிட்டால் தத்துவங்கள் சூழ்ந்துநிற்குங்
கருத்தாகத் தத்துவத்தின் தெரிசனையைக்கண்டு
அண்டிட்டால் ஞானத்துக் காதிபீடம்
அண்டமெல்லாம் போகுதடா வுருவித்தாண்டி
வண்டிட்டால் ஞானமென்பார் வாய்பேச்சாலே
வந்துதென்று வித்தைசொல்லி வாதுகாட்டி
கொண்டிட்டால் குறிகள் காட்டமாட்டார்
கொடிதான திருப்பாட்டு கூறுவாரே. 254

கூறுவார் குருபதத்தின் தத்துவத்தைத்தாண்டி
குறிப்பான சிவனுடதெரி சனையைக்கேளு
தேறுவார் சீவகளை கோடிரவிபோலச்
சிறப்பாக நின்றுதடா திறமாய்ப்பாரு
ஆறுவார் சீவனென்ன சிவமேயாச்சு
அறையிறேன தில்நின்றாலு றையொட்டாது
ஊறுவாருன் னிடத்தில் நின்றாயானால்
உயரவல்லோ தூக்கிமெள்ள விழுக்குந்தானே. 255

இழுக்கான மூலமுதலா றுந்தள்ளி
யேறிநின்று மேலாறும டுத்துநோக்கி
உழுக்கான வுன்மனையைத் தாண்டியேறி
யுதிப்பான ஞானசத்திக்குளே சென்றும்
மழுக்கான கேசரியா மவுனத்தாடி
மந்தத்தின் பராபரமாய் ஞானமூர்த்தி
பிழுக்கான காலமொடு பிறப்பிறப்பும்போகும்
பிடித்துவிட்ட சூடாலைத்திறம் போலோங்காரமாமே. 256

ஓங்கார மத்துநின்ற மண்ணையுண்ணு
முருவியந்த மனஞ்சென்று தண்ணீருண்ணும்
தேங்காரந் தண்ணீர்தான் தீயையுண்ணுந்
தீங்கான தீச்சென்று காலையுண்ணுங்
காங்காரங் கால்சென்று விண்ணையுண்ணுங்
கருத்தழிந்து விழுந்துமே சடமென்றெண்ணும்
வேங்காரம் வேதாந்தஞ் சித்தாந்தம்போச்சு
மேலேறிமது வுண்டு விரைந்துபாரே. 257

உண்டு ஓங்காரமுதலஞ்செழுத் தோடாறும்
உற்றுநின்ற பஞ்சகர்த்தாளி ருக்குந்தானம்
அண்டு ஆங்காரமொடு ஆணவமுமற்று
அதிர்ஷ்டானம் நானென்ற தற்றுப்போனால்
பண்டு தானகாரமொடு உகாரங்காணும்
பாங்கான மகாரமொடு விந்துநாதம்
விண்டு அதின்மேல்நிற்கும் பராபரந்தான்
வெளியான மவுனத்தைப் பற்றியேறே. 258

ஏறவே அகாரமது உகாரத்தைக்கொள்ளும்
ஏத்தமாம் உகாரமது மகாரத்தைக் கொள்ளும்
மாறவே மகாரமது விந்துவை யுட்கொள்ளு
மகத்தான விந்துவது நாதத்தைக்கொள்ளுந்
தாறவே நாதமது சத்தியைத்தான் கொள்ளுந்
தனித்துநின்ற சத்தியல்லோ சிவத்தைக்கொள்ளும்
சீறவே சிவன்றன்னைப் பரந்தான் கொள்ளுஞ்
சிவபதத்தைக் கொண்டவிடஞ் சேர்ந்துஉண்ணே. 259

சேர்ந்துநின்ற மூலமுதலா றும்பார்த்து
சுழிமுனை தானுருவிநின்ற தோற்றம்பார்த்து
சார்ந்துநின்ற மதிபோலே சாம்பவியைக்கண்டு
தாக்கிநின்று மனமுரைத்துத் தேர்ந்தபின்பு
பார்த்துநின்ற திவ்வளவும் யோகமார்க்கம்
பகலிரவு மற்றவிடம் ஞானமார்க்கம்
கார்ந்து கன்னிநின்ற விடங்கண்டால்ஞானங்
காட்டுவாள் கேசரியைக் கண்டுபாரே. 260

கண்டுபார் வாசியன்னி மேலேயேந்த
கைவிண்ட மயக்கத்தைக் கீழேதள்வாள்
விண்டுபார் சணத்துக்குள் வெளியுங்காணும்
விடுபடுவா ளண்டரண்ட மாலைபூண்டாள்
அண்டுபார் ஆதிவலையத்து அநாதிவலையத்து
அதீதமாம் ரண்டுமொன்று அறிந்துகூடு
உண்டுபார் நிர்க்குணத்தில முர்தமள்ளி
லுயர்ந்துநின்ற ஞானசத்தி யுண்டைதானே. 261

உண்மையாம் வாசியென்று மவுனமென்று
முத்தமமாம் ரண்டுவித்தை யுரைக்கக்கேளு
தண்மையாஞ் சாம்பவியுங் கேசரியும்ரண்டு
தனித்தேசி யோகத்துக் காதிவிந்தை
வண்மையா மென்றால் ஞானவித்தை
மாசியென்ற மனமானால் ரண்டும்பொய்யாம்
அண்மையா மறிவறிந்தால் மண்டுமாகு
மதிதநின்ற வெளியல்லோ வகண்டம்பாரே. 262

பாரென்ற தீயிற்குள்பரா பரந்தானிருந்தார்
பண்பாகக் கண்டவரார் சிவசித்தர்யோகி
ஏரென்ற வுன்மனைத்தாய் கேசரிக்குள்நிற்பா
ளேறிப்பார் மவுனம்வைத்து ஊதுஊது
நீரென்ற நிர்க்குணந்தான திலேகேளு
நிலையான மவுனமொன்று அதிலேயுண்டு
காரென்ற நிர்ாதரர மொன்றுமில்லை
கட்டுறதார றிவுகொண்டு கருதிக்காணே. 263

காணவே குண்டவிக்குள் மூலமொன்று
கண்டத்தில் பராபரமா மூலமொன்று
பூணவே யுருவமய மூலமொன்று
புகழான விந்துவிலே மூலமொன்று
தாணவே சத்தியிலே மூலமொன்று
தனித்துநின்ற பராபரத்தில் மூலமொன்று
ஆணவே யிதையாறுங் கண்டோன்ஞானி
யறிந்துணர்ந்தால் மும்மூல யோகியாமே. 264

யோகியாம் நகாரவரைய காரவரைமட்டு
முறுதியாம் யோகத்தின் மூலமாச்சு
வாகியாம் அகாரமுதல் உகாரந்தொட்டு
வதிதமாம கரரவரை ஞானமூலம்
தேகியாந் திசைநாத மவுனத்தில்காணுஞ்
சேர்ந்தே றச்சேர்ந்தே றவகண்டவீதி
யூகியாங் காமப்பா லுண்டால்கேளு
யோகசித்திக் கடுங்கானற் பாலையுண்ணே. 265

கடுங்கானற் பாலுண்ண ஞானசித்தி
கடிதான யோகத்தி லஞ்சுநாத
மடுங்கான மவுனத்தில் லஞ்சுநாத
மறைதானுங் கடந்திடத் தேசுத்தநாதம்
நெடுங்கானல் பீசத்தில் வாசிமுத்தி
நேர்ப்பான மூலத்தி லொலியேசத்தி
திடுங்கானல் சொலித்து நிற்குமென்னாலுந்தான்
தூரமல்ல காதமல்ல கண்ணிமைக்குளாமே. 266

கண்ணிமைக்குள் விண்ணுக்குள் கலந்துகாணுங்
கடிசான விண்ணேது வெளியங்கேது
ஒண்ணிமைக்கு ளொளியேது உரைத்தபடியிம்மூன்று
முன்னிதமாங்கே சரிதா னுயர்த்தியாச்சு
நுண்ணிமைக்குள் கண்ணேது மூக்கங்கேது
நுண்மையாங் கண்டிப்பு அழிந்துபோச்சு
உண்ணிமைக்கு ளொன்றிரண்டு சமரசந்தானேது
உற்றுப்பார் வெட்டவெளி ஒண்ணில்தானே. 267

ஒண்ணியே நின்றுரைத்துப் பழக்கமாகி
உத்தமியா மனோன்மணியைப் புருவமையத்தோடே
உண்ணியே யொளிவோடே மவுனத்தையோட்டி
யூதியே சாம்பவியைக் கண்டுகொள்வாய்
நிண்ணியே யிவ்வளவு யோகமார்க்கம்
நின்றவனே சிவயோகி நினைவாய்க்கேளு
குண்ணியே விந்துவென்ற குருபதத்தைக்
கூட்டப்பா மவுனத்தைத் தாரையாமே. 268

தாரையாம் விந்துவிலே ரவிமதியோகோடி
தளுக்காகக் கண்கூசி மயக்கமாகும்
ஓரையாம் நாதத்தில் செவிடுபட்டு
வூமையென்ற வெழுத்தினுட வுருவந்தோன்றும்
வாரையா மயசத்தியிலே வன்னியோடு
மாசற்ற கோடிரவி மதியுமொவ்வா
சூரையாஞ் சோமப்பாலுண் டவர்க்குக்காணுஞ்
சூதான ஞானிகட்கு மாயந்தானே. 269

மாயமாஞ் சிவத்துக்குள் மவுனஞ்சென்றால்
மாசற்ற தவகோடி வன்னிரவிசோமன்
பாயமாம் பரத்தின்கீழ் முப்பாழுண்டு
பார்க்கவே அகாரமொன்று உகாரமொன்று
மோயமாம காரமென்று முப்பாழாக
முனைந்திந்து வதினொளியைச் சொல்லப்போகா
தூயமா மொழியுடை யவுன்மனத்தை
தேவியுட பதமென்றே கேசரிதான்காணே. 270

கேசரியின் தாயான பதத்தின்காந்தி
கீர்த்திக்கக் கண்கொள்ளா விண்கொள்ளாது
ஆசரியின் பரையென்பாரம் பாரந்தா னென்பார்
அவளுக்குள் மவுனமுண்டு யறிவுன்னிப்பாரு
கேசரியின் மவுனத்தே நிஷ்களமாய்ப்போவாய்
கெடியான வம்பரத்திலேதோ வேதோ
தூசரியின் படிமைந்தா லட்சியத்தினேர்மை
சொல்லரிது வப்புறத்தே சோதிதானே. 271

தானென்ற மகாரவரை நாதவோசை
தாயான கன்னிக்குப் பீடமாகு
மானென்றே யூணப்பா மவுனஞான
மகத்தான நாதத்தோடொன்றி யொருமுனையாய்
ஊனென்ற ஒருவழியா யொன்றாயோடு
வுட்புகுந்தால் தோற்றுவதங் கொன்றுமில்லை
தூனென்ற சுத்தவெளி ரவிகோடிவன்னி
சூழப்பா மதிகோடி கண்கொள்ளாதே. 272

கொள்ளாத வதிதமென்ற மகாரங்காணும்
குறிப்பான மகாரமல்லோ குருகைகாட்டும்
வள்ளாத மகாரமல்லோ யடங்கியந்தந்தாண்டி
வழிகாட்டு மிடமல்லோ கேசரிதான்மைந்தா
மள்ளாத மகாரமென்னமே லெழுத்தேயென்பார்
மாட்டுவது மூன்றெழுத்துங் காணமாட்டார்
அள்ளாத மகராமென்ன மவுனவித்தை
யதிதவித்தை வாய்திறவா மவுனமாமே. 273

மாமென்ற மவுனவித்தை மூன்றெழுத்துயென்பார்
மாட்டுகிற வினங்காணார் மார்க்கங்காணார்
வாமென்ற மவுனவித்தை வாய்மூடவென்பார்
மாடாடு குதிரையது வாய்பேசாது
கோமென்ற மவுனவித்தை கேட்டிருப்பார்
கூட்டுறவு காணார்கள் நாதங்கேளார்
ஆமென்ற மவுனவித்தை தாண்டிநாட்டி
ஆதியாந்தி சைநாதங் கேட்குங்காணே. 274

காணேதான் மதியினுட வமுர்தஞ்சிந்துங்
கலங்காமல் துவாதசங் கடந்துதோன்றும்
தானே தானாசையறுந் தன்னினைவும்போகுந்
தாரைபோ லண்ணாக்கி லமுர்தமோடு
மானேதான் மும்மலங்க ளற்றுப்போகு
மகத்தான வைம்பொறி களடங்கிநிற்கும்
தேனேதான் மேலமுர்தம் லகிரிமீறிச்
சனமாகு மூன்றுக்குமேற் செயமுமாமே. 275

செயமான வுலகத்தி லகிரியுண்டு
தீர்க்கமாய் முதிர்ந்தபின்பு உன்னுக்குளகிரி
மயமான மகாரத்தால் வந்துதாக்கும்
மகாரத்தைக் கூட்டையிலே யறிந்துகூடு
குயமான கும்மென்ற நாதத்தில்கூடு
குறியோடே யறிவென்ற மவுனத்தைமாட்டு
நயமான நாதத்தி னாட்டங்கேளு
நலங்காம லொருவழியே நாட்டிடாயே. 276

நாடினால் சனனமது முத்தியாகும்
நலமாக வேறுதற்கு வழியைக்கேளு
வாடினால் மூலத்தில் வாசிவைத்து
வழியோடே பிராணாயம் பண்ணத்திரும்
கூடினால் குண்டலிக்குள் நடனங்கண்டு
கொடிதான ஆதித்ததே னொளியைக்காணு
ஆடினால் கண்டத்திலங் கென்றூணு
ஆடாத வழிதிறக்கா வழிசெவ்வாமே. 277

மனோன்மணி பெருமை

செவ்வையாய் நின்றுரைத்த பழக்கமானால்
சிறப்பான மனோன்மணிதான் புருமையத்தே
மவ்வையா மொளியோடே மவுனத்தையூது
மகத்தான சாம்பவியைக் கண்டுகொள்வாய்
நெவ்வையா மிவ்வளவும் யோகமார்க்கம்
நின்றவனே சிவயோகி நிலைத்துக்காணுந்
தவ்வையாம் விந்துவென்ற குருபதத்தில்
தாக்கவே மவுனத்தைத் தாரையாமே. 278

அஷ்டாங்க சித்தி

தாரையா மஷ்டாங்கள் சாற்றக்கேளு
தனித்தனியே யொவ்வொன்றாய் விரித்துச்சொல்வேன்
தேரையாஞ் சாட்டியமாம் நித்திரையைப்போக்கு
நியமமாய்ச் சதாநித்தந் தாரகத்தில்நில்லு
தூரையா மனங்குவிந்து கேசரியைப்பாரு
சோமப்பால் கசிந்தோடுங் கேசரியைக் கண்டால்
காரையா ரவிமதியும் வன்னிகூடி
கலந்துநின்ற திடமல்லோ கேசரிதான்காணே. 279

ஏமசித்தி

காணவே யேமமொடு நேமமாகுங்
கருதிய தோராசனமும் பிராணாயாமம்
பூணவே பிரத்தியாகாரந் தாரணையினோடு
பெருமையாந் தியானமொடு சமாதியாகும்
ஏணவே யிதுவெல்லா மெட்டேயங்க
மிசைவான சித்தாந்தம் வேதாந்தம்ரண்டும்
ஆணவே யடவெல்லாஞ் சொல்லக்கேளு
அறிந்துகொள்ளும் நிரைநிரை வாயறிவில்தானே. 280

அங்கிஷசித்தி

தானென்ற வேமமது பத்துமாகும்
தனித்ததோர் ஐங்கிஷையுஞ் சத்தியத்தினோடு
ஆனென்ற ஆர்த்திகப் பிரமங்கேளு
ஆச்சரியந் தயவினொடு யாட்சேபமாகும்
கானென்ற கூர்மையினொடு திருதிகூட
கடின மிதாசார மஞ்சனத்தோடு
பானென்ற பத்துமே யேமமாச்சு
பண்பான நேமத்தைப் பகர்ந்துபாரே 281

அஷ்ட்டாங்கம்

பாரென்ற சோலையத்தி கோமுகத்தினோடு
பரமமொடு வீரமாஞ் சிங்கமாகும்
மூரென்ற மந்திரமொடு முத்தமாத
முனையான மயூரமொடு சுகந்தானாகும்
ஓரென்ற வொன்பது மாசனந்தானாச்சு
உற்றுக்கேள் பிராணாய பிரிதிதன்னை
காரென்ற ரேசகமும் பூரகமுங்கும்
பங்கலந்துநின்று அற்பிசமுநிற் பிசமஞ்சே. 282

அஞ்சவே ஆறுவகை பிரத்தியாகார
மதுகூலசரீரமென்ற பிரத்தியாகாரம்
இஞ்சவே யிந்திரியம் பிரத்தியாகார
மியலான பிராணனென்ற பிரத்தியாகாரம்

கஞ்சவே கரணமென்ற பிரத்தியாகாரம்
கைகலந்த காமியமாம் பிரத்தியாகாரம்
துஞ்சவே பிரத்தியா காரந்தன்னைச்
சொல்லிவிட்டே தனியாறுஞ் சூட்டிப்பாரே. 283

சூட்டியே தாரணையிலாறு விதஞ்சொல்வேன்
சுயபஞ்ச பூதத்தின் தாரணைதானொன்று
பூட்டியே பிராணமென்ற தாரணையினோடு
புகழான பிர்மமென்ற தாரணையுமாகும்
தாட்டியே தேகமென்ற தாரணையினோடு
தத்துவமொன்று தாரணையுஞ் சார்ந்துகேளு
மாட்டியே தாரணையினோடு மைந்தா
மகத்தான ஆறுவித முண்டுபாரே. 284

பார்க்கவே பத்துவித தியானஞ்சொல்வேன்
பரிவான சடாதாரத் தியானமொன்று
மார்க்கவே தேகமென்ற தியானமொன்று
மருவிநின்ற மண்டலத்தில் தியானமொன்று
வேர்க்கவே பிரமத்தின் தியானமொன்று
வெளியான விஷ்ணுவின் தியானமொன்று
ஊர்க்கவே ருத்திரத் தியானமொன்று
உகப்பான தேவதாத்தி யானமொன்றே. 285

ஏமம் பத்துக்கு விபரம்

ஒன்றான சஞ்சாரச் சமாதியொன்று
உதிக்கின்ற ஆரூடச் சமாதியொன்று
அன்றான ச மாதிக்குளஞ்சு விதஞ்சொன்னேன்
அப்பனே அஷ்டாங்க மெட்டுமாச்சு
யன்றான யேமமது பத்துங்கேளு
பயனெல்லாஞ் சொல்லுகிறேன் பட்சிமிருகந்
துன்றான போதுவுந்தன் சுகதுக்கம்போல்
துப்புறவாய் மனதொன்று தெளிந்திடாயே. 286

தெளிந்திட்டா லப்கிஷை தானொன்றுசொல்வார்
சித்தாந்த விபரந்தான் சொல்லும்வாறு
விளிந்திட்ட வேதாந்தி சொல்லும்வாறு
விரிவான பொறிவழியே யறிந்துநின்று
அளிந்திட்ட யகண்டமென்ற பூரணத்தையப்பா
அறிந்திட்டுப் பரிசன னாகக்கண்டு
தளிந்திட்ட சாதிவர்ணாச் சிரமத்தாலே
சங்கற்ப விகற்பமெல்லாந் தள்ளிப்போடே. 287

போட்டுமே வேறுகூறாகப் பண்ணி
பூதாமலிங்கி ஷையாய்ச் சார்ந்துநிற்கில்
நீட்டுமே நின்றநிலை ஆயிங்கிஷை யென்பார்கள்
நேரான பரியாசம் விளையாட்டாலும்

ஆட்டுமே போய்விட்டு யேங்குமான்மா
யந்தரமாய் நிரைத்திருந்த சொரூபமூர்த்தி
சாட்டுமோ யிதுவல்லோ சத்தியந்தான் மைந்தா
தனித்தனியே கண்டிக்கப்படா தென்பாரே. 288

என்பார்களங் கிஷையில் கூடிநின்று
இயைந்து மேகபரிபூரணமா யிருப்பதாக்கி
மன்பார்கள் வஸ்த்திவையுந் தவிரவேறே
மார்க்கந்தா னில்லையென்று சந்தானித்து
தன்பார்கள் சத்தியமாம் வாக்குக்காயஞ்
சாதமென்றும் பாலென்றுங் கிரிகியாமல்
அன்பார்கள பகரிப்பைவிட்டு மனமுரைத்தால்
அனித்திய மாஞ்சரீராதி சுபாபமாச்சே. 289

சரியென்றே யறிந்துபார் சகலமெல்லாந்
தாரான சரீரத்தில் வருத்தத்தைநீக்கு
துரியாமென்றே சகலசனம் நன்மைபோலச்
சுகம்வருத்த மல்லோர்க்குந் தந்தைதாய்மைந்தா
பிரியமென்றே தனக்கனந்தம் வந்தாலுந்தான்
பேரான சத்துருவுக் கிதமேசெய்யில்
நெரியமென்றே யாட்சேபமிதையென்பார்கள்
நேராக யிதுவல்லோ சொல்லக்கேளு. 290

கேளப்பா வேதாந்தசாஸ்திரமே செம்மை
கேள்வியன்ற சமயமெல்லாம் பொய்யென்றுதள்ளி
தேளப்பா திடப்பட்டா லாட்சேபமாகும்
செயமான சத்துருவும் வியாதிபீடையென்பார்
மீளப்பா நிரஞ்சனமுஞ் சீதளமுமாகு
மிஷ்டான துக்கமபி மானம்வந்து
ஊளப்பா சொற்பனம் போலென்றுயெண்ணி
யேங்காமல் சேருவது சமயமென்பாரே. 291

என்பார்கள் வேதாந்தத் துள்ளேமுத்தி
யொடுகுறியாஞ் சாஸ்திரத்தில் முத்தியில்லை
வென்பார்கள தினாலே சொன்ன பொருளென்ன
வேறில்லை நாமதுதானென் பதல்லோ
உன்பார்கள் காரியத்தில் மனதிற்சோனை
யுருகாம லிருப்பதே திருப்தியென்பார்
இன்பார்கள் வேதாந்தத் தாலேமுத்தி
யிதைவிட்டால் மற்றொன்று மில்லைதானே. 292

இல்லையே பூரணந்தானா மென்றெண்ணி
யேகநித்த மறவா மலிருந்தானாகில்
கொல்லையே நம்மிடத்தே வந்ததொன்றுமில்லை
கூடிநின்றால் மிதாகார மென்றுமாகும்
வெல்லையே நிர்க்குண்ம் நான்வேறொன்றில்லை
விருதாவர் பாகாரந் தன்னைச்சுக்கி

தல்லையே மிருத்திகையுஞ் சலத்தினாலே
கனிந்துநின்ற அசனந்தான் சவுசமாச்சே. 293

சவுசமாம் வேதாந்த சாரத்தாலே
சகமென்ற திரியுமதில் தானேநின்று
நிவுசமாஞ் சொற்பனத்திலவத்தை களைக்கண்டு
நெருங்கிநின்று போனதில்லை வந்ததில்லையென்று
வெவுசமாம் வேதாந்த குருமுகமதில்
விரைந்துகொண்டு காலம்வந்து நேர்ந்துதானால்
துவசமா யிருபதுவே சவுசாகுந்
தூரிதமா மேமமென்ற பத்துமாச்சே. 294

பத்தான நேமத்தைப் பகரக்கேளு
பாங்கான சத்யமென்ன மித்தையென்ன
நத்தான நானேது நானென்றதாறு
நமக்குத்தான் மகத்துவந்த பேதமேது
சுத்தான சோத்தியங் காணதுவாலாச்சு
சுகதியாம் வேதாந்தத் தாலேபார்த்து
நித்தான நிரந்தரமு மாலோசித்து
நீங்காட்டால் பொல்லாங்கைத் தவசுமாச்சே. 295

ஆச்சுதே பிர்மாதி லோகத்துள்ளே
யமுத்தி நின்றகாமியத்தை நாகம்போலெண்ணி
தூச்சுதே வெறுப்புவந்து சொற்பனம்போலாச்சு
துக்கமிகு வென்றுசொல்லி மனதுதேறி
தாச்சுதே பொருளான சச்சிதானந்தந்
தடையற்று தெளிந்துநின்று தானேதானானால்
போச்சுதே ஆனந்த வடிவுமாகி
போதமா யிருக்கில் சந்தோஷந்தானே. 296

நேமம் பத்துக்கு விபரம்

தானான ஆகம புராணந்தன்னை
தணிவாக வெல்லோர்க்கும் வெளியிலிட்டு
வேனான வேதாந்த பிரமசாரம்
விளங்குகிற கருச்சொல்லும் பூரணமென்றெண்ணி
ஆனான தறிந்து கொண்டாரார்த் திகமாச்சு
அரியதாய்க் குருவுரைத்த வுபதேசத்தைக
கானான தறிந்துபொருள் முத்தனாகிக்
கருதியதோர் பதார்த்தமெல்லாங் குருவுக்கியே. 297

ஈய்ந்துபார் பரம்நோக்கத் தானமாகும்
இருக்கிறதோர் தன்தேகசுக போகமெல்லாம்
ஆய்ந்துபார் ஆர்செய்துந் தனக்குவந்தாப்போலே
யனேகசெந்து பொசித்ததெல்லாம் நாமென்றுதிருத்தி
நாய்ந்துபா ரொருமித்தாலீ சுரர்க்குப்பூசை
நலமாக யாச்சுதென்று யறிந்துகொள்ளு

கோய்ந்துபாரிட் படிதான் திருத்தியானால்
தீர்க்கமாஞ் சிவபூசை யென்றுகாணே. 298

காணவே சாஸ்திரங்க ளெல்லாங்கண்டெடு
கலந்தாடு விர்த்தியெல்லா மடித்துத்தள்ளி
தாணேவே தன்னிழல் போல்குரு வினுட்பின்னே
சச்சிதானந்த வெள்ளநீதா னென்றெண்ணி
தோணவே தெளிவிக்கும் வஸ்துக்குள்ளே
தோற்றியே சோகித்து மனந்தானென்றால்
ஆணவே தெளிவிக்குமு பனிஷத்துவென்று
அறிவிக்கும் பூரணமே சிரவணமுமாமே. 299

அறிவிக்குமாங் காரவியா பாரத்தா
லாகாய மிருதியாய கப்பட்டாலும்
பொறிவித்து மதின்மேலே யபேட்கைவிட்டு
பொறிதானும் புலன்வழியே போக்குண்டாக்கி
கெறிவிக்குங் கெட்டிருந்த ஞானமெல்லாங்
கெடியாக நிலைகுலைந்து வுலகத்தேசிக்கி
வறிவிதும் வாசினையாம் பெண்டீர்பிள்ளை
வருகின்ற பாசமெல்லாம் லட்சமெண்ணே. 300

எண்ணவே யெண்ணியந்த மதியாறிவந்தா
வியல்பாக யழிசகத்தி லிருந்துகொண்டு
திண்ணமே மனதொன்றில் வேதாந்தம்பார்த்து
சீராக நிற்கிறதே லட்சையாகும்
வெண்ணவே வேதாந்த பிரமந்தன்னில்
விரைந்துநின்று பூரணத்தைத் தினத்தானோக்க
வண்ணவே கோழைவிட்டுத் தெளிவுவந்து
வனப்பமுற்றால் மதியொன்று சொல்லலாமோ. 301

சொல்லவே நான்பிர்மமென்று ஆசான்
சுருதிகுரு வுபதேசப் படியேநின்று
வெல்லவே வேதாந்தப் பொருளென்றெண்ணி
மிகுதியா யாசைதன்னைத் தள்ளிவிட்டால்
மல்லவே மனமொத்தால் சிவமிதாச்சு
மற்றதெல்லால் சிவமல்ல மாயங்காணும்
வல்லவே மவுனத்தை ஐம்பொறியின்வழியில்
மருவாமல் நிறுத்தினால் மாயம்போமே. 302

மாயாமல் தான்பிர்ம மென்றேயெண்ணி
மனதொத்து நிரந்தரமும் வேதாந்தம்பார்த்து
போயாம லெந்தெந்த காரியங்கள் வந்தும்
புகாழாகத் துக்கமுடன் சுகந்தான்வந்தும்
காயாமல் குருசொன்ன காரியத்தின்வழியைக்
கைம்முறையாய் நிற்பதுவே விரதமாச்சு
நேயாமலேம மென்ற பத்துஞ்சொன்னே
ேஈராக விருபதையு மனுஷ்டிச்சேறே. 303

ஏறியிந்த விருபதையு மனுட்டி த்தாக்கால்
ஏற்றமா மனத்திடமா மில்லாவிட்டால்
தேறியிந்த செவரில்லாச் சித்திரம்போலாகுஞ்
சிறந்த சீவரடிப்டைதான் வைக்குமுன்னே
சூறியிருந்த சூளிகைதானவ சத்துக்குமொக்குந்
துப்புரவாய்க் காயசித்தி பண்ணுமுன்னே
ஊழியந்தச் சதுருகத்தைக் கண்டதொக்கு
முண்மை யிருபது மனுட்டித்தால றிவுண்டாமே. 304

அறிவுண்டாய்ச் சடத்தோடே மூர்த்தியைக்காணா
னப்பனே மஷ்டாங்க மறிந்துவுண்ணு
தறிவுண்டாய்ச் சுகாசனமா யிருந்துகொண்டு
தனித்ததோர் மூலத்தில் வங்கென்றுபூரிக்
குறிவுண்டாய் கும்பித்து மாத்திரையையேற்றி
கூறாக சிகாரத்தால் முடியுண்டாக்கி
நெறியுண்டாய் மூன்றுமுறை மாறினாக்கால்
நேராகக் கும்பகமே நேசிப்பாரே. 305

நேசித்து யிப்படிதானங் கென்றுகும்பி
நில்லாமலி துரண்டுந் தீர்ந்தபின்பு
ஆசித்து யகாரமுதலு காரங்கூட்டி
அப்பவே மவுனத்தால் கும்பித்தேரு
மாசத்து மவுனத்தான் குவிந்துபின்பு
மருவியதோர் மூலத்தை விட்டுநீயும்
காசித்து கண்டத்தே நின்றுவூது
காலடங்கி யுறைந்தபின்பு மேல்மூலம்பாரே. 306

பார்த்துமே யறிவோடே மவுனம்பூரி
பரிவாகப் பூரணத்தை யதுக்குள்கும்பி
நீர்த்துமே நினைவோடே ரேசகத்தைப்பண்ணு
நிற்பிசமாம் பிர்மமென்ற பிராணாயாமம்
பூர்த்துமே பிரபஞ்சமென்றே யாசைவிட்டுப்
பின்னொன்று மனதுள்ளே சங்கியாமல்
ஆர்த்துமே யந்தமென்ற கரணமாகி
அந்தமென்ற மார்க்கத்தி லாடிக்காணே. 307

ஆடியே யாசனத்தை விரித்துச்சொல்லே
னதிதமாஞ் சோஸ்திகத்தை யறியக்கேளு
மூடியே முழங்காலாங் குளச்சில்ரண்டில்
முனிந்தாக்கால் ரண்டும்வைக்கச் சொல்லதிகமாச்சு
சூடியே சிங்காதனத் தைக்கேளு
சிறந்தயோகவேட்டிதனைப் போட்டுக்கொண்டு
நூடியே முழங்காலில் கரங்கள் நீட்டி
நுனிமூக்கைப் பார்த்திருப்பார் நிசமாங்காணே. 308

நிசமான பத்திராசனத்தைக் கேளு
நேராக வுட்கார்ந்து காலைரண்டுந்
துசமான பிறகாலே கையாற்கட்டி
சுகமுற்று யிருக்கையிலா சனமுமாச்சு
முசமான முத்தபாசனத்தைக் கேளு
முனிந்துமே காட்டோடு காடுபோட்டுக்
குசமான குத்துக்குள் குதிரையைவைத்துக்
கூசாம லிருப்பதிந்தக் கொள்கைதானே. 309

கொள்கையா மயூரயாசனத் தைக்கேளு
குறிபெறவே ரண்டுகையுந் தரையிலூணி
கள்கையா முழங்கையைத் தொப்புளிலேவைத்து
கலந்துதடி போலாக் கலருவார்கள்
துள்ளையாஞ் சுகமுற்ற பாதனத்தைக்கேளு
சுகமாக வேண்டியதோர் படியிருப்பு
உள்கையா மொன்பதுக்கும் பருவஞ்சொன்னே
னுறைந்து யினிபிராணாய முரைக்கக்கேளே. 310

உரைக்கவே ரேசகந்தன் விடுவதாகு
மோங்கியதோ பூரகந்தானுள்ளேவாங்கள்
தரைக்கவே கும்பகந்தான் தம்பிச்சிருத்தல்
தாங்கியதோர் பீசமந்திரத்தி லூடல்
விரைத்துமே நிற்பீசமந்திரத்தை விட்டு
வெளியிலே பூரித்தால் மெதுவிலேதான்
அரைக்கவே யஞ்சுவி தபிராணாயாம
மசையா மலாசனத்தி லிருத்திப்பாரே. 311

பார்க்கவே மாத்திரைதான் முப்பத்திரண்டு
பண்பாகப் பூரிப்பாய் மூலத்துக்குள்ளே
ஆர்க்கவே மாத்திரை தானறுபத்தினாலு
அடவாகக்கும் பித்துப் பாருபாரு
மூர்க்கவே மாத்திரைதான் பதினாறப்பா
முனையாக ரேசிப்பாய் தவறிடாமல்
நார்க்கவே யறிந்துகொண்டு நந்தியைத்தான்பார்த்து
நலத்தபின்பு பிறநலம் நாடியூதே. 312

நாடியே விஷ்ணுவிலே நயந்துவூது
நலமாக வுரைத்தபின்பு ருத்திரனிற்சேரு
ஊடியே மயேஸ்பரத்தில் நின்றுவூது
உறைந்தபின்பு சதாசிவத்தி லுகந்து கூடு
ஓடியே யாறுதல் முத்தியேற
உகந்துமே யொன்றாச்சு பிராணாயாமம்
பீடியே பிரமத்தின் காயமத்தின்
பேராக வொருமுறைக்குள் நீக்கிப்போமே. 313

நீக்கிப்போம் பிராணாயஞ் செய்யும்போது
நிலைத்துமே மாத்திரை தானேறயேற
காங்கிப் போங்கம்பமுகும் வேர்வைகொள்ளுங்
கதித்துமே கபாலத்தை யசைத்துத்தூக்கும்
ஊங்கிப்போ மும் மலமுங் களிம்புபோகு
மூர்ந்துநின்ற நாடியெல்லாஞ் சுத்தியாகும்
ஓங்கிப்போம் பிராணாய முரைத்துதானா
லோங்குமே திசைநாதவு ண்மைதானே. 314

உண்மையெட்டு பருவமுண்டு பிராணாயத்தி
லொளியாமல் சொல்லுகிறேனு வந்துகேளு
வெண்மை மத்திநின்று முந்திவேர்வையாகு
மிக்கநின்ற தம்பிக்கும் ரண்டாம்பட்சம்
திண்மையற்ற தீரபமா மூன்றாம்பட்சம்
செலந்தானும் வெகுவாகும் நாலாம்பட்சம்
பெண்மை யொத்துபிராகசிக்கு மைந்தாம்பட்சம்
பேரான குண்டலி மேலாறிலாமே. 315

காமப்பாலுடம்பில் குற்சிக்கிறது

ஆறவே ஆகாச கெவுனமார்க்கம்
மதிகமாந்தூ ரதிஷ்டி யறியப்பண்ணும்
ஏறவே யெட்டினுட பெருமைகேளு
ஏற்றுமாங் கேசரத்தில் திசைநாதங்கள்
நாறவே நல்வினையுந் தீவினையும்நீறாம்
நயந்தபின் புநாடிசுத்தி தானுமாகும்
ஊறவே காமப்பாலுடம் போடேகலக்கு
முவந்துமே பிராணாய முரைத்துப்பாரே. 316

உரைத்துமே சொல்லுகிறேன் பிரிதியாகார
முண்மையாற் வாசினையின் வழியிற்சென்று
மிரைத்துமே நடத்துவிக்கு மிந்திரியந்தானு
மிகைமையா மனத்தை மெள்ளமுயற்சியாக்கி
விரைத்துமே திரியுறதைத் திரியவொட்டாமல்
வெட்டியதை மறிக்கிறதே பிரத்தியாகாரம்
இரைத்துமே யிதற்குள்ளே யாறுவிதமுண்டு
எடுத்துமே சொல்லுகிறே னியல்பாய்க்கேளே. 317

பிரத்தியாகார மாறுவிக்கும்

இயல்பான சரீரமென்ற பிரத்தியாகார
மெய்துவது ரண்டுவிதம் நன்றாய்க்கேளு
நயல்பான பிரபஞ்சத்தில் மனம்போகாமல்
நலமாகச் சமாதியிலே யிருத்தலொன்று
கயலான நாடிசுத்தி கலந்தபின்பு
கலந்துபோ மிளமையெல்லா மழைப்பதொன்று
ஓயலான வொருபொருளை நாடிநின்றால்
உத்தமனே பிரத்தியா காரமாச்சே. 318

ஆச்சென்ற விந்திரிய பிரத்தியாகார
மாண்மையுற்ற தாதுவெனுந் தனத்தரோகம்
போச்சென்று போகாமல் சமாதியிலழைத்து
புத்தியொத்து பூட்டுறது வொன்றுகாணும்
நீச்சென்ற பிராணனாம் பிரத்தியாகாரம்
நேர்மையொத்து நாடிசுத்தி யானபின்பு
ஊச்சென்ற வுச்சிமுத லாடத்தோடு
உறுதியுற்ற வாக்கினையுஞ் சேரத்திரந்தானாமே. 319

தானான தேத்திரமு நாசிவாய்தான்
தனித்த யடிநாக்கு தான்கண்டம்நெஞ்சு
ஊனான வுதிரமொடு யிடுப்புநாபி
உற்றதுடை முழங்காலும் பாதங்கேளு
ஆனான யங்குஷ்ட மவயவங்களாயோடு
மன்பான பிராணனைத்தான் தானம்விட்டு
வேனான காலத்தில் விரைந்தணைத்து
விடுகிறது பிராணமென்ற பிரத்தியாமே. 320

ஆமென்ற யந்தரமாங் கானந்தன்னை
யலைத்து பிரபஞ்சத்தை யணுகொட்டாமல்
வாமென்ற வஸ்துவொடு மார்க்கத்தாடி
மகத்தான காமியத்தை நரகம்போலெண்ணி
தாமென்ற சங்கற்பவி கற்பமெல்லாம்
தனியான மீனதி.......சங்கியாமல்
வேமென்ற வேதாந்த விசாரத்தாலே
விளங்கியதோர் ஞானத்திலிருத் தல்நன்றே. 321

இருத்தினால் கரணமென்ற பிரத்தியாகாரம்
எளிதான தனதான்யம் பொன்னுமண்ணும்
தருத்தினா லாபரனஞ் சகலவஸ்துந்
தந்ததினால் மனதிலேயே பேட்சிக்காமல்
வருத்தினால் வயிராக்கிய மனதிலெண்ணி
மனம்வெறுத்து விடுதல்மெத்த வுயர்த்திகேளு
பருத்தினால் சருவசங்க பிரத்தியாகார
பரிவாக வேதாந்தம் பார்த்துத்தேறே. 322

தேறவே சாட்சியெங்கும் நாமாய்நின்றோம்
திகைத்துநின்ற மாயமெல்லா நமக்குக்கிழே
ஊறவே நிரந்தரமு முரைத்துநின்று
உகந்துநின்ற பிரபஞ்சமெல்லா மித்தையென்று
நீறவே நின்றவனே யவனேமுத்த
னிற்பாறும் பிரத்தியா காரமாகும்
ஆறவே ஆறிவித்தா ரணையேசொல்வே
னாய்ந்து நின்ற பூதமஞ்சு மறிந்துகேளே. 323

கேளென்ற சரீரத்தில் பஞ்சபூதங்
கொடியாக யிருக்கின்ற தானத்துள்ளே
மாளென்ற மண்டலத்தில் வர்ணமுத்து
மனதுள்ளே தரித்துடனே பிராணாதாரம்
பாளென்ற பதினாலு மூலந்தொட்டு
பருவமுடன் பிராணனைத் தான்றரிக்கப்பண்ணி
தாளென்ற கிரமத்தோடே சஞ்சரிக்கில்
தாரணை தானாறுவிதஞ் சாதிப்போர்க்கே 324

சாதித்த தியானத்தைச் சாற்றக்கேளு
சட்டமாம் பிரமருட வீட்டுக்குள்ளே
காதித்த மண்டலமுங் குண்டலமுங்கிரீடங்
கலந்துமே சுரசோதி லோகபாதாளம்
சோதித்த பரிவாரஞ் சூழ்ந்துநிற்கச்
சொல்லுகிறேன் தானத்திற் சூட்டினோர்க்கு
மாதித்த மாலுடைய தியானங்கேளு
மாசற்ற பச்சைவர்ணம் வருத்திடாயே. 325

வருத்திட்ட சங்கொடு சக்கரமுந்தடியும்
வகைந்துநின்ற புட்பமொடு நாலக்கரங்கள்
குருத்திட்ட குண்டலமுங் கிரீடம்வைத்து
கொத்தான முத்தோடு துளசிமாலை
கருத்திட்ட கவுஸ்துவமாம் ரத்தினம்பூண்டு
கையெடுக்க லட்சுமியுங் கலந்துவைத்து
அருத்திட்ட பிரமாதி லோகபாலா
ளருகிருந்து தியானிப்பா ரறிந்துகாணே. 326

அறிந்துமே ருத்திரனைத் தியானம்பண்ணு
ஆண்மையா மஞ்செழுத்து மாயுதங்களோடு
பிறிந்துமே குண்டலமும் கிரீடம்பூண்டு
புகழான ருத்திரியை வாமம்வைத்து
எறிந்துமே யிருக்கிறதாய் தியானத்துள்ளே
யெளிதாகவு பசரிப்பார் பெரியோர்தாமு
மறிந்துமே மயேஸ்பரனைக் கருத்தாய்நோக்க
மாசற்று அர்ச்சிப்பார் வண்மையோரே. 327

வண்மையாஞ் சதாசிவனு மனோன்மணியேநோக்கி
மனதுண்ணித் தியானிப்பா ரதிதமெத்த
ஆண்மையா யிப்படியே அறுவகைதியான
மானபின்பு மண்டலத்தில் மூன்றுவகைதியானம்
உண்மையா யிப்படியே வுபசரிப்பார்க
ளுத்தமமாந் தேவதாத் தியானமாச்சு
விண்ம்மயாய் விசுவமென்ற தியானங்கேளு
விளங்கிநின்ற பிரபஞ்சமெல்லாஞ் சரீரமொன்றே. 328

சரீரமொன்றே நானென்று அபிமானித்து
தனித்திருந்து யீஸ்வரனைச் சிந்திப்பார்கள்
கரீரமென்றே சிவனுக்கு சரீரமான
கலந்துநின்ற லிங்கத்தைக் கண்டாப்போலே
உரீரமொன்றே ரூபமாய்நின்ற தெல்லாம்
உண்மையா யீஸ்பரனைப் போலேபார்ப்பார்
புரீரமொன்றே பிராணாயத் தின்றியானங்கேளு
புகழ்பெறவே ஒன்று அஞ்சுமுப்பத்தாறே. 329

ஆறோடு பிரகிருதியென்ற புருஷனப்பா
அதிகமாம் பரமார்த்த மூன்றாய்க்கண்டு
மாறோடு காஷமஷ்ட்டி அந்திரசமஷ்ட்டி
மருவின்ற வியாஷட்டியாய்ப் பிரித்துக்கொண்டு
தேறோடு மந்திவத்தாற் பூசைபண்ணி
செபித்து நின்றுஉபாசிப்பார் நாற்பத்திரண்டு
ஊறோடு ஒவ்வொன்றே யெட்டாய்வாங்கி
யுயர்ந்துநின்ற தித்தனையும் வித்தையாமே. 330

வித்தையாம் பிரமமென்ற தியானங்கேளு
விரிவான மாயையொடு மாயாப்பூமி
சுத்தையாஞ் சுத்தமென்ற சைதன்னியந்தான்
சுருதியாயிது மூன்றும் விண்ணைப்போலே
வித்தையா மறைந்திருக்கக் கடுகண்டுமதித்த
வரைதீர்த்த முத்திசேத்திரமாய்ப் பார்த்து
உத்தையா யெந்நேரஞ் சிந்தைசெய்து
உகந்துதான் பிரமமென்று யெண்ணியெண்ணே. 331

எண்ணியே யத்துநானியல் பாச்சொன்னே
னெளிதாகச் சமாதிஅஞ்சு முன்னேசொன்னேன்
அண்ணியதோர ஷ்ட்டாங்க மடக்கிச் சொன்னே
னடவெல்லாந் தானறிந்தால் ஞானியாவான்
ஒண்ணியதோர் சமாதிக்கு ஆதிக்கஞ்சொன்னே
னுரைப்பான மாயியுட வுறுதிச்சொன்னேன்
உண்ணியதோர் உளைஞ்சு முன்னே பார்த்துத்தேறி
உண்ணியே வாசியென்ற திறத்தைப்பாரே. 332

திறமாக விப்படிதான் பிராணாயாமம்
செய்தவர்க்கு ரோமமெல்லாம் வேர்வையோடும்
அறமாக யாடனொன்று வாசிதன்னை
யனுதினமு மப்பியாசம் பண்ணினாக்கால்
தறமான தாதுவெல்லாஞ் சித்தியாகுந்
தசையிலுள்ள தோஷமெல்லாஞ் சாடிப்போகும்
நிறமான நோயெல்லாங் கக்கும்பாரு
நெடிதாகச் சட்டையொன்று திரண்டுபோமே. 333

போகுமே சடத்தினுள்ளே நோய்களெல்லாம்
பொருமியே நீறாகவெந்து போகுந்
தேகுமே தேகமது சிவப்புமாகுஞ்
செவ்வலரிப் பூப்போலாங் கண்கள்ரண்டும்
வாகுமே சடமிந்த யிறுகுந்தேகம்
மகத்தான சக்கரங்க ளாறுங்காணும்
ஒருமே பஞ்சகர்த்தாளை வருந்தான்வந்து
உற்றுவவர் கேட்டதெல்லா முதவுவாரே. 334

உதவுவார் நிர்வானியே வல்கேட்பாள்
உண்மையாம் யோகசித்தி வாதசித்தி
விதவுவார் வினைகளெல்லாங் கழன்றுபோகும்
விரைந்ததோர் சுழிமுனையும் வெளிவெளியாய்க்காணும்
புதவுவார் சடமதுவும் வண்டுபோலாம்
பொற்பது மைபோல வுந்தானிருக்கலாகும்
சிதவுவார் சடந்தானுஞ் சொன்னபடிகேட்குஞ்
சித்தியாய்க் கூடுவிட்டுப் பாயலாமே. 335

பாயவே வுமிநீரும் பானமாகும்
பார்க்கவொட்டால கிரியதுகண்ணில்மீறும்
தோயவே தேவரெல்லாம் வணங்கிநிற்பார்
செடம்போச்சு கயிலாச தேகமாச்சு
ஆயவே யஷ்டமா சித்தியாகு
மதுகடந்த நிர்க்குணமு மடுக்கக்காட்டும்
வாயவே கோபத்தால் வார்த்தைசொன்னால்
மண்ணோடு கல்முதலாய் நீறாய்ப்போமே. 336

நீறான அக்கினி மண்டலந்தா
னேர்ந்த சுவாதிஷ்டா னத்தின்கிழாக
வாறான மூலமா முக்கோணத்தின்
மருவியதோர் நாலிதழ் மேலறிந்துநிற்குந்
தேறான வர்னமது சிவப்புமாகுந்
தெரிந்துகொண்டு வாசியினா லுண்ணியாடு
காறான களிம்பற்று சடமுந்தானுங்
கனமில்லா வண்டதுபோல் தேகமாகு
மூறான மும்மலமுங் களிம்புநீங்கு
மீளாத்தி யக்கினி மண்டலமுமாமே. 337

ஆமென்ற மாலினுட விஷ்ணுமேலே
யதிதமாம் ருத்திரன் றனபதிக்குக்கிழே
பாமென்று பன்னிருவர் காவலாக
பரிவான பிராணனைத் தான்காத்துநிற்கும்
பாமென்ற பளிங்குநிறம் போலிருக்கும்
பரிவாக வாசிவைத்து யூதிப்பாரு
தேமென்ற சீவகளை தேசுபோல
சிறந்த ஆதித்தன் மண்டலமுந்தானே. 338

மண்டலமாய் விசுத்தியின் மேலேகாணு
மனோன்மணித்தாய் கொலுவுக்குக் கீழேபாரு
குண்டலமாய்ச் சந்திரமண்டல முந்தானுங்
குறிப்பாக வமர்ந்திருக்குங் கூடிப்பாரு
அண்டல மாயமுர்த்த கலையருவியாகு
மதிற்சொக்கி லமுர்தத்தை யுண்ணலாகும்
பண்டலமாய்ப் பதினாறுகளை யுந்தானும்
பரிசுத்தி தழைசுத்தி பரவுந்தானே. 339

பரவியே காலாங்கி நாயர்சொன்னார்
பக்குவத்தி லடியேனும் பார்த்துத்தேறி
புரவியே பொதிகைக்கும் வாய்வுமூலை
பெருத்த தோரசோக மாமரத்தின்கீழே
அருவியே யறுபத்து மூன்றுபேர்க்கு
மஷ்டாங்க யோகத்தைப் போதித்தேனியான்
பரவியே யறுபத்து மூன்றுபேர்க்குப்
பலித்துதே யஷ்டாங்க சித்திதானே. 340

சித்தியா யறுபத்து மூன்றுபேருந்
சேதமெங்குந் திரித்திட்டு விண்ணிலேறி
அத்தியே அடுச்சாறு மதனில்புக்கி
யதிசெயங் களெல்லாந்தானறிந்து பார்த்து
சத்தியாய் நடனத்தின் புதுமைகண்டு
நாதாந்தத் திசைநாதம் நாட்டம்பார்த்து
புத்தியா யிப்பூமிக்குள் மேருவலம்வந்து
புகழ்ந்தாரே பிள்ளைகள்தான் புகழ்ந்தேன்காணே. 341

காணவே பிள்ளைகள்தான் வணக்கஞ்செய்தார்
கையமர்த்திச் சமாதிக்குள் சொல்லுமென்றேன்
ஊணவே காலாங்கி நாயர்பாத
முவந்துமே நெஞ்சில் வைத்துமூலநாயர்
தோணவே பாதமெந்தன் சிரசில்வைத்து
சிவயோக மார்க்கத்தில் தெளியவென்று
வேணவே ரசோகமா மரத்தின்கீழே
வேட்டிதனை விரித்துமே விரைந்தென்பாரே. 342

விரைந்துமே நூறாண்டு சிவயோகத்தில்
வெளியொளி பாழ்தன்னில் மனம்விரவிப்போச்சு
திரைந்துமே ஆண்பெண்ணான சிங்கம்ரண்டுஞ்
சிலையென்று நம்மையெண்ணிச் சிறக்குநூலில்
புரைந்து மேவெகுநாள்தான் பிள்ளைகளைப்பெற்றுப்
பெருக்கங்க ளாகியே சிங்கக்கூட்டம்
நரைத்துமே நம்மைசுத்தி யிருந்துக்கொண்டு
நாட்டமா யிரைகொண்டு பொசிக்கும்பாரே. 343

பார்க்கவே வெகுநாள் தானிருக்கும்போது
பதிவாக வதிலொருநாள் நமக்குத்தானும்
ஆர்க்கவே ஆனந்தங் கழிந்துதானு
மருவிபோல் திவலைசிந்த மடியின்மேலே
தீர்க்கவே சிங்கமது படுத்திருக்கத்
திவலைதான் சிங்கத்தின் வாயில்வீழ
ஆர்க்கவே யெழுந்திருந்து விழித்துப்பார்த்து
ஆனந்த வாரியினால் ஞானமாச்சே. 344

ஞானமாய்ப் பந்துசனந் தனையழைத்து
நாதாந்தச் சிவயோகி தன்னைநாமும்
கானமாய்க் கல்லென்று யருகிருந்தோம்
கடுஞ்சாபம் நமக்குவரப் போகுதென்று
தூனமாய் விடமெல்லாஞ் சத்திபண்ணி
சுற்றிலுந்தான் பிள்ளைகளைக் காவல்வைத்து
தானமாய்த் தங்களுக்கு யிடந்தான் வேறே
சவதரித்துச் சதாநித்த போற்றுவாரே. 345

போற்றியே யர்ச்சித்து அஞ்சல்பண்ணி
பேரான சீவசெந்தை பொசித்திடாமல்
தேற்றியே புல்சருகுதனைப் பொசித்து
சிவசிந்தை மறவாமல் காத்திருக்கும்
ஆற்றியே யிப்படிதான னேகங்கால
மர்ச்சித்துக் காத்திருக்கும் நாளில்தானும்
வேற்றியே வெளியோளி பாழ்தன்னைவிட்டு
வெளியிலே மனந்தன்னை விரைந்திட்டேனே. 346

விரைந்திட்டுக் கண்விழித்துப் பார்க்கும்போது
மிருகமென்ற சிங்கமெல்லாம் நடுநடுங்கி
அரைந்திட்டு அடிவணங்கி நிற்கும்போது
ஆர்நீங்களென்று சொல்லியான் றான்கேட்க
திரைந்திட்ட மிருகமென்ற சிங்கம்நாங்கள்
செயலறியாப் புத்தியினாற் செயலென்றெண்ணி
முரைந்திட்ட மூர்த்தியுட பதத்தில்நின்றோ
முனிந்தகண்ணீர்த் திவலையினால றிவுண்டாச்சே. 347

அறிவுண்டாய்ப் பயந்துமே நடுநடுங்கி
அடியேன் கள்கடத்தேறும் பொருட்டுக்காகத்
தெறிவுண்டாய்த் தேவர்பதங் காத்திருந்தோஞ்
செயலே துதேவரீர் கடாட்சத்தாலே
நெறியுண்டாய் மிருகமென்ற சட்டைநீங்கி
நித்தியமா முத்தியெனக் கருளுமன்னே
நறிவுண்டாய் நான்தானு முபதேசிக்க
நாடாளும் ராசாவாய்ப் பிறந்திட்டாரே. 348

பிறந்திட்டு ராச்சியங்கள் மிகவுமாண்டு
பேரான சுகாதிகளை யநுபவித்து
மறந்திட்ட மாமாய்கை பெண்ணினாசை
மயக்கறுத்து மனதுதன்னை வழிப்பாடாக்கி
திறந்திட்டுத் திரேகசதமல்லவென்று
திரும்பி வந்து ராசாவாய்க் குருவேஜயா
கறந்திட்ட பால்போல யோகஞானங்
கருத்தெனக்கு அருளியென்றான் கடாட்சித்தேனே. 349

என்றான கடாட்சத்தால் யோகம்பார்த்து
எத்தான வரசான யோகத்தில்நின்று
கன்றான கைநெல்லிக் கனிபோலேதான்
கருதியே யோகத்தின் கருத்தறிந்து
தின்றான கற்பங்கள் வெகுநாள்தின்று
செடமிருக்கக் கற்பாந்தர காலந்தானுங்
குன்றான வாதமெல்லாங்கூர்ந்து பார்த்து
குளிகைகட்டிக் கெவுனவழி கொண்டிட்டாரே. 350

கொண்டிடவே ஐவரையுஞ் சோதித்தேறி
கூர்ந்துமே திரும்பி வந்துயடியேன்பக்கல்
அண்டிட்ட வஷ்டாங்க மறிந்துபார்த்து
அஷ்டான சைதன்யத் தடர்ந்திருந்தார்
விண்டிட்டு அறுபத்துநாலு பேர்சீஷர்
மேதினியி லெங்குமே சஞ்சரித்து
அண்டிட்டுச் சமாதிக்குள டைந்திருந்தார்
அறியாட்டால் யோகத்தை யவத்தமாமே. 351

அவயோகம்

அவத்தமா மவயோகங்கள் செய்தானாகி
லறியாமல் பூரித்தலொதுங் கிற்றானால்
விவத்தமாம் வியாப்பிரத்தைச் சொருகிக்கொள்ளும்
விழிப்பான கனபோகமுங் கோணிப்போகும்
உவத்தமா யுடம்பெரிவு விக்கலாகு
முடலெல்லாம் வேர்வையாய் வலியேகாணும்
கவத்தமா மட்டயோகங் கர்மயோகம்
கடிதான லயயோகங் கருமங்கேளே. 352

கருமமாய்ப் பூதமெல்லாம் லயமேசெய்து
காரணமாந் தத்துவத்தை லயமேசெய்து
நருமமாய்க் குருபதத்தில் நாட்டிநின்று
நயந்துமே யேறுவார் கடினமெத்த
பருமமாய்ப் பரியங்கி யோகத்தாலே
பரிந்துமே மலிவார்கள் கர்மகர்மம்
நிருமமாய் மிக்கான ராசயோகம்
நிலைத்தல்லோ சாதித்து நினைவாய்ப்பாரே. 353

நினைவாக வதன்மேலே மந்திரயோகம்
நேரான தசதீட்சை முறையோடொக்க
அனைவாக யண்டவெளிச் சக்கரத்தை
ஆடிநின்று பிராணாயந் தீர்ந்துத்தேறி
மனைவாக நிர்க்குணத்தின் மவுனத்தாடி
மருவிவிட்டாய் மருவிவிட்டாய் பூரணத்தினோடு
வினைவாகத் தசதீட்சையார் சொல்லப்போறார்
விரைந்துணர்ந்த பெரியோரை யடுத்திடாயே. 354

பெரியோரையடுத்திட்டுத் தொண்டுபண்ணி
போற்றிசெய்து யனுசரித்துக் கேட்டால் சொல்வார்
மரியோரைக் கேட்டேனே சொல்லவில்லையென்று
மனக்குரங்கால் கெட்டவர்கள் கோடாகோடி
துரியாதே யலையாதே மோட்சம்வேண்டித்
துரிசிவிட்டுக் காத்திருந்து குருபதத்தில்கேளு
குரியார்க்குக் கொடுத்திட்டால் தீட்சையாார்
கூட்டடா பூரணத்தில் கடுகநீயே. 355

கடுகவே யேறயிலே தீட்சை விதிக்கருவைக்
கருத்துண்ணியங் கங்கேகலந்துகாணும்
அடுகவே பிராணாய மங்கங்கேவைத்து
வாகாக விழுக்கையிலே யொளியேமீறுந்
திடுகவே வொளியோடே சென்றுசேர
சிறப்பான திசைநாதஞ் செவியில்கேட்கும்
அடுகவே பராபரத்தா யமுர்தமீவா
ளகண்ட பரிபூரணந்தான் பேசும்பாரே. 356

பார்க்கவே பூரணந்தா னெளிதோமைந்தா
புரிவான தசதீட்சை குருகைக்காரு
ஆர்க்கவே யவர்மனது வந்துதானால்
ரண்டிலே சித்தியா மடைந்துகூடும்
நேர்க்கவே யிதைவிட்டு வாமத்தில்சென்று
நினைவுகெடப் பானமுண்டு நிலைத்துவுண்ணார்
கார்க்கவே கூசாதே சற்குருவைத்தேடித்
தாரையா முடல்பொருது மாவிநீயே. 357

ஆவியவர்கைக் கொண்டால் கண்டங்கொள்ளு
மடுக்கான வானுவந்தான் பிறவிபோச்சு
பாவியென்ற பேரெல்லாம் படுதியாச்சு
பராபரத்தி லுன்னறிவு பாய்ந்துபோச்சு
காவியென்ற சீலையென்னவே ஷமென்ன
கருவுண்ணிச் சமுசாரத் துள்ளேநிற்பார்
கோவியென்ற கோபம்வந்து செபித்தாரானால்
கோடியிடி விழுந்தாப்போல் கொள்ருந்தானே. 358

தானான பிராணாயம் பண்ணும்போது
தயங்கியே பிராணத்தில பானந்தங்கில்
ஊனான உதாரத்திலுத் தியிலேநேர்வா
முகப்பான மருந்துகொண்டால் கருமநோய்தான்
ஆனான லட்சியத்தை யதிலேவைத்து
அசைவற்று மூச்சையுள்ளே வாங்கிநின்றால்
பானான வபானமது பிரிந்துபோகும்
பண்பான கற்பத்தைப் பாங்காயுண்ணே. 359

உண்ணவே யிவ்வளவும் யோகமார்க்கம்
உறுதியாய்ப் பார்த்தபடி யுண்மைசொன்னேன்
கண்ணவே காலாங்கி ஐயர்சொல்லக்
கடாட்சித்த பாட்டரென்று மூலநாயர்
திண்ணவே யவர்பதத்தைச் சிரசில்வைத்து
சிறந்தமனோன் மணித்தாயார் சொல்லக்கேட்டு
விண்ணவே பதஞ்சலியர் வியாக்கிரமர்தாமும்
விதியுள்ளா ரென்றுசொல்லிப் போதித்தாரே. 360

போதித்த பெரியோர்கள் ரிஷிகள்சித்தர்
புத்தியுள்ளா ரென்றுசொல்லி யடியேனுக்கு
வாதித்த ரிஷிசித்தர் சொன்னபுத்தி
மனதில் வைத்துவாசியுடன் வண்மைபார்த்து
ஏதித்தே ழாயிரத்தில் சுருக்கமாக
எடுத்துரைத்தே னெல்லோரு மெனைப்போலாக
சோதித்த மோகனத்தின் மார்க்கந்தன்னைச்
சூட்சமாய் மானிடர்க்குச் சொல்லியாச்சே. 361

ஆச்சப்பா சவர்க்கார குருவைப்பண்ண
வறையிறே னானந்தம றிந்தமட்டும்
போச்சப்பா சவர்க்கார மென்னவென்பார்
பொல்லா தாரெண்ணெயைத்தான் கழற்றமாட்டார்
மாச்சப்பா பூநீறெல் லாமாச்சு
மருவியதிற் பழச்சாற்றை விட்டுஆட்டி
பாச்சப்பா புடம்போட்டு யெடுத்துப்பார்த்துப்
பாரமில்லை லேசாச்சு வென்பார்பாரே 362

பாரப்பா சவர்க்கார மார்க்கம்
பைங்கூனிதனி லெடுத்துப் பூநீற்தானும்
நேரப்பா படிநாலு பாண்டத்திற்போட்டு
நீக்கரி கற்சுண்ணம் படிதான்போட்டு
வாரப்பா வமுரிபடி யெட்டுத்தானு
மருவியோர் கல்லுப்புப் படிதான்போட்டு
தாரப்பா வதட்டிநன்றாய் கலக்கிவைத்து
சமர்த்துடனே நாலாநாள் தெளிவைவாங்கே. 363

வாங்கியே யடுப்பில்வைத்து யெரிநேர்பாக
வற்றியே குழம்புபோல் வருதல்கண்டு
தேங்கியே படியரைதானல் லெண்ணெய்யுஞ்
சிறப்பாகக் கூடவிட்டுத் திரளக்காய்ச்சி
பாங்கியே பக்குவத்திலான பின்பு
பருவமுடன் விபூதிமேற் சீலையோட்டு
நீங்கியே யகப்பையினா லெடுத்துவிட்டு
நெகிழாமல் விளாங்காய் போலுண்டைசெய்யே. 364

செய்யவுண்டை புவிதனிலே யுலரவைத்தது
சிறப்பாக வெடுத்துவைத்து நவபாண்டத்தில்
மைதபின்பு லோகத்தார் சவர்க்காரந்தான்
வாதத்துக்கா காது வண்ணார்க்காகும்
பைதபின்பு யிதற்கடுத்த சுத்திகேளு
பாங்காகப் பாக்குபோற் சீவிக்கொண்டு
கொய்தமல்லிச் சாறதனால் பாகமே செய்து
கூரறிய ரவிதனிலே காயப்போடேக 365

சவர்க்காரச் சுன்னம் கடுங்காரச் செயநீர்

காயவே யேழுநாள் கலைத்துப்போடு
காய்ந்தபின்பு செய்கிற வரிசைகேளு
மாயவே நெல்லதனைப் பாண்டத்திட்டு
வகையாகத் தண்ணீருங் கூடவிட்டு
நேயமா மல்லிகை யினிலைபரப்பி
நினைவாக வதின்மேலே சவர்க்காரம் வைத்து
தேயவே மேலுமந்த யிலைபரப்பித்
தேலைகட்டிமேல் மூடியடுப்பிலேற்றே. 366

அடுப்பேற்றிக் கடிகைரண்டு தீயைமூட்டி
ஆவிமேல் வருதல்கண்டு யெடுநேர்பாகத்
துடுப்பேற்ற ரவிதனிலே யுலரப்போட்டுத்
துலங்கமுன் போலிலை பரப்பிநெல்லில்வைத்து
வடுப்பேற்ற ரவிதனிலே யுலரப்போட்டு
மறுகாலு முன்போலே யிலைபரப்பிக்
கடுப்பேற்றி யெரித்துமுன்போல் பதத்தைப்பார்த்துக்
கனமான வெயிலுக்குட் காயப்போடே. 367

போட்டுடனே தந்தம்போற் சுத்தியாகும்
புகழாகக் கிளிபோலத் தாழக்கட்டி
ஆட்டுடனே கற்சுண்ணங் கிளிஞ்சிற்சுண்ண
மப்பனே யண்டோடு நத்தைச்சுண்ணம்
நீட்டோடே சங்குசுண்ணம் புதிதாய்ச்சுட்டு
நீற்றாமே லொன்றாகக் கலந்துகொண்டு
மாட்டுடனே கிளியெடுத்து நடுவேவைத்து
வளமான சட்டியிலே வைத்திடாயே. 368

வைத்தபின்பு அயத்தகடு யெண்ணிப்பார்த்து
வளமாகப் பதினாறு தமரும்போட்டு
உய்த்தபின்பு வழுரிதன்னில் மல்லிகையினிலையை
யுறவாகப் போட்டு நன்றாய்க்காய்ச்சிக்கொண்டு
ஞைத்தபின்பு இந்நீரை விட்டுநீயும்
நலமாக மேற்சட்டி மூடிப்போடு
ஐத்தபின்பு கிளிவாங்கி யுலரப்போடு
ஐந்துதர மிப்படிதா னீற்றிடாயே. 369

நீற்றபின்பு கிளிவாங்கி யுலரப்போடு
நிறமாக அண்டோட்டி லிதனைவைத்து
மாட்டியே பின்னண்டோடு மேலேமூடி
மறவாமல் சுண்ணாம்புச் சீலைசெய்து
தோற்றியதோர் பத்தெருவிற் புடத்தைப்போடு
சுகமாகக் குளிர்ந்தபின்பு யெடுத்துப்பாரு
ஆற்றியதோர் தவனமாம் படிகம்போல
அம்மம்மா சவர்க்கார குருவுமாமே. 370

குருவுக்குக் கடுங்கார செயநீர்கேளு
கூரறிய பூநிறுங்கல் லுச்சுன்னந்
தருவுக்குள முரிவிட்டுக் கலக்கிவைத்துச்
சாதகமாய் மூன்றுதினங் கடந்தபின்பு
திருவுக்குள் தெளிவிறுத்துச் சேரைரண்டு
திறமான பீங்கானில் வைத்துக்கொண்டு
கருவுக்குள் போடுகிற மருந்தைக்கேளு
கனமான ஐந்துசுண்ணம் காசுப்போடே. 371

போடப்பா காசெடைதான் வங்கச்சுன்னம்
பொலியான வெடியுப்புச் சுண்ணம்போடு
நீடப்பா சீனமொரு காசுபோடு
நிசமான சூடனுமோர் காசுபோடு
மூடப்பா பூரமொரு காசுபோடு
முனையான சலாசத்து காசுபோடு
ஆடப்பா நாபியொரு காசுபோடு
ஆதியென்ற சாரமொரு காசுதானே. 372

காசெடைதான் குருவண்டு உரமுஞ்சூதங்
கனமான புழுகோடு புறாவினெச்சில்
நேசியதோர் குக்குடத்தின் வெண்மலமுங்கூட
நெகிழாம லமுரிவிட்டு யரைநாற்சாமம்
வாசியதா முன்னீரிற் கரைத்துக்கொண்டு
மறவாம லண்டமது முப்பத்தொன்று
தேசியதாம் வெண்கருவைக் கூடவிட்டுச்
சிறப்பான வெருக்கம்பால் சேரைவாரே. 373

வார்த்து நன்றாய்மத்திப் பாய்க்குச்சியாலே
மறவாமல் மூன்றுநாள் மத்தியச்சப்பா.ல்
போற்றியதோர் தெளிவிறுத்துப் பீங்கானுக்குள்
பொற்கொடி முன்வைத்ததனைப் பூசைபண்ணி
மாற்றியதோர் வஸ்துசுத்தி பானஞ்செய்து
மறவாம லஞ்செழுத்து யெட்டெழுத்துமோதி
தூற்றியதோர் சவர்க்காரந் தோய்த்துப்போடு
சுகமாக வேழுநாள் ரவியிற்போடே. 374

போட்டபின்பு சுண்ணாம்பு முப்புநேரே
பொடித்து அரைசுண்ணாம்புத் தண்ணீர்விட்டு
நாட்டபின்பு புடம்போட்டு யெடுத்தரைத்து
நலமாகக் குகைபோலப் பண்ணிக்கொண்டு
ஆட்டியபின் மேல்மூடிச் சீலைசெய்து
அதட்டியொரு புடம்போடச் சுன்னமாமே. 375

சுன்னமென்ற துரைக்கலாங் கடுங்காரமெத்த
தொடுகுறிபோற் கடுங்கார மேறுமேறுங்
கன்னமென்ற திறவுகோல் வழலைச்சுன்னங்
கடுங்கார மேறினால் சரக்குக்கட்டும்
பன்னமென்ற கல்லுப்புவிதுக் குட்சாகும்
படுமுன்னே நவாச்சாரங் கட்டிப்போகும்
வன்னமென்ற வீரமது மணியுமாகு
மகத்தான பூரமது சுன்னமாமே. 376

உப்புக்கட்டு

ஆமப்பா தாதுவகை யறுபத்துநாலு
மப்பனே மெழுகாகுங் குருவுமாகும்
வாமப்பா வுபசரங்க ளியமாகு
மார்க்கத்தில் குளிகையுமாஞ் செந்தூரமாகும்
போமப்பா வெகுதூர மெட்டியோடும்
போகத்தில் மெத்தவுண்டு புகட்டியாடும்
ஊமப்பா காலாங்கி பாதம்போற்றி
யுலகத்தோர் பிழைக்கவென்று வுரைசெய்தேனே. 377

உரைசெய்தே னீசருடவட மொழியைப்பார்த்து
உத்தமனே யேழுஆயிர மாமுன்னே
நிரைசெய்தே னேழையுந்தா னெழுநூறாக
நிகண்டாக மறையாமல் திறந்துபோட்டேன்
புரைசெய்த வென்னூலி லொன்றுபொய்யா
புத்தியில்லாப் புல்லருக்கு மலைவுதோன்றுங்
கரைசெய்தேன் வாதமடந் திறந்துபோகக்
கைதவறில் நூல்களெல்லாங் கசடாய்ப்போமே. 378

ஆயிபூசை

போகாது ஆயிபதம் பூசைபண்ணு
போக்கோடே யாதாரமே றிப்பாரு
ஏகாமல் வாசியைத்தானங் கென்றூணு
எழும்பாமல் வாசியைத்தான றுத்துத்தள்ளு
நோகாமல் சடமெல்லாங் கற்பமுண்ணு
நோக்கிநின்ற வறிவுக்குள் மனத்தைப்பூணு
சாகாமல் தேகத்தைச் சுத்திபண்ணு
சதாநித்தங் குருவுடைய பதத்திலுன்னே. 379

உன்னவே வுப்புடய கட்டைக்களூ
ஓடுகிற தூரமது வுயர்த்திமெத்த
பன்னவே பலநூலி லில்லையில்லைப்
பாடினதால் சித்தரென் பதையுமாச்சு
கன்னவே சவர்க்காரச் சுன்னமொன்று
கலருசமன் சாரத்தைக் கல்வத்திட்டுப்
பன்னவே நாற்சாம முமிநீர்விட்டுப்
பக்குவமா யரைத்துருட்டிக் குகையில்வையே. 380

வைத்துமே சில்லிட்டுச் சீலைசெய்து
வளமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
நைத்துமே லாரவிட்டு யெடுத்துவாங்கி
நலமான கடுங்காரச் செயநீர்குத்தித்
தைத்துமே மூன்றுநாள் ரவியிற்போடு
சாதகமாய்த் தினந்தினமுஞ் செயநீர்குத்திப்
பைத்துவெண்ணெய் பக்குவமாய்ப் பீங்கானிலப்பிப்
பருவமாயி ராக்காலம் பனியில்வையே. 381

வைத்துடனே மொலுமொ லெனத்தண்ணீராகும்
வாகாகவிந் நீரில்வீரம் போட்டுக்
கைத்துடனே யிந்துப்புக் கல்வத்திட்டுக்
காணிந்த நீரிலரை நாலுசாமம்
மொய்த்துடனே யெடுத்துருட்டிச் சுன்னமுனைமேல்
மூடியே சீலைசெய்து புடத்தைப்போடு
நைத்துடனே யிந்துப்புச் சுன்னமாகும்
நினைத்துமே கடுங்காரம் ரவியிற்போடே. 382

பூரவுப்பு

போடப்பா தினமூன்று காயக்காயப்
பொசிவான பின்பெடுத்துப் பனியில்வைப்பாய்
நீடப்பா செயநீரா மிதனைவாங்கி
நிலைத்து நிற்கும்வீரத்தைப் பொடித்துத்தூவு
ஆடப்பா செயநீருமொரு பலந்தான்வாங்கி
யதற்குள்ளே பூரமொரு பலத்தைப்போடு
நாடப்பா காற்றில்லாக் குளிர்ந்துவிடந்தன்னில்
நண்ணுகாமல் மூன்றுநாள் மூடிவையே. 383

வையப்பா ரவிதனிலே ஐந்துநாள்தான்
மகத்தான பூரமது முப்புமாகுஞ்
செய்யப்பா சுண்ணாம்புக் குகையிலிட்டு
சிறப்பாக மேல்மூடிச் சீலைசெய்து
மெய்யப்பா பத்தெருவில் புடத்தைப்போடு
வெரித்த புலிபோலுமன்று வெண்ணெயாகும்
கையப்பா பட்டுடனே வெந்துநீறுங்
கடுங்காரஞ் செயநீரா லரைத்துஅப்பே. 384

அப்பியே பீங்கானில் ரவியில்போடு
ஐந்துநாள் தினந்தினஞ் செயநீர்குத்தி
செப்பியே யொருவருடன் பேசவேண்டாம்
ஜெகஜ்ஜால மிதற்குள்ளே யடங்கிப்போச்சு
சுப்பியாஞ் சுன்னமெல்லா மிதற்குள்ளாச்சு
கரையில்லை யிதற்குள்ளே சொல்லவென்றால்
வெப்பியே விம்மிவிம்மி யலையவேண்டாம்
வெகிளாதே பீங்கானில் பதனம்பண்ணே. 385

பண்ணப்பா வீரமொரு பலந்தான்தூக்கி
பரிவான சவர்க்காரஞ் செயநீர்விட்டு
தண்ணப்பா கல்வத்திலரை நாற்சாமந்
தனில்பிறகு வழித்தெடுத்து வில்லையாக்கி
கண்ணப்பா ரவிதனிலே யுலர்ந்தபின்பு
காசிடைதான் சவர்க்காரச் சுன்னம்போட்டு
விண்ணப்பா பூரமாஞ் சுன்னமொன்று
வெண்காரஞ் சாரமிருகா சுதூக்கே. 386

தூக்கியபின் கல்வத்திற் சாரநீரால்
துடியாக வரைத்து மேற்கவசங்கட்டி
தாக்கியபின் ரவிதனிலே வுலரவைத்துச்
சாதமாய்ச் சுண்ணாம்புக் குகையிலிட்டு
நோக்கியே வச்சிரமாஞ் சீலைசெய்து
நொடியான காந்தமாஞ் சீலைசெய்து
நீக்கியபின் சீலைசெய்து புடத்தைப்போடு
நிர்மலம்போல் வெண்ணீராய் நிரைந்துபோமே. 387

வெடியுப்புச் செயநீர்

போகாமல் வெடியுப்புச் செயநீர்கேளு
போக்கோடே வெடியுப்பு நாலாங்காய்ச்சல்
வாகாமல் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மைந்தனே பூநீறு பலமும்போடு
தாகாமல் சீனமொரு பலமும்போடு
தயங்காத கல்லுப்புப் பலமும்போடு
வேகாமல் சூடனது காசுபோடு
விரவியதோர் காரமொரு காசுபோடே. 388

போட்டெல்லாங் கல்வத்திற் பழச்சாற்விட்டுப்
பொலிவாக மூன்றுநாளாட்டுஆட்டு
நீட்டெல்லாம் வழித்து யச்சட்டிக்கிட்டு
நேர்ப்பாகத் தீயெரிப்பாய் நாலுசாமம்
வாட்டெல்லாம் வறுத்துமொரு பீங்கானுக்குள்
மைந்தனே கடுங்காரச் செயநீர்குத்தித்
தீட்டோடு ஐந்துநாள் ரவியிற்போட்டுச்
சிறப்பாகச் சுன்னமென்ற குகையிலூதே. 389

ஊதையிலே சுண்ணாம்பாய் வெந்துநீறு
முத்தமனே பீங்கானி லெடுத்துக்கொண்டு
மாதையிலே கடுங்காரச் செயநீர்குத்தி
மைந்தனே நீற்றியதைப் பனியில்வைப்பாய்
பாதையிலே சலமாகு மிந்தநீரில்
பருவமுடன் வழலையென்ற சுன்னங்காசு
கோதையிலே பூரமென்ற சுன்னங்காசு
கொடியதொரு வீரமென்ற சுன்னங்காசே. 390

காசெடைதான் செயநீரில் கலக்கிக்கொண்டு
சுடியதொரு சரக்குகளிற் சுருக்குபோட
ஆசெடை தானறுபத்து நாலுங்கட்டு
மாச்சரிய வுபரசங்கள் சத்தேயாகுந்
தாசெடைதான் கெவுரிவெள்ளை லிங்கம்வீரந்
தயங்காத தாளகமுஞ் சிலையுங்கெந்தி
தேசெடைதான் நாகத்தைப் பகையாமல்கொல்லுஞ்
செணத்திலே கருவங்கஞ் சாய்க்கச்சாமே. 391

சாமப்பா வுப்பிதுக்குள் சாற்றக்கேளு
தனித்ததொரு வெடியுப்பு சீனக்காரம்
ஓமப்பா கடல்நுரையுஞ் சூடனிந்து
உத்தமனே வெண்காரந் துரிசுச்சாரம்
நாமப்பா வெடியுப்பு நீரைவார்த்து
நலக்க வரையேழுநாள் ரவியிற்போடு
வேமப்பா சரக்கெல்லாம் வெந்துநீறும்
வெகுளாதே பீங்கானி லெடுத்துவையே. 392

வையப்பா வுப்பேது வென்றாயானால்
மகத்தான வாரிதியில் சத்திநாதம்
தையப்பா மலைபோலே நிற்கும்பாரு
தனையெடுத்துப் பாக்குப்போ லுண்டைகொண்டு
செய்யப்பா பூச்சாறு தினமூன்றுவிட்டுத்
திறமான வுப்பங்கே சுத்தியாகும்
மெய்யப்பா நினைவாக வுலரப்போடு
விரவியங்கே வுட்பூச மருந்துகேளே. 393

கேளப்பா சவர்க்காரச் சுன்னமொன்று
கெடியான வீரமொன்று பூரமொன்று
வாளப்பா சவர்க்காரச் செயநீர்விட்டு
மைந்தனே குழம்புபோல் கல்வத்தாட்டி
கோளப்பா கல்லுப்பில் துவைச்சுவாட்டு
கொள்கியந்தத் தணலுக்குள்ளடந்துவாட்டி
நாளப்பா குழம்பையெல்லாம் பூசிவாட்டி
நலத்தபின்பு முன்னெட்டு மருந்தைப்பூசே. 394

பூசியதை வாட்டுதற்கு விபரங்கேளு
பொலிவான வெடியுப்பு நீரைவார்த்து
தாசியதைக் கல்வத்தில் குளப்பிக்கொண்டு
தழையெல்லாம் பிரட்டிநன்றாய் வாட்டிப்போடு
வாசியதைக் கல்லுப்பு பலத்தைக்கேளு
வகையாக முப்பலத்திற் பூசிப்போடு
தேசியதை யடுக்கடுக்க முதிரவாட்டிச்
சிறப்பாகத் தணலுக்கு ளடர்ந்துவாட்டே. 395

வாட்டிடவே கல்லுப்புத் தெறிப்பும்போகும்
மருவியதோர் ஊசரமும் உப்பும்நேரே
நாட்டிடவே நாயுருவி பிரண்டைச்சாம்பல்
நலமான கிளிஞ்சிநீர் சரியாய்க்கூட்டி
ஆட்டிடவே அமுரிவிட்டு மெழுகாய்ப்பண்ணி
அடைபோலே ரண்டாக்கி சட்டியிலேபோடு
நீட்டிடவே அடைமேலே யுப்பைவைத்து
நேர்ப்பாக வதின்மேலே அடையால்மூடே. 396

மூடியே மேல்மூடிச் சீலைசெய்து
முசியாதே யடுப்பேற்றி யெரிநால்சாமம்
ஆட்டியே தீபம்போலெ ரித்துவாங்கி
ஆரவிட்டு யெடுத்தந்தப் படியேவைத்து
நாட்டியே கசபுடத்திற் போட்டாயானால்
நலமான வயிரம்போ லுருகிக்கட்டும்
தேட்டியே யாரவிட்டு யெடுத்துப்பாரு
சிவசிவா முத்துப்போல் மணியுமாமே. 397

ஆமப்பா மணியெடுத்து வுருக்கிப்பாரு
அரகரா பொன்போலே நின்று ஆடும்
தேமப்பா கரிதனிலே யிறங்கிற்றானால்
சிறப்பாக முன்போல மருந்துப்பூசி
வாமப்பா புடம்போடு வுருகநிற்கு
மணிபோலே நின்றாடுங் கரியினுள்ளே
தாமப்பா வுப்புமணித்தாழ் வடமாய்க் கோர்த்துத்
தாயோடு தந்தையும் நீபூசைபண்ணே. 398

பண்ணப்பா பானமொடு சுத்திவைத்துப்
பரிவாகப் பூசைபண்ணி மதுவையுண்ணு
விண்ணப்பா தாழ்வடத்தைக் காதில் வைத்து
வேதாந்த வனுபவத்தில் மனதையுன்னிக்
கண்ணப்பா வஞ்செழுத்து மெட்டெழுத்துமோது
கயிலையுறை சிவன்வந்துநிர்த்தஞ்செய்வார்
நண்ணப்பா சிறுபிள்ளை மாயிவந்து
நாட்டிலுள்ள வதிசெயங்கள் சொல்லுவாளே. 399

சொல்லு வாளட்ட கர்ம மெட்டுந்தானுந்
தோற்றாத கருமத்தின் வழியுஞ் சொல்வாள்
சொல்லுவாள் வாமத்தைப் பணிந்தபேரை
கூப்பிடுவாள் வாமத்திற் கொள்கினோரை
வெல்லுவாள் சிவகாமி சொல்யானும்
விடுத்துப் பார்த்துணர்ந்து மக்கட்காகச்சொன்னேன்
மல்லுவாள் சமாதியிலே யுரைத்துப்பாரு
மாயப்பிர பஞ்சமெல்லா மொழிந்து போமே. 400

உப்புகுரு

போகாமல் உப்பினுட குருவைச்சொல்ல
புகழாகச் சவர்க்காரச் சுன்னமொன்று
நோகாமற் கர்ப்பூரச் சுன்னமொன்று
நோக்கப்பா வீரத்தின் சுன்னமொன்று
வேகாமற் புழுகொன்று சீனமொன்று
விரவியரை சவர்க்கார நீரினாலே
வாகாமலுப் பினுடமணிக்குப் பூநீர்
மாசற்ற ரவிதனிலே யுலரப்போடே. 401

உலர்ந்த பின்பு சுண்ணாம்புக் குகையில்வைத்து
உத்தமனே மேல்மூடிச் சீலைசெய்து
அலர்ந்தபின்பு பத்தெருவிற் புடத்தைப்போடு
ஆதியென்ற கல்லுப்பு சுண்ணாம்பாகும்
குலர்ந்தனக்குக் கோடாலிக்காம்பு போலே
கொள்ளியதோர் சரக்குக்காலன் காலன்
தலந்தனக் கடுங்காரச் செயநீர்குத்தி
நாளேழு ரவியிற்குள் உலரப்போடே. 402

போடவே வதின்மேழிற் பூப்போலாகும்
பொலிவான சன்னயிடை சாரங்கூட்டி
நாடவே தினமொன்று அரைத்தாயானால்
நலமான வருணசலம் போலேநிற்கும்
நீடவே ரவிதனிலே யுலர்ந்தபின்பு
நேரான சுண்ணாம்புக் குகையில்வைத்து
ஆடவே மேல்மூடிச் சீலைசெய்து
அகட்டியொரு புடம்போடச் சுன்னமாமே. 403

சுன்னத்தைப் பனியில்வைக்கச் செயநீராகுந்
தோற்றரிய வெந்நீரில் வீரச்சுன்னம்
வன்னத்தை யகற்றிவிக்குஞ் சவர்க்காரச் சுன்னம்
மாசற்ற வெளியாகும் பூரச்சுன்னம்
சுன்னத்தை வெளியாக்கும் நீரிற்போட்டுக்
கலக்கியொன்றாய் மத்தித்துச் சரக்கிற்பூச
அன்னத்தை யடுத்தபால் சலம்வேறாம்போல
வணுகிடிலோ கட்டியங்கே மணிபோலாமே. 404

ஆமப்பா அறுபத்து நாலுதாதும்
அப்பனே வுபசரங்கள் நூற்றிரண்டுபத்தும்
போமப்பா லவணமுதலிரு பத்தஞ்சும்
பொன்காய்க்கு மரமாகப் பண்ணிவிக்கும்
நாமப்பா காலாங்கி பதத்தைப் போற்றி
நாட்டிலுள்ள பேர்களுக்குப் பிழைக்கச் சொன்னேன
வாமப்பா யென்நூலி லொன்றுதப்பில்
மதிகெட்ட போகமுனி யென்றுசொல்லே. 405

சொல்லவே உப்பினுட மணியைக்கேளுத்
துடியாகக் கரியில்வைத்து வுருகும்போது
மல்லவே தங்கமோரி டையைநீட்டு
வாய்திறந்து ஆவென்று கழித்துவாங்கும்
வெல்லவே நாகமோரி டையைப்போடு
மேதிச் சுவாங்கையிலே சூதம்போடு
தெல்லவே வீரமோரி டையைப்போடு
திரண்டுருகி வாங்கையிலே கெந்திபோடே. 406

போட்டுடனே களங்காகு முப்புமக்காள்
பொலிவான நவலோக சமன்பதுக்கொன்று
நாட்டுடனே பத்தரையே மாற்றுகாணுங்
கனகத்தைக் கண்டுடனே கொர்ச்சிக்காதே
ஆட்டுடனே அன்னமரை தண்ணீர்கொள்ளு
ஆசையென்ற புளியுப்பை யகற்றித்தள்ளு
நாட்டுடனே சிவசொத்தை வறுமைபோலெண்ணு
நலம்போலே சமாதியிலே யிருந்திடாயே 407

உப்புச்செந்தூரம்

இருந்திட்ட வுப்பினிட செந்தூரத்தை
யிதமாகக் கேளுங்கள் மாணாக்காளே
வருந்திட்ட சூதமொன்று நாகமூன்று
மருவயிதை யுருக்கியல்லோ பொடியாய்ப்பண்ணித்
திருந்திட்ட வீரமென்ற சுன்னமொன்று
சிறப்பாக மத்திச்சுப் பனியில்வைக்க
அருந்திட்ட செயநீராமிதனை வாங்கி
ஆதியென்ற வுப்புமணி தன்னிற்றோயே. 408

தோய்ச்சுமே பரித்தகட்டை மேலேதூற்றிச்
சுகமான விலுப்பை நெய்யால் விளக்கைவைத்துப்
பாய்ச்சுமே நூறிழையில் திரியைப்போட்டுப்
பக்குவமாய் வாங்குமட்டும் வாட்டித்திரு
ஏய்ச்சுமே யுட்புகுந்து பரிதானப்பா
இதமான வருணனைப் போலாகும்பாரு
காய்ச்சுமே நவலோக மைம்பதுக்கொன்றீ
கையோடே பத்தரையாங் கண்டுகொள்ளே. 409

கொள்ளப்பா செந்தூரங் குன்றிமட்டுங்
கோடான கோடிவரை யிறுத்துந்தேகம்
விள்ளப்பா சுக்கிலத்தைக் கட்டிநீற்ற
மேலேறு மல்லாது கீழோடாது
துள்ளப்பா நரைதிரைக ளெல்லாமாறுஞ்
சுகமாகுங் காயமிது சிவந்துபோகும்
விள்ளப்பா சட்டையொன்று கக்கிப்போகும்
வேதாந்த சாரமெல்லாம் வெளியாய்ப்போமே. 410

போமப்பா பச்சையுப்புத் தின்றாயானால்
புகழான வேருவையில் கக்கிப்போடும்
வேமப்பா வமுரியிலே யிறங்கிப்போகும்
வெறிப்பான சடமெல்லாந் தளர்ந்துபோகும்
போமப்பா சடமலைந்து நரைமெத்தாகிப்
புகழான தந்தமெல்லாங் கழன்றுபோகும்
நாமப்பா கட்டியதோ ருப்பைத்தின்று
நலமான சமாதியிலே யிருந்திட்டேனே. 411

இருந்திட்டேன் சமாதியிலே கற்பமுண்டு
ஏழுயுகங் கடந்தபின்பு எழுந்திருந்தேனையா
அருந்திட்ட பாட்டர்பக்கல்சென்று யானும்
அருகிருந்தொழு திறைஞ்சி தீட்சைகேட்டேன்
திருந்திட்ட காலாங்கி ஐயர்பாதஞ்சென்று
செப்பமுடனே முயுகம்வாதம் பார்த்தேன்
பருந்திட்ட மாகியல்லோ குளிகைகட்டிப்
பக்குவமா யண்டமெல்லாம் பார்த்திட்டேனே. 412

பார்த்திடே னண்டரண்ட பத்துமட்டும்
பரிவான மலைதோறும் நாதாக்கள்கோடி
ஆர்த்திட்ட மலைதோறுஞ் சித்தர்கோடி
அந்தந்த மலைகளிலே மூலிகையோமெத்த
ஏர்த்திட்ட சாத்திரங்க ளனேகமுண்டு
எந்தெந்த நூல்பார்த்து மெளிதில்காணார்
மார்த்திட்ட மாகவல்லோ வுப்புச்சொன்னேன்
மறைத்தார்கள் சாத்திரத்தில் சித்தர்தானே. 413

மறைத்ததென்ன வெஃறாக்கால் சொல்லக்கேளு
மலைகளெல்லாஞ் சித்தர்மய மாச்சுதென்று
நிறைத்ததென்ன ஆதியுப்பையிழுக்காய்ச் சொல்லி
நேரான வழலையைத்தான் மூடிப்போட்டார்
உறைத்ததென்ன வழலையினால் வாதம்போச்சு
ஓகோகோ காயசித்தி கெவுனசித்திபோச்சு
குறைத்ததென்ன சித்தரென்று சொல்லியானுங்
கூறினேன் வெளியாகக் கூறினேனே. 414

கூறியதோர் சவர்க்கார வுண்டைசெய்து
குறிப்பாகச் சுத்திபண்ணிச் சுன்னம்பண்ணு
மாறியதோர் கடுங்காரச் செயநீர்பண்ணு
மைந்தனே கற்பூரவுப்புப் பண்ணு
தேறியதோர் வீரத்தைச் சுன்னம் பண்ணு
சிறப்பாக வெடியுப்புச் செயநீர் பண்ணு
ஆறியதோர் கல்லுப்பைக் கட்டியாடு
அரகரா வாதமிலடங்கிப் போச்சே. 415

போச்சென்ற வுப்பினுட மெழுகைக்கேளு
பேரான வுப்பதுவும் பலமுமொன்று
ஆச்சென்ற குகையில்நின்று வுருகும்போது
அப்பனே சாரமது பலமுங்கால்தான்
நீச்சென்ற வெண்காரம் பலமுங்கால்தான்
நேரான கெந்தகமும் பலமரைதான்சேர்த்து
காச்சென்ற சவர்க்கார நீரைவார்த்துக்
கலந்தரைத் துக்குன்றி யளவுண்டைசெய்யே. 416

செய்த்வுண்டை வுப்புநின்று உருகும்போது
சிதராம லொவ்வொன்றாய் கொடுத்துவாநீ
மைதவுண்டை புகையாம லுள்ளேவாங்கி
மயிழமா முப்பதுவு மிப்பால்வாங்கிப்
பொய்த நவலோகத்தில் நூற்றுக்கொன்று
போட்டிடவே தசமாற்றாய் நிற்கும்பாரு
ஐதவுப்புக் காவிக்கு மோடாதப்பா
ஆச்சரியங் காயசித்தி சுருக்காம்பாரே. 417

பாரிந்த மெழுகுதனைக் குன்றியுண்ணு
பத்தியமாய்ப் புளியுப்புப் பெண்ணுந்தள்ளு
காரிந்த நாற்பதுநாளுள் ளரையில்வாழுங்
கனமான யோகத்தே நின்றுதேறு
சாரிந்த சட்டையொன்று தள்ளிப்போடுஞ்
சந்திரனோ சூரியனோ வென்பார்பாரு
ஆரிந்தப் படிசெய்வார் நாதாக்கள் செய்வார்
ஆச்சரிய முலகத்தோர் பாஷாண்டிதானே. 418

தானென்ற வுலகோர்க் குவாதமெய்திலத்
தருவம் பனாய்த்திரிந்து பெண்ணைச்சேர்ந்து
பானென்ற வமுதமுண்டு மற்றேயாகிப்
பலநினைவாய்க் கற்பழித்துப் பர்சமெய்திக்
கோனென்ற குருவேது காயசித்தியேது
குறிப்பான ஆதாரவழி தானேது
வானொன்றியாடு கிறகுளிகை யென்னவென்று
வாய்ப்பேச்சாய்த் திரிந்துழன்று மருளுவானே. 419

மருளாமற் போகவல்லோ வாதஞ்சொன்னோ
மாண்டிறந்து போகாமற் காயசித்திசொன்னேன்
இருளான வொளிகாண யோகஞ்சொன்னே
னேழுவரை காணவல்லோ குளிகைசொன்னேன்
அருளான மனமடங்கப் போதஞ்சொன்னே
னானந்த மாவதற்கு வஸ்துசொன்னேன்
பொருளான குருபதத்தில் தொண்டுபண்ணு
போக்கோடே வுப்பைமுந்திக் கட்டியாடே. 420

ஆடவே வுப்பென்ற சுன்னமொன்று
அணைத்திடு நீசாரத்தை ரண்டுநீயும்
நீடவே கல்வத்தி லரைநாற்சாமம்
நேர்ந்தபின்பு சுன்னமென்ற குகையில்வைத்துவூது
நாடவே கடுங்காரச் செயநீர்குத்தி
நாள்மூன்று மத்தித்து ரவியில்வைப்பா
யூடவே பனியில் வைக்கச் செயநீராகு
முத்தமனே யிந்நீரி னொட்டங்கேளே. 421

கேளப்பா விந்நீரில் வீரச்சுன்னங்
கெடியாக மத்தித்துப் பலந்தான்பூரம்
நாளப்பா பீங்கானிற் பூரம்போட்டு
நலமாகச் செயநீரை யதிலேவாரு
நீளப்பா மூன்றுநாள் நிழலில்வைத்து
நேர்ப்பாக ரவிதனிலே ஐந்துநாள்போடு
வாளப்பா யரைத்துநன்றாய்ப் பில்லைக்கட்டி
வளமான சவர்க்காரச் சுன்னம்பூசே. 422

பூசியல்லோ சுன்னமென்ற குகையில்வைத்துப்
பொருத்தவே மேல்மூடிச் சீலைசெய்து
ஆசியல்லோ யீசானம் பூசைபண்ணி
ஐந்தெருவிற் புடம்போடப் பூரம்நீறும்
வாசியல்லோ கடுங்காரச் செயநீர்குத்தி
மகத்தான ரவிதனிலே யுலரப்போடு
தேசியல்லோ சிவ்காமி சொன்னமார்க்கஞ்
செப்புறே னிதின்வேகஞ் செப்புறேனே. 423

செப்பியதோர் பூரமது பலந்தானொன்று
தெளிவான சாரமது பலமுமொன்று
ஒப்பியதோரி துரண்டுங் கல்வத்தாட்டு
ஓங்கியதோர் நெட்டெழும்ப மாட்டுமாட்டு
தப்பியதோர் சுண்ணாம்புக் குகையில்வைத்துச்
சார்பாக மேல்மூடிச் சீலைசெய்து
அப்பியதோர் புடம்போட வெந்துநீரு
மாச்சரியம் பனியில்வைக்கச் செயநீராமே. 424

ஆமப்பா வின்னீரில் வீரச்சுன்னம்
தட்டியே கலக்கமெள்ள வைத்துக்கொண்டு
ஓமப்பா சரக்கான வறுபத்துநாலு
முற்றுமெள்ள மாட்டிடவே மணியுமாகுஞ்
சாமப்பா சாரமது லவணமெல்லாஞ்
சணத்திலே சுண்ணாம்பாய் விரிந்துபோகும்
வேமப்பா கண்டருமோ வெள்ளையாகும்
வேதித்த தாளகத்தின் மஞ்சள்போமே. 425

மஞ்சளென்ற கந்தகமே வெள்ளையாகு
மாசற்ற வீரமது குருவுமாகு
மஞ்சளென்ற லிங்கமது மெழுகேயாகு
மாதியென்ற கல்லுப்பு மணியுமாகுந்
துஞ்சளென்ற வுபசரங் களீயமாகுந்
தொடுமுன்னே தேகமது விரைத்துப்போகும்
கஞ்சளென்ற லோகங்கள் வெண்ணெயாகுங்
காட்டிடவே நூற்றொன்றி லேபனமாமே. 426

ஏமமே யாச்சுதென்று புளகிக்கவேண்டா
மெளிதாக மூலத்தை யிருத்திப்பாரு
வாமமே கெதியாக வனுதினமும்போற்று
வழியாறு தலமெல்லாங் கண்டுபாரு
தேமமே சமரசவாசலுக்குள்ளே புக்கிச்
செப்பரிய மதியளவுந் தொட்டுயேறு
காமமே கெதியென்று விழுகவேண்டாங்
கருத்தென்ற வாளினாற் பொறியைவீசே. 427

வீசிடவே பூரமென்ற நீரினாலே
விளங்கியதோர் தாளகத்திற் சுருக்குப்போடு
தூசிடவே சவர்க்காரச் சுன்னந்தானுந்
துடியான பூரமென்ற சுன்னமூன்று
ஆசிடவே வெடியுப்பு நீராலாட்டி
அப்பியே தாளகத்தில் விரவிப்போடு
வாசிடவே சுண்ணாம்புக் குகையில்வைத்து
மண்செய்து வூதிடவே சுன்னமாமே. 428

சுன்னமென்ற தாளகத்தில் வீரங்கூட்டித்
துடியாக மத்தித்து வங்கத்தப்பி
சுன்னமென்ற அண்டோடு கீழ்மேலிட்டு
கடுவேக சுன்னமென்ற குகையிலூது
வன்னமென்ற வங்கமது சுன்னமாகும்
வாதமென்ற கடைதிறக்குந் துரவுகோலாஞ்
சின்னமென்ற வேங்கையி லாடுபோல
திடுக்கிட்டுச் சூதமது வுண்டையாமே. 429

ஆமப்பா துரிசியொடு பலமேதூக்கு
அதிகமென்ற பூரநீர் தன்னில்தோய்த்து
சேமப்பா ரவிதனிலே யுலரப்போடு
சிறப்பாக வேழுநா ளானபின்பு
தாமப்பா சவர்க்காரச் சுன்னமொன்று
தயங்காத வீரமென்ற சுன்னமொன்று
வாமப்பா வங்கமொன்று பூரமொன்று
வகையான சூதமொரு காசுதானே. 430

தானென்ற புழுகொடு உரமுங்கூட்டிச்
சமரசமாய்க் கடுங்காரச் செயநீர்குத்தி
மானென்ற துரிசியின்மேற் கவசங்கட்டி
வகையான சுண்ணாம்புக் குகையில் வைத்து
கானென்ற மேல்மூடிச் சீலைசெய்து
கசபுடத்தில் போட்டெடுத்து யாறவிட்டு
ஆனென்ற கவசத்தை யுடைத்துப்பார்த்தா
லம்மம்மா கடுஞ்சுருக்குச் சுன்னமாச்சே. 431

ஆச்சப்பா துரிசியது குருவுமானால்
லண்டரண்ட கடாகமெல்லாங் கிழிந்துப்போகு
மூச்சப்பா யாடுமுன்னே காதங்கட்டு
மூதண்ட சவ்வீர மெழுகேயாகும்
பாச்சப்பா யண்டமெல்லா மெழுகாய்ப்போகும்
பாசான குலமெல்லாம் வெண்மையாகும்
ஏச்சப்பா பனிநீரும் வெள்ளைநீரு
மெடுத்தவர்தா மொன்றிற் கோடியாமே 432

கோடியென்று சொல்லுவதுங் கொஞ்சங் கொஞ்சங்
குறுக்காம லெடுக்கலா மனேகம்வித்தை
மாடியென்று மிளையாமற் சித்தியாகு
மாசித்த ராட்டெல்லா மிதுதானல்லோ
தாடியென்றுந் துரிசியினால் சிங்கிபண்ணி
தலமுற்ற குளிகைகட்டிச் சாரணையேசெய்
ஆடியென்றுங் குளிகைதனை வாயில்வைத்து
அண்டரண்ட பத்மெல்லாம் பார்த்திட்டேனே. 433

பார்த்திட்டே னண்டத்திற் சித்தர்கோடி
பரிவாக யவரைநீ கண்டுபேசில்
மார்த்திட்ட குருவேது வென்றாராகில்
மகத்தான மூலருட பேரனென்றுசொல்லு
சேர்த்திட்ட சாஸ்திரமுஞ் சூஸ்திரமுங்கேட்பார்
சிறப்பாகக் கக்கத்தி லிருக்குதென்று
கார்த்திட்ட குளிகையுட வேகங்கேட்கில்
கண்ணிமைக்குள் கற்பமென்று புக்குமென்றுன்னே. 434

என்னவே சாரத்தை மண்டம்போற்சீவி
யிதமான யபினோடு மிளகுபூரங்
கன்னவே மேனிச் சாறரைத்துப்பூசிக்
கடுகவே ரவிதன்னில் லுலரப்போடு
பன்னவே யதின்மேலே சரக்குத்தானும்
பக்குவமா யிறக்கியதில் கவசங்கட்டி
மன்னவே சாணாங்கிச் சீலைசெய்து
வகையாக வங்கத்தில் தோய்க்கக்கேளே. 435

கேளப்பா வங்கத்தைக் குகையிலிட்டு
கெடியாக வுருகையில் தோய்த்துவாநீ
வாளப்பா யேழுதரந் தோய்த்துவாநீ
வகையான சாரமது சுத்தியாகுந்
தாளப்பா சவர்க்காரச் சுன்னவீரந்
தயங்காத பூரமொடு மூன்றுங்கேளு
வேளப்பா வெடியுப்பு நீரைவார்த்து
விரவியரை சாரத்தின் மேலேபூசே. 436

பூசியதைச் சுண்ணாம்புக் குகையில்வைத்துப்
புடம்போட்டு யெடுத்துப்பார் தவளநீரும்
ஆசியதைக் கடுங்காரச் செயநீர்குத்தி
யப்பனே பனியில்வைக்கச் செயநீராகும்
தேசியதிற் சரக்குகளிற் சுருக்குப்போட
செயமானமெழுகாகும் வேதையாகும்
ஆசியதை யெண்ணாதேகற் பமுண்ணு
அருணனைப்போல் சிவப்பாகுங் காயந்தானே. 437

தானென்ற செயநீரில் வீரச்சுன்னஞ்
சமரமசாய்ப் பூரமென்ற சுன்னமொன்று
கானென்ற சவர்க்காரச் சுன்னந்தானுங்
கலந்தந்தச் செயநீரால் படிகைமேலே
வானென்ற தினந்தோறுந் தோய்த்துத்தோய்த்து
மகத்தான ரவிதனிலெ மூநாள்போட்டு
பானென்ற வெடியப்புச் சுன்னம்பூசப்
பருவமாய்ச் சுன்னமொரு குகையில்வையே. 438

வைத்துமே சீலைசெய்து புடத்தைப்போடு
வாகாக வெடுத்துப்பார் சீனச்சுன்னம்
கைத்துமே கடுங்காரச் செயநீர்குத்தி
காணித்துக்குள் சமனாகச் சாரஞ்சேர்த்து
தைத்துமே கல்வத்திலிட்டு ஆட்டிச்
சமமாகப் புடம்போடு யெடுத்துக்கொட்டி
மைத்துமே பனியில்வைக்கச் செயநீராகு
மாசற்ற நீராலே யெல்லாஞ்சாமே. 439

சாரச்சுன்னம்

சாமென்ற நீரிலே வீரச்சுன்னந்
தயங்காத பூதமென்ற சுன்னம்போட்டு
காமென்ற நீரிலே கலக்கிவைத்துக்
கடுஞ்சூடன் பலமொன்றில் நீரைவார்த்து
ஆமென்ற நிழலிலே மூன்றுநாள் வைத்து
அதன்பிறகு யேழுநாள் ரவியிற்போட்டு
மானென்ற பில்லைபண்ணி யுலரப்போட்டு
மாசாரக் கல்லுப்புச் சுன்னம்பூசே. 440

சாரநீர் சீனச் சுன்னம்

பூசியே சுண்ணாம்புக் குகையில்வைத்துப்
பொலிவாகப் புடம்போடப் பூப்போலாகும்
காசியென்ற கடுங்காரச் செயநீர்குத்திக்
கனமான யண்டத்தின் மேலேபூசி
தேசியென்ற சேர்த்துருக்க வுள்ளேவைத்துச்
சிறப்பாக மூன்றுநாள் ரவியிற்போடு
தூசியென்ற மேலோடு ரண்டுகருக்கூட்டிச்
சுழன்றுவெந்து சுண்ணாம்பாய் நீறிப்போமே. 441

சூடச்சுன்னம்

நீறியதில் வீரமென்ற சுன்னம்போட்டு
நேர்ப்பாகச் சாரநீர் விட்டுஆட்டி
மாறியதில் நிமிளையென்ற கவசங்கட்டி
மகத்தான சுண்ணாம்புக் குகைக்குள்வைத்து
தேறியதில் மேல்மூடிச் சீலைசெய்து
சிறப்பாகக் கெசபுடத்தில் போடுநீயும்
ஆறியபின் பெடுத்துப்பார் கடிதாஞ்சுன்ன
மாகார மிதினாண்மை யறிந்திலேனே. 442

அண்டச்சுன்னம்

அறிந்திலே னிச்சுன்னம் வீரச்சுன்ன
மப்பனே ரண்டையுந்தான் சாரநீரால்
பிறிந்திலேன் மத்தித்துத் தங்கத்துக்கப்பி
பேரான யண்டத்தோல் கீழ்மேலிட்டு

செறிந்திலேன் கெசட்டமாய் வெளியிற்போடு
    சிறப்பான பரிதானுஞ் சுன்னமாகுங்
கறிந்திலேன் வாதமடந் திறந்துப்போச்சு
    கைக்குள்ளாய் வாதமதுஞ் சிக்கிப்போச்சே. 443

நிமிளைச் சுன்னம்

போச்சப்பா பரிதானுஞ் சுன்னமானால்
    போட்டிட்டால் சூதமது கட்டிப்போகும்
நீச்சப்பா வாதமெல்லாங் கைக்குள்ளாகும்
    நிரைநிரையாய்த் தாதுவெல்லா மணிபோலாடுங்
காச்சப்பா தேகமது பொன்போலாகுங்
    கண்டுகொள்ளு காயசித்தி கருக்குமெத்த
வாச்சப்பா வித்தனையு முப்பாலாச்சு
    மயங்காதே வுப்பை முந்திக்கட்டியாடே. 444

பரிச்சுன்னம்

ஆடவே வாசினையை யடித்துதள்ளு
    அப்பனே யஷ்டாங்க மறிந்துபாரு
போடவே கற்பமுண்டு காயசித்தி பண்ணு
    புகழு மனோன்மணித் தாயைநீராம்பூசி
கூடவே குருபதத்தை தொண்டுபண்ணு
    குறிப்பான கைம்முறையு மினமும்பாரு
நீடவே சத்துருவு மித்துருவும்பாரு
    நினைவெல்லாம் வேதாந்தக் குறிப்பில்வையே. 445

காரக்கட்டு

ுறிப்பாக வெங்காரக் கட்டுக்கேளு
    கூறிலது யிதின்பெருமை சிவனுங்காணார்
நெறிப்பாகச் சத்தெல்லா மிதினாலல்லோ
    நேரான காரம்விட்டால் சத்துபோச்சு
வெறிப்பான லோகங்கள் தம்மினத்துக்கெல்லாம்
    விரவியிதை யிட்டல்லோகண் விட்டாடும்
கறிப்பாகம் போலல்லோ காரஆட்டு
    கைவிட்டால் சரக்கெல்லா முட்கொள்ளதென்னே. 446

என்னவே காரமது பலகைபோல
    யெடுத்து மேயாவெருதின் சாணியாலே
க.ன்னவே கழுவிநன்றாய்சுத்தி பண்ணி
    கலங்காதே சவர்க்காரச் சுன்னம்வீரம்
பன்னவே பூரமொடு மூன்றுங்கேளு
    பதறாமல் கழஞ்சிவைதான் சாக்கிக்கொண்டு
தன்னவே மத்தித்துச் சாரநீரில்
    தயங்காதே ரவிதனிலே தோய்த்துப்போடே. 447

போடவே தினமேழில் வெளுறிக்கட்டும்
பூனைக்கண் ணொளிபோல வரவுங்காணும்
ஆடவே நாகத்தின் செயநீர்க்குள்ளே
யபரஞ்சி ரேக்கதனை மேலேசுற்றி
நீடவே தீபத்தில் வாட்டுவாட்டு
நேர்ந்த அபரஞ்சியைத் தான்சுளித்துவாங்கும்
மாடவே யருணனைப்போல் சிவப்பேயாகி
மாதளம் பூப்போலிருக்கு மக்காள்பாரே. 448

பார்க்கவே நவலோகம் நூற்றுக்கொன்று
பாய்ச்சிடவே பதினாறு மாற்றுமாகும்
ஆர்க்கவே தினம்பணந் தானுண்டாயானா
லருணனைப் போல் தேகமுமாங் கண்ணொளியேமீறும்
சேர்க்கவே காயமது கர்ப்பாந்தகாலந்
திரையாமல் பண்ணிவைக்கும் நரையோயில்லை
கார்க்கவே சூதத்தைக் கணத்திற்கொல்லும்
கண்ணிமைக்குள் பாஷாணஞ் சத்துமாமே. 449

சத்தான சாரநீர்க்குள்ளே மைந்தா
தயங்காத சவர்க்காரச் சுன்னமிட்டுப்
பத்தான வீரமிட்டுப் பூரமிட்டுப்
பரிவாகப் பீங்கானில் வாங்கிக்கொண்டு
அத்தான யண்டமது அன்பத்தொன்று
அதிதமென்ற மஞ்சளாங் கருவைவாங்கி
நித்தான சட்டியிட்டு யடுப்பிலேற்றி
நினைவாக வறுத்திடுவாய்க் கருகத்தானே. 450

அண்டத்தயிலம்

கருகவே வறுத்திடவே தயிலமாகுங்
காணந்த வேளையிலே படிதானொன்று
பருகவே யிலுப்பையெண்ணைக் கூடவிட்டுப்
பக்குவமே யானபின்பு யிறுத்துக் கொண்டு
சருகவே யப்புரகம் பலந்தான்ரண்டு
தன்னோடு காந்தமது பலமும்ரண்டு
கிருகவே கருவளகில் பலமும்ரண்டு
சிறந்ததொரு வெங்காரம் பலமும்ரண்டே. 451

ரெண்டோடு யிதுவெல்லாம் பொடியாய்ப்பண்ணி
நேரான அண்டத்தின் தயிலத்திற்குழப்பி.
பண்டோபே் மண்ணாலே குகைதான்பண்ணிப்
பக்குவமாய்ச் சுட்டெடுத்து வைத்துக்கொண்டு
கண்டோடே தயிலத்தை யுட்குகையிற்பூசிச்
சார்பாக நாகம் பலந்தானெட்டுக்
கண்டோடே வெறுங்குகைக் குளுருக்கிமைந்தா
கனமான சாரத்தின் பொடிமேல்தூவே. 452

தூவி(ய நாகமது கண்விட்டாடும்
சுகமாக மருந்திட்ட குகையில்வார்த்துத்
தாவையிலே தயிலத்தைக் குத்துகுத்து
தனிப்பிறகு சாரநீர் குத்திவாநீ
பாவையிலே வில்லையா யிருக்கும்பாரு
பக்குவமா யெடுத்துமுன் போல் தயிலம்பூசிக்
காவையிலே முன்போலே வுருக்கிமைந்தா
கனமான சாரத்தின் பொடிமேல்தூவே. 453

தூவியபின் முன்குகையில் மருந்துபூசித்
துடியாக வதற்குள்ளே சாய்த்துப்பின்பு
பாவியபின் னதின்மேலே தயிலங்குத்திப்
பரிவாக வதின்மேலே சாரநீர்குத்தி
மேவியபின் னிப்படியே ஐம்பத்தொன்று
மெலிவாகச் சாய்த்துவா பாகமாக
(தா)வியபின் புகையஞ்சுங் கட்டிப்போகுங்
கனமான முழுக்கட்டு நாகம்பாரே. 454

பாரப்பா நாகமது கட்டிற்றானால்
பண்பேதி சண்பேதி சத்தபேதி
ஆரப்பா யிதினாட்டைக் காணப்போறார்
அம்மம்மா சிவயோகி சித்தர்காண்பார்
தூரப்பா வெடுத்தசலந் துலையாப்போலத்
துடர்ந்தேறிக் கொடிமட்டு மெட்டியோடுங்
காரப்பா குருபதத்திற் றொண்டுபண்ணு
கைம்முறைகள் தவறாமல் சூட்டுசூட்டே. 455

நாகக்கட்டு

சூட்டவே நாகமொரு பலந்தானப்பா
துடியாக தங்கமொரு பலத்திலிய
நீட்டவே ரண்டுமொன்றா யுருகும்போது
நினைவாகச் சூதமொரு பலத்தைப்போடு
ஆட்டவே கல்வத்தி லதனைக்கொட்டி
யணையப்பா பலநாலு கெந்திதானும்
கூட்டவே சூடனும் னதுபலமும் ரண்டு
(கொ)காடிதின மல்லிகையின் சாற்றாலாட்டே. 456

ஆட்டியே தினமூன்று காயக்காய
அதன்பின்பு பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
நீட்டியே வாலுகையிற் பனிரண்டுசாமம்
நேர்ப்பாக முத்தியு மாட்டித்திரு
கூட்டியே வஸ்துசத்தி யீசானத்தில்
கொடிய நிருவாணிக்குப் பூசைசெய்து
மாட்டியே நவலோக மாயிரத்துக்கொன்று
மாற்றே துயிருபத்து அஞ்சுதானே. 457

அஞ்சான செந்தூரங் குன்றியுண்ணு
அப்பனே மண்டலத்தில் சட்டைபோகும்
பஞ்சான நோய்களெல்லாந் தவிடுபொடியாகும்
படுமுன்னே காயமது யிறுகிக்கொள்ளும்
தஞ்சான சிலைபோலத் தேகமாகுஞ்
சாவில்லை யுகாந்தவரை நரைதிரையோயில்லை
மீஞ்சான காயமுமாம் பத்தியமாமுண்ணு
பேசாதே யொருவருடன் மூலம்பாரே. 458

நாகச்சுன்னம்

பார்க்கவே நாகமொரு பலத்தைநீயும்
பரிவாகத் தகடாக்கிப் பூசக்கேளு
சேர்க்கவே வீரமென்ற சுன்னமொன்று
சிறப்பான பூரமென்ற சுன்னமொன்று
கார்க்கவே தாளகத்தின் சுன்னமொன்று
கலங்காதே சாரநீர் விட்டுஆட்டி
ஆர்க்கவே மத்திச்சுத் தகட்டிற்பூசி
ஆதியாஞ் சுண்ணாம்பு குகையிலூதே. 459

காரீயச்சுன்னம்

ஊதவே சுண்ணாம்பாய் நீறிப்போகும்
உத்தமனே வாசனைக்குப் பாஷாணஞ்சாகும்
பாதமே சூதமது யிட்டிலிபோலாகும்
பண்பான வீரமது மணியுமாகும்
கோதவே லிங்கமது கட்டிப்போகும்
கொடிதான சரக்குகளிற் பூசிவாட்ட
ஓதவே சரக்கெல்லா மணிபோலாடும்
உத்தமனே நாகத்தி னோட்டந்தானே. 460

தானென்ற நாகம்போற் காரீயஞ்சாய்த்துச்
சமர்த்துடனே தகட்டாக்கிப் பூசக்கேளு
ஊனென்ற வெள்ளையென்ற பாஷாணத்தோடு
உத்தமனே சவ்வீரம் பூரஞ்சினம்
கானென்ற சவர்க்காரச் சுன்னஞ்சூடன்
கலந்தரைத்துச் சாரத்தின் செயநீராலே
பானென்ற தகடுதனிற் பூசிவைத்துப்
பக்குவமாஞ் சுன்னமென்ற குகையிலூதே. 461

ஊதையிலே வெந்துருகிச் சுன்னமாகும்
உத்தமனே சுன்னத்தின் சாரங்கூட்டிப்
பாதையிலே கல்வத்திலிட்டு ஆட்டிப்
பக்குவமாய்ச் சுன்னமென்ற குகையில்வைத்து
வேதையிலே மேல்மூடிச் சீலைசெய்து
விளங்கவே புடம்போட மலரும்பூப்போல்
காதையிலே கடுங்காரச் செயநீர்குத்திக்
கனமான பீங்கானிற் பனிப்படவேவையே. 462

வைத்துடனே பலபலெனத் தண்ணீரர்கும்
வாகாக யின்னீரில் வீரம்பூரம்
கைத்துடனே உப்பான சுன்னமிட்டுக்
கனமான துரிசிநீர் கழஞ்சுபோட்டுத்
தைத்துடனே கல்வத்திற் சூதம்போட்டுத்
தாக்கியரை நால்சாமம் கல்வத்திட்டு
மொய்த்துடனே யுண்டையா யெடுத்துக்கொண்டு
முயற்சியாய் ஆரையிலை கவசங்கட்டே. 463

கட்டியே அவிர்ப்புடமாய்ப் பத்தும்போடு
கனமான சூடன்தீ தன்னில்வாட்டித்
தெட்டியே கரண்டியிலே யெண்ணெய்குத்தியுருக்கிச்
செயமான பின்பெடுத்து சிரசில்வைக்க
வெட்டியே பார்நீயு மகற்றியோடு
விரவியோ வாயில்வைக்கத் தம்பனையேயாகும்
வட்டியே யுபரசத்தின் சத்தையீந்து
மார்க்கமாய்ச் சாரணைதான் செய்திடாயே. 464

செய்திட்ட குளிகைதன்னை வாயில்வைக்கத்
திறமான அண்டரண்ட பதங்களெல்லாம்
கைத்திட்ட மாகவுந்தான் காட்டிவிக்குங்
கண்ணிமைக்குள் சங்கவரை புக்கிவிக்கும்
கொய்திட்ட அண்டத்தில் சித்தருண்டு
குளிகையெங்கே பார்ப்பமென் பாரீயவேண்டாம்
மெய்திட்ட புத்தியினால் கொடுத்தாயானால்
விரைந்தெடுத்து அண்டத்தில் பாய்வார்பாரே. 465

பாரப்பா அடுக்குகளிற் புத்திகொள்வார்
பாய்ந்துபோய் நீயங்கே தடவப்போறாய்ச்
சேரப்பா பாட்டருட மணியைவாங்கித்
திறமாகப் பார்ப்பமென்று வாயில்வைத்து
காரப்பா அண்டத்திற் புக்கிப்போனால்
கடுகவொரு மணிவாயில் வைத்துப்பாட்டர்
தூரப்பா கெவுனத்தில் தேடிப்பார்த்தார்
சுற்றியெங்குங் காணாமல் திகைத்திட்டாரே. 466

திகைத்திட்டுக் குகையில்வைத்துச் சீஷருக்குச்
செப்பினார் கேசரத்தி லாடும்போது
பகைத்திட்ட சித்தர்கள் தானனேகங்கோடி
பாசிக்குங் குளிகையைத்தான் கேட்பார்மக்காள்
நகைத்திட்டு அவர்கையி லீயவேண்டாம்
நம்போலே யேளிதமாய்ப் போகவேண்டாம்
புகைத்திட்டார் பாட்டர்சொல்லக் கேட்டேனியானும்
பேய்மக்காள் புத்திகொண்டு பிழைத்திடீரே. 467

பிழைத்திட்டுக் குளிகைகட்டி யோகம்பார்த்துப்
பேரான காயத்தைச் சுத்திபண்ணி
குழைத்திட்டு ஆத்தாளைப் பூசைபண்ணிக்
சூரரியவஸ்து சுத்தி பானம்பண்ணி
அழைத்திட்டு வாசியைத்தான் அங்கென்றூணி
அடுக்காறு தளத்தில் நிற்கும் அச்சமுங்கண்டு
வழைத்திட்ட சாந்திதனில முர்தத்தையுண்டு
வழியோடே மனதூன்றிப் பாருபாரே. 468

பார்த்திடவே தங்கமொன்று உருகும்போது
பரிவான சூதமொன்று காரத்தோடீய்ந்து
கார்த்திடவே நாகமொன்று கொடுத்துவாங்கிக்
காணிதுக்குச் சமனாகக்கெந்திகூட்டி
ஆர்த்திடவே தாளகமுஞ் சிலையும்வீரம்
அழகாக நாலிலொன்று கூடக்கூட்டி
மார்த்திடவே கல்வத்தி லிதனையிட்டு
மல்லிகை யினிலைச்சாற்றி லரைத்திடாயே. 469

அரைத்திடுவாய் தினமூன்று சாறுவிட்டு
அழகாகப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
நிரைத்திடுவாய் வாலுகை யினடுப்பிலேற்றி
நேர்பாகத் தீயெரிப்பாய் பனிரண்டுசாமம்
விரைத்திடுவாய் ஆயிபதம் பூசைபண்ணி
வெகுளாதே யெடுத்துப் பாரருணன்போலாங்
கரைத்திடு வாயாயிரத்துக் கொன்றேயீயக்
கைகண்ட மாற்றென்ன விருபத்தஞ்சே. 470

அஞ்சுமே செந்தூரம் பணந்தானொன்று
அனுபானத் தேனோடே மண்டல மேகொள்ளு
கெஞ்சுமே நோய்களெல்லாந் தவிடுபொடியாகுங்
கெடியான காயசித்தி யருணன்போலாந்
துஞ்சுமே நரைதிரைகளெல்லா மாறுஞ்
சுகமான சட்டையொன்று கக்கிப்போகும்
வஞ்சுமே கற்பாந்த கோடிகாலம்
வாசியை நீமூலத்தி லிருத்திப்பாரே. 471

சவ்வீரவைப்பு

இருத்திடவே சவ்வீர வைப்புக்கேளு
எழிலான வெடியுப்புநாலு பத்துபலந்தான்
பொருத்திடவே சீனமது அஞ்சுபத்துபலந்தான்
புகழாக விதுரண்டுங் கல்வத்திட்டு
வருத்திடவே மேனிச்சாற் விட்டுஆட்டு
வகையாக வில்லுகட்டி யுலரப்போட்டு
தரித்திடவே கலசத்தி லிதனைப்போடு
சக்கரமாம் பானையைத் தான்மேலேமூடே. 472

மூடியே சீலைசெய்து அடுப்பிலேற்றி
முசியாதே பீங்கானில் கிண்ணிவைத்துச்
சாடியே தணலேற்றிப் பாயமுச் சாமந்தான்
தன்னுக்குள் வேர்வை போலிறங்கும்பாரு
வாடியே வெளுப்பாக விறங்கும்நீரை
வகையாக வூற்றிவிடு மறுகால்நீரைத்
தேடியே வீதருக்கு ளடைத்துவைத்துச்
சிதராமல் நீரையெல்லாம் வாங்குவாங்கே. 473

வாங்கியே சூதமொரு பலந்தானெட்டு
வகையாக மறுபீங்கான் தன்னில்வைத்து
ஓங்கியே திராவகத்தை யதிலேவிட்டு
யுர்ப்பனமாய்த் தணலிட்டு வுருகவைத்துக் களியாய்க் கிண்டு
தேங்கியே மணல்போலே யாகும்பாரு
சிறக்கவே கல்லுப்பு பலந்தானொன்று
பாங்கியே துரிசியொரு பலந்தானாலு
பக்குவமாம் பூநீறு பலந்தான்ரண்டே. 474

ரெண்டோடு வெடியுப்பு ஒன்றரைதானப்பா
நேர்ப்பான சீனமது வொன்றரையேயாகுங்
கண்டோடு அன்னமென்ற பேதிதானுங்
கருவவே ஒருபலந்தான் கூடப்போடு
தண்டோடு சாரமது அரையேபோடு
சார்வான கல்லுப்பு துரிசுதன்னை
பண்டோடே பொடியாக வறுத்துப்போடு
பக்குவமாய் வெவ்வேறே பொடித்துவையே. 475

வைத்ததெல்லாஞ் சூதத்தில் நன்றாய்ப்போட்டு
வாகாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றிப்
பைத்ததெல்லா மரைவாசி தானேபோட்டுப்
பக்குவமாய் வாலுகையின் மேலேயேற்றி
நைத்தல்லோ தீபோட்டுக் கமலம்போல
நாலுநாள் முச்சாமம் ஆறவிட்டுப்போடு
கைத்தல்லோ பனிரண்டு சாமமானால்
கனமான தேங்காய் போலிருக்குந்தானே. 476

தானென்ற சவ்வீரப் பொடிதான்சேரை
சமர்த்தான கல்லுப்பு வொன்றுக்குமுக்கால்
மானென்ற சவ்வீரப் பொடியாக்குப்பாதி
மகத்தான துரிசியென்ற பலந்தானப்பா
கானென்ற துரிசிக்குப் பாதிப்பூநீறு
கனமான நீறுக்குச் சீனமுக்கால்
வேனென்ற வெடியுப்பு மப்படியேயாகும்
வெடியுப்பு மூன்றிலொன்று காரஞ்சேரே. 477

சேர்க்கவே யன்னமென்ற பேதிதானுஞ்
சிறந்த பூநீறுக்குப் பாதியப்பா
ஆர்க்கவே பொடிசெய்து குப்பிக்கேற்றி
அரைவாசி வாலுகையின் மேலேவைத்து
ஏர்க்கவே தீயிடுவாய் கமலம்போல
இதமான நாலுமுச் சாமப்பா
பார்க்கவே யாறவிட்டு யெரித்தாயானால்
பருவமாய்ப் பனிரண்டு சாமந்தானே. 478

தானென்ற மும்முறை தானிப்படியே செய்தால்
சமர்த்தான கொச்சியென்ற பேருமாச்சு
கானென்ற பாங்கிதைத்தான் மாயிசொல்லக்
கனமான வீரத்தால் வாதமாச்சு
வேனென்ற வீரத்தைச் சுன்னஞ்செய்தால்
வெகுளாமல் தங்கமது பூப்போலாகுந்
தேனென்ற சரக்கெல்லாஞ் சுண்ணாம்பாகுஞ்
சிறுபிள்ளை யாடுமிந்த வாதந்தானே. 479

வாதத்துக் காதியென்ற வீரப்போக்கை
மறைத்தாரே நாதாக்கள் ரிஷிகள்சித்தர்
வேதத்தில் முடிவுபோ லொளிப்புமெத்த
வெட்டவெளியாச்சு தென்றார் லோகமெல்லாம்
போதத்தின் பஞ்சகர்த்தாள் சிருட்டிபோகும்
பொன்மய மாயுலகமெல்லாம் போகுமென்று
நீதத்தில் சொன்ன வராருமில்லை
நேர்ப்பாக வென்னூலிற் சொன்னேன்காணே. 480

சொன்னதினால் சித்தரென்ன பகையுமாச்சு
தோற்றாத கருவெல்லாம் வெட்டவெளியாகப்
பன்னதினால் பலனென்று விரித்துச் சொன்னேன்
பரத்துக்கே வுப்பென்று மனதிலெண்ணித்
தன்னதினால் மடபதிகள் சாத்திரத்திலில்லை
சண்டாளர் கைக்கொடுக்கி லிந்தநூலை
மன்னதினால் நூல்கொடுத்தோ னரகமெய்தி
மாண்டிறந்து கடைநரகில் வீழ்வான்காணே. 481

காணவே நிர்மூடவா திகட்குக்
கைக்கொடுக் கிலிந்நூலில் கருவையுண்ணி
பூணவே பார்த்தலைந்து யேமங்கண்டு
புளகித்து மெய்மறந்து பெண்ணைக்கண்டு
ஆணவே தனமீய்ந்து கற்பழித்து
அளிம்பாக்கிக் குடிகெடுத்து ஆசைபூட்டி
ஊணவே காமநோய் கொண்டுயேங்கி
உலகத்து நடத்தை தப்பியுய்வன்றானே. 482

தானான ஞானிக்கு இந்நூலெய்தில்
சண்டாளப்பா சத்தையறுத் துத்தள்ளி
ஊனான காயத்தைச் சுத்திபண்ணி
ஊரூருதலங்க ளெல்லாஞ் சோதித்தேறிப்
பானான நிராதாரத் துள்ளேசொக்கிப்
பரத்துக்கு அடுக்கநின்று பானம்பண்ணி
ஆனான அன்னமரை தண்ணீர்காலா
யருந்தியே யொருபொழுது யிருப்பார்காணே. 483

இருந்திட்ட கருவெல்லா மெண்ணிப்பார்த்து
எளிதாகத் தொழில்செய்து ஏமங்கண்டு
திருந்திட்ட சிவனுடைய சொத்திதென்று
செலவுசெய்யார் கனமான கற்பத்துக்குப்
பொருந்திட்ட மாத்திரமே யெடுத்துவித்து
பூசை திரவியத்துக்குக் கற்பூரத்துக்கும்
அருந்திட்டு மொன்று மறியாதார்போல
வசைவற்று இருப்பார்கள் ஞானிதானே. 484

ஞானிக்கு வறுமைவந்தால் சகலசித்தும்பொய்யாம்
நாட்டிலுள்ள மனிதர்கள் தானகைப்பாரென்று
ஞானிக்குப் பசிவந்தால் மனமலையுமென்று
நலமான காயசித்தி போகுமென்று
ஞானிக்கு விகடம் வரலாகா தென்று
நாதாக்கள் சொல்லாத கருவைச்சொன்னேன்
ஞானிக்குச் சொன்ன தாங்குருவுக்காச்சு
நலமான சவ்வீர வைப்புகேளே. 485

சிவப்பு சவ்வீரவைப்பு

கேளப்பா வெடியுப்பு பலமோ நூறு
கெடியான சீனமது நூற்றுப்பத்து
வாளப்பா சவுட்டுப்பு இருபத்தஞ்சு
மருவியதோர் துரிசியது முப்பதாகும்
நாளப்பா நவாச்சாரம் பலமும்பத்து
நண்பான சத்தியென்ற சாரமஞ்சு
காளப்பா கல்லுப்புப் பலமுமஞ்சு
கடிசாகக் கல்வத்திற் பொடியாய்பண்ணே. 486

பொடிபண்ணிப் பிரண்டைச் சாற்தன்னினாலே
பூணியரைத் தேழுநாள் வில்லைசெய்து
கெடிபண்ணி ரவிதனிலே யுலரப்போட்டுக்
கெட்டியாம் பாண்டத்தி லரைவாசியிட்டுத்
தடிபண்ணிச் சக்கரமாம் பானைதன்னைச்
சாங்கமாய் மூடியெல்லா மாஷமண்செய்து
துடிப்ண்ணி யடுப்பேற்றித் தீயைமூட்டித்
துப்பரவாய்த் திநீரை வாங்குவாங்கே. 487

நீரிலே வெள்ளைநீர் தனையகற்றி
நேர்ப்பான சிவந்தநீர் தன்னைவாங்கிச்
சீரிலே யரக்கான துய்யர்தன்னில்
சிறப்பாக அடைத்துவைத்துச் சேதிகேளு
தூரிலே சூதமொரு பலந்தான்பத்துச்
சூட்சாதி கல்லுப்பு அஞ்சுமாகும்
ஊரிலே துரிசியது ரண்டரையே பலந்தான்
முற்பனமாம் வெடியுப்பு ரண்டுபலமுமாமே. 488

ஆமப்பா சீனமது ரண்டுபலமாகு
மன்னமென்ற பேதியது பலமும்ரண்டு
ஓமப்பா சாரமது பூநீறு பலமும்ரண்டு
உறுதியாம் பூநீறு பலமும்ரண்டு
காமப்பா லிங்கமது பலமுமெட்டுக்
கம்பிரச கற்பூரம் பலமுமெட்டு
நாமப்பா வெள்ளையது பலமேயொன்று
நற்கெவுரி மனோசிலையும் பலமொன்றுபோடே. 489

போடவே பலமொன்று கெந்திதானும்
புகழான சூடனது பலமுமொன்று
வாடவே தொட்டியொடு அப்பிரகம்நிமிளை
வர்த்தமொடு வைகிருந்து தமர்காந்தலோகம்
தேடவே கற்காதி சாத்திரவேதி
சிறப்பான சிங்கியொடு குதிரைப்பல்லு
நீடவே அஞ்சனக்கல் துத்தத்தோடு
நெடிதான சலாசித்துங் கல்நார்தானே. 490

தானென்ற கடல்நுரையுமொவ் வொன்றுபலந்தான்
தாக்கியரை யெட்டுநாள் திராவகத்தைவிட்டுப்
பானென்ற ரவிதனிலே யுலரப்போட்டு
பரும்பீங்கான் றன்னிலிட்டுத் தணலில்வைத்து
ஊனென்ற பொடிப்போலே வறுத்துக்கொண்டு
உற்பனமாய்க் காசியென்ற மேருக்கேற்றி
வானென்ற அரைவாசி மட்டும்போட்டு
மயங்காதே வாலுகையில் வைத்திடாயே. 491

வைத்திட்டுத் தீயெரிப்பாய்ப் பனிரண்டுசாமம்
வளமான தீபம்போலா றவிட்டுக்
கைத்திட்டு தீயெரிப்பாய்க் கமலம்போலக்
கலங்காத பனிரண்டு சாமந்தானும்
மொய்த்திட்டு பகல்முழுதுந் தீயைப்போடு
முயற்சியாய் ராக்கால மாறப்போடு
நைத்திட்டு ஆறுநா ளானபின்பு
நலமாகும் பதம்பார்த்து யிறக்கிடாயே. 492

இறக்கியே குப்பியைத்தான் முன்மருந்துகூட்டி
இதமாகத் திராவகத்தி லரைத்துலர்த்தி
நறுக்கியே முன்போலப் பொடியாய்ப்பண்ணி
நலமான காசியென்ற மேருக்கேற்றி
உறக்கியே வாலுகையின் மேலேவைத்து
உற்பனமாய்த் தீயிட்டு அறுநாலுசாமம்
மறக்கியே யாரவிட்டு வுடைத்துவாங்கி
மறுகாலு முன்போலே மருந்தைக்கூட்டே. 493

பறங்கிபாஷாண வைப்பு

கூட்டியே மும்முறைதான் செய்தாயானால்
கொடுசிவப்பாய்ச் சவ்வீரமிருக்கும்பாரு
நீட்டியே சிறுவிஷமும் பலமுமஞ்சு
நெடிதான அலரிவேர் பட்டைபலம்பத்து
மூட்டியே கெந்தகந்தான் பலமும்ரண்டு
முட்டையா மஞ்சளென்ற கருவாலாட்டி
வாட்டியே வில்லைபண்ணிப் புடத்தயிலம்வாங்கி
வகையான வீரத்திற் சுறுக்குபோடே. 494

போட்டுடனே மெழுகான பதத்தில்வாங்கிப்
பேரான ரேக்குசுற்றிவைக்கத் தின்றுபோடும்
நீட்டுடனே வுள்ளுக்கு நாலுதங்கம்
நிகழாமல் சுற்றிவைக்கத் தின்னுபோடும்
மூட்டுடனே ஆயிரத்துக் கொன்றேயீய
முசியாதே பதினாறு மாற்றுமாகும்
மாட்டுடனே வுபரசங் களீயமாகு
மாசற்ற வீரத்தை யொளித்தார்பாரே. 495

ஒளித்தாரே நாதாக்க ளென்றுசொல்லி
யுத்தமித்தாய்ப் பாதத்துக் குண்மையாக
அளித்தாரே லோகத்தோர் பிழைக்கவென்று
ஆச்சரியம் வீரம்விட்டால் வாதம்போச்சு
களித்தாரே முன்சொன்ன வீரமெல்லாங்
காரமிடும் வயித்தியத் துக்காகுமாகுஞ்
சுளித்தாயே யேமமொன்றுங் காணாதேங்கிச்
சுணங்கலாய்ச் சுட்டலைந்து மாள்வான்றானே. 496

மாளாமல் பறங்கியென்ற பாஷாணத்தை
மகிழ்வாக வைக்கிறதோர் முறைகேளுமாணாக்காளே
தாளாமல் சூதமொரு பலந்தான்பச்து
சாதகமாய்க் கல்லுப்புப் பலந்தானெட்டு
மீளாமல் வெள்ளையென்ற பாஷாணமைந்து
விரவியே கல்வத்திற் பொடித்துக்கொண்டு
கேளாமல் திராவகத் தாலெட்டுநாளாட்டிக்
கெடியாகப் பொடிபண்ணி மேருக்கேற்றே. 497

மேருக்கே யேற்றிபின் வாலுகையில்வைத்து
விதமாகத் தீயுங்கள் பனிரண்டுசாமம்
பேருக்கே பதங்கமது யிறங்கியேறும்
பெருந்தேங்காய் போலிருக்கும் பாஷாணந்தான்
பேருக்கே முன்போல மருந்துகூட்டிப்
பேசாதே திராவகத்தை விட்டு ஆட்டிப்
பாருக்கே பொடிபண்ணி மேலுக்கேற்றிப்
பக்குவமாய் வாலுகையில் பதித்திடாயே. 498

பதித்திட்டுப் பனிரண்டு சாமந்தீயைப்
பகல்முழுது மெரியிட்டு ஆறப்போடு
விதித்திட்ட பக்குவத்தி லிறங்கிப்பாரு
மேலோடு தள்ளியே பொடியாய்பண்ணு
மதித்திட்டு முன்போல மருந்துகூட்டி
மறவாதே மூன்றுதரந் திறந்தாயானால்
கதித்திட்டு பறங்கியென்ற பாஷாணமாகுங்
கண்ணிமைக்குள் ரசிதவித்தை யாகும்பாரே. 499

பாரப்பா பறங்கியென்ற பாஷாணந்தான்
பலமெடுத்து அயச்சட்டிக்குள்ளேவைத்து
நேரப்பா துண்டிப்பால் நாலுசாமம்
நீந்தாதே கருக்கிடவே மெழுக்காய்ப் போகும்
தூரப்பா யிரும்புதுசெம்பில் நூற்றுக்கொன்றீ
துடியான ரசிதமது பதினாறாகுஞ்
சீரப்பா சரக்கெல்லாங் கட்டிப்போகுஞ்
சிறுபிள்ளை யாடுமிந்த வாதந்தானே. 500

வாதமென்றால் கொஞ்சத்தில் கிடைக்குமோதான்
மகத்தான யோகிமுதல் ரிஷிகள்சித்தர்
நீதமென்ற பஞ்சகர்த் தாளிவர்களெல்லாம்
நேர்ப்பாகப் பார்க்கையிலுந்தப் பிப்போகும்
வேதமென்ற அந்தரத்தின் முடிவுக்கேற்கும்
விரைந்த மனோன்மணித் தாயார்சொல்லயானும்
பாதமென்றென் சிரசில்வைத்துக் கேட்டுக்கேட்டு
பரிவாகப் பிள்ளைகட் காயுரைசெய்தேனே. 501

நூல்முறை

உரைசெய்தார் சித்தர்கள் தானனேகங்கோடி
உத்தமனே அகஸ்தியர் தானெட்டுப்பாவாய்
நிரைசெய்தே நவகண்டஞ் சொன்னானையா
நெரிப்பாக வெண்பாவாய்க் கோரக்கர்தாமுந்
திரைசெய்த வேழுஆயிரந்தான் சொன்னார்
திரட்டியல்லோ மச்சமுனியே முகாண்டஞ்சொன்னார்
புரைசெய்த சிவவாக்கியரஞ்சு காண்டஞ்சொன்னார்
போக்கோடே சித்தர்சொன்னார் கரைகாணேனே. 502

காணாத காசிபர்தான் வண்ணஞ்சொன்னார்
கரையற்ற ரோமமுனி வடுகிற்சொன்னார்
பூணாத ராமதேவர் சந்தப்பாசொன்னார்
புகழரிய நந்திகள்தான் சந்தஞ்சொன்னார்
கோணாத சங்குமாமுனி தானையா
குறைத்துமே கலித்துறையாய்த் தெளிவாய்ச் சொன்னார்
தோணாதே திருமூலர் நாயர்தாமுஞ்
சொன்ன திருமந்திர முந்தான்காடுகாடே. 503

காடாகப் போகாமல் பதஞ்சலிமாமூர்த்தி
கணக்கோடே யேழுகாண்டஞ் சொன்னாரையா
தோடாகச் சட்டைமுனி நிகண்டோடொக்கத்
தோராம லிருபத்து யேழுநூறு
பாட்டாகக் காலாங்கி நாயர்தாமும்
பக்குவமாய் நாலுகாண்டஞ் சொன்னாரையா
நாடாக விருந்தபேர்க்கு தவியென்று
நலமாக வேழுகாண்டஞ் சொன்னேன்பாரே. 504

பார்க்கவே யெழுமளைந்தானே னெழுநூறாகப்
பரிவாகச் சொல்லிவிட்டேன் சூத்திரமாய்த்தானும்
நேர்க்கவே யென்பிள்ளை கொங்கணர்தானப்பா
நிறைமூன்று ஆயிரத்தன்னூறு சொன்னார்
சேர்க்கவே சட்டைமுனி நூலும்நன்று
செகமறிய கொங்கணர் தானூலும்நன்று
கார்க்கவே சங்குமாமுனி நூலும்நன்று
கருதியே மனதூன்றிப் பாருபாரே. 505

பாரப்பா நூல்மற்ற நூல்களெல்லாம்
பரிபாஷைக் கருவாகச் சொன்னாரையா
நேரப்பா கண்ணாடி மூக்கும்போல
நேர்ப்பாகச் சமசொல்லி வைத்தார்தேவர்
சேரப்பா சாஸ்திரங்கள் பார்க்கப் பார்க்கத்
திருட்டெல்லாம் வெளியாகு மறைப்புமில்லை
ஆரப்பா யென்னுடையு நூலுகண்டே
ராதியென்ற கொங்கணர்தான் கரைகண்டாரே. 506

கோரை வீரவைப்பு

கரைகண்ட கோரையென்ற வீரவைப்பைக்
காட்டுகிறேன் கருவாகக் கேளுங்கள்மக்காள்
பரைகண்ட சவ்வீரம் பலந்தானெட்டு
பாய்ச்சி நன்றாய்க் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
திரைகண்ட கல்லுப்புச் சுன்னம்ரண்டு
செகமறிய சவர்க்காரச் சுன்னம்ரண்டு
வுரைகண்ட துரிசியென்ற சுன்னம்ரண்டு
மாசற்ற வெடியுப்புச் சுன்னம்ரண்டே. 507

ரெண்டான சாரமென்ற சுன்னம்ரண்டு
நேர்ப்பான சீனமென்ற சுன்னம்ரண்டு
பண்டான அன்னமென்ற பேதிரண்டு
பாங்கான பொடியோடே வொக்கக்கூட்டிக்
கண்டான மேருவுக் கரைவாசி போட்டுச்
சாதகமாய் வாலுகையின் மேலேவைத்து
செண்டான வடுப்பெற்றி வைப்பாயப்பா
செகமறியப் பனிரண்டு சாமந்தானே. 508

தானென்ற வீரத்தை யெடுத்துப்பார்த்தால்
சாதகமா யடியிலே தானேநிற்கும்
கானென்ற விரும்புமேலணு போல்வைத்துக்
கனமான நீரையள்ளி யதிலேகுத்தித்
தேனென்ற குருவாகுந் தண்ணிகுழைத்துச்
சிறப்பாகக் காகத்தினி றகிற்பூசக்
கோனென்ற கொக்கிறகு போலாகுங்
கொள்ளையோ கொள்ளை யிதில்வாதந்தானே. 509

வாதந்தா னெப்படிதான் வருகுமக்காள்
மகத்தான துரிசியல்லோ நீறுபண்ணவேணுஞ்
சூதந்தான் தன்னையல்லோ கட்டவேணுந்
துடியான சூதமதிலோ காயசித்தியாகும்
வேதமென்ற பொருளறிந்தான் ஞானியாவான்
விரைத்தாறு தலங்கண்டோன் யோகியாவான்
காதந்தானென்று சொல்ல வார்த்தையாச்சு
கலந்தொட்டி நடந்தாக்கால் துலையும்பாரே. 510

துரிசிகுரு

பார்ப்பதுபோல் துரிசியொரு பலத்தைவாங்கிப்
பரிவான சேரையென்ற வீரந்தன்னை
சேர்ப்பதுதான் முக்கா செடையேதூக்கிச்
செயமான வாய்நீரால் மத்தித்தப்பா
கார்ப்பது தான் துரிசியின் மேற்பூசுபூசு
கனமான ரவிதனிலே போடுபோடு
தோர்ப்பது தான்பத்துநாள் போட்டாயானால்
சுகமான துரிசியது நீறுமாமே. 511

ஆமேதான் சாறுவார்த் தழைகளெல்லாம்
அதட்டி மெள்ளக் குருபோட்டுப் பிழியத்தண்ணீர்
போமேதான் பாலெல்லா முறிந்துநீராய்ப்
பீடில்லை சுத்தசலம் போலேநிற்கும்
வேமேதான் சரக்குகளிற் சுருக்குப்போட
விடுபட்ட மெழுகாகும் வேதையாகும்
ஓமேதான வலோகந் தீர்ந்தாயானா
லொருகோடிக் கோடுமிது வுயர்த்திதானே. 512

உயர்த்தியென்ற விராலியிலைக் குள்ளேகேளு
வுரலிலிட்டுக் குடித்தபின்பு துரிசிச்சுன்னம்
புயர்த்தியென்ற விராகனிடை யதிலேபோட்டுப்
பிசைந்து வைத்துக்கிட்டி கட்டிப் பிழியத்தண்ணீர்
குயர்த்தியென்ற சூதமது அயச்சட்டியிட்டுக்
கொடுஞ்சுறுக்காய்ப் போட்டுவா வொருசாமந்தான்
சயர்த்தியென்ற யிட்டிலிபோ லாகும்பாரு
நாமறியோ மிதுபோலப் போக்குத்தானே. 513

போக்கான சூதத்தில் தங்கமிட்டுப்
பேரான கெந்தகமோ சரியாய்க்கூட்டித்
தாக்கான தாளகமுஞ் சிலையும்வீரம்
தயங்காத மல்லிகையின் சாற்றாலட்டி
நோக்கான குப்பியிலே பொடி பண்ணிப்போட்டு
நுகர்ந்துநின்ற வாலுகையில் செந்தூரித்து
வாக்கான ஆயிரத்துக் கொன்றேயீய
மாற்றென்ன பனிரண்டு காணுங்காணே. 514

காணந்த வுபரசங்கள் நூற்றிரண்டுபத்துங்
கனமான பாஷாண மறுபத்துநாலுந்
தோணந்த லவண முதலி ருபத்தஞ்சுஞ்
சொல்முறையாம் நவலோகம் நவரத்னங்கள்
ஆணந்த விதுவெல்லாஞ் சத்தாய்வாங்கி
அம்மம்மா சூதத்திலொவ் வொன்றாயீய்ந்து
பூணந்தக் குடோரிவிட்டுக் கக்கப்பண்ணி
புகழான சாரணையில் சாய்த்திடாயே. 515

சாய்த்திடவே யொருதரந்தான் பாசத்தையீய்ந்து
சாதகமாஞ் சகடென்ற குளிகையாச்சு
வாய்த்திடவே ரண்டுதரந் தீர்ந்தாயானால்
மாசற்ற யோகியென்ற குளிகையாச்சு
மாய்த்திடவே மூன்றுதரந்தீர்ந் தாயானால்
மகத்தான யோகியென்ற குளிகையாச்சு
ஆய்த்திடவே ஐந்துதரந் தீர்ந்தாயானா
லச்செய மாங்குளிகையென்று யறிந்திடாயே. 516

அறிந்திடவே யேழுதரந் தீர்ந்தாயான
லப்பனே மோகினியென்ற குளிகையாச்சு
செறித்திடவே யிருநாலு தீர்ந்தாயானால்
செகமறிய வஷ்ட்ட மாசித்தியாச்சு
பிறிந்திடவே பதினொன்றே தரமுந்தீர்ந்தால்.
பேரான காமதேவர் குளிகையாச்சு
கறிந்திடவே பதின்மூன்று தரந்தீர்ந்தாயானால்
கமலினியாங் குளிகையென்ற நாமமாச்சே. 517

ஆச்சப்பா பதினைந்து தரமுந்தீர்ந்தா
லப்பனே சந்தான குளிகையாச்சு
போச்சப்பா பதினேழு தரமுந்தீர்ந்தால்
பேரான சுருபமென்ற குளிகையாச்சு
வாச்சப்பா குளிகைதனை வாயில்வைத்து
வடகடலுந் தென்கடலு மருவலாகுந்
தோச்சப்பா யண்டத்தில் தமரிற்புக்கிச்
சருபமெனச் சிலம்பொலியில் மேவலாமே. 518

மேவவே துரிசியென்ற குருவைத்தொட்டு
விளம்புகிறேன் தாசான பூசைவாங்கிப்
பாவவே துரிசியிட்டுப் பிழிந்துக்கொண்டு
பருவான அயச்சட்டிக் குள்ளேவார்த்து
தாவவே நெடுங்கம் பிலிங்கமொன்று
தனைப்பொடித்து அயச்சட்டிக் குள்ளேவைத்து
காவவே வெடியுப்புக் காசெடையேவைத்து
கனமான வடுப்பேற்றித் தீயைமூட்டே. 519

லிங்க மெழுகு

மூட்டவே வெந்துநன்றாய் மெழுகுமாகு
முனியவே வழித்தெடுத்துப் பீங்கானில்வைத்து
நாட்டவே நவலோகம் நூற்றுக்கொன்று
நலமான மாற்றென்ன பத்தரையேகாணும்
ஆட்டவே தினங்குன்றி யுள்ளேகொள்ள
அருணனைப்போல் தேகமுமாங் கண்டுகொள்ளு
பூட்டவே நரையெல்லா மாறிப்போகும்
பொற்சடை யோன்தேகமு மாங்கண்டுபாரே. 520

கண்டுபார் விராகனிடை துரிசுன்னங்
கனமான சதுரக்கள் ளிப்பாலிற்போட்டு
விண்டுபார் சாழ்ந்தான் மூடிவைக்க
விடுபட்ட சுத்தசலம் போலேயாகும்
கொண்டுபார் வெள்ளையென்ற பாஷாணந்தான்
கொடிதான அயச்சட்டிக் குள்ளே வைத்து
மண்டுபார் நாற்சாமஞ் சுருக்குப்போட
மகத்தான வெள்ளையது மெழுகுமாமே. 521

வெள்ளை மெழுகு

மெழுகெடுத்து வங்கத்திலிடைக் கிடைகதானீய
மெதுவான வங்கமது நொறுங்கும்பாரு
அழுகெடுத்து வங்கத்தை வெள்ளியிலேதாக்க
அப்பனே ரசிதமது பொடியேயாகும்
தழுகெடுத்துச் சூதத்தைச் சமனாய்ச்சேர்த்து
த்ர்க்கியரை பாலென்ற தண்ணீர்விட்டு
நழுகெடுத்து நாற்சாம மரைத்தபின்பு
நலமாத வழித்தெடுத்து அயவகலில் வையே. 522

வைத்துமே அயவகலால் சீலைமண்செய்து
வாகாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
தைத்துமே வெத்ததுவுங் குருவாய்நிற்குஞ்
சம்சயங்க ளெண்ணாமல் வங்கநூற்றில்
தைத்துமே யரிசெடைதான் குருதுடித்தாயானால்
நலமான மாற்றென்ன பதினைந்தாகும்
வெய்த்துமே செம்பு அயந்தன்னிலீய
விடுபட்ட வெள்ளிமயமாகும்பாரே. 523

ரசிதபாஷாண வைப்பு

பாரப்பா ரசிதமென்ற பாஷாணம்வைக்கப்
பண்பாகச் சொல்லுகிறேன் மாணாக்காளே
நேரப்பா சங்கினுட சுன்னந்தானும்
நிறுத்தல்லோ பலம்பத்து கல்வத்திட்டு
சேரப்பா சீனமென்ற பொடிதான்பத்து
சிறப்பான கல்லுப்பு பொடிதான்பத்து
வேரப்பா வெள்ளையென்ற பாஷாணம்பத்து
மேவியதோர் சாரமது பலமும்ரண்டே. 524

ரெண்டோடே சூதமது பலமும்பத்து
நேர்ப்பான திராவகத்தி லெட்டுநாளாட்டி
கண்டோடே ரவிதனிலே யுலரப்போட்டுச்
சாங்கமாய்ப் பொடிபண்ணி மேருக்கேற்றி
வெண்டோடே வாலுகையின் மேலேவைத்து
விரவியே கமலம்போல் தீயைப்போடு
பண்டோடே பனிரண்டு சாமமானால்
பக்குவமாய்ப் பலகைபோற் பதங்கமாமே. 525

ஆமிந்தப் பாஷாணம் பலந்தான்வாங்கி
அயச்சட்டிக் குள்வைத்து அப்பால்கேளு
சாமிந்தச் சதிரக்கள்ளிப் பால்தான்சேரை
சமர்த்துடனே யெலியாலம் பலந்தான்சேரை
வேமிந்த ரண்டுமொன்றாய்க் கலக்கிவைத்து
விரவியதோர் கருநாபிபலம் பொடித்துப்போட்டு
ஊமிந்த மூன்றுநாள் கலக்கிவைத்து
வுற்பனமாந் தண்ணீராஞ் சுருக்குப்போடே. 526

சுருக்கிடவே ரசிதமென்ற பாஷாணந்தான்
துடியான மெழுகாகுஞ் சுரண்டிவாங்கி
நருக்கிட்ட வெள்ளியைத் தீர்ந்தாயானால்
நலமான நீர்வற்றி ரசிதமாகும்
முருக்கிட்ட மெழுகாலே குதக்கட்டு
முயற்சியாந் துரிசியது குருவுமாகும்
குருக்கிட்ட வாதமொன்று பார்ப்போமென்றுங்
குலாமா வாவாதியல்ல குருடனாமே. 527

குருடனென்றால் பத்தியுண்டு பயபக்தியுண்டு
குரங்கான வாதியென்றா லிலைதழையைத்தேடி
முருடனைப் போலொன்றோடே யொன்றைச்சேர்த்து
முயற்சியா யுரைத்தங்கே புடத்தைப்போடு
திருடனைப்போல் விழித்தங்கே யெடுத்துப்பார்த்துச்
சீயென்று யெறித்துவிட்டுப் பின்னொன்றைப் பார்ப்பான்
கெருடனைப் போல்ஞான முற்றவாதியென்றால்
கேள்வியாய்ச் சுடுகாமல் குருதேடுவானே. 528

குருத்தேடியவர்கள் சொன்னமொழியைக் கேட்டுக்
குறையாதே சாஸ்திரத்தைத் தேடிச்சேர்த்து
கருத்தேறிக்கைம் முறைகள் கண்டுதேறிக்
கலங்காதே யோகத்தை நின்றுதேறி
உருத்தேடி யுட்கருவிற் நிற்குந் தானந்தேடி
உடலறிந்து வுயிர்நிற்குந் தானந்தேடி
அருள்தேடி யாத்தளை யறிந்துதேடி
யவள்சொல்லக் கேட்டுணர்ந்து வாதம்பாரே. 529

பாரப்பா துரிசியென்ற சுன்னந்தானும்
பதறாமல் விராகனெடை யெடுத்துக்கொண்டு
நேரப்பா யெருக்கனுட பால்ரண்டுசேரில்
நினைவாக வதிலிட்டுச் சாமம்வைக்க
சேரப்பா கசடற்றுச் சலமாய்நிற்குஞ்
சிறப்பான கெவுரியென்ற பாஷாணந்தான்
வாரப்பா அயச்சட்டிக் குள்ளே வைத்து
மறவாமல் நாற்சாமஞ் சுருக்குப்போடே. 530

போட்டுடனே மெழுகாகுமெடுத்துமக்காள்
பேரான காரீயம் பலந்தானொன்றில்
நீட்டுடனே சரியிடையாய் மெழுகிலீய
நேர்ப்பாக வாங்கியது தூளாய்ப்போகும்
மாட்டுடனே யீயத்தில் தங்கமீந்தால்
மலிந்து தங்கம்நொறுங்கியே தூளாய்ப்போகும்
ஆட்டுடனே யிதற்குநேர் சூதங்காட்டி
யரைத்து முன்னீர்தன்னாலே வில்லைகட்டே. 531

கட்டியே அயச்செம்புக் குள்ளேவைத்துக்
கனமான பத்தெருவிற் புடத்தைப்போடு
உட்டியே குருவாகும் நூற்றுக்கொன்றீய
ஓடுமே பத்தரை தானுயர்த்திமெத்த
துட்டியே யிம்மெழுகு சூதங்கட்டுந்
துலையாத சரக்கெல்லாங் கொல்லுங்கொல்லும்
ஏட்டியே வெகுதூர மேஏடுமேடு
மெடுக்கெடுக்கத் துலையாத வூற்றுமாமே. 532

ஊற்றான தாளகந்தான் பலத்தைவாங்கி
யுறுதியாஞ் சுன்னத்தில் சுத்திபண்ணி
மாற்றான வயச்சட்டிக்குள்ளே வைத்து
மருவவே யிலைக்கள்ளிப் பாலுக்குள்ளே
நீற்றான துரிசியென்ற சுன்னம்போடு
நீறாக முறிந்தபின்பு யெடுத்துக்கொண்டு
காற்றான தாளகத்திற் சுருக்குப்போடக்
கனமான மெழுகாகு மெடுத்துக்கொள்ளே. 533

கொள்ளவே சுத்தித்த செம்புவொன்று
குவிந்துநின்று வுருகையிலே மெழுகொன்றீய
மெள்ளவே வெங்கலம்போல் தகர்ந்துநிற்கு
மேதித்து வுருகையிலே தங்கமீயத்
தள்ளவே சுழன்று வொன்றாயாடும்போது
தங்கத்தின் சரியிடைக்கு நாகமீய
அள்ளவே கூட்டி யெல்லாம் பொடியாய்ப்பண்ணி
யதிகமாய்ச் சூரணத்தைச் சரியாய்க்கூட்டே. 534

கூட்டவே சூதந்தான் கெந்தத்தில் ரெட்டி
குறிப்பாக முன்பாலின் தண்ணீராலாட்டி
நாட்டவே வில்லைபண்ணி அயச்சிமிளில்வைத்து
நயமாக மேல்மூடிமண் சீலைசெய்து
வாட்டவே பத்தெருவிற் புடத்தைப்போடு
மகத்தான செந்தூரம் ரவிதானப்பா
ஆட்டவே மதிதன்னில் நூற்றுக்கொன்றீய
வருணனைப்போற் சிவப்பான தங்கமாமே. 535

தங்கமாங் குருபட்டால் சூதங்கட்டுஞ்
சாவென்ற பேர்போச்சுத் தேகத்துக்குப்
பங்கமாஞ் சரக்குகளிற் பொட்டுப்போடப்
பதைத்தங்கே கட்டிப்போந் தூரவோடுங்
கெங்கையாஞ் சாறுவாராத் தழைகளெல்லாங்
கெடியாகப் பிசைந்து முத்திப்பிழியத்தண்ணீர்
சங்கையா முட்கொள்ளக் காயசித்தியாகிச்
சதகோடி யுகம்வரைக்கு மழியாதெண்ணே. 536

சிவப்பு யெவாச்சாரம்

எண்ணவே சிவப்பான யெவாச்சாரத்தை
யிதமாகச் கேளுங்கள் மாணாக்காளே
பண்ணவேவெடியுப்பு ரண்டுபத்து பலந்தான்
பருவமுடன் சீனமது யிருபத்தைந்து
கண்ணவே ரண்டையுந்தான் கல்வத்திட்டுக்
காரமாம் நாயுருவிச் சாற்றாலாட்டி
தெண்ணவே தெல்லுப்போல் வில்லைகட்டித்
திறமான ரவித்னிலே காயப்போடே. 537

போடடேவ தினமூன்று காயக்காயப்
பொருக்கான பின்பெடுத்துக் கலையத்திட்டு
ஆடவே சக்கரமாம் பானைமேலே
யணைத்தாப்போல் வைத்திட்டு மாசிமண்பூசி
நீடவே யடுப்பிலேவைத்துத் தீயைமூட்டு
நினைவாக வெள்ளைநீர் வாங்கும் பாரு
வாடவே சிவந்தநீர்பின் வருகுமத்தாள்
மகத்தான பீங்கானி லெடுத்துவையே. 538

வைக்கவே யரக்காலே குப்பிபண்ணி
வருகிறதோர் திராவகத்தை யதிலேவாரு
நைக்கவே வெள்ளைதன்னை வசிப்போடு
நவாச்சார மொருசேரைக் கல்வத்திட்டு
ஐக்கவே திராவகத்தா லாட்டுஆட்டு
அறுசாம மாட்டியபின் வழித்தெடுத்து
பைக்கவே யரும்பீங்கான் றன்னில் வைத்துப்
பருவமாய்த் திராவகத்தை வாங்கிக்குத்தே. 539

குத்தியே ரவியில்வைத்து மூன்றுநாள்தான்
குறிப்பாக தணல்மேலே பீங்கான்வைத்துப்
பத்தியே பொடிபொடிபோல் வறுத்துக்கொண்டு
பருவமாய்க் காசியென்ற மேருக்கேற்றி
அத்தியே யரைவாசிமட்டும்போடு
அழகான வாலுகையின் மேலேவைத்து
எத்தியே தீப்போடு கமலம்போல
யிதமாகப் பனிரண்டு சாமந்தானே. 540

தானென்ற நாற்சாம மெரிப்புப்போடு
சாதகமா யிராக்கால மாறப்போடு
கானென்ற மூன்று நாளான பின்பு
கடுங்குப்பி யெடுத்துடைத்தால் தேய்காய்போலத்
தேனென்ற சிறுதிடத்திற் சிவந்துகாணுந்
திரும்பவதைக் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணிப்
பானென்ற திராவகத்தை விட்டுஆட்டு
பரும்பீங்கான் றனிலிட்டுத் திராவகத்தைக்குத்தே. 541

குத்தியே நாள்மூன்று ரவியிற்போடு
குவிந்தபின்பு தணலுக்குள் வறுத்துப்போடு
எத்தியே பொடியாக்கி மேருக்கேற்றி
யிதமான வாலுகையிற் றீயைமூட்டு
பத்தியே கமலம்போ லெரிப்பாயப்பா
பனிரண்டு சாமமுந்தான் கடந்தபின்பு
தத்தியே குப்பியைத்தா னுடைத்துலரப்போடு
தணலில் நிற்குந் தங்கத்தை யெடுத்துக்கொள்ளே. 542

கொள்ளவே முன்போலே திராவகத்தாலாட்டு
குவிந்தபின்பு நீர்குத்தி ரவியிற்போடு
அள்ளவே தணலுக்குள் வறுத்துப்போடு
அதிகமாங் காசியென்ற மேருக்கேற்றி
தள்ளவே வாலுகையிற் றீயைமூட்டித்
தனையெடுத்து முன்போலப் பாவனையேசெய்து
துள்ளவே யேழுதரந் தீர்ந்தாயானால்
சூரியன்போல் சிவந்திருக்குஞ் சாரந்தானே. 543

சாரந்தான் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சமர்த்தாகச் சூதமது பலமும்பத்து
வாரந்தான் தங்கமது ரண்டரையே பலந்தான்
மருவிநன்றாய் லேசாகக் கல்வத்திட்டுத்
தீரந்தானெலு மிச்சம்பழச் சாற்விட்டு
திரளவரை மூன்றுநாள் பொடியாய்ப்பண்ணி
காரந்தான் காசியென்ற மேருக்கேற்றி
கனமான வாலுகையில் வைத்திடாயே. 544

வைத்துமே பனிரண்டு சாமத்தீயை
மறவாமல் போட்டு வரத்தீபம்போல
மைத்துமே மாதளம் பூப்போலேயாகு
மைந்தனே வேறொன்று குப்பிக்கேற்றி
நைத்துமே சீலையினாற் காற்றோடாமல்
நலமாகக் கட்டிவைத்து ஆயிரத்துக்கொன்று
தைத்துமே காசிடைதான் கொடுப்பாயானால்
தங்கமது பதினாறு மாற்றுமாமே. 545

தங்கமே யாச்சுதென்று கொர்ச்சிக்காதே
தளராமல் காயத்தை சித்திபண்ணு
பங்கமே வாராமல் தினம்பணந்தானுண்டு
பளபளக் குமுடம் பெல்லாம்பாலையாவாய்
அங்கமோ சரீரமது பவளம்போலாம்
அரனுண்ட கற்பமிது யானுமுண்டேன்
சிங்கமே யிவனென்பார் நரையோயில்லை
செகமெல்லாங் குன்றியிடைக் கொவ்வாவாரே. 546

ஒவ்வாது ஏகம்ப சாரத்துக்கு
உத்தமியா மனோன்மணித்தாய் பிலப்புமெத்த
சவ்வாது வுடன்கூட்டிச் சரக்கிற்பூசித்
தணலிட்டு வாட்டையிலே சவளையாகுங்
கவ்வாது நவலோகம் படுகுமுன்னே
கனகமய மாகிவிடுங் கனக்கோமெத்த
பவ்வாது வுலகத்திற் கெட்டபேர்கள்
பரியாச மென்பார்கள் பாஷாணந்தானே. 547

பாஷாண்டி மெத்தவுண்டு லோக்த்துள்ளே
பரிவாக அவருடனே பேசவேண்டாம்
பாஷாண்டி வாதமுண்டே யென்றுகேட்டால்
பண்பாகச் செய்தொழிலே வாதமென்றுசொல்லு
பாஷாண்டி வைதாலுஞ் சகித்துக்கொண்டு
பயபத்தி மார்க்கமாய் விசேஷஞ்சொல்லிப்
பாஷாண்டி முகத்துமுன்னே நிற்குமூதேவி
பாங்கானதே சம்விட்டு மறுதேசம்புக்கே. 548

புக்கவே ஞானமுற்ற வாதியுடன்பேசு
பிரம்பான மனிதருடன் பேசவேண்டா
மக்கியே மனதடக்கிப் போதம்பாரு
மகத்தான பெரியோர்க்குத் தொண்டுபண்ணு
எக்கியே மூலத்தைக் குப்பிக்கேற்று
இயலான தளங்களெல்லாஞ் சோதித்தேறி
நக்கியே வமுதத்தை மவுனமுன்னி
நாதாக்கள் ரிஷியுடைய மரபில்நில்லே. 549

நில்லென்று அறுபத்து நாலுமரபுள்ளே
நிலைத்து நிற்கும்வாதசித்தி குளிகைசித்தி
கல்லென்ற காயசித்தி கெவுனசித்தி
கரைகாணா யோகசித்தி ஞானசித்தி
வில்லென்ற வெட்டெட்டுஞ் சித்தியுண்டு
மேதினியுங் கொள்ளாது கரைகொள்ளாது
சில்லென்ற காடுபோற் சாத்திரங்கள்மெத்த
செப்பரிது உரைகாண வாதந்தானே. 550

வாதந்தான் முன்பின்னாய்ச் சொல்லிவைத்து
மறைத்தாரே சரக்கென்ற வைப்புதன்னை
நீதந்தனாதியுப் பையிமுக்காய்ச் சொல்லி
நிலைத்துநிற்கும் வீரத்தை மறைத்துப்போட்டார்
வேதந்தான் முடிவுக்கு வொப்பாய்நின்ற
வீரத்தை வைத்தாலே வாதமாகும்
பாதந்தா னில்லாமல் நடக்கப்போமோ
பரிவாகச் சிவந்திருந்த சாரந்தானே. 551

சிவந்திருந்த சாரத்தின் மகிமைசொல்லச்
சித்தர்முதல் ரிஷிகளுக்கு முடியாதப்பா
உவந்திருந்த காலாங்கி நாயனார் சொல்ல
உண்மையாய்க் கேட்டிருந்து யானுங்கண்டேன்
நவந்திருந்த குதத்தைத் துரத்திக்சொல்ல
நலமாக வெகுசுருக்கு நல்கப்போகார்
தவழ்ந்திருந்து பிள்ளைசென்று நடந்தாப்போல
சர்க்கெல்லாங் கண்ணீமைக்குள் கொல்லுந்தானே. 552

கொல்லுகிற கருவேது யென்றாயானால்
குவிந்தபடி சொல்லுகிறேன் குறிப்பாய்க்கேளு
வெல்லுகிற சூதமொன்று கெந்தியொன்று
விடுபட்ட தாளகமுஞ் சிலையும்லிங்கம்
அல்லுகிற சிவப்பான சாரமொன்று
அப்பனே பழச்சாற்றால் சாமமாட்டி
தெல்லுகிற வில்லுகட்டி யுலரப்போட்டு
சிறப்பாக ஐங்குகையில் வைத்திடாயே. 553

வைத்ததுமே சீலைசெய்து புடத்தைப்போடு
வயிரவற்கு வஸ்துசுத்தி பூசைப்பண்ணி
கைத்துமே கவசத்தை வாங்கிப்போடு
களங்காகவே யிருக்கும் நவலோகத்தில்
ஐத்துமே ஆயிரத்துக் கொன்றுபோடு
அப்பனே மாற்றென்ன பனிரண்டாகும்
நைத்துமே காவிக்கு உப்புக்கேகா
நலமான சீஷருக்குத் தொழிலைசொல்லே. 554

சூதக்கட்டு

சொல்லவே சூதத்தை கட்டுதற்கு
சுளுவாக வழிசொல்வேன் கேளுமக்காள்
அல்லவே யிருப்பகலிற் பழச்சாற்விட்டு
அதீதமென்ற சாரத்தைப் பொடியாய்ப்பண்ணி
மல்லவே சூதமொரு பலத்தைவிட்டு
மறவாமல் தணலில்வைத்துப் பொடியைத்தூவு
கல்லவே கட்டியது மண்போலாடுங்
கரியில்வைத்து உருக்கிடவே ரசிதமாமே. 555

ஆமப்பா யிச்சாரம் பொடியாய்ப்பண்ணி
அப்பனே மஞ்சலென்ற க்ருவைப்போட்டு
ஓமப்பா ரவியில்வைக்க தயிலமாகும்
உற்பனமாம் பணவிடைதான் றயிலங்கொள்ள
போமப்பா சாவுபொய்யாக் கற்பகாலம்
புக்ழான வயிரம்போலி ருக்குந்தேகங்
காமப்பா வித்தைக்கு மெத்தநன்று
கைவிட்ட சூத்திரம் போலாடும்பாரே. 556

துரிசிவைப்பு

பார்க்கவே துரிசியொரு வைப்புச்சொல்லப்
பண்பாகச் செம்பாலே பாளைபண்ணி
கார்க்கவே கல்லுப்புப் பொடியாய்ப்பண்ணி
காணிதுக்குப் பதினாறில் வெடியுப்புச்சீனம்
ஏர்க்கவே நிறுத்தந்த பானையிலேபோட்டு
இத்மான பழச்சாறு மோரும்வார்த்து
ஆர்க்கவே மேல்மூடிப் புதைத்துப்போடு
ஆறுதிங்களான பின்பெடுத் துப்பாரே. 557

பச்சைத்துரிசியில் சூதக்கட்டு

எடுத்துப்பார் பச்சையாய்க் கட்டியாக
இதமான வயிரம்போல் துரிசியாகும்
அடுத்துப்பாருப் பதுவுஞ் சத்தியாச்சு
அப்பனே செம்பதுவுஞ் சிவமுமாச்சு
கடுத்துப்பார் தயிரதுவும் விட்டுணுவாச்சு
கலந்துநின்று பழச்சாறு விருமாவாச்சு
தொடுத்துப் பாரிதைக் குருவுசெய்யின் வேதை
துலையாது வாதத்தி லாதியாமே. 558

வாதத்திலாதி யென்ற சூதக்கட்டு
வகைசொல்வேன் பச்சையென்று மயங்கவேண்டாம்
நீதத்தில் துரிசியது பலமுமொன்று
நேர்ப்பாகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு
பூதத்திலி ரும்பான கரண்டிதன்னைப்
புதுக்கியே தண்ணீர்விட்டுக் கழுவிப்போடு
சூதத்தை நிறுத்தல் லோபலமும்போட்டு
சுருக்குடனே தண்ணீரை முக்கால்வாரே. 559

தண்ணீர்தான் கொதிக்கையிலே துரிசுத்தூளைச்
சாதகமாய்த் தூவிவரத் தண்ணீர்மேலே
தண்ணீர்தான் சுண்டிடவே மறுதண்ணீர்விட்டுச்
சாகாமல் தூவிவரத் தண்ணீர்சுண்டும்
விண்ணீர்தான் மூன்றுதரம் விட்டுக்காய்ச்ச
மெழுகுபோலு ருண்டிருக்குஞ் சூதந்தானும்
திண்ணீரைவிட்டு நன்றாய்த் தோய்த்துத் தோய்த்துச்
சிறப்பாகக் கழுவிவிடத் தீர்த்தமாமே. 560

தீர்க்கமா யுருட்டியதை வைத்துக்கொண்டு
செப்பரிய மத்தங்காய்க் குள்ளேவைத்து
மூர்க்கமாய்ப் புடந்தன்னைப் பேர்த்துப்போடு
முயற்சியாய்ப் பின்பெடுத்துக் கழுவிப்போட்டு
ஆர்க்கமாய் வெள்ளியது விராகனிடைபத்து
அழகாகச் சிமிழ்போல் திருவல் வைத்துப்பண்ணி
தூர்க்கவே சூதவுண்டை நடுவேவைத்துத்
துப்பரவாய் மேல்மூடி திருவிப்போடே. 561

திருவியே மறுசுற்றால் நல்லயெண்ணெய்
சிறப்பாகக் கல்வத்திலரை மட்டும்வார்த்து
மருவியே வெள்ளியென்ற கிண்ணிதன்னை
வட்டமிட்டு வூஞ்சல்போல் கலசத்திட்டு
தருவியே மேலோடு கொண்டுமூடிச்
சாங்கமாய் மசாஷ்மண்மேலேபூசி
கருவியே கலசத்தின் கழுத்துதன்னில்
கடுகியே ப்ண்ம்போலத் தமருபோடே. 562

தமரிட்டுக் கலசத்தை ஆணிமேல்வைத்துத்
துபங்காதே விரல்பருமன் றிரியைப்போட்டு
கமரிட்டு விளக்கேற்றி நாலுசாமங்
கலங்காதே யெரியிட்டு ஆறவிட்டு
அமரிட்டு வெள்ளியென்ற கிண்ணிதன்னை
அசையாமல் திருக்கிலிடு உண்டைவாங்கி
பமரிட்டுத் தண்ணியிலே கழுவிப்போட்டு
பத்துவிசை யவிர்ப்புடமாய்க் காயில்போடே. 563

காயிலே போட்டபின்பு தண்ணீர்கழுவிக்
கசகாமல் வெள்ளியுட சிமிளில்வைத்துப்
பாயிலே முன்போல யெண்ணையிலே போட்டுப்
பக்குவமாய் நாற்சாம மெரித்துப்பின்பு
போயிலே யிப்படிதானூ றுபுடம்போடு
பேரான யெண்ணையிலே பத்துவிசைபோடு
தோயிலே வெள்ளியைத்தா னடித்துப்போடு
சிறப்பான வெள்ளியைத் தானீயம்விட்டுதே. 564

ஊதியே முன்னிரையில் சிமிள்போலப்பண்ணு
உத்தமனே புடம்பத்து எரிப்புப்பத்து
பாதியே யிப்படிதான் செய்துகொண்டு
பரிவாகக் கரியில்வைத்து வுருக்கஆடும்
கோதியே தங்மிட்டு வுருக்கிக்கொண்டு
குறிப்பான நாகமது கூடவிட்டு
ஆதியே சமனாகப் பொடியாய்ப்பண்ணி
அற்றகெந்தி குதயிடை சரியாய்க்கூட்டே. 565

கூட்டியே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
கொடியான மல்லிகையின் சாற்றாலாட்டி
நீட்டியே மூன்றுநாள ரைத்தபின்பு
நேராகப் பொடிபண்ணி குப்பிக்கேற்றி
மூட்டியே வாலுகையின் மேலேவைத்து
முயற்சியாய்த் தீயிட்டுக் கமலம்பே ..
ஆட்டியே பனிரண்டு சாமமானா
வருணனிறம் போலாகும் வேதைகேளே. 566

கேளப்பா நூற்றொன்று லோகத்தோடுங்
கெடியான மாற்றென்ன யெட்டுமாகும்
வேளப்பா குளிகைக்குச் சாரணையே செய்தால்
விரவியே கோடிலட்சங் காணலாகுந்
தாளப்பா ஆகுண்டு தயங்கவேண்டாந்
தயங்காத மூலிகையிலாச் சுமெத்த
பாளப்பா துரிசுவிட்டு சூதக்கட்டு
படுசுருக்கு மூலிகையிற் காட்டாதென்னே. 567

என்னவே வுபரசங்கள் நூற்றிரண்டுபத்து
இலைகளினால் சுருக்கிட்டால் சத்துவாரா
பன்னவே பாஷாண மறுபத்துநாலும்
படுமுன்னே கட்டாகச் சுன்னமாகா
மன்னவே யுப்புவகை யிருபத்தஞ்சு
மல்லிகைப் பூப்போல் மலர்ந்து சுன்னமாகா
தன்னவே காரசாரங் களாலே
சகலமுந்தான் கடினமாக் குருவுமாமே. 568

ஆமப்பா மூலிகையிற் சிறிதுவுண்டு
அந்தவித மூலிகைதான் மனுடருக்கெய்தா
வாமப்பா மலைகளிலே யுண்டுவுண்டு
மகத்தான கல்லருகில் சூதமுண்டு
தாமப்பா மனிதரங்கே சஞ்சரிக்கப் போகார்
சஞ்சரிப்பார் நாதாக்கள் ரிஷிகள்சித்தர்
போமப்பா மனிதருக்குச் சாரகாரம்
புகழாதி வாதத்தில் துரிசியாமே. 569

ஆதியாந்து ரிசியொன்றில் களங்குசொல்ல
அறையிறேன் பண்பாக வறிவுள்ளோர்க்கு
பாதியாந் துரிசியே ஒருபலமேதூக்கு
பண்பாகக் கெந்தியது பலமேமுக்கால்
வாதியாஞ் சூடனது பலமரைதான்போடு
மாசற்ற வீரமது பலமுங்கால்தான்
பேதியா மிதுமூன்று முமிநீர்விட்டுப்
பிலக்கவரை நாற்சாமம் பின்புகேளே. 570

கேளுநீ மெழுகாகும் பதத்தில்வாங்கிக்
கெடிபடவே துரிசியின்மேல் பிலப்பிப்போடு
வாளுநீ வுலர்ந்தபின்பு அதின்மேற்போட
வகையாகச் சுண்ணாம்புக் கவசம்போடு
தாளுநீ யுலர்ந்தபின்பு சீலைசெய்து
தணலிலே யூதிநன்றாய்க் கவசம்வாங்கி
நீளுமே நீறியதைக் குகையில்வைத்து
நேராக விட்டுருக்க மணியுமாமே. 571

மணியெடுத்து அடித்தாக்கால் ரவியுமாகு
மாசற்ற வெள்ளிதனில் நாலுக்கொன்று
தணியாக வுருக்கிடவே மூன்றுமாற்று
தப்பாது கைகண்ட தொழிலுமாகும்
அணியாக யிச்செம்பு களங்குசெய்ய
அப்பனே செந்தூரங் குருத்தான்செய்ய
கண்ணியாக தாலாறுங்காணுங் காணுங்
கருத்திதுக் கருவென்றால் கெந்திதானே. 572

துரிசிகளங்கு செந்தூர மார்க்கவேதை

தானாகுந் துரிசியென்ற செந்தூ ரத்தைச்
சாற்றுகிற னிதுவேகு முன்னேபாரு
தேனாகும் வெடியுப்புச் செயநீர்தன்னில்
சிறந்து நின்றதுரிசி யொரு பலந்தானெட்டு
கானாகுஞ் செயநீரில் தோய்த்துத் தோய்ந்து
கடுரவியில் போட்டு வாதினந் தானேழு
பானாகும் வெடியுப்பு மூன்றுபத்துபலந்தான்
பண்பான சீனமது முப்பத்தஞ்சே. 573

அஞ்சவே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
யப்பனே கழுதையுட ரத்தம்வார்த்துத்
துஞ்சவே யரைத்துநன்றாய் வில்லைபண்ணித்
துடியான ரவிதனிலே யுலரப்போட்டு
மிஞ்சவே கல்வத்திற் போட்டுநீயு
மேலான சக்கரமாம் பானைவைத்து
கெஞ்சவே யுளுத்தரைத் துச்சீலைசெய்து
கெடியான வடுப்பேற்றித் தீயைமூட்டே. 574

மூட்டவே மேலோடிப் புகையோடொக்க
மூக்காலோ சலம்விழுகும் வெள்ளைநீராய்
ஆட்டவே வெள்ளையைத் தானகலவைத்து
அதன்பின்பு சிவந்தசலம் வருகுமக்காள்
பூட்டவே பீங்கானில் வாங்கிவாங்கிப்
பேரான அரக்காலே குப்பிபண்ணி
நீட்டவே யதில்வாரு கரையாதப்பா
நேரான லோகமென்றல் கரைந்துபோமே. 575

போமெனவே ரவியில்வைத்து துரிசியைநீவாங்கிப்
பொடிபண்ணிக் கல்வத்தில் திராவகத்தைவார்த்து
ஆவெனவே யறுசாம மரைத்தபின்பு
அப்பனே மறுபீங்கான் றன்னில்வைத்து
காமெனவே நீர்குத்தி ரவியிற்போடு
கலங்காதே மூன்றுநா ளானபின்பு
தாமெனவே தணலுக்குள் வறுத்துப்போட்டுத்
தயங்காதே பொடிப்போலே மேருக்கேற்றே. 576

ஏற்றியே தீமுட்டு பனிரண்டுசாமம்
இதமாகக் கடந்தபின்பு ஆறவிட்டு
மாற்றியே புடைத்தெடுத்துக் கல்வத்திட்டு
வாகான திராவகத்தி லரைத்து முன்போல்
தூற்றியே பெரும்பீங்கான் றன்னில்வைத்து
துடியான திராவகத்தைக் குத்துகுத்து
ஆற்றியே தணலுக்குள் வறுத்துப்போடு
அதிதமாங் க்ாசியென்ற மேருக்குட்போடே. 577

போட்டுமே வாலுகையின் மேலேவைத்துப்
பொலிவாகத் தீபம்போல் தீயைப்போடு
ஆட்டுமே பனிரண்டு சாமமானா
லப்பனே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
காட்டுமே ஐந்துதர மிப்படியேபண்ணு
கசடற்ற வருணனைப் போல் சிவந்துகாணுந்
தீட்டுமே அம்மரத்தைக் கத்திகொண்டு
செதுக்கியதோர் வாறொக்குந் தூரிசியாட்டே. 578

ஆட்டான செந்தூரம் நவலோகத்தி
லணைத்திடவே பத்தரைதானா யிரத்துக்கொன்று
மூட்டான சூதத்தைக் கரண்டியிலேவிட்டு
முத்துநின்ற செந்தூரமா ரையிலைக்கிட்டு
கட்டான சாறதனைப் பிழிந்தாயானால்
கனம்போல் திரண்டு ருண்டு மணியுமாகும்
வாட்டான சூடன்திக் குள்ளேவாட்டி
மருவநன்றா யுருக்கிடவே சோதியாமே. 579

சோதியாங் குளிகைதனை வாயில்வைக்கச்
சுக்கிலத்தம் பனையாகும் வசியமாகும்
வாதியாங் கைக்குளிது இருந்துதென்றால்
வாதாடி சண்டையிட்டோர் வணக்கமாவார்
சாதியாங் குலங்களென்று தர்க்கம்பேசிச்
சண்டையிட்டு மயிர்பிடித்துச் சாகவேண்டாம்
பேதியாங் காயத்தை சித்திபண்ணி
பேரான சித்தினிட மரபில்நில்லே. 580

சித்தரென்ற நாமமது யெதினாலாச்சு
சிலவிந்தை கட்டியதோர் தீர்மையாலே
பத்தனென்ற நாமமது யெதினாலாச்சு
பானமென்ற தூசிக்கா பருவத்தாலே
நித்தனென்ற நாமமது யெதினாலாச்சு
நிலைத்தாறு தலங்கண்ட நினைவினாலே
முத்தனென்ற நாமமது யேதுக்காச்சு
மூர்ச்சற்ற ஞானவிடங்கண்ட ஞானியோர்க்கே. 581

ஞானிநானென்று சொல்லிவாய்ப் பேச்சால்மாண்பர்
நலமான அவ்வேடம் பூண்டுகொண்டு
யோனிதனக்காசை சாத்திரங்கள் சொல்லி
வுண்மையா யென்றமந்திரங் களுபதேசித்து
பானியென்ற பணம்பறித்துப் பொய்கள்சொல்லி
பார்த்துக் கொள்வே னென்று நாகத்தில்புக்கி
சூனியென்ற நோய்வந்தா லமைத்தபடியென்று
சுழன்றலைவார் ஞானியல்ல வேடத்தோரே. 582

வேடமாந் துரிசியென்ற செந்தூரம் பலந்தான்
விளங்கியதோர் சுத்தித்த சூதமொன்று
காடமந்த தங்கமென்ற ரேக்குத்தானுங்
கடுகவே யரைப்பலந்தான் கூடவிட்டு
பாடமாம் பொற்றலையின் சாற்றாலாட்டு
பக்குவமாய்ப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
வாடமாம் வாலுகையின் மேலேவைத்து
வளமாகப் பனிரண்டு சாமந்தீயெரியே. 583

தீயெரித்து ஆறவிட்டு எடுத்துப்பாரு
சிவப்பென்றால் வெகுசிவப்பு அருணன்போலாம்
ஆயெரித்து நவலோகமா யிரத்துக்கொன்று
அணைத்திடவே பதினாறு மாற்றுமாகும்
பாயெரித்துப் பணவிடைதான் தேனிலுண்ணு
பளபளக்கு முடம் பெல்லா மண்டலத்தில்சித்தி
வேயெரித்து வறுமையுற்றா லென்னஞானம்
விளங்கியதோர் சித்தியெல்லா மண்ணாய்ப் போமே. 584

மண்ணாசை கொண்டல்லோ சிறிதுபேர்கள்
மாயமாம் வாசனையிலிறந்து போனார்
பெண்ணாசை கொண்டல்லோ சிறிதுபேர்கள்
பொன்தோற்றுப் பேயராய் மாண்டுபோனார்
உண்ணாசை கொண்டல்லோ சிறிதுபோர்கள்
உலுத்தராய்ப் பிச்சையெடுத் துண்டிறந்தார்
கண்ணாசை பசுவுக்கு யிருக்குமாப்போல்
கலக்கமற்ற ஞானிக்குவேட மென்னசொல்லே. 585

இந்துப்பு வைப்பு

வேடமா மிந்துப்பு வைப்புச்சொல்வேன்
விளங்கியதோர் நாலடுப்பு வரிசியாய்க்கட்டி
பாடமா மடிக்கனத்த சட்டிவைத்து
பருவமாய்க் கடனீரிலுப்புக் காய்ச்சி
கோடமாந் தினந்தினமுங் காய்ச்சிக்காய்ச்சிக்
கொட்டியே வடிப்பார முள்ளபானை
காடமாய் நிறைத்திட்டு அடுப்பிலேற்றிக்
காடாக்கினி யாகவே தீயைமூட்டே. 586

மூட்டவே வெந்துருகிச் சலமாய்நிற்கு
முனையாக முப்பதுக் கொன்றுசீனம்
நீட்டவே வெடியுப்பு முப்பதுக்கொன்று
நேராகப் பொடிபண்ணி யதிலேபோடு
ஆட்டவே வெந்துவொன்றாய்க் குழம்பாய்நிற்கும்
ஆறவிட்டுப் பானையைத் தானுடைத்துவாங்கி
காட்டவே வெளுப்பாகக் கட்டியாகுங்
கல்லுப்பில் செய்தாக்கால் சிவந்துபோமே. 587

சிவக்கின்ற இந்துப்பு வாதத்துக்காய்ச்
செய்கின்ற போக்குக்குக் கல்லுப்புச்சுளுகு
பவக்கின்ற லோகத்தோர் கல்லுப்பில் செய்வார்
பரங்கியென்றால் கடல்நீரிலுப் புக்காய்ச்சி
துவக்கின்ற வண்ணார் தண்டுப்புப்போலத்
துசரமாய்க் கட்டிவைத்துச் செய்வாரையா
அவக்கின்ற கட்டியாய் வெளுப்புமெத்த
ஆகையால் சுண்ணாம்புக் கிதுதானன்றே. 588

கெந்தியுப்பு

நன்றெனவே கெந்தியுப்பு வைப்புக்கேளு
நலமாகக் கடல்நீரிலுப்புக் காய்ச்சி
கண்டெனவே படிகனத்த பானையிலேபோட்டுக்
காய்ச்சினதோ ருப்புக்குப் பதினாறிலொன்று
தண்டெனவே சுரைகெந்தி பொடித்துப்போட்டுச்
சாதகமாய் முப்பதுக் கொன்றுநீலம்
பண்டெனவே வெடியுப்பு மப்படியேயாகும்
பாங்காகப் பொடித்தெல்லாங் கூடப்போடே. 589

கூடவிட்டு அடுப்பேற்றி யெரிநால்சாமங்
கோடிகோடாக் கினியாந் தீயைப்போடு
ஆடவிட்டு உப்புருகி நிற்கும்போது
அதிற்போடு மருந்தெல்லாம் பொடியாய்பண்ணி
வாடவிட்டு நால்சாம மெரித்தபின்பு
மயங்காதே சீதளமா யாறப்போடு
நாடவிட்டுப் பானையைத் தானுடைத்துவாங்கி
நலமான வயிரம்போலுப் புமாமே. 590

உப்பான கெந்தியது திராவகத்துக்காதி
வுத்தமனே சாரணைக்கு முதவியாகும்
தப்பான சொல்லில்லை கருமறைப்போயில்லை
சத்தியமாய் நான்பார்த்த படிதான்சொன்னேன்
கப்பான அஞ்சுகொம்பில் மனந்தான்சென்று
கலகத்தில் விழுகாதே கருத்தூன்றிப்பார்
அப்பான வுப்புப்போல் நேர்மைபாரு
அழும்பருடன் பேசாம லிருக்கநன்றே. 591

குடோரி

நன்றெனவே குடோரியொன்று சொல்லக்கேளு
நல்மான வெடியுப்பு நாலாங்காய்ச்சல்
கன்றெனவே பலம்நாலு கல்வத்திட்டு
காணிதுக்கு சமனாகப் பூநீறுபோட்டு
வின்றெனவே வெள்ளையென்ற பாஷாணந்தான்
வெங்காரம் பலம்நாலு பொரித்துப்போட்டு
தன்றென்வே தாளகமும் நாலுபலமேபோட்டுச்
சாதகமாய்ச் சூதமது பலமும்நாலே 592

நாலோடு அரைப்பலந்தான் சாரம்போடு
நலமாக கல்லுப்பு வறுத்துப்போடு
சாலோடு நாலுபலங் கூட்டிபோடு
தனையெல்லா மெருக்கினுட பாலினாலே
காலோடு மறுசாம மரைத்துநன்றாய்க்
கனமான ரவிதனிலே பொடியாய்ப்பண்ணி
மேலோடு காசியென்ற மேருக்கேற்றி
விரவியே யரைவாசி மட்டும்போடே. 593

போட்டுமே வாலுகையின் மேலேவைத்துப்
பொலிவாகத் திமுட்டு கமலம்போல
பாட்டுமே பனிரண்டு சாமந்தானும்
பதறாமல் போட்டு வாகமலத்தியாய்
ஆட்டுமே யாறவிட்டு யெடுத்துப்பாரு
அரகரா வயிரம்போல் பதங்கித்துநிற்குங்
காட்டுமே சத்துகளில் கணநீராகக்
கண்விட்டு யீயம்போலி றங்குந்தானே. 594

சூடன் வைப்பு

தானென்ற சூடனது வைப்புபேளு
தனித்துநின்ற வாழையுட கிழங்குத்தண்ணீர்
தேனென்ற படிபத்து அளந்துகொண்டு
சிறப்பான செம்பினுட பாண்டத்தில் விட்டு
வேனென்ற வெடியுப்பு நாலுபத்து பலந்தான்
வெகுளாமல் பொடிபண்ணிக் கூடப்போட்டு
மானென்ற வடுப்பேற்றி யெரிநேர்பாக
வற்றியெல்லாங் குழம்புபோல் வருகும்பாரே. 595

வருதல்கண்டு கருவாயின் பட்டைதன்னை
வகையாகத் தூள்பண்ணித் தயிலம்வாங்கித்
திருதல்கண்டு படிதானுங் கூடவிட்டு
சிறப்பான புட்டான பதத்திற்காய்ச்சி
கருதல்கண்டு இறக்கியே ஆறவிட்டுக்
கசகாம லுளிகொண்டு வெட்டிவாங்கி
அருகல்கண்டு பனிதனில டைத்துப்போடு
ஆச்சரியஞ் சூடனென்ற பேருமாச்சே. 596

ஆச்சிந்த சூடனைத்தான் பொடியாய்ப்பண்ணி
அகண்டசெம்பு பானைதனிற் கால்வாசிபோட்டு
பாச்சிந்த செம்பினுட குடத்துநீரைப்
பக்குவமாய் மேல்வைத்துச் சீலைசுற்றி
காச்சிந்த அடுப்பேற்றிக் கமலம்போலக்
கைபொறுக்கத் தண்ணீரைப் பதத்தைப்பார்த்து
கிச்சிந்த ஆவிவிட்டு யெடுத்துப்பார்க்க
கிண்ணியென்ற கற்பூர மாகும்பாரே. 597

பாரப்பா கிண்ணியென்ற கற்பூரத்தில்
பக்குவமாய்க் கட்டினதோர் சரக்கையெல்லாம்
வாரப்பா பரிசுற்றி வாட்டென்றதெல்லா
மைந்தனே யிதினுடைய தீயில்வாட்டு
நேரப்பா புகையடங்கி பரியுள்ளவாங்கி
நேர்பாகச் செந்தூர மாகும்பாரு
காரப்பா விளக்குத்தான் கற்பூரவிளக்குக்
கருகாமல் சிவக்குமிந்தத் தீபந்தானே. 598

அயமுருக்கு

தானென்ற அயமுருக்கு விந்தைகேளு
சாதகமா யெலியாலம் பால்ரண்டுசேரில்
கானென்ற கெந்தகத்தைப் பொடியாய்ப்பண்ணி
கனமான நாலுபலங் கூடப்போட்டு
வேனென்ற வெண்காரம் பலமும்ரண்டு
மெலிவான குடோரிகால் பலமும்போடு
ஊனென்ற செவ்வல்லிக் கிழங்குதானும்
உரலிலிட்டு யிடித்துச்சாற் சேரவாரே. 599

வார்த்துடனே யெள்ளெண்ணெய் ரண்டுசேரு
வாகாகவிது வெல்லாமயச் சட்டியிலிட்டு
பேர்த்துடனே யடுப்பேற்றி யெரித்துமெள்ளப்
பொங்காமல் தயிலமென்ற பதத்தில்வாங்கு
சேர்த்துடனே யயப்பொடிதான் பலமும்நாலு
திறமான காந்தத்தா லெடுத்துக்கொண்டு
ஏர்த்துடனே பீங்கானிற் பொடியைப்போட்டு
இதமாகத் தயிலத்தில் பிசறிவையே. 600

வைத்துமே மூன்று நாளானபின்பு
வச்சிரமாங் குகைதன்னி லடைத்துமூடி
பொய்த்துமே சரவுலையில் வைத்துவூத
பேரான அயந்தானு முருகியாடும்
நைத்துமே பொடியாக்கித் தயிலத்திற்பிசறி
நலமாக முன்போல வுருக்கித்திரு
கைத்துமே லஞ்சுதர முருக்கித் தீர்ந்தால்
கனமான அயந்தானு நாகந்தானே. 601

நாகமா மயந்தானுஞ் சிவந்திருக்கும்
நண்பாக விடைக்கிடைதான் தங்கத்திலீய்ந்து
பாகமா யுருகையிலே நாகமீயப்
பதையாமல் நாகமங்கே கட்டிப்போகும்
சாகமாங் கல்வத்தி லிதனையிட்டு
தனைப்பொடித்து நாகயிடை சூதங்கட்டி
ஆகமாஞ் சூதத்தில் ரெட்டிகெந்தி
யரைத்துமே மல்லிகையின் சாற்றாலாட்டே. 602

ஆட்டுவது நாகரச மானபின்பு
அப்பனே ரவியில்வைத்துப் பொடியாய்ப்பண்ணி
பூட்டுவது காசியென்ற மேருக்கேற்றிப்
பேரான வாலுகையின் மேலேவைத்துக்
காட்டுவாய் பனிரண்டு சாமந்தீயைக்
கமலம்போ லெரியிட்டுக் கலரவாங்கி
ஊட்டுவது நவலோகம் நூற்றுக்கொன்று
உட்புகுந்து பத்தரைதான் தப்பாவாறே. 603

வாறுகேள் செந்தூரங் குன்றியுண்ணு
மண்டலத்தில் நரைதிரை களெல்லாமாறுங்
கூறுகேள் தேகமது கருங்கல்லாகுங்
குத்தினால் மலைகளெல்லாம் பொடியாய்ப்போகும்
தேறுகேள் தேகமது வுகாந்தகாலஞ்
சென்றாலும் பதினாறுவயது போலாகும்
வேறுகேள் வாசியெல்லா முள்ளேநிற்கும்
வெளியோடே மனங்கலங்கப் பண்ணும்பாரே. 604

காந்தச்சத்து

பண்ணவே காந்தத்தின் சத்துகேளு
பருபருக்கையாய்ப் பொடித்து அயச்சட்டியிட்டுக்
குண்ணவே கொள்ளிலையின் சாறுவாங்கிக்
குன்றாதே நால்சாமஞ் சுறுக்குப்போடு
விண்ணவே வெள்ளாட்டு வுதிரம்வார்த்து
விளங்கவே யதின்தோலில் வைத்துக்கட்டி
கண்ணவே குழிவெட்டி குப்பைக்குள்வைத்து
கலங்காதே யிருபதுநாள் மூடிப்போடே. 605

போட்டபின்பு எடுத்து அதைக்கல்வத்தாட்டி
புகழான கொள்ளிலையின் சாற்றினாலே
நீட்டபின்பு கலசத்தில் சாறுவிட்டு
நினைவாக வதற்குள்ளே காந்தம்வைத்து
வாட்டபின்பு மேல்மூடிச் சீலைசெய்து
வலியபுடம் போட்டெடுத்து வைத்துக்கொண்டு
நாட்டபின்பு நல்லெண்ணெய் படிதானொன்று
நலமான குன்றிமணி படியரைதான்போடே. 606

போட்டதனைக் குள்சாற்றி லூரவைத்துப்
புகழாக வூறியபின் கல்வத்தாட்டி
நீட்டதனை மெழுகது போலரைத்துவாங்கி
நினைவாக நல்லெண்ணெய் தன்னிற்போட்டு
ஆட்டதனை யெலியாலம் பால்சேரைவிட்டு
அழகான கொள்ளிலைச் சாற்சேரைவிட்டு
கேட்டபின்பு கெந்தகந்தானாலு பலம்போட்டு
கெடியான வெண்காரம் ரண்டுபலம்போடே. 607

போட்டப்பா குடோரியொரு பலமுங்கால்தான்
பொடித்தெல்லாங் கொள்ளிலையின் சாற்றாலாட்டி
நாட்டப்பா நல்லெண்ணெய் தன்னிற்போட்டு
நலமாக வடுப்பேற்றி யெரிநேராக
கூட்டப்பா குழம்பாகி யிறக்கிவைத்துக்
கொடியதொரு காந்தத்திற் பிசறிக்கொண்டு
மூட்டப்பா மூன்றுநா ளானபின்பு
மூசைக்கே யெடுத்திட்டு வுருக்கிடாயே. 608

உருக்கவே வெந்துருகிக் காடுமாகும்
உத்தமனே யுடைத்தெடுத்துப் பொடியாய்ப்பண்ணி
தருக்கவே முன்குழம்பிற் பிசறிவைத்துச்
சாதகமாய் முன்போலே வுருக்கித் திரு
பருக்கவே யிப்படிதானே மூதரமூது
பண்பான காந்தமது சத்தேயாகு
மிருக்கவே கற்பாந்த காலமென்றா
லென்மகனே மெழுகுகட்டிக் கிண்ணிவாரே. 609

வார்த்திந்த கிண்ணியிலே பானம்பண்ணி
வகைவகையாய்க் கற்பமெல்லா மதிலேயுண்ணு
போர்த்திந்த கிண்ணியிலே சூதம்வார்த்து
புகழான கருமத்தஞ் சாறுவிட்டு
பேர்த்திந்த வாலுகையின் மேலேவைத்து
பிரியமாய்த் தீயெரிக்க வுண்டையாகும்
பார்த்திதனை வழித்தெடுத்துக் கழஞ்சிநிரையாக
பக்குவமா யுண்டைபண்ணித் தமரும்போடே. 610

தமரிட்டு வுண்டைபண்ணித் தண்ணியிலே போட்டு
சாதகமாய் மூன்றுதினங் கழிந்தபின்பு
அமரிட்ட செம்பட்டில் கோர்த்துக்கொண்டு
ஆதியாம் பராபரையைப் பூசைப்பண்ணி
கமரிட்ட வஸ்துசுத்தி யர்ச்சனையேசெய்து
காரணமாஞ் சாம்பவி விமோசனமேபண்ணி
குமரிட்டு ஆதாரநிரா தாரம்பார்த்து
கொள்கியதோர் சபைதன்னில் மனதையுன்னே. 611

உன்னியே பிறசத்தங் கேளாப்பக்கம்
உவந்திருந்து நிஷ்டடையிலே செபமே செய்து
சன்னியே யஞ்செழுத்து மூன்றெழுத்துமோதி
காரணமாங் குருசொல்லக் கருதிக்கேட்டு
பன்னியே மதியில்நின்று அமுதத்தையுண்ண
.பரிதிகண்ட பனிபோலே பாவம்நீங்கி
மன்னியே சிலம்பொலி நாதங்கேட்டு
மகிழ்ச்சியாய்க் கற்பத்தை யுண்டுதேறே. 612

தேறவே காந்தசத்து பலத்தைவாங்கிச்
சிறப்பாகத் தங்கத்தை யிடைக்கிடையேகூட்டி
மாறவேரண்டுமொன்றா யுருகும்போது
மைந்தனே நாகமொரு பலத்தைப்போடு
ஆறவே கல்வத்திலி தனைக்கொட்டி
அதட்டியே பொடிபண்ணிச் சூதஞ்சேர்த்து
காறவே ரண்டுபலங் கெந்தியிட்டுக்
காரியமாய்ப் பொற்றலையின் சாற்றாலாட்டே. 613

ஆட்டியே அறுசாமம் ரவியில்வைத்து
அப்பனே பொடிபண்ணிக் குப்பிக்கேற்ற
நீட்டியே வாலுகையின் மேலேவைத்து
நினைவாகத் தீயாட்டு பனிரண்டுசாமம்
பூட்டியே செந்தூர பதத்தைப்பாரு
புகழாகச் சிலாகைநுனிக் கறுப்புக்காணும்
வாட்டியே ஆறவிட்டு இறக்கிக்கொட்டி
மைந்தனே தங்கமென்ற சிமிளில்வையே. 614

வைக்கவே நவலோகம் நூற்றுக்கொன்று
மாட்டிடவே பனிரண்டு மாற்றுமாகும்
மெய்க்கவே பணவிடைதான் தேனிலுண்ண
மேனியெல்லாந் தங்கமய மாகும்பாரு
நைக்கவே நரைதிரை களெல்லாமாறு
நமனென்ற சொல்லுமில்லை கற்பகோடி
கைக்கவே புளியுப்பு ரண்டும்விட்டுக்
கன்னியின் மேலாசைவிட்டு உண்ணுவுண்ணே. 615

உண்ணவே கற்பத்துக் குறுதிகேளு
உப்பாகா புளியாகா பெண்ணுமாகா
கண்ணவே துவர்ப்பாகா மோருமாகா
கசிந்தஎள்ளு நல்லெண்ணெய் சுண்ணாம்பாகா
விண்ணவே நித்திரையின் சோம்பலாகா
வேறான மாங்கிஷங்கள் மச்சமாகா
பண்ணவே கடுகுள்ளி காயமாகா
பலபலவாஞ் சித்தையெல்லா மறுத்துத்தள்ளே. 616

தள்ளியே யுண்ணுகிற பத்தியத்தைக்கேளு
சார்பான நெய்யாகும் பாலுமாகும்
அள்ளியே சிறுபயரு முருங்கையாகு
அப்பனே வெள்ளிட்டுச் சாணியாகும்
துள்ளியே தூதுவளை யிலைகாயாகுஞ்
சுண்டெலியாங் கவுதாரி காடையாகும்
பள்ளியே பழுமாகுங் கஞ்சாவாகும்
பழுவெல்லாந் தேனாகும் பானமாமே. 617

ஆமப்பா சிறுகீரை யாரைக்கீரையாகும்
அதிதமாம் புளியாரை நல்லாரையாகும்
போமப்பா பொன்னிநல்லாங் காணியாகும்
புளிப்பான நெல்லிக்காய் வூற்காயாகும்
தேமப்பா வழுதலங்காய்ப் பீர்க்கங்காயாகுஞ்
சிறப்பான முசலாகு மூர்க்குருவியாகும்
வாமப்பா மரையாகு மானுமாகும்
வகையாக இப்படிதான் பத்தியமாயுண்ணே. 618

உண்ணுறது ஒருசேரை யரிசியப்பா
உத்தமனே ஒருபொழுது வெந்நீர்கொள்ளு
பண்ணுறதோர் மருந்துகளில் காந்திகொண்டால்
பசுவின்பால் ராக்கால மொருசேர்கொள்ளு
விண்ணுறது வுள்ளமு மெல்லாம்பாரு
வேதாந்த வாலையைத்தான் நித்தம்பூசி
அண்ணுறது குருபதத்தை யடுத்துநித்தம்
அடுக்கடுக்கா யுண்ணுகற கற்பங்கேளே. 619

கடுக்காய் கற்பம்

உண்ணவே வயதங்கே யிருபதாகி
யுத்தமனே யிதுபதுநாள் கடுக்காய்கொள்ளு
கண்ணவே வயதங்கே முப்பதாகில்
கடிதாக முப்பதுநாள் கொள்ளுகொள்ளு
பண்ணவே வயதங்கே நாற்பதாகில்
பரிவாகக் கடுக்காயை நாற்பதுநாள்கொள்ளு
நண்ணவே வயதங்கே யன்பதாகில்
நலமாகப் பதினைந்து நாள்கொள்ளே. 620

கொள்ளவே வயதங்கே யறுபதாகில்
குறையாதே கடுக்காயைப் பத்துநாள்கொள்ளு
அள்ளவே யறுபதின்மேல் வயதேயானால்
ஆச்சரியங் காயசித்தி யாகாயாகா
விள்ளவே கடுக்காயைப் பொடியாய்ப்பண்ணி
மெல்லிதாய்ச் சீலையிலே யரித்துக்கொண்டு
துள்ளவே யமுரிதனை முறித்துக்கொண்டு
சுகமாக வெருகடித்தூள் குழப்பிக்கொள்ளே. 621

கொள்ளுதற்கு அமுரிதனை முறிக்கக்கேளு
கொடூரமாங் காந்தமென்ற பாத்திரத்தில்
விள்ளுதற்கு முன்னீராம முரிதள்ளி
விளங்கவே கொள்ளுமட்டும் பின்னீர்வாங்கித்
துள்ளுதற்கு தேத்தினுட வித்துதன்னை
துடியாக விதிற்கலக்கி வைத்துப்பின்னும்
அள்ளுதற்குத் தெளிவிறுத்துத் தூளைப்போட்டு
அங்கெனவே வாசியோடி முத்துவாங்கே. 622

வாங்கியே தினந்தோறும் விடியற்கால
மாலையிலே கியாழமொன்று வைக்கக்கேளு
பாங்கியே மிளகதுதானி ருபதஞ்சு
பரிவான அறுகம்வேர் பிடிதானொன்று
தேங்கியே யிடித்துநன்றாய்ச் சட்டியிலேபோட்டு
திறமாகப் படியொன்று தண்ணீர்விட்டு
ஆங்கியே ஆழாக்காய்க் காய்ச்சிக்கொண்டு
ஆவெண்ணெய் பாக்களவு போட்டருந்தே. 623

அருந்தியே காலமே கடுங்காய்கொள்ளு
அப்பனே மாலையிலே கியாழங்கொள்ளு
பொருந்தியே வுடலுக்குத் தாகமில்லை
புளிப்பு யெண்ணெயெல்லாந் தள்ளுதள்ளு
அருந்தியே மண்டலந்தான் கொள்ளும்போது
அப்பனே யொருமுறைதான் சட்டைநீங்கம்
பொருந்தியே யிக்கற்பங் கொண்டாயானால்
புண்ணியனே திரேகமது யிறுகும்பாரே. 624

மாதம்பனிரண்டுக்கும்- கற்ப அனுபானங்கள்

இறுகுமே செங்கடுக்காய் மெத்தநன்று
இதமாகக் கிடைக்காட்டால் பொற்கடுக்காய்நன்று
அறுகுமே ஆனியாவணிக்குமப்பா
அழகான வெல்லத்தி னோடேகொள்ளு
தறுகுமே சித்திரை வைகாசிக்கப்பா
சாதகமாய் சுக்கினுட கியாழத்திற்கொள்ளு
மறுகுமே புரட்டாசி யாடிக்கப்பா
மாசற்ற குறிஞ்சித்தேன் தன்னிற்கொள்ளே. 625

கொள்ளவே யைப்பசிக்குங் கார்த்திகைக்குமப்பா
குமரியாஞ் சேர்தனிலே வைத்துக்கொள்ள
விள்ளவே காயசித்தி யோகசித்தி
வேதாந்த மனோன்மணியாம் ஞானசித்தி
தள்ளவே யஷ்டமாம் யோகசித்தி
தாரணியில் மானிடர்கள் கெவுனசித்தி
மெள்ளவே சதாகால மிந்தமார்க்க
மேதினியிற் கசடறவே வைத்துப்போற்றே. 626

வைத்துமே மார்கழி தை மாசிக்கப்பா
வாகான கற்கண்டி னோடேயுண்ணு
பைத்துமே பங்குனிக்கு நெய்யிற்கொள்ளு
பனிரண்டு மாதத்தைம் பருவஞ்சொன்னேன்
நைத்துமே யிப்படிதான் பருவமாக
நானுண்ட படிசொன்னே னீயுமுண்ணு
பொய்த்துமே போகாமல் பூசைபண்ணு
போக்கோடே வாசியைத்தா னிழுத்துவாங்கே. 627

சதுரக் கள்ளிக்கற்பம்

வாங்கியே சதுரக்கள்ளி காயோபத்து
மைந்தனே குமரிச்சோற் காசுரண்டு
தேங்கியே அமுரியுடன் கலந்துகொள்ளச்
சிதைந்துநின்ற ஆமமெல்லாந் தள்ளிப்போடு
பாங்கியே கைம்முறையாய்ச் செய்தாயானால்
பலிக்குமே வயித்திய வாதயோகம்
ஏங்கியே சடத்திலுள்ள விஷநீர்வற்றும்
எலும்பில் நின்றசுண்ணாம்பு வேகம்போமே. 628

மிளகுகற்பம்

வேகம் போயிருபதுநாள் காலமே கொள்ளு
மெலிவான மாலையிலே கியாழங்கொள்ளு
தாகம் போந்தாளி சபத்துரியுஞ்சுக்குந்
தனித்ததொரு சீரகமு மாஞ்சிலேலம்
ஆகம் போம்வராகனிடை யொவ்வொன்றுக்கு
அதட்டியே சட்டியிலே பொடித்துக்காய்ச்சி
நாகம் போமாழாக்கு மாலையிலே கொள்ளு
நமனுக்கு நமனாவாய் நன்றாம்பாரே. 629

பாரப்பா யிதுகடந்த பின்புநீதான்
பரிவாக அவ்வஞ்சாய் மிளகையேற்றி
சேரப்பா அமுரியிலே காலமேகொள்ளுஞ்
சிறப்பான நாற்பதுநாள் கொள்ளுகொள்ளு
காரப்பா யிருபது நாளேற்றியுண்ணு
கைம்முறையாய் நூறுமட்டு மானபின்பு
தூரப்பா அவ்வஞ்சாய்க் குறைத்துவுண்ணு
சொல்முறையாய் மாலையிலே பொடிநீயுண்ணே. 630

பொடியாவதே தென்றால் சொல்லக்கேளு
பேரான பொற்கொன்றைப் பூவினோடு
கொடியான மல்லிகையின் பூவினோடு
கொக்கிற குமந்தாரை வெள்ளைப்பூவும்
அடியான நிழலுலர்த்தா யுலர்த்திக்கொண்டு
அப்பனே பொடித்து நன்றாய்ச் சூரணமேசெய்து
நெடியான தேனதனில் குழப்பியுண்ணு
நேர்ப்பாக மாலையிலே மண்டலந்தானுண்னே. 631

முப்பொடி தூதுவளை அமுர்தம்

மண்டலந்தா னுண்டபின்பு சொல்லக்கேளு
வாகான தூதுவளை யிலையினோடு
விண்டலந்தான் தக்கோலஞ் சாதிக்காயு
மேலான வால்லுழுவை வித்தினோடு
குண்டலந்தான் கொடிவேலி பொற்கொன்றைப்பூவு
கூரான நிலப்பனையின் கிழங்குகூட்டி

முண்டலந்தான் பொடிசெய்து வைத்துக்கொண்டு
முக்கழஞ்சு முட்பன்றி நெய்யிற்கொள்ளே. 632

கொள்ளவே வாதத்தை யகற்றிப்போடுங்
கொடிதான பித்தமெல்லா முறிந்துபோகும்
தள்ளவே சிரசில்நிற்கும் கற்பதத்தைச் சாடுஞ்
சங்கிலிபோற் கோழையறுந்த மர்திறக்கும்
விள்ளவே மதிதன்னில முதஞ்சேர்க்கும்
மெய்நிறைந்த நாடியெல்லா மிறுகிக்கொள்ளும்
துள்ளவே யிந்திரியச்சேறு பொங்குந்
துடியாதே காமநோய் கொல்லுந்தானே. 633

கொல்லுகிற காமத்தை மதியிலேற்று
குறிபார்த்துத் தலங்களெல்லா சூர்ந்துபாரு
வெல்லுகிற மனக்குரங்கு அஞ்சுகொம்பின்றாண்ட
விடுகாதேவி போகமென்ற வாளால்வீசு
மல்லுகின்ற யோகத்தை சதாநித்தம்பாரு
மதியினிற் குமமுதத்தைச் சிந்தியுண்ணு
அல்லுகிற ஆத்தாளை நித்தம்பூசி
யறிவில்நின்ற குருபதத்தை யடுத்துக்கேளே. 634

கரிசாலை

கேளப்பா கரிசாலைக் குப்பைமேனி
கெடியான கரந்தையொடு வல்லாரைநீலி
வாளப்பா பொற்றலையின் சமூலமோடு
வகையாக நிழலுலர்த்தா யுலர்த்திக்கொண்டு
தாளப்பா யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து
சாதகமாய் வெருகடிதான் தேனிலுண்ணு
தேளப்பா கட்டியதோர் வேகம்போலச்
செணத்திலே காயசித்தி யிருவேளையுண்ணே. 635

உண்ணப்பா மண்டலந்தான் நோய்மூன்றும்போம்
உத்தமனே உதரத்தில் கிருமிபோகுங்
கண்ணப்பா பவளம்போல் சிவந்திருக்குங்
காயமெல்லாஞ் சம்பளத்தின் வாசம்வீசும்
விண்ணப்பா அந்தரத்து மீன்களெல்லாம்
வெகுளாமல் பகல்காணத் தோற்றுவிற்கும்
வண்ணப்பா பாதாள நிதிகள்தோற்றும்
வாய்திறந்த தளமாறும் வெளியாய்ப்போமே. 636

வேம்பு

போமப்பா யிதுகடந்த பின்புநீதான்
புகழ்பெறவே நூறாண்டின் வேம்பைப்பார்த்து
ஆமப்பா பட்டையைத்தான் வெட்டிவந்து
அப்பனே நிழ்லுலர்த்தா யுலர்த்திப்பின்பு

காமப்பா யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து
கரிசாலை மல்லிகையின் சாறுவார்த்து
தேமப்பா யேழுதரம் பாவனையேசெய்து
சிறப்பாக வெருகடித்தூள் கொண்டிடாயே. 637

கொண்டிடவே யனுபான வகையைக்கேளு
குறிஞ்சித்தேன் தனிற்குழைத்து நாற்பதுநாள்கொள்ளு
விண்டிடவே யந்திசந்தி நினைவாய்க்கொள்ளு
மெய்யெல்லாங் கருங்காலில் வயிரமாகும்
சுண்டிடவே நரைதிரைக ளெல்லாம்போகும்
சுக்கிலந்தான் மேலிறுகிக் கீழோடாது
கண்டிடவே யாறுதளம் வெளியாய்க்காணுங்
காலனுமே யஞ்சிடுவன் காணுகாணே. 638

சர்க்கரை வேம்பு குமரிமலைமூலி

காணவே மலைதோறுஞ் சர்க்கரை வேம்புமுண்டு
காய்தின்றால் கற்கண்டுபோலே தோன்றும்
பூணவேயிலை தின்றால் மண்டலத்திற்சித்தி
புகழான காய்தின்றால் பட்சத்தில்சித்தி
தோணவே பூதின்றால் வாதத்திற்சித்தி
தொகுத்த தொகைசித்தருக் குயிதுவேயாகும்
ஆணவே கீழ் வழி பார்க்குமப்பா
ஆச்சரிய மிதுதேடி அறிந்துகொள்ளே. 639

கொள்ளவே சிவப்பான கற்றாழைதானுங்
கொண்டுவா மண்டலந்தானந்தி சந்தி
விள்ளவே தேகமது கஸ்தூரி வீசும்
வேர்வைதான் தேகத்திற் கசியாதப்பா
துள்ளவே நரைதிரை களெல்லாமாறுஞ்
சோம்பலென்ற நித்திரையுங் கொட்டாவியில்லை
கள்ளவே காமமிது வுடம்பிலூறும்
கணங்களுமோ செவ்வாளிப் பூப்போலாமே. 640

ஆமிந்தச் சோறெடுத்துச் சூதத்துக்கு
அனலிலே வைத்துமெள்ள சுறுக்குப்போட
வாமிந்தச் சூதமது மணிபோலாமே
வகைவகையாய்ப் பாஷாணங் கட்டிப்போகும்
சேமிந்தத் தங்கத்தை யுருக்கிப்பார்க்கச்
க்ஷேணத்திலே செம்பாகுந் தூரவோடும்
நாமிந்தப் படிபார்த்தோங் காரீயஞ்செம்பாம்
நாதாக்களிப் படியே பார்த்திட்டாரே. 641

பார்த்திட்ட மலைகளிலே மூலிகையைக்கேளு
பரிவான கருநெல்லி கறுத்தநொச்சி
பூர்த்திட்ட புறச்சோதி பெரியசோதி
புகழ்பெரிய வெள்ளைப் பூதுத்தியோடு

ஏர்த்திட்ட கல்லுக்குள் கோகஞ்சம்பா
எளிதான ரோமவிருட்சம் எருமைவிருட்சம்
கார்த்திட்ட கரு நீலி சுணங்க்கல்விருட்சம்
கறுத்திருக்குங் கொடுவேலி செந்திராயே. 642

செந்திராய் வெண்புரசு வெள்ளைக்கண்டர்
செங்கள்ளி செம்பல்லி குண்டலமாம்பாலை
கந்திராய் கசப்பான பசலையோடு
கடியதொரு பொற்சீந்தி காய்கைவேதி
அந்திராய் கருவீழி சிவதத்தல்லை
அதிவெள்ளை தூதுவளை கறுத்தவாளை
கந்திராய் கருப்பான கரியசாலை
கறுத்தமத்தை வெண்கரந்தை கல்லாரையாமே. 643

ஆமப்பா மூவிலை குருத்தினோடு
ஆச்சரியங் கருந்தும்பை வெள்ளைக்காந்தி
ஓமப்பா வெண்டான ஆதண்டையோடு
உத்தமனே முப்பத்து ரண்டுமூலி
வாமப்பா மலைதோறு முண்டுவுண்டு
மகத்தான மூலிகைதான் பரிசவேதை
காமப்பா ஒவ்வொன்றிற் சூதங்கட்டு
கலந்துநின்ற வாசனை பாஷாணஞ்சாகே. 644

சாகவே சரக்கான அறுபத்துநாலுந்
தனித்தனியே வேதையுமாஞ் சகஸ்திரத்துக் கோடுஞ்
சாகவே வுபரசங்கள் நூற்றிரண்டுபத்துஞ்
சவளைபோல் சத்தாக விறங்கும்பாரு
சாகவே லவணமுத விருபத்தஞ்சும்
தனித்தனியே கட்டாகுஞ் சரக்கைக்கொல்லும்
சாகவே பண்ணாம லிருத்திவிக்குஞ்
சங்கற்ப விருப்பமென்ற சட்டைபோக்கே. 645

கிளிமூக்கு மாங்காய்

போக்கான கிளிமூக்கு மாவொன்றுண்டு
புகழான கிளிபோலே காயுங்காய்க்கும்
வாக்கான யிலையதுவு மரசிலை போற்காணு
மைந்தனே யிதனுடைய பழத்தையுண்ணு
நோக்கான கெவுனவழி சுறுக்காயோடும்
நொடியிலே காயசித்தி கிடைக்குமப்பா
போக்கான பூப்பூத்த பத்துநாள் பழமாம்
புண்ணியமாஞ் சித்தருக்கு ளெய்தும்வாறே. 646

வாறுகேள் விடத்தோல் வாபட்டைவாங்கி
மருவநன்றாய் நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
பேறுகேள் ப்லம்நாலு நிறுத்துக்கொண்டு
பேச்சரிய சூதமது பலந்தானாலு

தாறுகேள் கல்வத்திலி தனைப்போட்டு
சாதக மல்லிகையின் சாறுவிட்டு
தேறுகே ளெஞ்சாம மறைப்புமைபோல்
தேன்வார்த்து வுண்டைசெய்து சிமிளில்வையே. 647

வைத்ததொரு மருந்தெடுத்து அந்திசந்தி
வகையான மண்டலந் தானுண்டாயானால்
கைத்ததொரு பித்தமறுங் கபத்தைச்சாடுங்
கசடான ஆறுதளந் திறந்துபோகும்
மெய்த்ததொரு வாதமென்ப துவும்போகும்
மேலான சிலேத்து மமுமகன்றுபோகும்
வித்ததொரு சரசோதி நிர்த்தஞ்செய்வாள்
வீணைபோ லொலியாகும் வாக்குத்தானே. 648

சீந்திகாயாதி கற்பம்

தானென்ற பொற்சீந்தி யானால்நன்று
சாதகமாய்ச் சிவப்புநன்று கிடையாவிட்டால்
பானென்ற நற்சீந்திமேல் தொலியைப்போக்கி
பருந்துண்டாய்க் கொண்டுவந்து கிழித்துப்போட்டு
கோனென்ற நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
கூரான கற்கண்டு சமபாகஞ்சேர்த்து
வேனென்ற வெருகடித்தூ ளந்திசந்தி
வெருளாதே மண்டலமு முண்டுபாரே. 649

பாரப்பா மேகமென்ற தெல்லாம்போகும்
பரிவாக வாதபித்தம் பக்குவமுமாகுஞ்
சேரப்பா கபாலத்தில் வெட்டைபோகுஞ்
செகமறிய அட்டசுரம் வேகம்போகும்
காரப்பா தாதுமுற்றுந் தழைக்குந்திரேகஞ்
சதிரான ஆறுதளம் வன்னிமீறும்
பேரப்பா சீந்திக்குச் சாவோயில்லை
பேரின்ப சாஸ்திரத்தைப் பேணிப்பாரே. 650

நெல்லிக்காய்

பேணிப்பார் நெல்லிக்காய் முத்தல்வாங்கி
பேராவின் பால்விட்டு அவித்துக்கொண்டு
ஊணிப்பார் நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
உத்தமனே சுத்தித்த கெந்திசரிகூட்டி
பேணிப்பார் தேனதனிற் குழைத்துவுண்ணு
பேராக மண்டலந்தா னுண்டாயானால்
ஆணிப்பார் முன்னெடுத்த தேகம்போக்கி
ஆச்சரியஞ் சிவசக்தி தேகமாச்சே. 651

சத்தியது வேதென்றால் கெந்தமுமாச்சு
தனித்துநின்ற சிவந்தானுஞ் சூதமாச்சு
புத்தியது யேதென்றர்ல் மூலமாச்சு
புகழான வாறுதளத் துண்ணிப்பாரு

பத்தியது யேதென்றா லறிவுட்புக்கி
பராபரத்தி லிச்சதுவே பத்திபத்தி
முத்தியது யேதென்றால் மவுனந்தாண்ட
மோசமில்லை சைதன்னிய முத்தியாமே. 652

சிவனார் வேம்பு

ஆமப்பா யிதுகடந்த சிவனார்வேம்பை
அப்பனே யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து
தேமப்பா வாலுழுவை சரியாய்க்கூட்டி
சிறப்பாகக் கரந்தைச்சாற் வார்த்தரைத்து
தாமப்பா வில்லைபண்ணி நிழலுலர்த்திச்
சாதகமாய்ப் பூப்புடத்தில் தயிலம்வாங்கி
வாமப்பா முக்கழஞ்சு அந்திசந்தி
மறவாதே மண்டலமுங் கொண்டிடாயே. 653

கொண்டிடவே குட்டமெல்லாம் போகும்பாரு
கூரான சரீரத்தில் வாசம்போகும்
விண்டிடவே விஷங்களெல்லா மகன்றுபோகு
மேனியுமே மாந்துளிர் நிறமுமாகும்
கண்டிடவே கன்னியர்கள் வசமதாவார்
காரியமாய் ஐம்புலனை யறுத்துச்சாடுந்
துன்றிடவே ஆசையுற்றால் காயசித்திபோகுந்
தூசித்துக் கன்னியரைத் தொடலாகாதே. 654

அண்ட கற்பம்

ஆகவே அண்டத்தின் கற்பங்கேளு
அப்பனே கருங்கோழிச் சாவலுடன்போடு
வாகவே வளர்த்ததின் முட்டையெல்லாம்
வாங்கிவகையாகக் கல்லுப்புக் குள்ளேவைத்து
ஏகவே இருபதுநாள் கழிந்தபின்பு
எடுத்தல்லோ அயச்சட்டிக் குள்ளேவைத்துப்
போகவே கெருடனுட கிழங்குசாற்விட்டுப்
புகழாக வடுப்பேற்றி யெரித்திடாயே. 655

எரித்திடவே சாறெல்லாஞ் சுண்டிப்போகு
மிதமாக ஆறவிட்டு வைத்துக்கொண்டு
பரித்திடவே மேலோடு அண்டமொன்றுவாங்கி
பதறாமல் ரண்டாக்கி அந்திசந்தி கொள்ளு
தரித்திடவே தினமொன்று மேலோடு வாங்கிச்
சாதகமாய்த் தினந்தினமு மொவ்வொன்றாக
மரித்திடவே யெரித்தசலங் கற்பாந்தகாலம்
வைத்திருக்க வேணுமென்றால் மண்டலந்தான் கொள்ளே. 656

கொள்ளவே காயமிது சிவந்துமின்னுங்
குறிப்பான கண்கள் ரண்டுஞ் செங்கஞ்சம்போலாம்
விள்ளவே கைகள்ரண்டுங் கற்றூணாகு
மெலிவான நரம்பெல்லா மிறுகிக் கொள்ளும்

துள்ளவே யறுவித்தால் விந்துவீழாஞ்
சுக்கிலந்தா னிறுகியங்கே மேலேயோடுந்
தள்ளவே சட்டையொன்று சுக்கிப்போகுஞ்
சமர்த்துடனே யிவ்வளவுஞ் சாதித்தேறே. 657

சாதித்து தலைமுழுக வரிசை கேளு
சாதகமாய்ப் பட்சத்துக் கொருக்காலப்பா
பேதித்து மிளகோடு மஞ்சள்நெல்லி
பேரான வெப்பரிசி கடுக்காய்தானும்
வாதித்து சமபாகம் நிறுத்துக் கொண்டு
வளமான ஆவின்பால் விட்டு ஆட்டி
காதிச்சுத் தலைதனிலே தேய்த்துக் கொண்டு
கனமான வெந்நீரில் முழுகிடாயே. 658

முழுகிடவே கபாலமது கெட்டியாகும்
மூர்ச்சான வாசியது மேற்கொள்ளாது
நழுகிடவே ரோமமது தும்பிபோலாம்
நனைந்தாலுங் குளிராது வன்னிமீறும்
அழுதிடவே கண்ணீர் தண்ணீர்விழாது
அந்தரத்தின் மீனெல்லாம் பகலிற்றோணும்
விழுகிடவே யுடலிலுள்ள விஷநீர்வற்று
மேனியுமோ பொன்னிறம் போலாகும்பாரே. 659

தாம்பூலச் சுன்னம்

பார்க்கவே வார்த்துமிக வுருகிக்கால்தான்
பரிவாக ஆவினெய் தேய்த்துக் கொண்டு
ஏர்க்கவே பசும்பயறு மரைப்பாய்ப்பண்ணி
யெளிதாக வெந்நீரில் முழுகிவாநீ
கார்க்கவே ரோமமிது கருவண்டு போலாங்
கண்ணுக்கு ளொளிமீறுந் தாகமில்லை
தோர்க்கவே சுழிமுனையும் நெட்டிட்டேறுஞ்
சுள்ளாமல் பிரபஞ்ச மாயைநீக்கே. 660

நீர்க்கவே தாம்பூலந்தின் பதற்கு
நினவாகச் சுண்ணாம்பு செய்யக்கேளு
கார்க்கவே கற்பூரச் சிலையின் மேலே
கல்லுக்குள் சுன்னத்தைக் கவசம்போட்டு
பார்க்கவே சுழியோட்டி லூதுவூது
பஞ்சுபோல் பொருமியங்கே சுன்னமாகும்
தோர்க்கவே கல்நாரிப் படியேயூது
துடியான அண்டத்தோ லூதிடாயே. 661

ஊதிடவே கெருடபட்சி பவளமுத்து
உத்தமனே யிவ்வகையுஞ் சுன்னமாகுங்
கோதுவது கொட்டைப்பாக் கதனைச்சீவி
குறிப்பாகப் பழுத்த வெள்ளிலையிற்பூசி

ஓதுவது முன்சாற்றை யுமிழ்ந்துபோட்டு
உத்தமனே தாம்பூலந் தின்னுத்துப்பு
வாதுவது வாதபித்தஞ் சேட்டுமத்தைப் போக்கு
மகத்தான வுபரசத்தின் சுன்னந்தானே. 662

தானென்ற சாலையிலே வழலைவாங்கச்
சாதகமாய்ச் சொல்லுகிறேன் மக்காள்கேளும்
வானென்ற கரிசாலஞ் சாற்றினோடு
வளமான ஆவினெய் சமனாய்ச் சேர்த்து
ஊனென்ற அங்குட்ட விரலில் தோய்த்து
உத்தமனே யண்ணாக்கில் பிரளயேத்து
தேனென்ற சங்கிலிபோற் கபந்தான் வீழுஞ்
சிறப்பாகப் பதினாறு தரமும்வாங்கே. 663

மூலிகைப் பயிர்

வாங்கியே மண்டலந்தா னிப்படிதானப்பா
மாலையிலே செய்கிற வரிசைகேளு
பாங்கிலாயே ரண்டத்தெண்ணெய் தன்னைப்
பரிவாகத் தாசனியிற் றோய்த்துக் கொண்டு
தேங்கிவா பாவைபோற் காலையூன்றிச்
சிறப்பாகக் குஞ்சனத்தில் சுத்தநூறு
ஓங்கிவா யிடசாரி திருப்புநூறு
ஒளித்திருந்த ஆமமெல்லாங் கழன்றுபோமே. 664

ஆமமே கழராட்டால் காயசித்தியில்லை
அண்ணாக்கில் வீழாட்டி லமுதஞ் சித்தாம்
வாமமே யில்லாட்டால் பூசை போச்சு
மாயியங்கே சொல்வதுவு மறைத்துபோச்சு
ஏமமே பிறப்பதுவு மண்ணாய்ப் போச்சு
எடுத்தொரு குளிகையுட வேகம்போச்சு
காமமே கெதியென்று விடுகவேண்டாங்
கைம்முறையா யிருதலத்தின் கசட்டைதள்ளே. 665

தள்ளியே மூலிகையைக் கறுப்புப்பண்ணச்
சாதகமா யரைமட்டுங் குழிதான்வெட்டித்
தெள்ளியே சேங்கொட்டை ஒன்றிரண்டாய் வெட்டிச்
சிறப்பாக மிளகுசாம்பல் பரப்பிமேலே
அள்ளியே கரம்பைமண்ணை மேலேபோட்டு
அழகாகப் பாத்திகட்டி நீரைவிட்டு
நள்ளியே யழுகவிட்டு மூன்றுதிங்கள்
நலமாகக் கொத்தியே யாறப்போடே. 666

ஆறவிட்டுப் பதிப்பதற்கு விபரங்கேளு
அழகான குமரியொடு ஓமங்கஞ்சா
தேறவிட்டு வல்லாரை கரியசாலை
சிறப்பான செருப்படையும் நீலிவீழி

ஏறவிட்டுப் பொற்றலையி னொச்சிநெல்லி
யிதமான கரந்தையொடு மத்தந்தும்பை
சீறவிட்டுக் கொல்லனுட கோவைவாழை
சிறப்பாகப் பதித்துவைத்துத் தண்ணீர்வாரே. 667

வார்த்தல்லோ பயிராக்கித் தண்ணீர்வார்த்து
வாகாகக் காய்ந்தபின்பு விரையைவாங்கிப்
போர்த்தல்லோ முன்போல சேங்கொட்டையிட்டுப்
புகழான மறுபடிதான் விரையைப்போடு
கோர்த்தல்லோ ரண்டிடத்தில் கொட்டையிட்டுக்
கொடுஞ்சுறுக்காய் மாறியே பயிரைப்போடு
ஏர்த்தல்லோ விப்படிதா னாலுதரம்போடு
என்மகனே முழுக்கறுப்பா மூலிதானே. 668

தானென்ற மூலிகைதான் மலைகள் தோறுஞ்
சாதகமாய் வைத்தாரே ரிஷிகள்சித்தர்
வானென்ற கறுப்புக்குப் பரிட்சைகேளு
வாகாகக் கொக்கிறகு கொண்டுவந்து
பானென்ற யிலைகசக்கி மேலேபூசப்
பரிவாகக் காகத்தி னிறகேயாகும்
கோனென்ற யிலைதின்றால் காயசித்து
கொடுஞ்சுறுக்காய்க் கொடியவரை யிறுத்துத்தானே. 669

இறுத்தியதோர் குமரியுட கற்பமுண்டு
எழுபதுதான் கோடியுக மிருந்தார்பாட்டர்
அருந்தியதோர் ஓமமுண்டு காலாங்கிநாய
னறுபதுதான் கோடியுகம் வாதம்பார்த்தார்
வ்ருந்தியதோர் கஞ்சாவால் கோரக்கர்தானு
மனதொன்றில் சமாதியிலே ஏழுயுகம்நின்றார்
திருந்தியதோர் கரிசாலை கற்பமுண்ட
சிவயோகி முனியுடைய திறமைகேளே. 670

கேளப்பா அஞ்சயுகம் நாதாக்களோடே
கெடியாகத் தர்க்கித்து வேதாந்தம் பார்த்தார்
வேளப்பா நீலியுண்டு ராமதேவர்
விழைந்தேழு லட்சமப்பா யோகம்பர்த்தார்
நாளப்பா பிரமமுனி செருப்படையை யுண்டு
நாலேழு லட்சமப்பா சமாதியுற்றார்
தேளப்பா ஓமமுண்டு ஆனந்தநாதர்
செகத்திலுள்ள வதிசெயங்கள் பார்த்திட்டாரே. 671

பார்த்திட்டு விழிகொண்டு கஞ்சமலைசித்தர்
பத்துயுகம் ஆருட சமாதியிலே நின்றார்
ஏர்த்திட்ட பொற்றலையார் கொங்கணர் தானப்பா
ஏழுயுகங் குளிகைகட்டி வாதம்பார்த்தார்
கார்த்திட்ட பதஞ்சலிதான் கரந்தையுண்டு
கைகொட்டிச் சி..ம்பரத்தில் நடனங்கண்டார்

போர்த்திட்ட கொல்லனுட கோவையுண்டு
போகர்முனி யென்றுசொல்லிப் புளகித்தானே. 672

புளகித்துக் கோடியுகம் வாதம்பார்த்து
போக்கோடே யொவ்வொன்றாய் விரித்துயானும்
இளகித்து ஏழுகண்ட முன்னேசொன்னே
னேழையுந்தா னெழுநூறாய் நிகண்டாய்க்கோர்த்தேன்
அழுகித்துக் கண்டபடி சொன்னேன்மக்காள்
ஆச்சரியம் வெட்டவெளி மறைப்போயில்லை
உளகித்து வுப்பைநன்றாய்க் கட்டியுண்ணு
ஒருசொல்லுந் தப்பாது சித்தியாமே. 673

உப்புக்கட்டு

சித்தியா லன்னத்தி லுப்புக்கூட்டச்
செப்புகிறே னாதாக்கள் சொல்லாதெல்லாம்
பத்தியாய்ப் புங்கம்வேர்ப் பாலைவாங்கி
பாரையுப்புத் தோய்த்தெடுத்து ரவியிற்போடு
முத்தியா யேழுநாள் ரவியிற்போட்டு
முனையான வெடியுப்புப் பலந்தானஞ்சு
வெத்தியாய்ச் சீனமது பலந்தானைந்து
வெண்காரம் பலமஞ்சு கல்லுப்பஞ்சே. 674

அஞ்சோடு சாரமஞ்சு பூநீறஞ்சு
ஆதியாங் கடல்நுரையுஞ் சூடனஞ்சு
பிஞ்சோடு சவ்வீரம் பலந்தான்ரண்டு
பேயான புங்கம்வேர் பாலிலாட்டி
நஞ்சோடு யேழுநாள் வார்த்தரைத்து
நலமான ரவிதனிலே யுலரப்போட்டு
குஞ்சோடு அண்டநீர் பலந்தானைந்து
குழப்பியே பாலாலே வைத்துக்கொள்ளே. 675

கொள்ளவே பாரவுப்பில் தோய்த்துத் தோய்த்து
குறிப்பாகக் கரிவோட்டில் வாட்டுவாட்டு
மெள்ளவே தணலுக்கு ளடர்ந்துவாட்டு
வெளுப்படங்கி யுப்பதுவுஞ் செம்மையாகுந்
தள்ளவே சுண்ணாம்பு முப்புநேரே
சமனாகப் பொடித்துமைபோல் முரியறவே
தள்ளவே ரண்டடையாய்த் தட்டிவைத்துத்
துடியாக லிசித்தவுப்பை வைத்துவையே. 676

வைத்துமே லடைமூடிச் சட்டியிலேவைத்து
வாகாக நாற்சாமந் தீயைமூட்டி
மொய்த்துமேல் மூடியொரு சீலைசெய்து
முசியாமல் நூறெருவிற் புடத்தைப்போடு
தைத்துமே யாறவிட்டு யெடுத்துப்பாரு
தவளம்போற் பளிங்குநிற மாகிநிற்கும்

நைத்துமே கரிச்சோறி லிந்தவுப்பையிட்டு
நலமாக நாள்தோறுங் கொண்டிடாயே. 677

கொண்டிட்டா விந்தவுப்புக்கட்டை யெல்லாந்தள்ளுங்
கூசாதே வாசியெல்லாம் நெட்டிட்டேறும்
விண்டிட்ட புருமையத் தமர்திறக்கும்
விழியோடே மனங்கலங்கப் பண்ணிவிக்கும்
தண்டிட்ட அமுரியிலே யிறங்காதுப்புச்
சாதகமாய்ப் பச்சையுப்புத் தின்றாயானால்
மண்டிட்ட சித்தியெல்லாம் பாழாய்ப்போகும்
வாய்த்திருந்த கருமெல்லா மண்ணாய்ப்போமே. 678

போமென்ற வுப்புக்குக் காரமேற்றிப்
பொலிவாகச் சுன்னமென்ற குகையிலூத
ஆமென்ற பூப்போலச் சுன்னமாகு
மந்திடைக்குச் சாரம்விடச் செயநீராகும்
வேமென்ற சரக்கான வறுபத்துநாலும்
வெகிளாமல் மணிபோலக் கண்விட்டாடும்
சாமென்ற சாவுபொய்யாம் வேதையாகுஞ்
சகஸ்திரந்தான் மாற்றாகுந் தன்னிற்பாரே. 679

பாரப்பா வுப்புநின் றுருகும்போது
பரிவோடு யிடைக்கிடையாய் நாகம்போடு
காரப்பா நாகயிடைச் சூதம்போடு
கனமான கெந்தகந்தான் ரெட்டிப்போடு
சேரப்பா யெடுத்துடனே களங்குமாகுஞ்
சேர்ந்த நவலோகத்தி லன்பதுக்கொன்றீ
ஓமப்பா மாற்றாறு காணுங்காணும்
வெகிளாதே பணவிடைதான் தேனிலுண்ணே. 680

உண்ணவே மண்டலத்தி லொளியோமீலு
முத்தமனே கால்கள் ரண்டுங் கற்றூணாகும்
விண்ணவே பச்சைரச மென்றுதின்னு
வெகிளாதே பாஷாண மெல்லாந்தின்னு
கண்ணவே வுபரசத்தின் சத்தைத்தின்னுங்
கலங்காதே வாசிகொண்டு வுள்ளேபூரி
பண்ணவே நடக்கையிலு மிருக்கையிலுநீதான்
பழக்கமுண்டு மூலத்தைப் பாருபாரே. 681

பார்க்கவே வுப்பென்று களங்கந்தன்னைப்
பலபலவாம் லோகத்தி லன்பதுக்கொன்றீய்ந்து
ஏர்க்கவே யிதைவிற்றுச் செலவுசெய்து
எளிதாக அன்னமரை தண்ணீர்கொள்ளு
கார்க்கவே யொருசேரைச் சமைத்துவுண்டு
கனமான கற்பத்தை யுண்டுதேறு
தோர்க்கவே வுட்புகுந்து மூலம்பாரு
தொடுகுறிபோ லாறுதளம் வெளியாய்ப்போமே. 682

வெளியான வப்பிரேகச் சத்துகேளு
விளங்குகின்ற வப்ரேக முதற்றரந்தான்
ஒளியான ரத்தவர்னம் ரண்டாம்பட்ச
முயர்ந்த மூன்றாந் தரந்தான் கிட்னவர்னம்
அளியாத வப்பிரகே நவநீதம்பண்ணி
அப்பனே கிளிபோலக் கட்டிக்கொண்டு
களியான கொள்ளிலையின் சாறுதன்னால்
கலங்காதே நாள்மூன் றோலையாக்கே. 683

ஆக்கவே டோலைபோற் சட்டியிலேவிட்டு
அசையாதே கொள்ளிலையின் சாற்தன்னாலே
பாக்கவே யடுப்பேற்றி யெரித்துப்பின்பு
பருவாழைக் கிழங்குச்சாற் மூன்றுநாள்தான்
காக்கவே யிருசாம மூறப்போட்டுக்
கலங்காமல் வடிகட்டி யெடுத்துக்கொண்டு
நீக்கவே வாலுகை யிலடுப்பிலேற்றி
நிதானமதா யெரித்துமெள்ளக் குளிகைவாங்கே. 684

வாங்கியே பலம்பத்து கல்வத்திற்போட்டு
வகையான வெங்காரம் பலந்தான்பத்து
தேங்கியே காரமைந்து கட்டுப்புவொன்று
சிறப்பான சர்க்கரைதேன் பழமும்போடு
ஓங்கியே ஆதளையின் பாலைவார்த்து
உறுதியாய் குடோரியொரு பலமும்போட்டு
நீங்கியே மூன்றுநாள் நெகிழவாட்டி
லேசாக வடைதட்டி யுலரப்போடே. 685

உலர்ந்தபின்பு வங்கமென்ற தாரத்தாலூது
உத்தமனே சரவுலையில் வைத்துவைத்து
அலர்ந்தபின்பு யப்பிரரேகஞ் சத்தாய்வீழு
மாராய்ந்து சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
கலர்ந்தபின்பு காடெடுத்துக் கல்வத்தாட்டி
கலங்காதே முன்போல மருந்தரைத்துக்கூட்டி
நலர்ந்தபின்பு வில்லைகட்டிச் சரவுலையிலூது
நலமாக வப்பிரேகஞ் சத்துமாமே. 686

ஆமப்பா காடெடுத்து முன்மருந்துகூட்டி
அரைத்துநன்றாய் வில்லைகட்டி ஐந்துதரமூது
ஓமப்பா சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
உத்தமனே வெண்காரஞ் சரியாய்க்கூட்டித்
தாமப்பா குகையிலிட்டு வுருக்கிநன்றாய்ச்
சாய்க்கவே நல்லெண்ணெய் தேங்காய்ப்பாலும்
காமப்பா யிலுப்பைப்பூ நெய்யுந் தேனுங்
கலந்தொன்றாய் மத்தித்துச் சாய்த்திடாயே. 687

சாய்த்திடவே மூன்றுதரங் கன்மிசங்கள் போகுந்
தங்க மதுரண்டுக்கு அப்பிரேகம்நாலு
பாய்த்திடவே ரண்டுமொன்றா யுருக்கிக்கொண்டு
பரிவாக மெழுகுகட்டிக் கிண்ணிவாரு
மாய்த்திடவே சீலையது திறமாச்செய்து
வாலுகைமேல் வைத்ததற்குட் சூதம்வாரு
ஏய்த்திடவே கருமத்தஞ் சாற்விட்டுக்
கிண்ணிக்கிதமாக வைத்திடவே வெண்ணெயாமே. 688

வெண்ணெயெல்லாம் வழித்துமொரு மொத்தையாக்கி
மேலான குளுந்தண் ணீர்தண்ணீர்போட்டுத்
திண்ணெய் தாயிறுகியது கல்லுப்போலாஞ்
சேர்த்தெடுத்து யாரையிலே கவசங்கட்டி
தண்ணெயாய் அவிர்ப்புடமாய்ப் பத்துப்போடு
தயங்காதேமத்தங் காய்க்குள்ளே வைத்துப்போடு
விண்ணெயாய் விராலியிலைக் குள்ளேபோடு
விதமான விராலியிலைக் குள்ளேபோடே. 689

போட்டெடுத்துச் சூடனுட தீயில்வாட்டிப்
புகழாகக் கரண்டியிலெண்ணெய்க் குத்தியுருக்கி
ஆட்டெடுத்து வொன்றுக்கு நாலுதங்க
மழகாகச் சூதத்திற் பாதிநாகம்
நீட்டெடுத்து வுருக்கியொன்றாய் மணியாய் வாங்கி
நேர்ப்பாகக் கல்வத்திற் பொடித்துநன்றாய்த்
தோட்டெடுத்துச் சுத்தித்த கெந்திதானுந்
துரிசாகச் சூதயெடை கெந்திகூட்டே. 690

கூட்டியெல்லாம் பொற்றலையின் சாற்றாலட்டிக்
குறிப்பாகப் பொடிப்பண்ணிக் குப்பிக்கேற்றி
ஆட்டியே வாலுகையின் மேலேவைத்து
யறுசாமமான பின்புகடுந் தீப்போடு
நீட்டியே பனிரெண்டு சாமமானால்
நிலைத்துநிற்கு மாதளம்பூ நிறத்தைப் போல
வாட்டியே நவலோகம் நூற்றுக்கொன்றீ
மாற்றென்ன பனிரண்டாம் பணவிடை தானுண்ணோ. 691

உண்ணவே மண்டலந்தா னந்திசந்தி
வுத்தமனே யுகாந்தவரை யிறுத்துந்தேகம்
தண்ணவே யிருட்டரையி லிருந்தாயானால்
சந்திரனோ சூரியனோ வென்பார்பாரு
கண்ணவே மேனியது கஸ்தூரிவீசுங்
கமலம்போல் கால்கைரண்டு மிருதுவாகும்
எண்ணவே கற்பமெல்லாம் படிப்படியா
யேறுமிருந்துபார் சமாதிக்குட் கற்பமொன்றே. 692

கெந்தகச் சத்து

ஒன்றான கெந்தகந்தான் பலமோபத்து
உத்தமனே சுத்திபண்ணி அயச்சட்டியிட்டு
கன்றான குமரிச்சார் கீழ்மேலுமிட்டுக்
கலறவே கொதிப்பாக நாலுசாமம்
பன்றான பயிலிச்சாற் சுருக்குப்போடு
பருவமாய்ப் புங்கம்பால் நாலுசாமம்
கன்றான நிழலுலர்த்திக் கல்வத்திட்டுக்
கடுகவே பொடிபண்ணி மாந்துளிரின் சாறே. 693

சாறதினா லெண்சாமமட்டு ஆட்டு
தயங்குமணித் தக்காளிச் சாற்றாலாட்டு
பேறதினால் மந்தாரை வெள்ளைப்பூவைப்
பிசைந்தந்தச் சாற்றினாலெண் சாமமாட்டு
வாறதினால் புளிப்பானமாதளை யின்பழந்தான்
வகையான சாரதினாலெண் சாமமாட்டு
தேறதினால் தாமரைப்பூச் சாற்றாலாட்டிச்
சிறப்பாகக் காந்தமைந்து பலந்தான்போடே. 694

போடவே வெண்காரம் பலந்தானைந்து
புகழான குடோரியொரு பலமும்போடு
நீடவே குன்றிமணிக் கட்டுவுப்பு
நிலைக்கவொரு பலம்போட்டு ஆதளையின்பாலால்
வாடவே யெண்சாம மாட்டிப்பின்பு
வகையாக வில்லைதட்டி யுலரப்போட்டு
நாடவே நல்லெண்ணெய் பலந்தானொன்று
நயமான வயச்சட்டிக் குள்ளேவாரே. 695

வார்த்துமே யடுப்பேற்றி வில்லை கட்டி
வாகான கமலம்போ லெரி நேர்ப்பாக
ஏர்த்துமே பொறுத்தபதந் தன்னில்வாங்கி
யிருபுறமுந் துருத்தியிட்டுச் சரவுலையிலூது
பேர்த்துமே மணிமணியாய்ச் சத்துவீழும்
பேராக் கரட்டையெல்லாஞ் சோதித்துவாங்கிக்
கார்த்துமே முன்போலக் காரங்கூட்டி
கலங்காதே ஐந்துதர மூதிடாயே. 696

ஊதியே சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
உத்தமனே வெண்காரங் கூடக்கூட்டி
காதியே ஐங்குதுகையி லிட்டுருக ஆட்டிக்
கனமான அப்பிரேகஞ் சாய்த்தாப்போல்
சாதியே சாய்த்தாக்கால் வருணன்போலத்
தயங்காதே சத்தாகுங் கெந்திசத்து
வாதியேயிதைக் காணப்போறார் மாண்பர்
மாசற்ற நாதாக்களோடும் ஆட்டே. 697

ரசவிக்கிரகம்

ஆட்டான கெந்தகத்தின் சத்துவேகம்
ஆரறிவார் சிவயோகி யல்லார்காணார்
நீட்டான அம்பலத்திற் சோழன்றானும்
நிலைத்தநட ராசரைத்தான வராகச்சொன்னார்
பூட்டான சிற்பர்கள் தான் கருக்கட்டிவார்த்தார்
பிண்டுபிண்டு போகவுமே சிற்பரேங்கிக்
கூட்டான மனதுநொந்து திகைக்கும்போது
கொடு மூல நாயனங்கே வந்திட்டாரே. 698

வந்திட்டு சிற்பரைத்தான் வரவழைத்து
மனக்குறைதா னென்னசொல்லு மைந்தாவென்ன
வெந்திட்டு விக்கிரகம் வார்க்க வார்க்க
வின்னமாய்ப் போகுதென்ன செய்வோமென்ன
நொந்திட்டமனது ரண்டுதிரு மூலர்தாம்
நொடிக்குள்ளே வார்த்திடுநீ யென்றுசொல்லிக்
கத்திட்டுக்கா செடைதான் செம்பையீந்தார்
கடுகவேசிப் பருந்தான் வார்த்திட்டாரே. 699

வார்த்திடவே தங்கமெல்லாஞ் செம்பாய்ப்போச்சு
மனம்புண்ணாய் நிற்குமப்போ சோழன்வந்தார்
ஏர்த்திடவே விக்கிரகம் வார்ப்பித்தாயோ
எடுத்துநீ யென்றிடவே கொடுமுன்வைத்தார்
பார்த்திடவே தங்கமெல்லா மெடுத்துக்கொண்டு
பரிவாகச் செம்பாலே வார்த்தாயென்று
வேர்த்திடவே ஆக்கினைதான் பண்ணச்சொன்னார்
விடுபட்டார் சோழன்முன்னே நாயன்தாமே. 700

ஆமப்பா சிற்பரைதான் கொல்லவேண்டாம்
அதிகமாய் பொன்னுனக்குந் தாரோமென்று
வேமப்பா வெள்ளியைத் தானுருக்கச்சொல்லி
விரைந்த மூவாயிரத்திற் காசெடைதான்போட்டார்
தாமப்பா மாற்றது வுமிருபதாச்சு
சாதகமாய் குளிகையிட்டு மறைந்துபோனார்
சேமப்பா தவசியெங்கேயென்று கேட்கந்
தேடியெங்கும் பார்த்திட்டுத் திகைத்திட்டாரே. 701

திகைத்திட்டுவந்து சொன்னார் சோழன்முன்னே
சிவசிவா வென்று சொல்லி வாயைப்பொத்தி
நனைத்திட்டுச் சிற்பருக்கு வெகுமானஞ்செய்து
நாதாக்கள்மகிமை சொல்லயெவரால் கூடும்
மிகைத்திட்டு விடுதிக்குப் போனார்சோழன்
வேண்டியதோர் கெந்தகத்தின் சத்துவேகம்
பகைத்திட்டுச் சித்தருடங்களுக்குச் சொன்னேன்
பாரிதுக்குள் செந்தூரஞ் செய்யக்கேளே. 702

கேளப்பா கட்டியதோர் சூதமொன்று
    கெடியாக வுருகையிலே சத்துவொன்று
நீளப்பா தங்கமொன்று நாகமொன்று
    நேராகவுருக்கி யொருமணியாய் வாங்கி
வேளப்பா கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
    விளங்கிநின்ற தாளகமுஞ்சிலையு மொன்றுபோட்டு
நாளப்பா பொற்றலை யின்சாற்றாலாட்டி
    நலமாகத் தெல்லுப்போல் வில்லைபண்ணே. 703

பண்ணியதோர் வில்லைதன்னை யகலிலிட்டு
    பாய்ச்சியே மூடியொரு சீலைசெய்து
கண்ணியே பத்தெருவிற் புடத்தைப்போடு
    கண்கொள்ளா தருணன்போற் செந்தூரமாகும்
நண்ணியே செந்தூரமாயிரத்துக் கொன்று
    நாட்டிடவே பதினாறு மாற்றுமாகும்
புண்ணியமே செய்தவற்கு செந்தூரமாகும்
    பொல்லாத துரோகிக்கு எய்தவாறே. 704

வாறுகேள் செந்தூரங் குன்றியுண்ணு
    மண்டலந்தா ணந்திசந்தி மறவாமல்நீயும்
தேறுகேள் தேகமது செப்புத்தூணாம்
    சிதறடித்தால் மலைகளெல்லாந் தவிடுபொடியாகும்
காறுகேள் கத்தியினால் வீசினாக்கால்
    கலீரென்று வெங்கலத் தினோசையாகும்
நாறுகேள் நாமெல்லாஞ் சிவந்துகாணும்
    நாதாக்கள் சித்தியெல்லா மிதற்குள்ளாச்சே. 705

மயூரச்செம்பு

ஆச்சப்பா மயூரத்தின் செம்பெடுக்க
    அறையிறே னானறிந்த மட்டுந்தானும்
வாச்சப்பா மயிலிறகு கொண்டுவந்து
    வளமாகத் திரிதிரித்து நல்லெண்ணெய்தோய்த்து
நீச்சப்பா சுட்டெடுத்து கரியாய்ப்பண்ணி
    நிலைக்க வொருசேருமட்டும் நிறுத்துக்கொண்டு
தோச்சப்பா கல்வத்திலிதனை போட்டுத்
    துடியான சாரமொரு பலந்தானஞ்சே. 706

அஞ்சான வெண்காரம் பலந்தானஞ்சு
    ஆதியாங் குடோரியொரு பலமுங்கொண்டு
நஞ்சான வீரமொரு பலமுமொன்று
    நாயகமாங் கல்லுப்பு பலமுமொன்று
பிஞ்சான குன்றிமணி யெள்ளுமொச்சை
    பேசாதே யொவ்வொன்று பலமும்போட்டுக்
கஞ்சான வாதளையின் பாலைவார்த்துக்
    கடுகியரை மூன்றுநாள் வில்லைக்கட்டே. 707

கட்டியே வில்லைதன்னை நாளத்தூதிக்
கட் டோடே மணியணியாய் ரசிதானிற்கும்
ஒட்டியதோர் செம்பெல்லா மெடுத்துக்கொண்டு
ஓகோகோ கரடெல்லா முன்போலூது
தேட்டியே தோரைந்துதர மருந்திட் டாட்டித்
தெல்லுப்போல் வில்லைகட்டி ஊது ஊது
ஆட்டியதோர் செம்பெல்லாங் காரமிட்டு
ஆட்டிய காரமுன்போல் சாய்த்திடாயே. 708

சாய்த்திடவே செம்பாலே சூதங்கட்டுஞ்
சமுசயங்க ளெண்ணாதே பாஷாணஞ்சாகு
மாய்த்திட்ட அரவமது தீண்டாதையா
மகத்தான விஷங்க ளொன்றுங்கிட்டாதப்பா
பாய்த்திட்ட செம்போடே தங்கஞ்சேர்த்து
பாங்கான கைவளைகள் மோதிரங்கள் பண்ணு
காய்த்திட்ட குண்டலங்கள் விக்கிரகம்பண்ணு
காட்டினுள்ளே சித்தரெல்லாந் தரிப்பார்பாரே. 709

பாரப்பா மயூரத்தின் செம்புஒன்று
பாங்கான தங்கமொன்று நாகமொன்று
சேரப்பாமூன்று மொன்றா யுருக்கிக்கொண்டு
செயமான சூதத்தை யொக்கக்கூட்டி
காரப்பா கல்வத்திற் பொடியாய்ப்பண்ணிக்
கசடற்ற கெந்தகத்தைப் பாதிகூட்டி
வாரப்பா செருப்படையின் சாற்றாலாட்டி
வளமாகக் கல்லுபோல் வில்லைகட்டே. 710

கட்டியே யஞ்செருவிற் புடத்தைப்போடு
கைம்முறையா யாறவிட்டு எடுத்தப்பாரு
தட்டியே மாதளம் பூப்போலேயாகுந்
தனையெடுத்து ஆயிரத்துக் கொன்றேபோடு
மட்டியே பதினாறு மாற்றென்ன காணு
மைந்தனே பணவிடைதான் பாலிலுண்ணு
எட்டியே காயமது யிருப்புத்தூணா
மென்னென்ன கடித்தாலுஞ் செத்துப்போமே. 711

அயச்செம்பு

போமென்ற அயத்தினுட செம்புகேளு
புகழான ரோமமது யெள்ளெண்ணெய் தோய்த்து
ஆமென்ற அயச்சட்டிக் குள்ளேயிட்டு
அப்பனே மூன்றுபத்து பலத்தைப்போடு
காமென்ற அரப்பொடிதான் பலமோபத்து
கைம்முறையா யரப்பொடியைப் பிசறிவைக்கத்
தேமென்ற வடுப்பேற்றி ரோமத்தின் றயிலஞ்
சிறப்பாகவே யுண்ணப் பிரட்டித்திரே. 712

தீரென்ற ரோமமெல்லாங் கரியாகுமட்டும்
செய்முறையா யரப்பொடியைப் பிரட்டிவாங்கிக்
காரென்ற கரியோடே வைத்துக்கொண்டு
கார்த்திகையின் கிழங்கதுவும் பலமும்பத்து
சேரென்ற செவ்வல்லிக் கிழங்குபத்து
சேர்த்திடித்துச் சாறுஒருபடியும் வாங்கி
ஆரென்ற ஆதளையின் பாலைவார்த்து
அழகான யெள்ளெண்ணெய்ப் படிதான்வாரே. 713

வார்த்தெல்லாங் குழம்புபோல் வருதல்கண்டு
வகையான வெண்காரம் பலந்தானைந்து
சேர்த்தெல்லாந் துரிசியொரு பலந்தானைந்து
தேசில்லாக் கெந்தகந்தான் பலமுமூன்று
கோர்த்தெல்லாம் பொடியாக்கி யெண்ணெயிலேபோட்டுக்
கொதிப்பித்துக் குழம்பான பதத்தில் வாங்கிக்
கார்த்தெல்லாம் வழித்துவொரு கலயத்திட்டுக்
கைம்முறையா யரப்பொடியை பிசறிவையே. 714

வையப்பா ரோமமென்ற கரியினோடே
மயங்காதே குகையிலிட்டு மாட்டியூது
தையப்பா மணிமணியா யிறங்கும்பாரு
தனையெடுத்து வுடைத்துமுன்போல் தைலத்திற்பிசறி
கையப்பா அஞ்சுதரம் உருக்கித்திரு
கசடற்றவெள்ளி பொன்போற் கண்விட்டாடு
மையப்பா கசடற்ற செம்பேயாகும்
வயதையிதில் முடிவுசொல்ல விண்கொள்ளாதே. 715

கொள்ளாத அயச்செம்பு பலந்தானாலு
குறிப்பான தங்கமொன்று நாகமொன்ற
விள்ளாத ஈயமொன்று வுருக்கியாட்டி
விரவிடுநீ கல்வத்திற்பொடி யாய்பண்ணி
அள்ளாத சூதமது பலந்தானொன்று
அசடில்லாக் கெந்தகந்தான் பலமுநாலு
துள்ளாத மல்லிகையின் சாற்றாலாட்டித்
துடியாக வெண்சாமம் ரவியிற்போடே, 716

போட்டெடுத்துப் பொடியாக்கி மேருக்கேற்றிப்
புகழான வாலுகையின் மேலேவைத்து
ஆட்டெடுத்துப் பனிரண்டு சாமந்தியை
ஆறவிட்டுப் பார்த்தாக்கால் செந்தூரமாகும்
பூட்டெடுத்து ஆயிரத்துக் கொன்றுபோடு
புகழாகப் பதினாறு மாற்றுகாணும்
நீட்டெடுத்து மண்டலந்தான் தினங்குன்றியுண்ணு
தேரான சட்டைகக்கிப் பாலையாமே. 717

காந்த சத்து

ஆமென்ற காந்தமது பலந்தான்பத்து
அப்பனே குன்றிபோ லுடைத்துக்கொண்டு
காமென்ற செம்பிலிப்பால் படிதானாலு
கலரவிட்டு சுறுக்கிடுநீ நாலுசாமம்
தாமென்ற கல்வத்தில் செம்பிலிப்பால்விட்டுத்
தாக்கியரை நால்சாமம் புடத்தைப்போடு
ஆமென்ற பாலாலே யரைத்தரைத்து
அப்பனே ஐந்துபுடம்போட்டுத்தீரே. 718

தீர்ந்தபின்பு பொடியாக்கி அயச்சட்டியிட்டு
செம்பிலியின் ரோமமது பலந்தான்பத்து
ஆய்ந்தபின்பு சுருக்கிட்டு ரோமந்தன்னை
அப்பனே தயிலத்திற் பிரட்டிப்போடு
காய்ந்தபின்பு ரோமத்தின் றயிலமெல்லாங்
கரியோடே வாரிவைத்து கருத்தைக்கேளு
தேய்ந்தபின்பு கருங்குன்றிச் சாறதுவும் படிதான்
சிறப்பான கொள்ளிலைச்சாற் படிதானொன்றே. 719

ஒன்றான பொன்னினா வரையின்சாறு
உயர்ந்த ஆதளையின்பால் படிதானொன்று
கன்றானசெவ் வல்லிக்கிழங்கு சாற்படிதான்
கார்த்திகையின் கிழங்குசாற் படிதானொன்று
தின்றான புளியரணைக் கிழங்குச்சாறு
சிறப்பான நல்லெண்ணெய் சமனாய்க்கூட்டி
நன்றாக வடுப்பேற்றிக் கமலம்போலெரித்து
நலமாகக் குழம்பான பதத்திற்பாரே. 720

பார்க்கவே கெந்தகந்தான் பலமுமூன்று
பரிவான வெண்காரம் பலமுமைந்து
ஏர்க்கவே துரியது பலமும்ஐந்து
எளிதான வீரமது பலமுமொன்று
கார்க்கவே குடோரியது பலமுமொன்று
கல்வத்தி லிட்டெல்லாம் பொடியாய்ப்பண்ணிச்
சேர்க்கவே முன்முருந்தி லொக்கப்போட்டுச்
சிறப்பாகக் குழம்பான பதத்தில்வாங்கே. 721

வாங்கியே காந்தத்திற் பிசறிக்கொண்டு
வளமாகச் சரவுலையி லூதுவூது
தாங்கியே கரட்டோடு சத்தாய்வீழுந்
தப்பாமல் சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
தேங்கியே கரடெடுத்துத் தயிலத்தில்பிசறிச்
செப்பரிய நாளத்தா லூதித்திரு
பாங்கியே ஐந்துதர மூதித்திரு
பரிதிபோற் செம்பாக நிற முமாச்சே. 722

செம்பான காந்தமது பலந்தானாலு
திறமான தங்கமது பலந்தானொன்று
கம்பான நாகமது பலந்தானொன்று
கருதியதோர் கட்டான சூதமொன்று
நம்பான யிதுநாலு முருக்கிக்கொண்டு
நலமாகக் கல்வத்திற் பொடியாய்பண்ணி
கொம்பான குலாமல்லிச் சாற்றாலாட்டிக்
குமுறவே மூன்றுநாள் ரவியிற்போடே. 723

போட்டுவா முன்சொன்ன சூதத்திலாட்டி
பெரிதான கெந்தகத்தைச் சுத்திப்போடு
கேட்டுவா பொடிபண்ணி மேருக்கேற்றிக்
கெடியான வாலுகையின் மேலேவைத்து
நாட்டுவாய் பனிரண்டு சாமந்தீயை
நலமாக ஆறவிட்டு யெடுத்துப்பாரு
சாட்டுவாய் மாதளம்பூப் போலேயாகுஞ்
சகத்திரத்திற் கொன்றாடும் வேதைதானே. 724

தானான செந்தூரங் குன்றியுண்ணு
சாதகமாய் மண்டலத்திற் சட்டைகக்கும்
கோனான காயமெல்லாஞ் சிவந்துமின்னுங்
கொடிதான நாமமெல்லாம் பவளம்போலாம்
பானான வஸ்துவுண்டா லகிரியில்லை
பாஷாண வர்க்கங்கள் கறிசோறாகும்
ஊனான சடந்தானுங் கோடி காலம்
உத்தமனே சமாதியிலே யிருக்கலாமே. 725

லோகத் திராவகம்

இருக்கவே லோகமென்ற திராவகத்தை
யியம்பிடவே யானந்தாவுற் றுக்கேளு
பருக்கவே வெடியுப்பு பலந்தானூறு
பரவியதோர் சீனமது எண்பத்தைந்து
சுருக்கவே துரிசியது நாற்பதாகுஞ்
சுளுவான சாரமது இருபதாகும்
உருக்கவே கல்லுப்புப் பலந்தான்பத்து
உயர்த்தியாம் பூநீறு பலந்தானஞ்சே 726

அஞ்சான சத்தியென்ற சாரம்நாலு
அழகான கெந்தியுப்பு பலந்தான்மூன்று
வஞ்சான உருவியுப்பு பலந்தானொன்று
வகையெல்லாம் பொடித்துமொரு சட்டியிட்டு
கஞ்சான கழுதையுடரத்தம் வார்த்து
கடுகரைத்து ஏழுநாள் ரவியிற்போட்டு
துஞ்சான அடிகன்த்த கலசத்திட்டு
துயரவே யடிக்கசல மட்டும்போடே. 727

போட்டதின் மேற்சக்கரமாம் பாலைச்சட்டி
பொருந்தவே மேல்கவிழ்ந்து மாஷந்தன்னால்
நாட்டதின் மேல்சீலைசெய்து ரவியில்வைத்து
நலமாக வடுப்பேற்றி யெரிநேர்பாக
நீட்டதின்பின் பீங்கானாங் கிண்ணிவைத்து
நேர்பாகச் சட்டியின்மேல் தண்ணீர்குத்தி
பூட்டதின் மேற்புகையோடச் சலந்தான்வீழும்
பொருந்திமுன்னீர் தனையகற்றிப் பின்னீர்வங்கே. 728

வாங்கியே முன்வைத்த சரக்குதன்னை
வகையாக ஐந்துபங்கு பண்ணிவைத்து
தேங்கியே ஒருபங்கி லிதனையூத்து
சிறப்பாக முன்போலே கலசத்திட்டு
தாங்கியே யடுப்பேற்றி யெரித்துவாங்கி
சாதகமாய் முன்போலே மறுசரக்கிலூற்றி
பாங்கியே யுலரவிட்டுக் கலசத்திட்டு
பக்குவமாய் ஐந்துதரமிப்படியே வாங்கே. 729

வாங்கியே அரக்காலே குப்பிபண்ணி
வளமாக திராவகத்தை யதிலேவாரு
தேங்கியே சூதமொரு பலந்தானெட்டு
சிறப்பாக கல்வத்திலிட்டுக் கொண்டு
வாங்கியே தினமூன்று திராவகத்தாலாட்டி
மறுபீங்கான் றன்னிலே வழித்தெடுத்து
தாங்கியே கரியோட்டில் வறுத்துக்கொண்டு
சமரசமாய்ப் பொடிபோலே மேருக்கேற்றே. 730

ஏற்றியே வாலுகையின் மேலேவைத்து
இதமாக தீயெரித்து பனிரண்டுசாமம்
போற்றியே யாறவிட்டு யெடுத்துக்கொட்டி
புகழாகத் திராவகத் திலரைத்துலர்த்தி
தூற்றியே கொடிபோலே குப்பிக்கிட்டுச்
சுகமான வாலுகையின் மேலேவைத்து
பாற்றியே பனிரண்டு சாமந்தானும்
பக்குவமாய்த் தீயெரித்து ஆறவிட்டுவாங்கே. 731

வாங்கியெல்லா முன்போல வரைத்தெடுத்து
வரிசையா யைந்துமுறை தீர்ந்துயேறு
தாங்கியே செந்தூர மருணன்போலத்
தனத்திலே யிருக்குமப்பா யிதனின்வேதை
ஓங்கியே கோடிக்கு ஒன்றுஓடும்
உத்தமனே கதலியுட பழத்தைவாங்கி
தேங்கியே பணவிடை தானுள்ளே கொள்ளச்
சிவசிவா சூரியன்போல் தேகமாச்சே. 732

ஆச்சப்பாதிரா வகத்திலை ந் தம் வித்தை
ஆராய்ந்து ஒவ்வொ ன் றாய்ப் பார்த்துத்தேறு
ஏச்சப்பா கட்டினமோ உருக்கினமோகோடி
யெடுத்தோடுங் குளிகைமுதல் செந்தூரங்கோடி
வாச்சப்பா கன்னமுதற் களங்குகோடி
வழங்கியதோர் குருக்கோடி மெழுகுகோடி
பாச்சப்பா ஒவ்வொன்றில் வேதைகோடி
பரிட்சிக்கத் தூரமுத லெட்டுமாமே. 733

துரிசி திராவகம்

ஆமென்ற துரிசியுட திராவகத்தைச் சொல்வேன்
அப்பனே துரிசியொரு பலந்தானூறு
காமென்ற வெடியுப்பு பலந்தானூறு
கலங்காத சீனமது பலந்தானூறு
வேமென்ற சவுட்டுப்பு பலமுமைந்து
வெருளாதே வளகிலுப்பு பலமுமைந்து
தாமென்ற கெந்தியுப்பு பலமுமைந்து
தயங்காதே யிந்துப்பு பலமுமைஞ்சே. 734

அஞ்சோடு சத்தியென்ற சாரம்பத்து
அப்பனே கல்லுப்பு பலமும்பத்து
நஞ்சோடு வீரமது பலமுமூன்று
நவாச்சாரம் ரண்டு பத்து பலமும்போடு
பிஞ்சோடு கருவெங்கு பலமுமொன்று
பேசாத வாளையுப்பு உருவியுப்பு
பஞ்சோடு மணியுப்பு மேனியுப்பு
பதறாதே ஒவ்வொன்று பலமும்போடே. 735

போட்டெல்லாம் பரங்கியுட சாராயம் வார்த்துப்
பொருந்தவே மூன்றுநாளாட்டு ஆட்டு
ஆட்டெல்லாம் ரவியிலிட்டு ஐந்துபங்குபண்ணி
அப்பனே ஒருபங்கு கலசத்திட்டு
பூட்டெல்லாம் பாலையென்ற சட்டிமூடிப்
புகழாக மாஷத்தால் சீலைசெய்து
மூட்டெல்லா மடுப்பேற்றி பீங்கான்வைத்து
முயற்சியாய்த் திராவகத்தை வாங்கிடாயே. 736

வாங்கிட்ட திராவகத்தை மறுசரக்கிலூற்றி
வளமாக ரவியிலிட்டு கலசத்திற்போட்டு
தேங்கிட்ட திராவகத்தை வாங்கித்திரு
சிறப்பாக வைந்துதர மிப்படியேவாங்கு
பாங்கிட்ட அரக்காலே குப்பிப்பண்ணிப்
பதனமாய் மூடிவைத்து பாங்கைக்கேளு
தேங்கிட்ட பாறையுப்பு பலமூரேழு
சிறப்பாக திராவகத்தில் தோய்த்திடாயே. 737

தோய்த்துமே [illegible]மேழு ரவியிற்போடு
தொன்மையாம் வெடியுப்புச் சீனக்காரங்
காய்த்துமே கடல்நுரையுஞ் சூடனிந்து
கலங்காத பூநீற் காரம்வீரம்
தேய்த்துமே நவாச்சாரந் துரிசுவெள்ளை
சிறப்பாகப் பதினொன்று திராவகத்திலாட்டி
ஏய்த்துமே வில்லைகட்டி யுலரப்போடு
இதமாக அகலிலிட்டு அவிர்ப்புடமாய்ப்போடே. 738

புடம்போடு அரைத்தரைத்து ஐந்துதரந்தானும்
புகழாக யெருவெடுத்து பத்துமட்டும்
திடம்போடு திராவகத்தில் பலந்தானேழு
சிறப்பாகப் புடம்போட மருந்தைத்தானும்
கடம்போடு குழம்பாகக் கரைத்துக்கொண்டு
கல்லுப்பில் பிசரியல்லோ கரியோட்டில்வாட்டு
நடம்போடு குழம்பெல்லாந் தோய்த்துவாட்டு
நலமாக கரியோட்டில் முதிரவாட்டே. 739

வாட்டியே கவிசிக்கு மருந்துகேளு
வகையாக யேறலென்ற கிளிஞ்சில்தன்னை
காட்டியே சுண்ணாம்புஞ் சவுட்டுமண்ணுங்
கலங்காதே தண்ணீரில் கலக்கிக்கொண்டு
ஒட்டியே தீயெரித்து வற்றமட்டும்
உத்தமனே புடம்போட்டுத் தூளாய்ப்பண்ணி
நாட்டியே திராவகத்தா லரைத்தரைத்து
நலமாக ஐந்துபுடம் போட்டுத்தீரே. 740

தீரவே புடம்போட்ட மருந்துதன்னை
திராவகத் தாலரைத்துருட்டி மெழுகுபோல
ஆரவே முன்னுப்பில் கவசங்கட்டி
அரையாதே கலசத்திற் பூநீறுவைத்து
ஊரவே யதின்மேலே உப்பைவைத்து
உத்தமனே மேலுமந்த பூநீறுபோட்டு
தேரவே சில்லிட்டுச் சீலைசெய்து
தீர்க்கமாய்க் கெசபுடமாய்ப் போட்டுவாங்கே. 741

வாங்கியே யுப்புபண்ணிப் பார்த்தால்மக்காள்
வயிரம் போலிறுகியது தங்கம்போலாம்
ஓங்கியே கரியில்வைத்து உருக்கிப்பாரு
உத்தமனே தங்கம்போல் கண்விட்டாடும்
தேங்கியே கரியில்நின்று கும்மித்தானால்
சிறப்பாக முன்போலப் புடத்தைப்போடு
ஏங்கியே ஒருவருடன் பேசவேண்டா
மேத்தியே கடுங்காரச் சுன்னத்திலூதே. 742

பாலரசம்

சுன்னமென்ற குகைதனிலே வூதிப்பின்மைந்தா
துடியாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
சுன்னமென்ற திராவகத்தி லிதனைப்போட்டு
கலறவே மத்தித்து வைத்துக்கொண்டு
பன்னமென்ற சூதமது பலந்தானெட்டு
பாய்ச்சிய கல்வத்தில் திராவகத்தைவாரு
சின்னமென்ற சாமமொன்று அரைத்துநன்றாய்ச்
சிறப்பாக ரவிதனிலே போட்டிடாயே. 743

போட்டுவா அரைத்தரைத்து ரவிதனிலேயப்பா
புகழாக மாதமொன்று மறவாமல்நீயும்
காட்டுவாய் சூதமது சிவப்பேயாகும்
கண்டுகொள்ள வேதையுமாங் கண்டுகொள்ளு
நீட்டவே குகையில்வைத்துக் காயவைத்து
நினைவாகக் கையிடவே குளிர்ந்துபோகும்
பூட்டவாய் வெந்நீரைக் கொப்பரையிற்காய்ச்சிப்
புகழாகத்துளி சூதமதுக் குள்போடே. 744

போட்டுடனே குளுந்ததண்ணீர் போலேயாகும்
போக்கான பாலரசம் பரிட்சைசெம்மை
நாட்டுடனே நாலுபலம் நிறுத்துக்கொண்டு
நலமான தங்கமது பலந்தானொன்று
பூட்டுடனே கல்வத்திலிதனைப் போட்டுப்
புகழான கருந்துளசி சாறுவிட்டு
தோட்டுடனே நாள்மூன்று அரைத்துபின்பு
துடியான கெந்தகச்சேரு போடே. 745

சந்திரோதயம்

போட்டரைத்துத் தினமொன்று ரவியில்வைத்துப்
பொடியாக்கி காசியென்ற மேருக்கேற்றி
நீட்டரைத்து வாலுகையின் மேலேவைத்து
நினைவாகத் தீயிடுவாய் பனிரண்டுசாமம்
கூட்டரைத்து ஆறவிட்டு யெடுத்துப்பாரு
கொடியான மாதளம்பூ நிறம்போல்நிற்கும்
தோட்டரைத்து சந்திரோதய மென்றநாமந்
துலங்கியிதின் மகிமைசொல்ல முடியாவாறே. 746

முடியாத செந்தூரங் குன்றியுண்ண
முனையான காமமது சிவந்துமின்னும்
பிடியாத மதயானை பிலனுக்கொக்கும்
பெண்களுடனனு போகம்பண்ணி னாக்கால்
துடியாக நூறுபேர் வேணும்வேணுஞ்
சுக்கிலந்தா னூருகின்ற கேணியாகும்
அடியாத நோயெல்லா மறுத்துப்போடு
மம்மம்மா செண்பகத்தின் கண்போலாமே. 747

ஆமிந்தச் செந்தூர மாயிரத்துக்கொன்று
அளைந்திடவே யிருபத்து ஐந்துமாற்று
போமிந்த சரக்குகளிற் பொட்டுப்போடப்
புகழாகக் கட்டுண்டு மெழுகுமாகும்
காமிந்த துரிசியின்மேல்வாய் நீராலப்பிக்
கடுரவியிற் போட்டிடவே குருவுமாகும்
வாமிந்தத் துரிசியினால் சூதங்கட்டும்
மகத்தான லிங்கமது ஒருபலந்தான். 748

ஒருபலந்தான் கட்டியாய் வாங்கிக்கொண்டு
உத்தமனே அயச்சட்டிக் குள்ளேவைத்து
சுருபலந்தான் சுருக்கிடவே மெழுகாய்ப்போகும்
சூட்சாதி வேதைகள் கோடியுண்டு
கருபலந்தான் ரவிமதியுஞ் சேர்த்தூய
கண்காணா மாற்றதுவு மதிகங்காணும்
நிருபலமாய் நவலோக நூற்றிலீய
நிச்சயமாய் மாற்றென்ன பனிரண்டாமே. 749

மகாதிராவகம்

ஆமப்பா திராவகத்தை சொல்வேனப்பா
அப்பனே எருக்கோடு குப்பைமேனி
போமப்பா தாழையொடு அறுகுவாழை
போரான மத்தையொடு துத்திகள்ளி
தாமப்பா தென்னிலையும் நாயுருவி நாணல்
தயங்காத பிரண்டையொடு முடக்கொத்தானும்
சாமப்பா புரசோடு முள்ளங்கித்தினைப்புல்
தயங்காதே காயவைத்துச் சாம்பலாக்கே. 750

காயவைத்துச் சுட்டுமே சாம்பலாக்கிக்
கலங்காத வெவ்வேறாய்த் தண்ணீர்கரைத்துத்
தோயவைத்து மூன்றுநாள் தெளிவைவாங்கிச்
சுகமாக வடுப்பெரித்து உப்பாய்க்காய்ச்சி
நேயவைத்து ஒவ்வொன்றாய்க் காய்ச்சிவெவ்வேற்
நெகிழாம லொவ்வொன்று பலமுந்தூக்கிச்
சாயவைத்து மானினொடு ஆடுயானை
தயங்காத ஒட்டையொடு கழுதைதானே. 751

தானென்ற குதிரையொடு மாடுயேழுந்
தனித்தனியே நீர்வாங்கி உப்பாய்க்காய்ச்சி
வானென்ற ரண்டுபலந்தூக்கிக் கொண்டு
வளமான முசல்புழுக்கையெலிப்புழுக்கை
தேனென்ற வவ்வாலின் புழுக்கையோடு
சிறப்பாக யிவைமூன்றுஞ் சுட்டுச்சாம்பல்
கானென்ற ரண்டுபலங்கடல் நீர்தன்னில்
கரைத்திறுத்துத் தெளிவிறுத்து உப்பாய்க்காய்ச்சே. 752

காச்சியது பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கடிதான வீரமது பலமுமூன்று
தாச்சியே தாளகமும் பலமுமூன்று
தயங்காத சிலையதுவும் பலமுமூன்று
பாச்சியே வெள்ளையது பலமுமூன்று
பரிவான கந்தகமும் பலமுமூன்று
வாச்சியே துத்தமது பலமுமூன்று
மகத்தான வேதியது பலந்தானாறே. 753

ஆறாகச் சாரமது பலந்தானாறு
அடவான கல்லுப்பு பலந்தானாறு
ஏறாக யிந்துப்பு பலந்தானாறு
எளிதான வளகியலுப்பு பலந்தானாறு
பேறாக வெண்காரம் பலந்தானாறு
பெலத்துநின்று சத்தியென்ற சாரமாறு
நீறாகப் பூநீறு பலந்தானாறு
நிலைத்த கெந்திவுப்பதுவும் பலந்தானெட்டே. 754

எட்டாத கடல்நுரைதான் பலமுமெட்டு
இயல்பான துரிசியது பலந்தானெட்டு
கட்டாத வெடியுப்பு பலந்தானாறு
கலங்காத சீனமது பலமும்நீறு
தெட்டாத பரங்கியுட சாராயம்வார்த்து
சிறப்பாக யேழுநாள ரைத்துலர்த்து
பட்டாத ஐந்து பங்கு பண்ணிவைத்து
பக்குவமா யொருபங்கு கலயத்தூட்டே. 755

ஊட்டியே மேற்சட்டி கவிழ்த்துமூடி
உத்தமனே மாமிஷத்தாற் சீலைசெய்து
நீட்டியே அடுப்பேற்றி யெரிநேர்பாக
நிலைத்தவும் புகையோடே சலந்தான்வீழும்
காட்டியே புகைநின்றால் திராவகமும்நிற்குங்
கலங்காதே முன்வைத்த சரக்கில்வார்த்துச்
சூட்டியே ரவியில்வைத்துக் கல்வத்திட்டு
துடியாகத் தீநீரை வாங்குவாங்கே. 756

வாங்குமே ஐந்துதர மூட்டியூட்டி
மறவாதே அரக்கான குப்பியிலேவாரு
தேங்குமே மணற்கல்லு ரோமமத்தி
சிறப்பான நவலோக மெல்லாஞ்சாம்பல்
ஏங்குமே முகத்திலந்த தூமம்பட்டால்
எளிதிலே கண்களெல்லாம் கரைந்துபோகும்
பாங்குமே தூமமுகம் பார்த்துநின்று
பதறாதே விறகைமெள்ள அடுப்பிற்போடே. 757

போட்டிட்டு தூரத்தேநின்று கொள்ளு
புகைமேலே பட்டுமென்றால் சடம்விரிந்துபோகும்
வாட்டிட்டு சரக்குகளிற் றோய்த்துப்போட
மகத்தான மெழுகாகும் வேதையாகும்
நீட்டிட்டு யேறலென்ற கிளிஞ்சில்தன்னை
நீரோடே யுவர்மண்ணுந் தண்ணியிலேபோட்டு
காட்டிட்டு அடுப்பேற்றி யெரித்துவாங்கி
கனபுடமாய்ப் போட்டெடுத்துத் தூளாய்ப்பண்ணே. 758

பண்ணியே திராவகத்தி லிதனைப்போட்டு
பதறாதே மூன்றுதரங் கழிந்தபின்னை
நண்ணியே கல்வத்தி லரைத்துருட்டி
நலமாக அகலிலிட்டு புடத்தைப்போடு
கண்ணியே யைந்துதரந் திராவகத்திலரைத்துக்
கடுகியே புடமைந்து போட்டுத்தீரு
திண்ணியே பொடியாக்கிப் பீங்கானில் வைத்து
சிற்பரம்போல் சாரமொரு கட்டிவாங்கே. 759

சாரக்கட்டு சுன்னம்

வாங்கியொரு கலசத்திற் பொடிக்கீழிட்டு
வாகான சாரமென்ற கட்டிவைத்து
தேங்கியே மேலுமிந்தப் பொடியைப் போட்டுச்
சிறப்பாக மேல்மூடி சீலைசெய்து
தாங்கியே ஐந்தெருவில் புடத்தைப்போடு
தயங்காதே ஆறிவிட்டெடுத்துக் கொண்டு
ஓங்கியே பொடியெல்லாம் பொடித்துக்கொண்டு
உத்தமனே முன்போலக் கட்டிவையே. 760

கட்டிவைத்து முன்போலப் புடத்தைப்போடு
காணப்பா யேழுபுடம் போட்டுத்தீரு
அட்டிவைத்த தந்தம் போலிருக்கும்பாரு
ஆச்சரிய ஆசாரத்தின் முடிவுசொல்லப்போகா
முட்டிவைத்த சாரத்தில் செயநீர்கோடி
மூதண்ட குருக்கோடி செந்தூரங்கோடி
பொட்டிவைத்துத் திறந்ததுபோல் வாதமாச்சு
போக்கிதிலே மெத்தவுண்டு புகட்டியாடே. 761

ஆடவே சாரத்தைக் கட்டியாக
அதின்மேல சவ்வீரம்பூரம் போட்டு
நீடவே புழுகோடு சூதமைந்தும்
நேரானவாய் நீராலரைத்துப் பூசிக்
கூடவே சுண்ணாம்புக் குகையிலிட்டு
கூசாதேகரி யோட்டி லூதிவாங்கு
சூடவே நீராகும் பீங்கானில் வைத்துத்
துடியாகப் பனியில் வைக்கச்செயநீராமே. 762

ஆமின்னஞ் செயநீரால் சொல்லக்கேளு
அச்சரியஞ் சூதவித்தை கல்வத்திட்டு
வேமின்னஞ் செயநீரா லரைத்தரைத்து
வெகுளாதே ரவிதனிலே காயப்போடு
தாமின்ன மிருபதுநாளரைத் தரைத்துச்
சார்பாக ரவிதனிலே காயப்போடு
சேமின்ன மேழுசட்டை நீக்கிப்போட்டு
சேர்ந்திருக்கும் ரசந்தானுஞ் செய்திகேளே. 763

சேதிகேள் தேங்காயின் குடுக்கையிலேவார்த்துச்
சிறப்பாக மெழுகடைத்து வைத்துக்கொண்டு
வாதிகேள் ரவிமதியில் தகடுவாங்கி
வளமாக ரசந்தடவிப் புடத்தைப்போட்டு
பாதிகேள் பதினாறு மாற்றுமாகும்
பரிசத்தில் வேதையுமாம் பாரு பாரு
சோதிகேளிந்த ரசந்நின்றால் காயஞ்
சுறுக்காகச் சட்டைகக்கி வாலையாமே. 764

கெந்தகத் தயிலம்

ஆமின்னங் கெந்தகத்தின் தயிலஞ்சொல்வேன்
அப்பனே கெந்தகந்தான் பலமும்பத்து
காமின்னங் கற்றாழைக் குள்ளேவைத்து
கடு ஆவினெய் பாலிற் சுத்திபண்ணி
தேமின்னங் கல்வத்திலி தனைப்போட்டுச்
சிறப்பான குருக்கத்தி விரையைவாங்கி
ஓமின்ன மயிற்க்கொன்றை விரையினூடே
உற்பனமாய்ச் சமனாக்கி வெங்காய்ச்சாறே. 765

சாற்றினா லரைத்தரைத்து வில்லைகட்டி
சார்வாகப் பூப்புடத்தில் தயிலம்வாங்கு
தேற்றினால் தயிலம்விட்டுக் கெந்தகத்தை
சிறப்பாக விருபது நாளாட்டுஆட்டு
பேற்றினால் துரிசிவெள்ளை பலந்தானொன்று
பேராகக் கட்டியதோர் சாரமொன்று
காற்றினால் கட்டியதோர் உப்பதொன்று
கலங்காதே கூடவிட்டு மூன்றுநாளாட்டே. 766

ஆட்டியபின் காசியென்ற மேருவிலேபோட்டு
அப்பனே மூக்கின்வாய்க் கதம்பைவைத்து
மூட்டியபின் கும்பித்துச் சட்டியிலேபோட்டு
மூக்கின்வாய்ப் பிரம்பைவிட்டு மண்ணைக்கொட்டி
திட்டியபின் அடுப்பேற்றி யடுப்புக்குள்ளே
சிறப்பாகப் பீங்கானாம் பாணிவைத்து
ஒட்டியபின் சட்டியிலே எருவைப்போட்டு
உத்தமனே தயிலமெல்லா மெடுத்துவையே. 767

தயிலமெல்லாம் வீழ்வதற்கு மூன்றுபுடம்போடத்
தங்காம லிறங்கிப்போம் பீங்கானுள்ளே
அயிலமெல்லா மீந்தாலுந் தயிலவிலைக்கொவ்வா
தாச்சரியம் பரிமேலே பூசிக்காய்ச்ச
தயிலமெல்லாந் தங்கமது செம்பேயாகும்
மாசற்ற செம்பொன்னு நவலோகங்கோடி
கயிலமெல்லா முருகையிலே செம்பையீயக்
கண்கொள்ளா வேதையுமாங் கண்டுபாரே. 768

கேசரத்தின் தயிலம்

பாரப்பா கேசரத்தின் தயிலஞ்சொல்வேன்
பரிவான கேசரந்தான் பலந்தானூறு
சேரப்பா யிளவயது ரோமந்தன்னை
சீயக்காய் கொதியிட்டுக் கழுவிப்போட்டு
காரப்பா யெள்ளுபோல் நறுக்கிக்கொண்டு
கசகாம லெண்ணெய்தனில் தோய்த்தெடுத்து
சீரப்பா சட்டி லே வறுத்துக்கொண்டு
சிறப்பாக கல்வத்திலிதனைப் போடே. 769

போடவே கெந்தகந்தான் பலமும்பத்து
புகழான தாளகமும் பலமுமைந்து
நாடவே சிலையதுவும் பலமுமூன்று
நஞ்சான வீரமது பலமும்ரண்டு
கூடவே கட்டியதோர் சாரமொன்று
குறிப்பாகக் கட்டியதோர் கல்லுப்பொன்று
தேடவே துரிசுகுரு பலந்தானொன்று
சிறப்பாகக் கூடவிட்டுத் திறமாயாட்டே. 770

ஆட்டுவது யெருக்கம்பால் நாலுசாமம்
அப்பனே மெழுகாகும் பதத்தில்வாங்கிப்
பூட்டுவது தெல்லுப்போல் வில்லைகட்டி
பேரான பூப்புடத்தில் தயிலம்வாங்கி
நாட்டுவது பாணியிலே யடைந்து வைத்து
நலமாக அரப்பொடிதான் பலமுமெட்டு
மூட்டுவது தயிலத்திற் பிசறிக்கொண்டு
.முயற்சியாய்க் காரமிட்டு வுருக்கிடாயே. 771

அயச்செம்பு

உருக்கிடவே யைந்துதரந் தயிலத்தில்பிசறி
உத்தமனே ரவிபோலே செம்புமாகும்
சொருக்கிடவே மதிதனிலே யைம்பதுக்குஒன்று
துடியாக மாற்றேமு காணுங்காணும்
அருக்கிடவே தங்கமிட்டு வுருக்கிக்கொண்டு
ஆதியென்ற சூதமிட்டுக் கெந்தியிட்டு
பருக்கிடவே வாலுகையில் செந்தூரித்தால்
பதினாறு மாற்றாக விளங்கும்பாரே. 772

பாரின்னந் தாளகத்தின் செம்புசொல்வேன்
பருகல்லுச் சுண்ணாம்பு சுட்டுக்கொண்டு
காரின்னந் தாளகத்தைக் கிளிபோற்கட்டிக்
கற்சுண்ணங் கீழ்மேலு மூடிநன்றாய்
வாரின்னம் வெந்நீரை விட்டுநீற்று
மறவாதே யிருபத்து வொன்றுநீயும்
சேரின்னங் கூழ்ப்பாண்டங் காடியிலே போட்டுத்
திறமாகக் கொதிக்கவிட்டு யிறக்கிடாயே. 773

தாளகம்

இறக்கியே கல்வத்திற் சேரைபோட்டு
இதமான குலாமல்லிச் சாற்றாலாட்டி
அறக்கியே யுலரவிட்டு யைந்துநாளாட்டு
ஆடுதின்னாப் பாளைசாற் நாலுசாமம்
மறுக்கியே சிறுகுட்டித் தக்காளிச்சாறு
மைந்தனே யமுரியிலைச் சாற்றிலாட்டு
நறுக்கியே யெருக்கினுட பழுப்புச்சாறு
நலமான வகத்தியுட பழுப்புச்சாறே. 774

பழுப்பான கெருடனுட கிழங்குசாறு
பரிவான யெருக்கினுட கிழங்குச்சாறு
கொழுப்பான வெள்ளாட்டு ரத்தத்தோடு
கூரான முசல்ரத்தங் கோழிரத்தஞ்
செழுப்பான வெள்ளைமந் தாரைப்பூச்சாறு
திறமான யிந்திரமாங் கோபப்பூச்சி
நழுப்பான பூநாகம் நூறுபோட்டு
நல்கரைத்து ஒவ்வொருநா ளுலரப்போடே. 775

உலர்ந்தபின்பு துரிசிபலம் நாலுபோடு
உத்தமனே வெண்காரம் பலந்தான்மூன்று
அலர்ந்தபின்பு வெடியுப்பு பலந்தான்ரண்டு
அப்பனே வீரமது பலந்தானொன்று
கலந்தபின்பு சீனமது பலந்தான்போடு
கற்பூர சிலாசத்துப் பலந்தான்ரண்டு
குலந்தனக்குக் கோடாலி குடோரியொன்று
கூசாதே கூடயிட்டு அரைத்திடாயே. 776

அரைத்திடவே யெலியாலம் பாலாலாட்டி
அப்பனே மூன்றுநா ளரைத்துப்பின்பு
நிரைத்திடவே தெல்லுப்போல் வில்லுகட்டி
நேராகச் சரவுலையி லூதுவூது
துரைத்திடவே யுருகியது சத்தாய்வீழுஞ்
சிதறாம லெடுத்ததெல்லாங் கட்டைதானும்
புரைத்திடவே பின்பொருக்கா லுருக்கிப்பாரு
பொன்போலாஞ் சத்தெல்லா மெடுத்துக்கொள்ளே. 777

கொள்ளவே குகையில்வைத்துக் காரமிட்டுக்
    கூசாதே வுருகியெல்லா மணியாய்வாங்கே
விள்ளவே நவலோகம் நூற்றுக்கொன்று
    மேவியதோர் காசெடைதான் சத்தையீய
துள்ளவே பதினாறு மாற்றுமாகுந்
    துடியான சத்திலே கிண்ணிவார்த்து
அள்ளவே சீலைசெய்து வாலுகையில்வைத்து
    ஆதியாஞ் சூதமிட்டுக் கொதிக்கவையே. 778

கொதிக்கையிலே கருமத்தஞ் சாறுவாரு
    கூசாதே வெண்ணெயைப் போலாகுமட்டும்
விதிக்கையிலே வெண்ணெயெல்லாம் வழித்துக்கொண்டு
    மேலான குளிந்ததண்ணீ தன்னிற்போட்டு
மதிக்கையிலே ஆரையிலைக் கவசங்கட்டி
    வகையாக யீரஞ்சு புடத்தைப்போடு
துதிக்கையிலே மணியாலே சிவத்தைப்பண்ணு
    செனனமென்ற மூவேழு மோட்சந்தானே. 779

தானென்ற மணியாலே செந்தூரம்பண்ணு
    சமர்த்தாகக் குருபண்ணு களங்குபண்ணு
வானென்ற வெளிகடக்க காயசித்திபண்ணு
    மாசற்ற யோக சித்திகெவுன சித்திபண்ணு
தேனென்ற வமுர்தமங்கே சிந்தைபண்ணு
    செகசால வார்த்தை யெல்லாஞ் சகம்போலெண்ணு
கோனென்ற குருந்தேடி தொண்டு பண்ணு
    கூப்பிட்டா லேனென்பா ளாயிதானே. 780

சாதிலிங்க வைப்பு

தானென்ற சாதிலிங்க வைப்புக்கேளு
    சாற்றரிய சூதமது பலந்தானூறு
தேனென்ற கெந்தகந்தா னிருபத்தைந்து
    நேர்ப்பாக கெந்தகத்தை ஒட்டிலிட்டு
வானென்ற தணலில்வைத்து உருக்கிக்கொண்டு
    வரிசையாய்ச் சூதத்தை யதிலேபோட்டு
கானென்ற அயத்துடுப்பால் கிண்டிக்கிண்டிக்
    கறுப்பாகத் தூள்போலே யாகும்பாரே. 781

ஆகுமப்பா கெந்தகத்தில் நாலத்தொன்று
    அசையாதே வெடியுப்புப் பொடித்துப் போட்டு
ஏகுமப்பா செம்பாலே குடம்போல் பண்ணி
    வகையாக அதற்குள்ளே தூளைப்போடு
ஏகுமப்போ அரைவாசி மட்டும்போடு
    எழிலான வாலுகையின் மேலேவைத்து
போகுமப்பா தீயெரிப்பா யெட்டுநாள்தான்
    புகழாகப் பதங்கித்து லிங்கமாமே. 782

ஆமப்பா பதங்கித்துப் பவளம்போலே
அசையாது மேல் நின்றதது தான் லிங்கம்
போமப்பா பாண்டமது செம்புத்தொட்டி
புகழாக அடியில்நின்றால் தீமுறுகலாச்சு
காமப்பா நடுவில் நின்றால் கார்முகிலுமாச்சு
கடுகியிதை மெழுகுசெய்யில் வேதையாகும்
சோமப்பா பாஷாணமுப் பத்திரண்டு
சிறப்பான வைப்புக்கு நாலுமாச்சே. 783

நாக பாஷாணம்

வைப்பான நாகமென்ற பாஷாணத்தை
வகையாகச் சொல்லுகிறேன் வேதையாக
மெய்ப்பான நாகமது பலந்தான் பத்து
விரவியே யிலுப்பைநெய்யிற் சுத்திபண்ணி
நைப்பான தகடுதட்டிப் புளியிலைபோல் நறுக்கி
நயமான கூத்தனென்ற யிலையரைத்து
கைப்பான தகட்டுக்குக் கவசங்கட்டி
கடுகியைந்து வெருனிலே புடத்தைப் போடே. 784

போட்டபின்பு வீரைந்து புடந்தானப்பா
புகழாக அயச்சட்டித் தனிலுருக்கி
நீட்டபின்பு குமிரிவேர் பொடிபொடியாய்நறுக்கி
நினைவாகக் கூடவிட்டு அயத்தால் கிண்டு
மூட்டபின்பு பனிரண்டு சாமந்தானு
முத்தமனே வேர்போட்டுக் கிண்டக்கிண்ட
மாட்டபின்பு மஞ்சள் நிறம் பற்பமாகு
மைந்தனே யிதைநிறுத்துக் கல்வத்திற்போடே. 785

போடவே நாகமென்ற தூள்தான்பத்து
புகழான சூதமது பலந்தான் பத்து
நீடவே துரிசியது பலந்தானைந்து
நேர்பான சூடனது பலமுமைந்து
வாடவே வெண்காரம் பலந்தானைந்து
வரிசையாய்க் கெந்தியது பலமுமைந்து
தேடவே வெள்ளையது பலமுமூன்று
சிறப்பான வீரமது பலமுமூணே 786

தீமுறுகல் பாஷாணம் - கார்முகில் பாஷாணம்

மூணோடு தாளகமும் பலமுமூன்று
முயற்சியாஞ் சிலையதுவும் பலமுமூன்று
தூணோடு யிதுவெல்லாங் கல்வத்திட்டு
துடியாமல் பொடிபண்ணி சூட்சங்கேளு
நாணாகக்குமட்டி மாதளம்பூ சாற்றில்
கரைத்து யெட்டுநாள் ரவியில்வைத்து
பூணோடு பொடிபண்ணிக் குப்பிக்கேற்றி
புகழாக வாலுகையில் வைத்திடாயே. 787

வைத்திட்டு தீயெரிப்பாய்ப் பனிரண்டு சாமம்
வாகான கமலம்போல் தீயைமூட்டு
தைத்திட்டு ஆறவிட்டு மூன்று நாட்போடு
சாதகமா யாறியபின் னுடைத்துப்பாரு
மொய்த்திட்டு மேலேறிப் பதங்கில் போகும்
மூர்க்கமாம் பாஷாணம் இந்திரனாம்
கைத்திட்ட விலாப்பக்கஞ் சோரமென்ற நாமங்
காணப்பா அடியில் நின்றால் நாகமாமே. 788

ஆமென்ற பாஷாண மூன்று தானும்
அன்றெரித்தார் மன்மதனை யீசன்றானும்
ஓமென்ற நெற்றிக் கண்சுவாலைக் கொக்கும்
உத்தமனே சரக்குக்குக் காலன்காலன்
போமென்ற வெகுதீரன் யெட்டியோடும்
போனபின்பு கற்பகமாம் விருக்ஷமப்பா
வேமென்ற காலனுண்ட கற்பமப்பா
விரைந்துண்ணக் காயசித்தி மண்டலத்தில் தானே. 789

சித்தியாஞ் சூதமென்ற பாஷாணவைப்பு
செப்பரிது சித்தருட நூலிலில்லை
பத்தியாம் பாஷாணம் பணந்தானென்பார்
பரியாசப் பேச்சாச்சு வாதப்பேச்சு
முத்தியாஞ் சூதமென்ற பாஷாணத்தை
முந்நூற்றுக் கொன்றிடவே பத்தும்பத்தும்
வெத்தியாம் பாஷாணம் பச்சைதன்னில்
வேதைவெகு நூலை யாராய்ந்து சொன்னேன் காணே. 790

இந்திரகோபம் - பூதபாஷாணம்

காணப்பா யென்னூலி லொன் றுதப்பில்
கடைகெட்ட போகரென்று சொல்லிக்காட்டு
பூணப்பா கைதப்பில் போக்குத் தப்பும்
புத்தியுண்டாய்ச் செய்திடிலோ வொன்றும் பொய்யா
வீணப்பா ஒருதரந்தான் றப்பிற்றானால்
மீளவதை மூன்றுதர மறைந்துப்பாரு
தூணப்பா துரும்பான வாறுபோலச்
சொல்முறையை மறவாதே சூட்டிப்பாரே. 791

சூட்டியதோ ரெ·ஃனூலில் பாஷாணங்கள்
சுளுகாகும் வேதைக்கு பச்சைதன்னில்
பூட்டியதோர் பூட்டென்ன பாஷாணத்தில்
பிரித்திதறகுள் வேதையென்று சொன்னேனில்லை
காட்டியதோ ரடித்துடையில் புண்தனக்குக்
கண்மறையச் சீலையினால் மூடினாப்போல்
மூட்டியதோர் மூட்டென்ன விதுதான் மைந்தர்
முட்டாளே யிம்மட்டு மறிந்து ஆடே. 792

ஆடவே சூதமது பலந்தான்பத்து
அந்திடைக்கு வெள்ளையென்ற பாஷாணந்தான்
நீடவே கெந்தியது பலமுமைந்து
நிலையான வெடியுப்பு பலமுமூன்று
வாடவே துரிசியது பலமுமூன்று
மகத்தான தாளகமும் பலமும்ரண்டு
மூடவே சிலையதுவும் பலமுமொன்று
முயற்சியாய்க் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணே. 793

பொடிப்பண்ணித் தவசியென்ற முருங்கைச்சாற்றில்
போக்கோடே யேழுநாளரைத்து மைபோல்
முடிபண்ணி ரவியிலிட்டு மேருக்கேற்றி
முயற்சியாய் வாலுகையின் மேலேவைத்து
அடிபண்ணி தீயெரிப்பாய் பனிரண்டுசாமம்
ஆறவிட்டு ராமாறு மகலிற்போடு
கெடிப்பண்ணி பனிரண்டு சாமமானால்
கெடியாகக் குப்பியைத் தானுடைத்துப்பாரே. 794

உடைத்திடவே மேலோடி பதங்கித்து நின்றால்
உத்தமனே சூதமென்ற பாஷாணமாச்சு
அடைத்திடவே யடியில்நின்ற பாஷாணந்தான்
அப்பனே நீலமென்ற பேருமாச்சு
குடைத்திடவே யடியில்நின்றால் காகபாஷாணங்
கூறிதுக்குள் கரைகண்டு சொல்லப்போகா
நடைத்திடவே சிவகாமி சொல்லக்கேட்டு
நாதாக்கள் பதமறியச் சொன்னேன்பாரே. 795

சொன்னதொரு சாத்திர பலங்களெல்லாஞ்
சொற்பெரிய மணித்தாய்க்குக் குருவுமாச்சு
பன்னதொரு மனதிலுள்ள கருவையெல்லாம்
பாடினேன் வெட்டவெளி யாகத்தானும்
மன்னதொரு நாதாக்கள் நூலைப்பார்த்து
மவுனமாய் வைத்ததெல்லாம் வெளியிற்போட்டார்
இன்னதொரு சாத்திரத்தைக் குகைக்குள்வைத்து
இழுக்காகும் நூல்களையே வெளியில் வைத்தாரே. 796

வைத்ததொரு சாத்திரத்தில் வழலைதன்னை
வங்கயாகச் சொல்லாமல் கருமறைத்துப் போட்டார்
மெய்த்ததொரு வீரமென்றப் போக்குதன்னை
வெளியாகச் சொல்லாமல் சூத்திரமாய்ச் சொன்னார்
நைத்ததொரு சரக்கான வைப்புதன்னை
நலமாக ஒளித்துவிட்டால் வாதமெங்கே செய்வார்
பைத்ததொரு வாதத்தி லாதியென்ன
பாங்கான வழலையொரு வீரந்தானே. 797

தானென்ற வழலை சுன்னமானால்
சரக்கொல்லாங் கட்டுண்டு சுன்னமாகும்
வேனென்ற மகாவீரம் வாச்சுதென்றால்
வேதையென்ற சொல்லுக்கு உறுதியாகுங்
கானென்ற கல்லுப்பு கரியில்நீற்று ஆடுங்
கசடான சரக்கெல்லா மூறல்போகும்
வேனென்ற மகாவீரம் வாய்க்காவிட்டால்
வேதையென்ற சொல்லெல்லாம் விழலாய்ப் போமே. 798

குங்கும பாஷாணம்

போமென்ற குங்குமப் பாஷாணவைப்புப்
புகட்டுகிறேன் புத்தியில்லாப் புல்லருங்காண
ஆமென்ற சூதமது பாஷாணம்பத்து
அழகான குதிரைப்பல் பாஷாணம்பத்து
வேமென்ற வெண்காரப்பொறி பலந்தான்பத்து
வெளுப்பான சீனத்தின் பொறிதானைந்து
காமென்ற அன்னத்தின் பேதிபலமைந்து
கடிதான கெந்தகமும் பலமுமைந்தே. 799

பலமான தாளகந்தான் சீலையுமானால்
பாங்காக நிறுத்தல்லோ கல்வத்திட்டு
குலமாகும் எலுமிச்சம் பழச்சாறுவிட்டுக்
குமட்டியரைத்தேழு நாள்ரவியிற் போட்டு
தலமாகுங்காசி யென்ற மேருக்கேற்றி
தளறாமல் வாலுகையின் மேலேவைத்து
நிலமாகும் பனிரண்டு சாமந்தீமூட்டி
நிசமாகும் பதம்பார்த்து ஆறப்போடே. 800

ஆறவிட்டு உடைத்துப்பார் கட்டியாக
அப்பனே குங்குமத்தி னிறமதாகும்
நீறவிட்ட சரக்குக் காலனாகும்
நெடுங்கால மிருக்கவென்றால் வீசமிதையுண்ணு
தேறவிட்டு மண்டலத்திற் சட்டைகக்குஞ்
சித்தர்கள்தா னுண்டல்லோ காயசித்தியானார்
மீறவிட்டு மெழுகாகப் பண்ணிக்கொண்டு
விரவியதோர் சூதத்திற் பொட்டுப்போடே. 801

போடவே ஆனையைப்போல் வீறிட்டுச்சாகும்
போக்கோடே தங்கமிட்டு நாகமிட்டு
ஆடவே கெந்தியிட்டு செந்தூரித்து
ஆயிரத்துக் கொன்றிடவே யையைந்தாகும்
வாடவே மயங்காமல் சரக்குவைப்பு
வரிசையா யொவ்வொன்றாய்ப் பார்த்துத்தேறு
தேடவே காயத்தைச் சித்திபண்ணு
செகச்சாலத் துன்மார்க்கச் சட்டைபோக்கே. 802

போக்கானலவண மென்ற பாஷாணத்தை
பொல்லாத வாதிக்குக் காட்டவேண்டாம்
தேக்கான தெதினாலென்று கேட்கில்
செகசால மயக்கத்திற் சிக்கிக்கொண்டு
நோக்கான பெண்ணாசை தனிலுழன்று
நோயெய்திக் குடிகெடுத்தால் நுணக்கமாகித்
தாக்கான லோகத்தோர் குடிகெடுத்துச்
சங்கியா தேயிருப்பான் சண்டிதானே. 803

தானென்ற மனதையுற்றுப் பார்த்தானானால்
சண்டாளக் கோபத்தை நிறுத்தமாட்டார்
ஊனென்ற சுகத்தையல்லோ யிச்சித்துக்கொண்டு
உற்றுநின்றசை யோகத்தாலே கெட்டு
வானென்ற பொருள்தேடமாட்டார் மாண்பர்
மகத்தான அறுதலத்தின் தரிசனையைப்பார்ப்பார்
பானென்ற ஞானவெள்ள முண்டுகொண்டு
பதறாமலிருக் கரியார் மூடர்தானே. 804

தானென்ற வெடியுப்பு பலந்தானூறு
சாதகமாய்ப் பாண்டத்திற் போட்டுப்பின்பு
கானென்ற காடியொடு யெலுமிச்சம்பழச்சாற்
கலந்து கொண்டுசமனாக உப்புக்குநாலு
பானென்ற சாறுவிட்டு கரையக்காச்சி
பக்குவமாய் வடிகட்டிப் பதத்திற்காச்சி
வானென்றயைந் துதரங்காய்ச்சிக் கொண்டு
மார்க்கமாய் ரவியுலர்த்தி பிரம்பாய்வையே. 805

பிரம்பான பூநீறு பலந்தானூறு
புளிப்பானகாடி யொடுஎலுமிச்சம் பழச்சாற்கூட்டி
திரமான தெளிவிறுத்து உப்பாய்க்காய்ச்சிச்
சேர்ந்துநின்ற உப்பதனை முன்போல்கரைத்து
அரம்பானவொரு நிரைக்கு நாலுநிரைதண்ணீர்
அரட்டையாய் விடுகாதேயைந்து தரங்காய்ச்சி
உரம்பான உப்பெடுத்து ரவியில்வைத்து
உத்தமனே கல்லுப்பு பலந்தானூறே. 806

நூறோடு பழச்சாறு புளித்தக்காடி
நுகர்ந்துநின்ற நானூறுபலந்தான் வார்த்து
காறோடு கொதிக்கவைத்துக் காய்ந்தபின்பு
கலங்காமல் வடிகட்டி உப்பாய்க்காய்ச்சு
வீறோடு யைந்துதரங் காய்ச்சுகாய்ச்சி
விளங்கிய தோரவியிலிட்டுப் பலம்பத்துநிறுத்துத்
தாறோடுகாய்ச்சி சியதோர் வெடியுப்புப் பார்த்து
தாழ்ச் சியில்லாப்பூ நீறுவுப்புப்பத்தே. 807

உப்போடு வெள்ளையென்ற பாஷாணம்பத்து
உயர்ந்துநின்ற சூதமது பலந்தான்பத்து
அப்போடு கெந்தியது பலமும்பத்து
ஆதியென்ற துரிசியது பலமும்பத்து
வைப்போடு சாரமது பலமுமைந்து
மாசற்ற் சீனத்தின் பொரிதானைந்து
மப்போடு தாளகமும் பலமுமைந்து
மாசற்ற தாளகமுஞ்சிலை யதுவுமூணே. 808

மூணோடுயிது வெல்லாங் கல்வத்திட்டு
முப்புரத்தை யெரித்த குப்பைமேனிச்சாறு
பூணோடு யேழுநாளரைத்துமை போல்
பொடியாக்கி காசியென்ற மேருக்கேற்றி
வானோடு வாலுகையின் மேலேவைத்து
மறவாதே தீமூட்டிக்கமலம் போல
துணோடு பனிரண்டு சாமமனால்
துடியான லவணமென்ற பாஷாணமாச்சே. 809

ஆச்சென்றகொடுஞ் சிங்கித்தயிலஞ் சொல்வேன்
ஆதளைழும் வாலுமுவை புரசுரட்டி
நீச்சென்ற கஞ்சாவு மத்தைபுங்கு
நெடிதான குருக்கத்தி அழிஞ்சில்புன்னை
வாச்சென்றதாளை யொடுவாளம் வேம்பு
வகையான நீர்வெட்டி கமுதைமுள்ளி
காச்சென்ற பதினைந்தும் விரையைவாங்கி
கணக்காகப் படியொன்று அளந்துபோடே. 810

போட்டெல்லாங் கெருடனுட கிழங்குச்சாற்றில்
புகழாக வூறவைத்து மூன்றுநாள்தான்
ஆட்டிதெல்லாங் கல்வத்தி லிட்டுஆட்டு
அதிற்போடு மருந்திதனைத் தானறையக்கேளு
நீட்டிதெல்லா மரிதாரஞ் சிலையுங்கெந்தி
நேரான வெடியுப்பு சீனஞ்சூடன்
பூட்டிதெல்லாஞ் சாம்பிராணிச் சாரம்வீரம்
புகழ்ந்தகருங்குங் கிலியப்பூ நீற்தானே. 811

தானென்ற துரிசியோடு அன்னபேதி
சாதகமாய் வகைக்குரண்டு பலந்தான்போடு
கானென்ற முன்மருந்தோ டொக்கப்போட்டு
கலந்தரைப்பாய் கெருடனுடகிழங்குச் சாற்றால்
தேனென்ற வெட்டுநாள் மெழுகுபோலாட்டி
தெல்லுப்போல் வில்லைபண்ணி யுலரப்போடு
பானென்ற பூப்புடத்தில் தயிலம்வாங்கிப்
பாச்சியெல்லாம் பாணிதனி லடைத்திடாயே. 812

அடைத்திட்ட தயிலத்தில் துரிசுவெள்ளை
　　யப்பனே பலமொன்று நிறுத்துக்கொண்டு
கிடைத்திட்ட தயிலத்தில் மத்தித்தப்பா
　　கெடியான லிங்கத்திற் சுருக்குப்போட
படைத்திட்ட லிங்கமது மெழுகுமாகும்
　　பாங்கான நவலோகம் வேதையாகும்
முடைத்திட்ட மெழுகாகும் பரிசினத்தில்
　　மூதண்ட வேதையுமாங் கண்டுபாரே. 813

சூதக்கட்டு

பாரென்ற சூதமொரு பலந்தானெட்டு
　　பாய்ச்சியல்லோ கல்வத்திலிட்டு நீயும்
ஆரென்ற தயிலமது ஒருதுளிதான்குத்தி
　　அரைத்திடவே வெண்ணெயைப் போலாகும்பாரு
காரென்ற கிளிக்கட்டிச் சூடன்தீயில்
　　கலக்காதே யிருநாழி வாட்டிப்பின்பு
சீரென்ற கரண்டியிலே யெண்ணெய்க்குத்தித்
　　திறமாக வுருக்கிடவே மணியுமாமே. 814

ஆமிந்த மணிதனக்குச் சாறணையைச்செய்ய
　　அண்டரண்ட பதமளவும் போகசும்
போமிந்த மணிதனையே வாயில்வைத்துப்
　　புகழான யுமிநீரையுள்ளே கொள்ள
சாமிந்த சடந்தானும் சட்டைகக்கி
　　சந்திரர்கள் சூரியர்கள் போலாந்தேகம்
நாமிந்தப் படியுண்டோம் பாட்டருண்டார்
　　நாதாக் களிப்படியே உண்டிட்டாரே. 815

உண்டிட்ட மனிதனுக்கு நாலத்தொன்று
　　உத்தமனே தங்கமிட்டு நாகமிட்டு
பண்டிட்ட காரமிட்டு உருக்கிக்கொண்டு
　　பாய்ச்சிதுக்குச் சரியாகக் கெந்திகூட்டி
கண்டிட்ட கல்வத்திற் பொடித்துக்கொண்டு
　　கலங்காதே குலாமல்லிச் சாற்றாலாட்டி
மண்டிட்ட மூன்றுநா ளரைத்துப்பின்பு
　　மயங்காதே காசியென்ற மேருக்கேற்றே. 316

ஏற்றியல்லோ முத்தீயி மூன்றுநாள்தா
　　னிதமாக ஆறவிட்டு யெடுத்துப்பாரு
போற்றியல்லோ வருணனைப்போற் சிவந்துநிற்கும்
　　பொலிவாகப் பணவிடைதான் தேனிலுண்ணு
சாற்றியல்லோ மண்டலந்தான் றப்பாதுண்ணு
　　சட்டை கக்கிச் சந்திரர்போல் முகமுமாகும்
ஆற்றியல்லோ கெவனவழி சுறுக்குமெத்த
　　ஆச்சரிய சிங்கிளென்ற தயிலந்தானே. 817

துவாதசத்தின் றயிலம்

தானென்ற துவாதசத்தின் தயிலஞ்சொல்வேன்
சாதகமாய்ச் சேங்கொட்டை நீர் வெட்டிமுத்து
தேனென்ற குருக்கத்தி வாலுழுவைவித்து
சிறப்பான குமட்டிவித் தினோடு
வேனென்ற வாலுழுவை யரிசியோடு
விரும்பியே சமனிடையாய்த் தூக்கிக்கொண்டு
பானென்ற பெருங்காட்டா மணக்குவித்துப்
பகரறியகுன்றி மணியமுஞ் சில்வித்தே. 818

வித்தோடு பிராயமணி பனிரண்டுங்கேளு
விளங்கியதோர் படியொன்று அளந்துபோட்டு
புத்தோடு செங்கணார் கிழங்குசாற்றில்
பொலிவாக வூறவைத்து மூன்று நாள்தான்
பத்தோடு கல்வத்திலரைத்து மைபோல்
பகரரிய கெந்தகமுந் தாளகமுஞ் சிலையும்
கொத்தோடுசை வீரங்கெவுரி வெள்ளை
கொடியதொரு பூநீறுஞ்சவுட்டு உப்பே. 819

உப்பான கல்லுப்பு வெடியுப்புச் சீனம்
உத்தமனே துரிசியொடு சூடனிந்து
விப்பான முன்மருந்தோடொக்கப் போட்டு
விரவியரை யெட்டுநாள் கிழங்குச்சாற்றில்
அப்பாநீ தெல்லுப்போல் வில்லைப்பண்ணி
ஆத்தியாம் பூப்புடத்தில் தயிலம்வாங்கி
செப்பான தீயிட்டுத் துருசுநீரிட்டுச்
சீரான சரக்குகளிற் சுருக்குப்போடே. 820

சுருக்கிடுவ தெதிலென்றா லிங்கம்வெள்ளை
துடியான மால்தேவி சீலையும்வீரம்
முருக்கிட்ட கெவுரியொடு கெந்திசூத
முனையான நாதமொடு காரீயம்வங்கம்
நரிக்கிடுவ துரிசியொடு செம்புசாரம்
நலமான சிங்கியொடு மெழுகுமாகும்
கருக்கிடுவ தொவ்வொன்றில் வேதைகோடி
கதையில்லை கணக்கில் கலந்துபாரே. 821

பாரப்பா சதமுகமாங்குரு விநாட்டு
பண்பேதி மேசண்பேதி பண்சத்தபேதி
தாரப்பா தூமமொடு சந்தானபேதி
தயங்காத பரிசமொடு லேபனபேதி
சேரப்பா தீபமொடு எட்டுமாகும்
சித்தருட நூல்களிலே யில்லையில்லை
ஆரப்பா விதன்பெருமை யறியப்போறார்
அரனறிவார் ஆத்தாளறிந்த வாறே. 822

வ றான பூநீறு பதக்குவாரி மாட்டிதற்கு
வெட்டிலொன்று கல்லுச்சுன்னம்
பேறான கழுதையுட மூத்திரத்திற்
பிசைந்துநன்றாய் கலக்கிவைத்து மூன்றுநாள்தான்
தாறான நாலா நாள்தெளிவை வாங்கி
தயங்காத கல்லுப்புச் சூடன்ரண்டும்
ஆறான வகைக்குரண்டு பலமேதூக்கி
அப்பனே பொடிபண்ணித் தெளிவில்போடே. 823

போட்டுமே யடுப்பேற்றி பொரித்துஉப்பாய்ப்
புகழான பதத்தெடுத்து கல்வத்திலிட்டு
மீட்டுமே மூன்றுநாளரைத்த பின்பு
மெழுகாகும் பதத்தெடுத்து வில்லைகட்டி
நீட்டுமே மூன்றுதரம் வில்லைதட்டி
நிச்சயமாய்ச் சீனமொடு கல்லுப்போடு
தீட்டுமே ரவிதனிலே காயப்போடு
செப்பில்வைத்துச் சீலைசெய்து புடத்தைப் போடே. 824

புடம்போட்டு வைந்தெருவி லாறவிட்டு
வாங்கிப் பேராகமுன்போல வரைத்துக்கட்டி
கடம்போட்டு மூன்றுதரம் போட்டுத்தீரு
கசகாமல் வழலையென்ற குருத்தானைந்து
திடம்போடு செப்புக்குள்ளெடுத்துக் கொண்டுத்
திறமான நாயுருவி சுட்டசாம்பல்
அடம்போடு பதக்கெடுத்து யானைநீர்விட்டு அதட்டி
நன்றாய்க் கலக்கிவைத்துத் தெளிவைவாங்கே. 825

வாங்கியே அண்டோடு சுண்ணம்பண்ணி
வளமாகப் பலம்ரண்டு கூடபோட்டுத்
தேங்கியே யிந்துப்பு பச்சைப்பூரஞ்
சிறக்க வேரண்டுபலம் கல்வத்திட்டு
தாங்கியேயரைத்து மைபோல் தெளிவிலிட்டு
சார்பாக வடுப்பேற்றி யெரித்துவுப்பாய்ப்
பாங்கியே கல்வத்திலிட்டு யாட்டிப்
பதறாமல் முன்போலே அரைத்துக்கட்டே. 826

கட்டியே மூன்றுபுடந் தீர்ந்தபின்பு
கசகாமல் வெவ்வெறே யெடுத்துவைத்து
தெட்டியே பூரமென்ற குருதானாச்சு
செகமெல்லா மெச்சுமிந்த குருதானாட்டு
தட்டியே யெருக்குமிதைச் சமூலஞ்சுட்டுத்
தயங்காமல் பதக்கெடுத்துக் குதிரைநீரில்
மட்டியே யிருதூணி நீரிற்போட்டு
மறவாமல் மூன்றுநாள் கலக்கிவையே. 827

வைத்தபின்பு தெளிவிறுத்துப் பாண்டத்திலிட்டு
மறவாமற் சங்குநீரிரண்டு பலந்தான்போட்டு
நைத்தபின்பு கடல்நுரையுஞ்-சாரம்ரண்டு
நலமாகப் பலம்ரண்டும் கல்வத்திட்டு
கைத்தபின்பு பொடிபண்ணிக் குழம்பில்போட்டுக்
கலங்காதே வுப்பான பதத்தில்வாங்கி
மொய்த்தபின்பு முன்னீரா லரைத்துக்கட்டி
மூன்றுபுடம் போட்டெடுத்து பதனம்பண்ணே. 828

பண்ணியபின் சாரமென்றகுரு தானாச்சு
பகர்சதுரக் கள்ளிதனைச் சுட்டசாம்பல்
நண்ணியதோர் பதக்கெடுத்து பாண்டத்திலிட்டு
நலமான வெள்ளாட்டு அமுரிதானும்
கண்ணியதாலிரு தூணிய முரிவிட்டுக் கலக்கி
வைத்துத் தெளிவிருத்துக் கிளிஞ்சிற்சுன்னம்
எண்ணியதாம் ரண்டுபலங் கூடவிட்டு
அதமாக வடுப்பேற்றி யெரித்திடாயே. 829

எரித்திடவே குறுகியது குழம்புபோலா
மெளிதான வெண்காரந் துரிசிரண்டு
மரித்திடவே பொடியாக்கிக் குழப்பிவிட்டு
வளமாகக் காய்ச்சியதை யுப்பாய்ப்பண்ணி
தரித்திடவே முன்போலப் புடத்தைப் போடு
தயங்காதே யெரித்துவைத்து மாட்டக்கேளு
குரித்திடவே துரிசியென்ற குருதானாச்சு
கொடுவேலி சமூலமே சாம்பலாக்கே. 830

சாம்பலைத்தான் பதக்கெடுத்துப் பாண்டத்திலிட்டுச்
சார்பான பசுவின் கோசலத்தைவிட்டு
வாம்பலைத்தான் கரைத்துவைத்து மூன்றுநாள்தான்
வகையாகத் தெளிவிறுத்து நத்தைச்சுன்னம்
காம்பலைத்தான் ரண்டுபலங் கூடப்போட்டுக்
கலர்குழம்பாம் பக்குவத்தில் வெடியுப்புப்போடு
வேம்பலைத்தான் வீரமது பலமும்ரண்டு
விரவிநன்றாய்ப் பொடிபண்ணிக் குழம்பில்போடே. 831

போட்டபின்பு அடுப்பேற்றி யெரிக்கவுப்பாம்
புகழாக முன்னீராலரைத்துத் தட்டி
நாட்டபின்பு முன்போல மூன்றுபுடம்போட்டு
நலமாக வெடுத்து வைத்துச் செம்புக்குள்ளே
ஆட்டபின்பு வீரனென்ற குருதானாச்சு
அம்மம்மாயிதன் வேகமண்டரண்ட நீறும்
நாட்டபின்பு கொடிக்கள்ளிச்சாம் பலாக்கி
நலமாக மனிதனுடவ முரியிலேபோடே. 832

போட்டுமேயதட்டி நன்றாய்க் கலக்கிவைத்துப்
புகழாகத் தெளிவிறுத்து வடுப்பிலேற்றி
வாட்டுமே நாகமாம் வண்டுசுட்டி
மருவியதே சுண்ணாம்பாய் ரண்டுபலம்போடு
தேட்டுமே குழம்பான பதத்தில்வாங்கிச்
சிறப்பான வெள்ளையொடு சீனம்ரண்டு
ஆட்டுமே பொடிபண்ணிக் குழம்பில்போட்டு
அடுப்பேற்றி யெரித்தந்தவுப்பை வாங்கே. 833

வாங்கியே ஊமையென்ற சிப்பிதன்னை
வகையாகச் சுத்திபண்ணிச் சுண்ணாம்பாக்கி
தேங்கியேரண்டுபலம் நிறுத்துப் போட்டுச்
சிறப்பாக வடுப்பேற்றிக் குழம்பாய்க்காய்ச்சி
ஓங்கியே தாளகமும் வளகிலுப்பும்
ஒக்கவே பொடிபண்ணிரண்டு பலம்போட்டு
ஏங்கியேவுப்பாகக் காய்ச்சிக் கொண்டு
யெடுத்தரைத்து முன்போலப் புடத்தைப்போடே. 834

போடென்ற வமுரிசுட்டுச் சாம்பலாக்கிப்
புகழாகப் பதக்களந்து பாண்டத்திற்போடு
நாடென்றகடலில் நிற்குஞ்சிவந்திருந்த சொரியை
நலமாகயெடுத்து வந்து பாண்டத்துள்ளே
ஊனென்ற வுப்பிடவுந் தண்ணீராகு
முத்தமனே யிருதூணி நீரைவிட்டு
ஆடென்ற மூன்றுநாள் கழித்தபின்பு
அப்பனே தெளிவிறுத்துப் பாண்டத்தில்வாங்கே. 835

வாங்கும் போதடுப்பேற்றி யெரிக்கும்போது
வளமான நண்டோடுச் சுன்னம்பண்ணி
தாங்கும ப்போரண்டு பலங்கூடப்போட்டு
தயங்காதே யடுப்பேற்றி யெரிப்பாயானால்
ஓங்குமப் போகுழம்பான பதத்தைப்பார்த்து
உற்றுநின்ற சரக்கையினிச் சொல்லக்கேளு
தூங்குமப்போ சூதம்ரண்டு பலத்தைப்போட்டு
துடியான கெந்தியுப் புரண்டுபலம்போடே. 836

போட்டெல்லா மடுப்பேற்றியுப் பாய்க்காய்ச்சிப்
பொலிவான பின்பெடுத்துக் கல்வத்திட்டு
மூட்டெல்லா முன்னீரா லரைத்துக்கட்டி
மூன்றுபுடம் போட்டெடுத் துவைத்துக்கொள்வாய்
ஆட்டெல்லாஞ் சூதத்திலாட்டு ஆட்டு
அண்ட பகிரண்டமுதல் வெந்துநீறும்
காட்டெல்லாம் வாழையுட சருகுசுட்டு
காரியமாய்ப்பதக் க்ளந்து பாண்டத்திற்போடே. 837

போட்டுமே வாழையுடக் கிழங்குச்சாற்றில்
புகழாகத் தெளிவிறுத்து அடுப்பில்வைத்து
ஊட்டுமே சுண்ணாம்பு சொல்லக்கேளு
உயர்ந்த வாங்கூமச்சி சுன்னம்பண்ணி
நாட்டுமே பலம்ரண்டு நிறுத்துப்போட்டு
நலமான குழம்பாகும் பதத்திற்கேளு
ஆட்டுமேயன்ன மென்ற பேதியோடு
அசையாத லிங்கமது ரண்டுந்தூக்கி
பூட்டியே பொடிபண்ணிக் குழம்பிற்போட்டு
புரட்டியெல்லாம் வாங்கியல்லோ கல்வத்தாட்டே. 838

ஆட்டியேமுன்போல மூன்று புடம்போட்டு
அயச்சிமிழி லெடுத்து வைத்துப்பதனமாகப்
பூட்டியே தெர்ப்பை சுட்டுச்சாம்பலாக்கிப்
புகழாக மூன்றுபடி பாண்டத்திற்போட்டு
மூட்டியே கள்ளென்ற காடிதானு
முசியாமலிரு தூணிவிட்டுப் பின்பு
வாட்டியே மூன்றுநாள் கலக்கிவைத்து
மறவாதே தெளிவிறுத்து அடுப்பிற்காய்ச்சே. 839

காய்ச்சியே குழம்பான பக்குவத்தில்
கலந்திடுநீ கெருடபட்சி சுன்னம்ரண்டு
பாய்ச்சியேகுக்குட வெண்மலமும் ரண்டு
பகரறியகெந்தகமும் பலமும் ரண்டு
காய்ச்சியே பொடிபண்ணிக் குழம்பிற்போட்டுச்
சார்பாக வடுப்பெரித்து வுப்புவாங்கு
முய்ச்சியே முன்போல வரைத்துக்கட்டி
மூன்றுபுடம் போட்டெடுத்துப் பதனம்பண்ணே. 840

பண்ணியபின் சதமுகமாங் குருவுமாச்சுப்
பணவிடை தான்பத்து மெடுத்தொன்றாய்க்கூட்டி
ஒண்ணியபின் கல்வத்தில் முன்னீராலாட்டி
உத்தமனே செப்புக்கு ளெடுத்து வைத்து
நண்ணியபின் மேல்மூடிச் சீலைச்செய்து
நலமாக வஞ்செருவிற் புடத்தைப்போடு
எண்ணியபின் னாறவிட்டு யெடுத்துக்கொண்டு
இதமான பொற்சிமிளிற் பதனம்பண்ணே. 841

பண்ணியதோர் குருவெடுத்து விராலிக்கிட்டுப்
பரிவாகச் சாறெடுத்து அயச்சட்டி வர்த்து
ஒண்ணியதோர் நல்லகொழுக் கரியிலூதி
உத்தமனே காந்தமதிற் காட்டித்தோய்ப்பாய்
விண்ணியதோர் கொழுக்காய்ச்சித்தோய்க்க தோய்க்க
விண்டு விண்டு அதரதராய்ப் பொருமிவீழும்
நண்ஞியதோர் சாறெல்லாம் வற்றத்தோய்ந்து
நலமான அதரெல்லாம் வாரிக்கொள்ளே. 842

வாரியேபெருங் காட்டாமணக்கி னெண்ணெய்
வார்த்தல்லோ வெண்காரஞ்சரியாய்க் கூட்டி
நாரியேகுகையி லிட்டு மூன்றுதர முருக்க
நலமான ஈயம்போற் சவளையாகும்
ஏரியேவுடைந்தது போல்வாத வெள்ள
மிரைக்க வேதுலையாது அயத்தின்வித்தை
வாரியே பொங்கையிலே சகமுட்கொள்ளு
மகத்தான அயமுருக்கில் கொல்லுந்தானே. 843

தானென்றநாகத்தைப் பதையாமற் கொல்லுஞ்
சமுசமயங்களெண்ணாதே சகலமு முட்கொள்ளும்
வானென்ற சூதமது கட்டிப்போகு
மாசற்ற அயனாகமாடு ஆட்டு
தேனென்ற சிவகாமிசொன்ன மார்க்கஞ்
செப்பரிய நாதாக்கள் மெய்ச்சும்வித்தை
பானென்ற செந்தூரங்களங்கு செய்யில்
பரிவாக வாயிரத்துக் கோடும்பாரே. 844

ஓடுமே அண்டத்தைப் பணம்போல் போற்று
உத்தமனே கழஞ்செடைதான் குருவைப்போடு
வாடுமே செந்துருக்க மேலேவைத்து
மாசற்ற ரவிதனிலே சாமம்வைக்கத்
தோடுமே அண்ட மெல்லா மெழுகாய்ப் போகுஞ்
சேர்ந்த மூவாயிரத்துக் கொன்றேயோடும்
பாடுமே வீணையைப்போல் மெழுகுகொள்ளப்
பரிவான அண்டத்தினாண் மைதானே. 845

அண்டவித்தை யாருக்காஞ் சிவயோகிக்காம்
ஆத்தாளைப் பூசித்த வாமிக்காகும்
பிண்டவித்தை மும்மூல யோகிக்காகும்
பேரான அசையையுட னாலில்சொக்கும்
வண்டவித்தை பொல்லாதது ரோகிக்கெய்து
மகத்தான வேதாந்தரிஷிகள் சித்தர்
கண்டவித்தை மனதடக்கி யூமையாவார்
காரணமாஞ் சீஷருக்குப் போதிப்பாரே. 846

பாரென்றகுருவெடுத்துக் காசெடை தான்தூக்கிப்
பரிவான சதுரக்கள்ளிப் பாலிற்போட்டுக்
காரென்ற சாமத்தில் சுத்தசலமாகுங்
கல்வத்திற் சூதம்விட்டுச் சுத்திபண்ணிப்
பாரென்ற அயச்சட்டிக்குள்ளே விட்டுப்
பதறாம லொருசாமஞ் சுருக்குபோட
கோனென்ற யிட்டிலி போல்கட்டியாகுங்
கூப்பிட்டாலே னெங்கும் வாதந்தானே. 847

வாதந்தான் வேண்டுமென்றால் சூதத்தாட்டு
மகத்தான அஷ்டமர் மமெட்டுமாடும்
காதந்தான் கோடியது நிமைக்குமுன்னே
கலந்தோடிப் புக்கிவரு மணியினோசை
வேதந்தான் திடத்துமே முடிவுக்கொக்கு
மேவியதோர் சிலம்பொலியில் நாதங்கேட்கும்
நீதந்தான் சூதத்துக் கடுத்தவாறு
நிமிசத்திற்காய சித்துகெவுன சித்துமாமே. 848

ஆமிந்தமணி நின்று வுருகும்போது
அந்திடைக்குத் தங்கமிட்டு ஆட்டுஆட்டு
சேமிந்த கெந்தகத்தை ரெட்டுயிட்டு
சிறப்பான பொற்பலையின் சாற்றாலாட்டி
போமிந்த சரக்கதனைக்குப்பியில் வைத்துப்
புகழாக சீலைமண் வலுவாய்ச்செய்து
ஓமிந்தக் காசியென்ற மேருக்கேற்றி
யுற்பனமாம் வாலுகையின் மேலேவையே. 849

வைக்கவே பனிரண்டு சாமத்தீயை
மறவாதே முத்தீயு மாட்டுமாட்டு
தைக்கவே மாதாளம்பூ நிறத்தைப்போலாஞ்
சார்பாகச் சிலாகிட்டுக் கிண்டிப்பாரு
உய்க்கவே நவலோக மாயிரத்துக்கொன்று
வுத்தமனே பதினாறு மாற்றுமாகு
மெய்க்கவே செந்தூரங்குன்றி யுண்ணு
மேனியுமே யருணன்போ லாகுந்தானே. 850

வங்காளப்பச்சை

தானென்ற வங்காளப் பச்சைவைப்புச்
சாதகமாய்ச் சொல்லுகிறேன் மாணாக்காளே
ஊனென்ற செம்பான அரப்படிதான் பத்து
வுத்தமனே துரிசிபத்து வெடியுப்புரண்டு
வானென்ற யெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
மருவவே மத்தித்துக் கல்வத்திட்டு
தேனென்ற குப்பையிலே மூன்றுதிங்கள் புதைத்துத்
திறமாக வெடுத்துப்பார் பச்சையாமே 851

செம்புசுத்தி

ஆமப்பா செம்புதனை சுத்திபண்ண
அறையுறேன் கருங்குன்றிக் கொள்ளிலையின்சாறு
வாமப்பா கல்லுருவி நொச்சியோடு
வகைநாலு மிடித்துநன்றாய்ப் பழச்சார்விட்டு
காமப்பா குன்றிமணி யரைத்துப்போட்டுக்
கலக்கியொன்றாய் மத்தித்துயதிற்குட் சாய்ப்பாய்
சேமப்பா வேழுதர முருக்கிச்சாய்க்கச்
செம்பினுட வூறலெல்லாங் கழன்றுபோமே 852

போகவேயிச் செம்பில் கிண்ணிப்பண்ணு
புகழான செங்கோட்டைநீர் வெட டிமுத்து
வேகவே வெளிக்காட்டா மணக்குவித்து
விரைந்த நேர்வாழை வித்துச்சரியாய்க்கூட்டி
சாகவே துரிசியொன்று சாரமொன்று
சாதகமாய்க் கல்லுப்பு வெடியுப்பொன்று
ஏகவேயுரலி லிட்டுயிடித்தி தெல்லா
மிதமான கார்த்திகையின் கிழங்குசாறே. 853

சாற்றினால் மூன்று நாளரைத்து மைபோல்
சந்திச் சுவில்லைகட்டி யுலரப்போட்டு
போற்றினால் பூப்புடத்தில் தயிலம்வாங்கிப்
பீங்கானாம் பாணி தனிலடைத்து வைத்து
வாற்றினால் பதங்கமொன்று சொல்வேன்யானும்
வகையான கல்லுப்புவெடி யுப்புச்சீனம்
தேற்றினால் துரிசியோடு சாரந்தானுஞ்
சிறப்பாக வொவ்வொரு காசெடைதான்றூக்கே. 854

தூக்குவது அரிதாரஞ் சிலையுங்கெந்தி
துடியான வெள்ளையோடு கெவுரிலிங்கம்
ஆக்குமது கடல்நுரையும் வீரந்தொட்டி
அழகான குதிரைப்பல் அன்னபேதி
தேக்குவது பூநீறுசத்தி யானமாகும்
சிறப்பான வெண்காரங் காந்தஞ்சிங்கி
நீக்குவது அப்பிரேகம் ராசவர்த்தம்
நேரானநிமிளை யொடுபொன் னம்பர்தானே. 855

தானான அரப் பொடியும் நாகம்வங்கம்
சார்பான காரீயம் வெங்கலத்தின் பொடியும்
தேனான வகைக்கு மொருகாசெடை யேதூக்கி
சிறப்பாக முப்பத்து வொன்றுமாச்சு
வானானசூத மதுமுப்பத் தொன்று
வகையெல்லாங் கல்வத்திற் பொடித்துப்போட்டு
கோனானதயி லத்தைக்குத்தி ஆட்டிக்
குறிப்பாக வேழுதர மரைத்துலர்த்தே. 856

சூதப்பதங்கம்

உலர்த்தியே யிரும்பாலே யுள்ளங்கைபோ
லுத்தமனே லேசாகச் சட்டிபண்ணி
மலர்த்தியேவரை விட்டுச்செம்புக் கிண்ணி
மருவவே வறைக்குள்ளே வழக்கம்பார்த்து
அலர்த்தியே சட்டியிலே மருந்துவைத்து
அதன்மேலே கிண்ணிவைத்துப் பொருந்தப்பார்த்து
சிலர்த்தியே சந்துக்குச் சீலைசெய்யுந்
கிரமையாய்த்தான் வரிசை செப்புவேனே. 857

செப்பவேசெம் பினுட அரப்பொடியுங் கடுக்காய்த்
திறமானயிரும்பி னுடஅரப்பொடி யுங்கூட்டி
அப்பவேகரு மணலுஞ் சங்குநீறு
மடவான குருந்தக்கல் மீனினெட்டி
நப்பவே வெண்கருவு மத்திப்பாரும்
நலமாக விதில்விட்டு விடித்துநைய
உப்பவே மெழுகுபோல் பதமாய்ப்பண்ணி
யுத்தமனே சந்துக்குள் அடைத்திடாயே. 858

அடைத்திட்ட செம்புமேல் கவசம்பண்ணி
அசகாமல் பதனமாய்ச் சீலைசெய்து
உடைத்திட்டு முக்கவறில் சட்டிவைத்து
உற்பனமாயிலுப்பை நெய்யால் விளக்குவைத்து
படைத்திட்டு அங்குட்ட பருமாகப்
பக்கத்தில் நின்றதிரி விளக்கையேற்றி
கடைத்திட்டு மூன்றுநாளவி யாமலெடுத்துக்
கைகண்ட பகதங்கமது ஏறும்பாரே. 859

ஏறியதோர் பதங்கமெல்லாம் வழித்தெடுத்து
இதமான வப்பிரேகம் நவநீதம்பண்ணி
கூறியதோர் வெண்கருவா லரைத்துவாங்கிக்
குகைசெய்து மேல்மூடி ரண்டுசெய்து
மாறியதோர் பதங்கத்தை யுள்ளேவைத்து
வகையாக மேல்மூடிச் சீலைசெய்துத்
தேறியோர் கெசபுடத்திற் போட்டெடுத்துச்
சிறப்பாக மருந்தெல்லாம் வாங்கிக்கொள்ளே. 860

வாங்கியே குகையிலிட்டுக் காரம்வைத்து
வளமாக யுருக்கியொரு மணியாய்வாங்கி
தாங்கியே யெடுத்துப்பார் முத்துப்போலத்
தவளம்போல் சூதமது மிருக்கும்பாரு
ஏங்கியே ஆச்சுதென்று மயங்கவேண்டாம்
இயல்பாகக் கெந்தியிட்டுப் பதங்கஞ்செய்து
ஓங்கியே நாகமிட்டுக் கல்வத்திற்போட்டு
உத்தமனே மயிற்கொன்றை சாற்றாலாட்டே. 861

ஆட்டியே காசியென்ற மேருக்கேற்றி
அப்பனே வாலுகையின் மேலேவைத்து
மூட்டியே பனிரெண்டு சாமந்தீயை
முசியாம லாறவிட்டு யெடுத்துப்பாரு
நீட்டியே செந்தூ ரமுண்ணன்போலாம்
நேரான நவலோகம் நூற்றுக்கொன்றீ
காட்டியே தச மாற்றாய்க் கண்டுபாரு
கனமான பதங்கமது மகிமைதானே. 862

மகிமையென்ற பதங்கத்தை பஞ்தான்தூக்கி
மகத்தான கல்வத்திற் போட்டுப்பின்பு
மகிமையென்ற அரப்பொடி நாலுபலம்போட்டு
மகத்தான காரமொரு பலமும்போட்டு
மகிமையென்ற பெருங்காட்டா மணக்கினெண்ணெய்
வார்த்தரைத்துச் சாமமொன்று குகையிலிட்டு
மகிமையாய் மூன்றுதர முருக்கிப்போட
மாசற்ற அயந்தானும் நாகந்தானே. 863

நாகமென்ற அயத்திடைக்குச் சூதங்கூட்டி
நலமாக வுருகையிலே நாகமிட்டு
மோகமென்ற புகையெழும்பிக் கட்டிப்போகு
முத்தமனே கெந்தியிட்டுச் சூதமிட்டுப்
பாகமென்ற பொற்றலையின் சாற்றாலாட்டிப்
பக்குவமா யைந்தெருவிற் புடத்தைப்போடு
வேகமென்ற நவலோகம் நூற்றுக்கொன்றீ
வேதிக்க மாற்றென்ன பனிரெண்டாச்சே. 864

வெள்ளைப் பதங்கம்

ஆச்சப்பா வெள்ளையென்ற பதங்கங்கேளு
ஆதிவெள்ளைப் பாஷாணக் குதிரைப்பல்லும்
ஓச்சப்பா தாளகமும் பூநீறும்வீர
முத்தமனே சாரமொடு துருசுசீனம்
பாச்சப்பா கல்லுப்பு வெடியுப்புக்கெவுரி
பரிவாக வெள்ளையென்ற அப்பிரேகத்தோடு
காச்சப்பா நாகமொடு வெள்ளீயப்பொடியும்
கடல்நுரையும் சங்குநீரண்டத் தோடே. 865

ஓடோடு அன்னமென்ற பேதிதானு
முத்தமனே சூடனோடு அரப்பொடியுஞ்சிங்கி
காடோடு வக்கிராந்தகஞ்ச மென்றநிமிளை
காந்தமொடு சத்தியென்ற சாரந்தானும்
நாடோடு யிருபத்து ஐந்துமாச்சு
நலமான சூடனது யிருபத்தைந்து
பாடோடு யெருக்காலம் பால்விட்டாட்டி
பதறாம லேழுநாளரைத் துலர்த்தே. 866

உலர்த்தியே வில்லையாய் வைத்துக்கொண்டு
உத்தமனே வெள்ளியால் கிண்ணிபண்ணி
அலர்த்தியே அயச்சட்டி யுள்ளங்கைபோல்
அப்பனே வரையிட்டுப் பண்ணிவைத்து
மலர்த்தியே மருந்துதனை யுள்ளேவைத்து
வகையாக மேற்கிண்ணிப் பொருந்தப்பார்த்து
பிலர்த்தியே முன்கவசம் போலேசெய்து
பேறாக முக்கல்ரின் மேலேயேற்றே. 867

ஏற்றிப்ய அகல்வைத்துத் திரியைப்போட்டு
இதமான முள்ளியெண்ணெய் விளக்குயேற்றி
போற்றியே மூன்றுநா ளவியாமலேற்று
புகழான பதங்கமது யேறும்பாரு
ஆற்றியே பதங்கமெல்லா மெடுத்துவாங்கி
ஆதிவெள்ளை யப்பிரேக நவநீதம்பண்ணி
சாற்றியே குகையொன்றுச் சில்லுபண்ணிச்
சர்பான அண்டவெள்ளைக் கருவால்பண்ணே. 868

பண்ணியதோர் குகைக்குள்ளே மருந்தைவைத்துப்
பரிவாக மேல்மூடிச் சீலைசெய்து
கண்ணியதோர் கெஜபுடத்திற் போட்டெடுத்துக்
கனமான குகைக்குள்ளே வைத்துருக்கி
நண்ணியதோர் சூதம்நின்று வருகும்போது
நலமான கிண்ணியைநீ சமனாய்ப்போடு
திண்ணியதோர் சூதமிடை வெள்ளீயம்போட்டுத்
திறமாகக் காரமிட்டு வுருக்கிச்சாயே. 869

சாய்த்திடவே மருந்தெடுத்து நிறுத்துக்கொண்டு
சார்பான நாலுக்குச் சூதமொன்று
போய்ந்திட்ட மருந்துக்கு நாலத்தொன்று
புகழான வெள்ளியது நிறுத்துப்போட்டு
காய்த்திட்ட முலைப்பாலை விட்டு ஆட்டிக்
கனமான வில்லைசெய்து அயச்செம்பில்வைத்து
ஏய்த்திட்ட ஐந்தெருவிற் புடத்தைப்போடு
எளிதான செம்புவங்கம் நூற்றுக்கொண்ணே. 870

ஒண்ணான வெள்ளியது மாற்றுக்கேளு
உற்பனமா யிருபத்து யைந்துமாற்று
கண்ணான சூதமது வெள்ளியாகுங்
காரீயம் வெள்ளியாம் நாகம்வெள்ளி
மண்ணான செம்பதுவும் வெள்ளியாகும்
மகத்தான அயமதுவும் வெள்ளியாகும்
விண்ணானஅம்பலத்தைத் தெரிசித்தப்பா
மேவியதோர் சிலம்பொலி நாதங்கேளே. 871

ரசகற்பூரவைப்பு

நாதமென்ற பச்சைரசக் கற்பூரம்பண்ண
நலமாகச் சொல்லுகிறேன் கேளுகேளு
போதமென்ற சூதமது பலந்தானெட்டுப்
புகழான கெந்தகமே பலந்தானொன்று
நீதமென்ற கெந்தகத்தை ஒட்டிலிட்டுவுருக்கி
நினைவாகச் சூதத்தை யதில்விட்டுக்கிண்டு
நாதமென்ற கரிபோலே தூளாய்ப்போகும்
நலமாக வெடுத்துவைத்து பாகங்கேளே. 872

தேளப்பா மண்ணாலே தோண்டி பண்ணிக்
கெடியாகச் சந்துவாய்ப் பொருந்தச்சுட்டு
நாளப்பா மேல்தோண்டிக் குள்ளேபூச
நலமான மத்தைச்சார் மூன்றுதரம்பூசி
வேளப்பா வுலர்ந்தபின்பு அடித்தோண்டிக்குள்ளே
விரவியதோர் கறியுப்பு அரைத்தோண்டிமட்டும்
வாளப்பா பொடிபண்ணித் தோண்டியிலேபோட்டு
மருவியதோர் செங்கல் மண்ணாழிதானே. 873

தானான அனாவசி வுப்பின் மேற்போட்டுத்
தன்னுக்குள் சூதத்துள் பரப்பிவைத்து
கானான வதின்மேலே செங்கல்தூள் போட்டுக்
கையாலே அமிழ்த்திட்டு மேல்தோண்டி கவிழ்த்து
வானான சந்துக்கு மண்ணைச் செய்து
மருவியதோ ரடுப்பேற்றி யெரிப்பாயப்பா
தேனான காடாக்கினி சாமம் நாலு
சிறப்பாக வெரித்திடவே பதங்கமாமே. 874

ஆமப்பா பதங்கமது மேல்தோண்டிக்குள்ளே
அப்பனே யேறியதுமாப்போல் நிற்கும்
தாமப்பா பதங்கமெல்லாமயிற்குச்சு கட்டித்
ததும்பாமே லெடுத்தல்லோ குப்பிக்கிட்டு
வாமப்பா வாலுகையின் மேலேவைத்து
மறவாமல் தீப்போடு பனிரண்டுசாமம்
காமப்பா பதங்கமது யிறுகியேறிக்
கம்பிபோல் வெளுப்பாக விருக்கும்பாரே. 875

இருக்கிறதோர் கற்பூரம் விராகநாலு
இதமான கெந்தியது விராகனொன்று
பருக்கிறதோர் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணிப்
பணவிடைதானனு பானத்தோடே கொள்ள
செருக்கிறதோர் கடிவிஷங்கள் புண்கள்சூலை
செருமியவெண்குட்டங்கள் பவுத்திரங்கள் கிரந்தி
அருக்கிறதோர் வியாதியெல்லா மகன்றுபோகு
மாதித்தன் கண்டதொரு பனிபோலாமே. 876

ரசசெந்தூரம்

பனியென்ற பச்சைரசஞ் செந்தூரிக்கப்
பாங்கான சூதமது பலந்தானெட்டு
கனியென்ற கெந்தகந்தான் ரண்டுபலமாகுங்
கனமான வோட்டிலிட்டுத் தணலில்வைத்து
தொனியென்ற கெந்தகத்தை யுருக்கிக்கொண்டு
சூதத்தை யதில்விட்டு அயத்தால்கிண்டி
நனியென்ற சூதமது கரிபோலாகும்
நயத்தோடே வாங்கிமெள்ளக் குப்பியிற்போடே. 877

போட்டுமே யரைவாசிக் குப்பிக்கப்பா
புகழான வாலுகையின் மேலேவைத்து
நாட்டுமே ஓடாலே மேலேமூடி
நயமாக வடுப்பெரித்துச் சாமம்ரண்டு
ஓட்டுமே ஓடதனை வாங்கிப்போட்டு
வுக்கிராமா யெரித்தாக்கால் கெந்தகந்தான்பத்து
வாட்டுமே கெந்தகத்தின் நாலத்தொன்று
மருவியதோா தாளகத்தை நிறுத்துவையே. 878

வைக்கவே கொஞ்சமாய்க் குப்பியிலேபோட்டு
மறவாமல் அயக்கதிரால் கிண்டுகிண்டு
நைக்கவே தாளகத்தைப் போட்டுப்போட்டு
நலமாக் கிண்டிவரச் சலாகையாலே
உய்க்கவே சரக்கெல்லாம் பதங்கமாகும்
உற்றவெறுங் குப்பியாயடியிற் காணுஞ்
செயிக்கவே யடியிலே மருந்தில்லாட்டால்
சீரான பதமென்று அடுப்பையாற்றே. 879

ஆற்றியே யிருநாழியான பின்பு
அயக்குறட்டால் குப்பிதனை வெளியில்வாங்கி
போற்றியே நீர்தெளித்து ஆறப்போட்டுப்
புகழாகக் குப்பியெல்லாந் தள்ளிப்போட்டு
தேற்றியே சிவப்பாகக் கம்பிபோலாய்ச்
சிறுகதிராய்ப் பலகை போலிருக்கும்பாரு
சாற்றியே பணவிடைதான்றேனி லுண்ணத்
தப்பாது நோயெல்லாஞ் சாடிப்போமே. 880

சாட்டியே கல்வத்திலிதனைப் போட்டுத்
தயங்காமல் பொடிபண்ணிக் காட்டுச்செம்பு
நீட்டியே கிழங்கின்சாறது வைத்துக்கொண்டு
நினைவாக் யரைத்திடுவாய் மூன்று நாள்தான்
வாட்டியே ரவியில்வைத்துப் பொடியாய்ப்பண்ணி
வளமான காசியென்ற குப்பியிலேபோடு
ஒட்டியே வாலுகையின் மேலேவைத்து
உற்பனமாயடுப்பெரித்து ஆறவிட்டு வாங்கே. 881

வாங்கியே முன்போலக் கல்வத்திற்போட்டு
வளமான கிழங்குச் சார்விட்டு ஆட்டி
தேங்கியேயரைத்திட்டு மூன்றுநாள்தான்
திறமாகப் பொடியாக்கிக் குப்பிக்கேற்றி
ஓங்கியே யரைக்கையிலே பலந்தான்கெந்தி
உற்பனமாய்ப் போட்டரைத்துக் குப்பிக்கேற்றி
தாங்கியே மூன்றுநாள் தீயையாட்டு
தப்பாமலிப்படி தானைந்து தரமேற்றே. 882

சிவப்புகெந்தி

ஐஞ்சுமே வாலுகையின் தளத்தில்நிற்கும்
அசங்கா மலச்சிமிழி லெடுத்துவைத்து
உஞ்சுமே நவலோகம் நூற்றுக்கொன்றி
யுற்பனமாய்ப் பத்தரையே மாற்றுகாணும்
கெஞ்சுமே நோயெல்லாந் தவிடுபொடியாகுங்
கெடியான காலனுமே யஞ்சிப்போவான்
மிஞ்சியதோர் புளியுப்பு விட்டுத்தின்றால்
மேவியதோர் சட்டை சுக்கிப்பாலையாமே. 883

பாலையாஞ் சிவப்பான கெந்திதன்னைப்
பகரக்கேள் பராபரைக்கு முதல்நாதந்தான்
ஓலையாலெழுத வென்றாலி தனினாட்டு
உத்தமனேகடல் தண்ணீர்க் கொப்பேயாகு
மாலையாங் கொன்றையைத் தான்றரித்த
சிவன்மைந்தா மயங்கினாரிதினுடைய ஆட்டைப்பார்த்து
ஆலையாய்ச்சரக் கெல்லாங் கொல்லுங்கொல்லும்
அம்மம்மா ஆயியுட நாதந்தானே. 884

நாதமென்று மிதுக்குப்பேர் சுத்திகெந்தி
நலமான கோழித்தலைச் சூடனென்றும்
போதமென்ற விதினுடைய வைப்புதன்னைப்
போக்கோடே வெளியாகச் சொன்னேன்மக்காள்
நீதமென்ற நெல்லிக்காய்க் கெந்தகத்தை
நினைவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கீதமென்ற செவ்வகத்தி செவ்வலரிமுருக்குக்
கெடியான செவ்வல்லி செம்பருத்திதானே. 885

தானான மாந்தளிருங் குமரிவேருந்
தயங்குமணித் தக்காளி சாணாக்கியோடு
பானான புளியாரை பத்துங்கேளு
பாங்காக வெவ்வேறாய்ப் படிதான்சாறு
கோனாகவார்த்து வொவ்வொன்றாய்க் கலக்கிக்கொண்டு
கொடிய தொருயிந்திரமாங் கோபப்பூச்சி
தேனான பூநாகம் ரண்டுங்கேளு
தேசிக்காயள வரைத்துக் கூடப்போடே. 886

போடவே வெடியுப்பு சீனம்ரண்டு
பொலிவாக வகைக்கு மொருபலமும் போட்டு
வாடவே பசுவின்பால் படிதானைந்து
மாசற்ற எலுமிச்சம் பழச்சாறுசேரை
தேடவேகலக்கி யொன்றாய்வைத் துக்கொண்டு
திறமாகச் சட்டியிலே படிதான்வார்த்து
நீடவேசீலை கட்டிஅதின் மேற்கெந்தி
நினைவாகப் பரப்பியல்லோ மேற்சட்டிமூடே. 887

மூடியேசீலை செய்து குழிதான் கெல்லி
முயற்சியாய்ச் சட்டிதனைப் புதைத்துப்போடு
நாடியே மேற்சட்டி தெரியவிட்டு
நழுகாமல்புடம் போடுபத் தெருவிலப்பா
தேடியே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
சிறப்பாகவுருகி யெல்லாஞ்சாறு தனில்நிற்கும்
வாடியேமணியெல் லாம்பொருக் கிக்கொண்டு
மறுபடியுஞ் சாறொக்கப் படிதான்வாறே. 888

படிச்சாறு வார்த்து மேமறு சீலைக்கட்டிப்
பாங்காகமணி யெல்லாம் பொறுக்கிவைத்து
துடியாகப் பரப்பியே மேற்சட்டிமூடி
துப்புரவாய்ச் சீலைசெய்து புடத்தைப்போடு
அடிச்சாறு வற்றவற்றமறு சாறுவார்த்து
அதட்டியே யிருபத்து ஒன்றுபோடு
கடிசாறுதள்ளிவிட்டு மணியெல்லாம் பொருக்கிக்
கழுவியே தண்ணீரில் ரவியில்போடே. 889

போட்டபின்பு யெடுத்ததனை கல்வத்திலிட்டுப்
பொடிபண்ணிக் கல்வத்தில்மயில் நெய்வார்த்து
பூட்டபின்பு வாலுகையின் மேலேவைத்துப்
பொருந்தவே தீமூட்டிக் கமலம்போல
நாட்டபின்பு காடாக்கினி நாலுசாமம்
நலமாகத் தீபாக்கினி யாறுசாமம்
தேட்டபின்பு நாற்சாம மாறவிட்டு
யெரிக்கச்சிவசிவா மாதளம்பூ நிறம்போலாமே. 890

நிறமான கெந்தகத்தில் வேகம்பட்டால்
நிரைக்கு முன்னேசூதம துயேமமாகு
மறமானலோ கத்தில்பரி சிக்கவேதை
யானுண்டகற்ப மிதுயானுங் கொண்டேன்
திறமான தங்கமது செம்புமாகுஞ்
சேர்ந்தநவ லோகத்திலா யிரத்துக்கோடும்
குறமாது மாமியுட நாதமப்பா
கொண்டாக்கால் கடிகையிலே சித்தியாமே. 891

சித்தியாந் தேவருக்கு மைந்துபூதம்
செகத்திலுள்ள சித்தருக்கு மைந்துபூதம்
முத்தியாமூர் வனமுமைந்து பூதம்
உயர்ந்தநிறை விருட்சமெல் லாமைந்துபூதம்
புத்தியாம் பாம்பினமு மைந்துபூதம்
போக்கான யைந்தினா லெல்லாமாச்சு
பத்தியாம் வாதத்தில் பஞ்சபட்சி
பாஷாண வைப்பதனைப் பாடினேனே. 892

பாடினேன்வட மொழியைப் பிரித்துப்பார்த்து
பரிவாக ஆத்தாளைக் கேட்டுக்கேட்டு
ஓடினேன் குளிகை யிட்டுநாதாக்கள் பதத்தில்
உகந்தடுமையாகி யல்லோவாதம் பார்த்தேன்
வாடினேன் மனமிளைத்து வாதம்பார்த்து
மயக்கமெல்லாங் குருசொல்ல மனதிலெண்ணி
நாடினே னுலகத்தோர் நம்மைப்போலே
நலிந்துயான் வெளியாகத் திறந்திட்டேனே. 893

திறந்திடா திருந்தாக்கால் சரக்குவைப்பைச்
செகத்திலே வாதம்பொய் யாகுமென்று
இறந்திடாதிருக்க வெளியாய்ச் சொன்னேன்
ஏழைமதி போகாதே பார்க்கவென்றால்
மறந்திடாக் கருவையெல்லா முன்னிப்பாரு
மாயமாம் வாசினையால் மனம்புண்ணாகும்
பிறந்திடாதிருக்க வென்றால்காய சித்திபண்ணு
பெரியோர்கள் பதம்போற்றிக் கருவைக்கேளே. 894

கருவென் னதாளகமும் பலமுமைந்து
காந்தளப்பூப் போலான பூநீறைந்து
உருவென்ன லிங்கமது பலமுமைந்து
உயர்த்தியாய்ச் சிலையதுவும் பலமுமைந்து
குருவென்ன கெவுரியது பலமுமைந்து
கூட்டியெல்லாங் கல்வத்திற்பொடி யாய்ப்பண்ணி
திருவென்ன செங்கீரைச் சாறுவிட்டுச்
சிறப்பாக வேழுநாள ரைத்திடாயே. 895

அரைத்திட்டுப் பொடிபண்ணி மேருக்கேற்றி
ஆறவிட்டுப் பனிரண்டுசாமந் தீயைப்போடு
வரைத்திட்டப் பதங்கமது யிறுகியேறி
வகையான பஞ்சபட்சி பாஷாணமாகும்
நரைத்திட்டுப்போகாது மெழுகு பண்ணிக்கொண்டால்
நவலோக மாயிரத்துக் கோடும்பாரு
புரைத்திட்டு வீசமிடை பாலிலுண்ணு
பொலிவான சட்டைகக்கி வாலையாமே. 896

பவளப்புற்று பாஷாணம்

ஆமென்ற பவளபுற்றுப் பாஷாணந்தா
னரையிறேனி யான்றானு மறிந்தமட்டும்
போமென்ற தாள்கந்தான் பலமும்பத்து
புகழான வெள்ளையென்ற பாஷாணந்தான்
காமென்ற பலம்பத்து கல்வத்திட்டு
கனமாகவரைத்து நன்றாய்ப்பொடி யாய்ப்பண்ணி
தேமென்ற ரண்டுபலங் கெந்தியிட்டுச்
சிறப்பாகக் காசியென்ற மேருக்கேற்றே. 897

ஏற்றியே வாலுகையின் மேலேவைத்து
இதமாகக் கமலம்போல் தீயைமூட்டு
போற்றியே நால்சாமங் கமலம்போலாட்டு
புகழாக ஆறவிட்டுத் தண்ணீற்குத்து
சாற்றியே குப்பியைத்தா னுடைத்துப்பார்த்தால்
சாங்கமாய்ப் பாஷாணம் புற்றுப்போலாகு
மாற்றியே யிதைக்கட்டி வேதையோடி
லம்மம்மா வெகுதூர மோடுங்காணே. 898

கெவுரி பாஷாணம்

காணப்பா கெவுரியுட வைப்புகேளு
கடிதான வெள்ளையென்ற பாஷாணந்தான்
ஊணப்பா பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வுத்தமனே கெந்தகம் ரண்டரைபலந்தான்
பூணப்பா பொடிபண்ணி மேருக்கேற்றிப்
புகழான வாலுகையின் தீயைமூட்டு
வீணப்பா கமலம்போல் நாலுசாமம்
விடுபடவே யெரித்திட்டு உடைத்துவாங்கே. 899

வாங்கியே யுடைத்தாக் காலடுக்குப்போல
வகையான சிவப்புமஞ்சள் போலிருக்கும்
ஓங்கியே யிதைக்கட்ட ஆராலாகும்
உத்தமனே வெடியுப்புச் செயநீராகும்
தேங்கியே வெடியுப்புச் செயநீர்கேளு
சிறப்பான பெருங்கம்பி நாலாங்காய்ச்சல்
பாங்கியே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
பக்குவமாஞ் சாரமது காசெடைதானைந்தே. 900

வெடியுப்புச் செயநீர்

ஐஞ்சோடு கல்லுப்பு காசெடைதானைந்து
அழகான பூநீறு காசுமைந்து
நஞ்சோடு சீனமது காசுமைந்து
நலமான வப்பிரேக்ங் காசுமைந்து
பஞ்சோடு வெள்ளையது காசுமைந்து
பேரான துரிசியது காசுமைந்து
பிஞ்சோடு சீனமது காசுமைந்து
பாங்கான சூடனது காசுமைந்தே. 901

காசுதா னைந்தாகும் வெண்காரம்பூரங்
காணிதுக்குள் சமனாகக்கடல் நுரையைப்போடு
மாசுதா னிந்துப்பு அன்னபேதி
மகத்தான சத்தியென்ற சாரத்தோடு
தூசுதானிது வெல்லாங் கல்வத்திட்டுத்
துடியாகப் பொடிபண்ணிச் சொல்லக்கேளு
பூசுதான் பழம்புளிதான் பலமும்பத்தே
பகமான கொறுக்காயின் பலமும்பத்தே. 902

பத்தான ஏறலென்ற சதையினோடு
பாங்கான பருங்கொன்றை பழத்தைக்கேளு
வித்தான பலம்பத்து நிறுத்துப்போட்டு
மேவியே தோரெலுமிச்சம் பழச்சாற்விட்டு
முத்தாக விடித்துமைபோல் மெழுகாய்ப்பண்ணி
முயற்சியாய் வில்லைசெய்து வுலரப்போட்டு
அத்தான பூப்புடத்தில் தயிலம்வாங்கி
அழகான முன்மருந்தில் விட்டு ஆட்டே. 903

ஆட்டியே ஏழுநாள் ரவியிற்போடு
அழகான வடிகனத்த கலசம்வாங்கி
பூட்டியேகற் சுன்னங் குழைத்துக்கொண்டு
புகழான விரல்பருமங் கனமாய்ப்பூசி
தேடியே கலயத்தினுள்ளும் பூசிச்
சிறப்பான சில்லுக்கு நடுவேபூசி
வாட்டியே கலயத்துள் மருந்தைவைத்து
வகையாகச் சில்லிட்டுச் சீலைசெய்யே. 904

செய்தபின்பு நூரெருவிற் புடத்தைப்போடு
திறமாக ஆறவிட்டு யெடுத்துப்பாரு
கைதபின்பு பொடிபண்ணிப் பீங்கானில்வைத்துக்
கனமான பனியில்வைக்க செயநீராகு
மைதபின்பு இந்நீரில் வீரம்பூர
மருவநன்றாய் பொடிபண்ணிச் செயநீரில்போடு
எய்தபின்பு சரக்கான வறுபத்துநாலு
மிதமான செயநீரில் தோய்த்துவாட்டே. 905

வாட்டியபின் சுறுக்கிடவே மெழுகாய்ப்போகும்
வகையான கட்டினமாம் நீற்றினமுமாகும்
பூட்டியபின் செந்தூரங் களங்கமாகும்
போக்கான சத்துவகை குளிகையாகும்
நீட்டியபின் நவலோகம் வேதையாகும்
நிலைநிற்குங் காவிக்கும் புடத்துக்கேகா
ஒட்டியபின் செயநீரில் சுருக்காம்வேதை
உற்பனமாங் காயசித்துக் கெவனமாமே. 906

சாரநீர்

சீனமாய்ப் பிரேகங் காசுமைந்து
சிறப்பான சூடனது காசுமைந்து
பானமாம் பூரம்து காசுமைந்து
பகருகின்ற வெண்காரங் காசுமைந்து
வூனமாம் வீரமது காசுமைந்து
உற்பனமாஞ் சத்தியென்ற சாரமைந்து
கானமா மன்னமென்ற பேதியைந்து
கனமான கல்வத்திற் பொடியாய்பண்ணே. 907

பண்ணியே வெடியுப்பு நீரைவார்த்து
பாங்காக வரைத்திடுவா யேழுநாள்தான்
ஒண்ணியே கலசத்திற் சுண்ணாம்புபூசி
வுத்தமனே யதற்குள்வைத்துப் புடத்தைப்போடு
நண்ணியே யாறவிட்டுப் பனியில்வைக்க
நலமான வாரிதிபோற் சலமுமாகும்
கண்ணியே யிந்நீரில் வீரம்பூரம்
காசிடைதான் பொடித்திட்டு வைத்துக்கொள்ளே. 908

கொள்ளென்ற செயநீரால் பாஷாணங்கள்
குறிப்பாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
அள்ளென்ற கல்லுப்பு மணிபோலாடு
மாச்சரிய நாகத்தை யமுக்கிக்கொல்லும்
துள்ளென்ற சூதத்தை மாலையாக்குந்
துடியான பூரத்தைச் சுன்னம்பண்ணும்
புள்ளென்ற லிங்கத்தை மெழுகுபண்ணும்
போக்கத்திலே வெகுகோடி யாடலாமே. 909

துருசு செயநீர்

ஆடலாம் துருசென்ற செயநீராலே
அப்பனே துருசதுவும் பலந்தான்பத்து
சூடலாங் கெந்தகந்தான் பலந்தான்மூன்று
சுடர்கொடியாஞ் சூடனது பலமுமூன்று
ஊடலாம் வீரமது பலந்தானொன்று
உற்பனமாம் வெள்ளையது பலமுமொன்று
நீடலாம் பூநீறு பலமுமொன்று
நிச்சயமாங் காரமது பலமுமொன்றே. 910

ஒன்றான சத்தியது காசுஐந்து
உற்பனமாந் தாளகமுங் காசுஐந்து
மன்றான் சிலையதுவுங் காசுஐந்து
மாசற்ற சீனமது காசுஐந்து
குன்றான அண்டநீர் காசுமைந்து
கோழியுட வெண்மலமுங் காசுஐந்து
வென்றான சூதமது காசுஐந்து
மெய்யான பூரமது காசுஐந்தே. 911

காசெடைதா னைந்தாகும் வெள்ளூரம்பூரம்
கனத்ததொரு குருவண்டு ஐம்பத்தொன்று
தூசெடைதான் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
துவளவரை யேழுநாள் சாரநீரால்
மாசெடைதான் தெல்லுப்போல் வில்லைபண்ணி
வளமான கலயத்திற் சுன்னம்பூசி
ஆசெடைதான் மருந்தையிட்டுச் சீலைசெய்து
ஐம்ப தெருவணைத்துமெள்ள புடத்தைப்போடே. 912

புடம்போட்டு யெடுத்துடனே குருவுமாகும்
புகழாக நாலிலென்று காரங்கூட்டி
திடம்போட்டுக் கல்வத்திலிட்டு ஆட்டிச்
சீராக நால்சாமமாட்டு ஆட்டு
தடம்போட்டு அண்டோட்டி லிட்டுமூடிச்
சார்பாகப் புடம்போட்டுப் பனியில்வைக்க
நடம்போட்டு ஆறுபோல் செயநீராகும்
நலமாக விந்நீரில் வீரம்போடே. 913

வீரமிட்டால் சிவப்பாகுஞ் செயநீரப்பா
வீறுபட்டசூதமது மதவானைக் குக்கரும்பு
ஆரமிட்ட புலிகையிலாடு போல
அயர்ந்துபோகுஞ் செயநீரைக் கண்டவுடனப்பா
காரமிட்ட சூதத்தைக் கல்வத்திட்டுக்
கடியதொரு செயநீரால் மூன்றுநாளாட்ட
தூரமிட்ட வெண்ணெயைப் போலாகும்பாரு
துடியான மத்தங்காய்க்குள் வைத்துவாட்டே 914

வாட்டியே யேழுபுடம் போட்டெடுத்து
வரிசையாய்க் கரண்டிதனி லெண்ணெய்குத்தியுருக்கிப்
பூட்டியே யெடுத்துப்பார் நத்தத்து மீன்போல்
புகழகாப் பளிச்சென்று மணியுமாகும்
ஊட்டியே உபசரங்கள் நூற்றிரண்டுபத்து
உத்தமனே பாஷாண மறுபத்துநாலு
தீட்டியே லவணவகை யிருபத்தைந்து
திறமாக நவாஷ்டினம் நவலோகத்தூடே. 915

ஊட்டுமே சத்தெடுத்து விடுவித்தாக்கா
லுத்தமனே சாரணை தானொன்றேயாச்சு
பூட்டுமே யிப்படியே இருபத்தொன்று
போக்கான சத்தெடுத்துக் கொடுத்துகக்கில்
ஆட்டுநீ சுருபமென்ற குளிகையாச்சு
அண்டமுதல் பதங்களெல்லா நிமைக்குள்புக்கி
கூட்டுநீ மீண்டுவருங் குளிகைவேகஞ்
சுருபசித்துங் கவனசித்துஞ் சுருக்கம்பாரே. 916

தாம்பரச் சுன்னம்

சுறுக்காகத் தாம்பரத்தின் சுன்னங்கேளு
சுளுகாமல் புளியிலைபோல் தகடுவாங்கி
முறுக்காகப் பலமெட்டு நிறுத்துக்கொண்டு
முனையான பழச்சாற்றி·லூறவைத்து
நறுக்காக் கழுவியதை யெடுத்துக்கொண்டு
நாறுகின்ற செம்பினுட வூரல்போக்கி
இறுக்காக வெள்ளியஞ் சட்டியிலேயுருக்கி
இதமாக நிமிளைதனைப் பொடியாய்ப்பண்ணே. 917

புண்ணியதோர் பொடிதானும் வங்கத்திலுருக்கு
பரவியதோர் சமபாகம் நிறுத்துக்கொண்டு
ஒண்ணியதோர் வெடியுப்பு நிமிளைக்குப்பாதி
உத்தமனே பொடியாக்கி வேறேவைத்து
நண்ணியதோர் வங்கம் நின்றுருகும்போது
நலமாக ஒவ்வொன்றாய் மாறிமாறி
கண்ணியதோர் வங்கத்தில் போட்டுக்கிண்டு
கசகாமல் சுன்னமது வாகும்பாரே. 918

சுன்னமின்ன மாவதற்கு வகையைக்கேளு
துடியான வெண்கருவு மெருக்கம்பாலும்
வன்னமின்ன ரண்டுமொன்றாய்க் கலக்கிக்கொண்டு
வங்கத்தில் விட்டரைத்து வில்லைகட்டி
தின்னமின்ன மகலிலிட்டுப் புடத்தைப்போடு
தீர்க்கமா யாறினபின் னெடுத்துவாங்கி
என்னமின்னம் நாலுபலம் நிறுத்துக்கொண்டு
இயலான சூதமது பலந்தானொன்றே. 919

பலமதுதான் கெந்தகத்தை நிறுத்துப்போடு
பாஷாண வெள்ளையது காசுஐந்து
நிலமது தானிலமது காசுஐந்து
நீச்சான வீரமது காசிஐந்து
குலமதுதான் கல்லுப்பு காசுமைந்து
கொடிதான சாரமது காசுஐந்து
நலமதுதான் சீனமது காசுஐந்து
நற்கெவுரி மனோசிலையுங் காசு அஞ்சே. 920

அஞ்சோடு வெங்கார மன்னபேதி
அழகான துத்தமொடு காசுமைந்து
கஞ்சோடு யிதுவெல்லாங் கல்வத்திட்டு
கடிதான வெண்கருவு மெருக்கம்பாலு
நஞ்சோடுவார்த் தரைத்துக் குழப்பிக்கொண்டு
நலமான தாம்பரத்தின் தகட்டிலப்பி
மிஞ்சோடு கொடிவேலி வேரின்பாட்டை
மெலிவான அண்டோடுஞ் சமனாய்ச்சேரே 921

சேர்த்தல்லோ பொடியாக்கி யெருக்கன்பாலுஞ்
சினத்த அடைவெண் கருவுமத்தித்துக் கொண்டு
வார்த்தல்லோ யரைத்திடுவாய் நாலுசாமம்
வளமான குகைபண்ணித் தாம்பரத்தைவைத்து
ஏர்த்தல்லோ மேல்மூடிச்சீலை செய்து
இயல்பாகக் குழிவெட்டி முழங்கால்மட்டும்
போர்த்தல்லோ புளிப்பரணி யெருவடுக்கிப்
புகழாகக் கெசபுடமாய் போட்டுவாங்கே. 922

வாங்கியே மேற்கவசந்தள்ளிப் போட்டு
வாசியா மூன்குழம்பில் பிசறிக்கொண்டு
தேங்கியேமுன் குகையில் வைத்துப்பூசிச்
சிறப்பாகமுன் போலப்புடத் தைப்போடு
தாங்கியேபிப் படிதான் மூன்றுதரம்போடு
தவளம்போல் குருவாகுஞ் செம்புதானும்
ஓங்கியேயிக் குருவுக்கென்ன வொப்பு
உத்தமித்தா யொப்பென்றுவுரை செய்தேனே. 923

உரைசெய்த குருவுக்கு யெடைக்கெடைதான்சாரம்
உத்தமனே பொடிசெய்து கல்வத்திட்டு
நிரைசெய்த முன்னீராலரைத் துக்கட்டி
நேர்பாகப்புடம் போட்டுப் பனியில்வைக்கக்
கரைசெய்ரு செயநீராம் பூரம்வீரம்
கனமாகப் பொடிசெய்து நீரிற்போட்டு
பரைசெய்தசெய நீரைவார்த்துக் கொண்டு
பாங்கான சூதத்தை யரைத்துருட்டே. 924

உருட்டியதைத்தான் வடமாய்க் கோர்த்துக்கொண்டு
உத்தமனே வைந்தெழுத்து மெட்டெழுத்துமோது
மருட்டியதை யவர்கையில் காண்பிக்கவேண்டாம்
மாஞானமன்ம வித்தையிற்றுப் பாரு
சிருட்டியிதை யொளித்துவிட்டு மூலம்பாரு
சிவயோகம்பிரம நிஷ்டைதெளிந்தது கண்டு
திருட்டியமாய் மூலமென்ற மௌனம்பாரு
தீர்க்கமுடன் சின்மயத்தை யறிந்துபோற்றே. 925

பொற்றொட்டி வைப்பு

போற்றவே பொற்றொட்டி வைப்புக்கேளு
புகழாகத் தாலமது மேருபண்ணி
மாற்றவே மண்சீலை பிலக்கச்செய்து
மகத்தான சூதமது பலந்தானெட்டு
ஏற்றவே ரண்டுபலஞ் சுத்திகெந்தி
யியல்பான ஓட்டிலேகெந்த கத்தையுருக்கி
தோற்றவே சூதத்தையதில் வைத்துக்கிண்டு
துடிக்கின்ற சூதமது கரிபோலாமே. 926

கரியான சூதத்தில் வெடியுப்புபலந்தான்
கனமான தாளகமும் பலந்தான்போட்டு
உரியானபொடி பண்ணி மேருவிலேபோட்டு
உத்தமனே குப்பிவாய்ச் சில்லிட்டுமூடி
மரியான வாலுகையின் மேலேவைத்து
வரம்பாகத் தீமூட்டு பனிரண்டுசாமம்
தெரியான கெந்தகத்திலெரிச்சல் கண்டால்
சில்லதனைத் தள்ளிவிட்டுச் சிலாகையிட்டுக்கிண்டே. 927

ரத்த பாஷாணம்

கிண்டையிலே அடியில் மருந்திட்டாவிட்டால்
கெடியான பதமென்று தீயையாற்றி
சண்டையிலே ஆறவிட்டு ஒரு சாமந்தான்
சாதகமா யிரும்பான குறட்டினாலே
மண்டையிலே குப்பியைத்தான் வெளியே வாங்கி
மகத்தான தண்ணீரைத் தெளித்து ஆற்றி
பண்டையிலே யிரும்பான கத்திகொண்டு
பக்குவமாய் மேலோடு பிரம்பாய்வாங்கே. 928

அஞ்சன பாஷாணம்

வாங்கியதோர் தொட்டினபேர் பொற்றொட்டியாச்சு
மருவியே மேலோடிப் பதங்கித்து நின்றால்
ஓங்கியதோ ரத்தமென்ற பாஷாண நாமம்
உற்ற அடி நின்றதுவு மஞ்சனமுமாச்சு
ஏங்கியதோர் நடுவில்நின்றால் நற்பரியுமாச்சு
ஏகமுனி முன்நிற்கில் சரக்காண்டமாச்சு
தாங்கியதோரித் தனையுமாயி சொல்லச்
சாதகமாய்ச் சித்தரெல்லாஞ் சமைத்திட்டாரே. 929

சமைத்திட்ட சரக்குகளில் வேதைகோடி
சாதகமா யொவ்வொன்றாய்ப் பார்த்துக் கொண்டு
அமைத்திட்ட நூல்களிலே மறைப்பில்லாம
லறியாத பசகட்குந் தெரியவென்று
குமைத்திட்ட முத்துபோலொரு கயிற்றில்கோர்த்தேன்
கொடிகொம்பு கயிற்கொடி மரமொன்றேபோல
இமைத்திட்ட பிள்ளைகளுக்குகந்து சொன்னேன்
எழுநூற்றைப் பார்த்தவர்களென் போலாமே. 930

நாகப் பதங்கம்

ஆமின்னம் நாகத்தைச் சொல்லக்கேளு
ஆச்சரிய நாகமது பலந்தான்பத்து
ஓமின்னம் நாகத்தைத் தகடுவாங்கி
வுயர்ந்த மயிற் கொன்றையிலை யரைத்துக்கொண்டு
தாமின்னந் தகடுமேல் பொதிந்துமூடிச்
சார்பாகப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
காமின்ன மிப்படியே பத்துவிசை போட்டுக்
கார்த்திகையின் கிழங்காலே பத்துவிசைபோடே. 931

போடப்பா வெருகினுட கிழங்கில்பத்து
புளியரணைக் கிழங்கதனில் பத்து விசைபோட்டு
நாடப்பா பின்பெடுத்து எண்ணெய்க் குத்தியுருக்கி
நலமாகக் கிண்ணியைப் போல் வார்த்துக்கொண்டு

ஊடப்பா நேர்வாளந் தயிலம் வாங்கி
யுத்தமனே சாரமது காசு ஐந்து
நீடப்பா துரிசியது காசு ஐந்து
நிலையான கல்லுப்புக் காசு அஞ்சே. 932

அஞ்சான பூநீறு காசுஐந்து
ஆதியென்ற கெவுரியது காசுஐந்து
பிஞ்சான கெந்தகமுங் காசு ஐந்து
பேசாத நிலையதுவுங் காசு ஐந்து
மஞ்சான வீரமது காசு ஐந்து
மாசற்ற லிங்கமுந்தான் காசுஐந்து
துஞ்சான தாளகமுங் காசுஐந்து
துடியான வெடியுப்புக் காசு ஐந்தே. 933

காசுதா னைந்தாகுஞ் சீனமப்பா
கலந்திந்த இடையெல்லா மறுபதாச்சு
மாசுதான் சூதமது மறுபதாகும்
வாகான கல்வத்திலிட்டுக் கொண்டு
ஆசுதானேர் வாளத்தயிலத்தாலே
ஐந்து நாளரைத்து நன்றாய் வில்லைதட்டி
தூசு தானிழலுலர்த்தி அயத்தாமிக்குளமுத்தி
துப்பரவாய்க் கிண்ணியைத்தான் பதித்திடாயே. 934

பதித்திட்வே யரைத்துநன்றாய்ச் சீலைசெய்து
பாங்கான முன்னரைத்த மெழுகினாலே
நிறுத்திட்டு இலுப்பைநெய்யால் விளக்குவைத்து
நேராக விளக்கெரிப்பாய் மூன்றுநாள்தான்
கொதித்திட்டு ரசமெல்லாம் பதங்கமேறுங்
கொள்கியந்த பதங்கத்தைக் கத்திக்கொண்டுவாங்கி
விதித்திட்ட நவலோகம் நூற்றுக்கொன்றீ
விரைந்ததுவும் பனிரண்டு மாற்றுமாமே. 935

ரத்தசிங்கி

மாற்றான ரத்தசிங்கி வைப்புக்கேளு
மருவியதில் காயசித்தி லோகசித்தியாகும்
கூற்றான யெமன்போலே சுருக்குமெத்த
கொடியவிஷ சூதத்தைநிமைக்கு முன்னேகொல்லும்
காற்றான காரீயம்பொடி பலந்தான்பத்து
கனகத்தின் பொடிதானும் ரண்டரையேபலந்தா
னீற்றான நாகத்தின்பொடி பலந்தானைந்து
நெல்லிக்காய்க் கெந்தகந்தான் பலம்பத்துபோடே. 936

பத்துடனே வெடியுப்புப் பலமுமைந்து
பாங்கான தாளகமும் பலமும்நாலு
கொத்துடனே குதிரைப்பல் பாஷாணமூன்று
கொடிதானே சாராயம் விட்டு ஆட்டி

சித்துடனே லோகமெல்லாங் கரையுமட்டும் ஆட்டி
சிறப்பாக விரலியிட்டுப் பொடியாய்ப்பண்ணி
முத்துடனே காசியென்ற மேருக்கேற்றி
மூதண்ட வாலுகையில் வைத்திடாயே. 937

வைத்திட்டுத் தீயெரிப்பா யெட்டுநாள்தான்
மாறாமலி ரவுபகலா றாமற்றா
னைத்திட்டு அடியதனில் தானேநிற்கும்
நலமாக ஆறவிட்டு டைத்துவாங்கி
கைத்திட்டுக் கம்பியாயரு ணன்போலக்
கட்டியா யிருக்குமப்பா ரத்தசிங்கி
பைத்திட்டு யிதினுடைய ஆட்டினாலே
பத்துயுகமாடி யல்லோகரை காணேனே. 938

ஏமசிங்கி

கரைகாணா ரத்தசிங்கி பலந்தான்பத்து
கலிரிதற்குள் சூதமது பலமும்பத்து
உரைகாணாக் கெந்தகமும் பலமும்பத்து
உகந்துநின்ற வெடியுப்புப் பலமுமைந்து
பரைகாணாத் தாளகமும் பலமுமொன்று
பரிவான சிலையதுவும் பலமுமொன்று
புரைகாணா அவுரிச்சாற் விட்டுயாட்டிப்
பேரான நாள்மூன்று அரைத்திடாயே. 939

மூணுநாள ரைத்திட்டுப் பொடியாய்ப்பண்ணி
முயற்சி யாய்க்காசியென்ற மேருக்கேற்றி
பூணுநாள் வாலுகையின் மேலேயேற்றிப்
பொருந்தவே தீமூட்டி மூன்றுநாள்தான்
தோணுநா ளாறவிட்டு வுடைத்துவாங்கித்
துடியான யேமென்ற சிங்கியாச்சே
வீணுநாள் போகாமல் வீசமிடையுண்ணு
மேனியுமோ தங்கநிற மாகும்பாரே. 940

தங்கநிற மானாக்கால் மேனிதானுஞ்
சாவேது நோவேது கற்பாந்தகாலம்
பங்கமாம் பெண்மாய்கை தனையகற்றிப்
பாழான புளியுப்பைத் தள்ளிவிட்டு
சங்குநிற மாகவே பாலிலுண்ணு
சாவென்ற துபொய்யா முகாந்தவரைநிற்குங்
கொங்கநிறமாக வந்தான வலோகத்தில்
கொடுத்திடவே பதினாலு மாற்றுமாமே. 941

மிறுதார்சிங்கு

மாற்றான மிறுதாரு சிங்குவைக்க
மாணாக்காள் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளுங்
காற்றான காரீயம் ரண்டுபத்து பலன்தான்
கலரிதற்குள் நாலிலொன்று சுரகெந்தியப்பா

மூற்றான கெந்திக்குப் பாதிவெடியுப்பு
முயற்சியாய்ப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு
தேற்றான யீயத்தைச் சட்டியிலேயுருக்கிச்
சிறப்பாகப் பொடியிட்டு வறுத்திடாயே. 942

வறுத்திடவே பொடிபோலே யீயஞ்சாகு
மாசற்ற பொடியெல்லாங் கலசத்திட்டு
நிறுத்திடவே கலசத்திலரை வாசியிட்டு
நேராக மேல்மூடிச் சீலைசெய்து
கறுத்திடவே யடுப்பேற்றிப் பனிரண்டுசாமங்
கமலம்போலெரியிட்டு வுடைத்துவாங்கி
மறுத்திடவே பார்த்தாக்கால் கம்பிபோலா
மாசற்ற மிறுதாரு சிங்கியாமே. 943

ஆமப்பா பாஷாண முப்பத்திரண்டு
மப்பனே வைப்பதனைச் சொல்லிப்போட்டேன்
ஓமப்பா சித்தர்சொன்ன நூலைப்போல
ஒளித்துவைத்துச் சூத்திரத்தைச் சொல்லவில்லை
நாமப்பா கருவெல்லா மாராய்ந்துபார்த்து
நலமாக வொவ்வொன்றாய்ப் பார்த்துகண்டு
சேமப்பா எழுநூற்றில் சிக்கில்லாமல்
சிறப்பாக வெளியாகத் திறந்திட்டேனே. 944

திறந்திட்டேன் சிவயோகி சித்தர்ஞானி
சீராகப் பிழைக்கவென்று திருவுளத்துக் கொப்பாய்
திறந்திட்டேன் சித்தருடன் வாதுபோட்டுச்
சிவயோகி பிரமநிஷ்டை முனிகளுக்காய்
திறந்திட்டே னாத்தாளைக் கேட்டுக்கேட்டுத்
தேகசித்தி யாகவென்று லோகத்தோர்கள்
திறந்திட்டேன் தேவியுட பூசைக்காகச்
சிவசொத்தை வறுமை போலுண்டிடாயே. 945

வறுமை போலுண்டு டுத்திவாதம்பாரு
மாகசெறி மாயத்தே யழுந்திடாதே
வறுமைபோல் திரிந்துகொண்டு காயசித்திபண்ணு
மகத்தான ரிஷிகளுக்குத் தொண்டுபண்ணு
வறுமைபோல் திரிந்துகொள்ளு நாட்டிலுள்ள பேர்க்கு
மன்னுயிருந் தன்னுயிராய் மனதிலுன்னு
வறுமையாய் மலையிலுள்ள வதிசயத்தைப்பாரு
மாகமூல பாஷாண வகையைத்தேடே. 946

பாஷாணப் பேர்வகை

வகைகேளு பாஷாணப் பிறப்புதன்னை
மைந்தனே முப்பத்து ரண்டுதாது
துகைகேளு மலைதோறு முண்டுமுண்டு
சுணங்கலாய்த் திரியாதே வுட்புகுந்துபாரு

நகைகேளு பாஷாண பேருதன்னை
நசையான கர்க்கடகங் கோளகமுஞ்சூத
மிகைகேளு அரிதாரம் கெந்தந்தானும்
மிலேசான அக்கிராந்தா வீரந்தானே. 947

தானென்ற வமுர்தமொடு சீர்பந்தந்தொட்டி-
சங்கபாஷாண மொடுகுதிரைப் பல்கெவுரி
பானென்ற பல்லாண்டு உறுகந்துதப்பாளகமுணம்
பரிவான சரக்காண்டம் லிங்கபாஷாணம்
தேனென்ற தாபாஷாணம் அவுபலபாஷாணம்
சிலையோடு சர்வாங்கம் கற்பறிபாஷாணம்
ஊனென்ற கல்லான பாஷாணத்தோடு
உத்தமனே கச்சாலப் பாஷாணமாமே. 948

ஆமென்ற அஞ்சனப் பாஷாணத்தோடு
மப்பனே சீதாங்கப் பாஷாணமாகும்
காமென்ற கார்முகியுஞ் சிலாமதப்பாஷாணம்
கடிதான வெள்ளையொடு அப்ரகபாஷாணம்
போமென்ற காந்த பாஷாணத்தோடு
புகழான முப்பத்து ரண்டுதாது
வாமென்ற மலைதோறு முண்டுவுண்டு
மகத்தான பெரியோரை வணங்கிக்கேளே. 949

கேட்டையிலே ஆருடைய வர்க்கமென்னில்
கெடியான மூலர்வர்க்கங் காலாங்கிநாயர்
தாட்கையிலே காலாங்கி மைந்தன்போகர்
சார்பான சீஷனென்று சொல்லிக்காட்டு
வீட்கையிலே சந்தோஷித் தழைத்தேயுன்னை
வேண்டியதோர் பாஷாண மூலிகையுமீய்வார்
வாட்கையிலே வீடுசுற்றும் வேட்டைநாய்போல்
மாய்த்தே யுண்மையுள்ள வாதந்தானே. 950

வாதந்தா னெளிதென்று யெண்ணவேண்டா
மகத்தான சிவத்தினுட தெரிசனையேயொக்கும்
நாதமென்ற சிலம்பொலியில் மேவப்பண்ணும்
நாதாக்களரு கிருந்துவார்த்தை சொல்லலாகும்
கீதமென்ற மூன்றுலகஞ் சஞ்சரிக்கலாகுங்
கெட்டியாங் காயமது வுகாந்தவரைநிற்கும்
நீதமென்ற சிங்கியைத்தான் செம்புபண்ணு
நிலவரமாய்ப் பதினாறு மாற்றுமாமே. 951

மிறுதாருசிங்கிச்செம்பு

சிங்கியென்ற செம்புக்கு தண்ணீர்மீட்டான்
திறமான பழச்சாறு படிதான்வாங்கி
அங்கியென்ற சிங்கியைத்தான் பொடிபோர்பண்ணி
அயச்சட்டி தனில்வைத்து சுருக்குப்போடு

மங்கியென்ற பொடிபோலே வறுத்துப்போடு
மாசற்ற தண்ணீர் மீட்டான் கிழங்குவாங்கி
செங்கியென்ற பொடிப்பொடியாய்ச் சீவிவைத்துக்
கெடியாக நிழலுலர்த்தித் தயிலம்வாங்கே. 952

வாங்கியந்தத் தயிலத்தா லாட்டுஆட்டு
மறவாமல் மூன்றுநா ளாகுமட்டும்
ஏங்கியந்த வெங்காரங் கூடயிட்டு
யியல்பான மூசையிட்டு லையிலூது
தாங்கியந்த மணிமணியாய்ச் செம்புமாகுந்
தாங்கியந்தக் கசடெல்லாந் தயிலத்தாட்டித்
தேங்கியந்த முன்போல மூன்றுதரமூது
சிவசிவா சிங்கியென்ற செம்புமாச்சே. 953

சிங்கியென்ற செம்பாலே சுன்னங்கோடி
திறமான செந்தூரங் களங்குகோடி
தங்கியென்ற செம்பெடுத்துத் தங்கங்கூட்டிச்
சார்பான தகடாக்கிச் சூதங்கெந்தி
நங்கியென்ற சாறரைத்துத் தகட்டிற்பூசி
நலமாக மூன்றுபுடம் போட்டெடுத்துத்
தெங்கியென்ற நவலோகம் நூற்றுக்கொன்றீய
திறமான மாற்றதுவும் வார்த்தல்லோ. 954

அயச்செம்பு

ஆமென்று அயச்செம்பு சொல்லக்கேளு
அயத்தாலே கிளைமூடிமேல் மூடிபண்ணி
போமென்ற துரிசியது பலந்தான்ரண்டு
போக்கான கெந்தியது பலமுமொன்று
காமென்ற சூதமது பலமுமுக்கால்
காரமாம் வீரமது காசுமைந்து
சாமென்ற பொடிபண்ணி அயத்திற்போட்டு
சம்பீரப் பழச்சாறு தினமும்வாரே. 955

வார்த்தல்லோ தினந்தினமு மூறவைத்து
மண்டலந்தான் கடந்தபின்பு எடுத்துவாங்கிப்
போர்த்தல்லோ அயமெல்லாந் தாராய்ப்போகும்
போக்கான மருந்தோடே சுரண்டிவாங்கி
ஏர்த்தல்லோ சுண்ணாம்பும் வுப்பு
நேரேயிடித்தல்லோ மருந்துக்குக் கவசங்கட்டி
ஆர்த்தல்லோ புடம்போட்டு எடுத்துக்கொண்டு
அதட்டியே குகையிலிட்டு வுருக்கிடாயே. 956

உருக்கிடவே செம்பெடுத்து சிவப்புமெத்த
ஓகோகோ செம்பெடுத்து மதியில்பத்து
நருக்கிட்டு இச்செம்பு கொடுத்தாயானால்
நலமாக மாற்றைந்து காணுங்காணும்

அருக்கிடவே தங்கமிட்டுக் கெந்தியிட்டு
ஆதியென்ற சூதமிட்டுச் செந்தூரித்தால்
பருக்கிடவே பத்துக்குக் குறையாதப்பா
பாரிந்தச் செந்தூரங் குன்றியுண்ணே. 957

பூநாகச்சத்து

உண்ணென்ற நாகச்சத்து கேளு
உத்தமனே செம்மண்ணில் பூநாகந்தான்
கண்ணென்ற ரிஷபத்தின் சாணிதன்னில்
கலந்தெடுத்துப் பிசறிநன்றாய்த் தட்டிப்போடு
மண்ணென்ற காய்ந்தபின்பு பாண்டத்திற்போட்டு
மறவாமல் மேல்மூடி யெரித்தெடுத்து
நண்ணென்ற சாம்பலைத்தான் காடிவிட்டுக்கரைத்து
நலமான தெளிவையெல்லா மிறுத்திடாயே. 958

இறுத்திவிட்டு அடிவண்ட லூற்றுப்பார்த்தா
லிதமாகப் பளிச்சென்று மின்னல்காணும்
மறுத்துவிட்ட சூதத்தை விட்டுத்தேய்க்க
மாசற்ற செம்பெல்லாம் பிடித்துக்கொள்ளும்
கறுத்துவிட்ட காரத்தை யிட்டுருக்
கண்விட்டு ஆடியல்லோ செம்பாய் நிற்கும்
அறுத்துவிட்ட குளிகைக்கு முந்திமுந்தி
அப்பனே வுருக்கையிலே யிச்செம்புதாக்கே. 959

தாக்காட்டால் குளிகைக்குத் தீபனமோயில்லை
சார்பான சத்தெல்லா முட்கொள்ளாது
தாக்காட்டால் கெவுனத்தில் சுறுக்கோடாது
தனித்தமின்ன லிடியுட்குள் சுளித்துப்போகுந்
தாக்காட்டால் சந்திரனிற் குளிர்ச்சியாலே
சஞ்சரிக்க வொட்டாது குளிர்ச்சிகாணுந்
தாக்கட்டா லக்கினியிற் காந்திகாணும்
தாக்கியல்லோ சாரணையி லாடினாரே. 960

ஆடினதோர் செம்புக்கு நாலிலொன்று
அப்பனே தங்கமிட்டுத் தகடுதட்டி
ஓடினதோர் சூதமொடு சீலையுங்கெந்தி
வுயர்ந்துநின்ற தாளகமும் வீரஞ்சேர்த்து
நாடினதோர் முலைப்பால் தான்விட்டு ஆட்டி
நலமான தகட்டின்மேல் பூசிப்பூசிப்
பாடினதோர் மூன்றுபுடம் போட்டெடுத்துப்
பாய்ச்சினா லாயிரத்துக் கோடும்பாரே. 961

படிகச்செம்பு

ஓடுமே படிகத்தின் செம்புசொல்வேன்
உத்தமனே வெகுசுளுக்கு ஓடும்வேதை
பாடுமே படிகக்கல் பொடியாய்ப்பண்ணி
பண்பாக மாவாக்கிச் சேரைநாலு

ஆடுமே ஆவாரம் வேரதனின்படடை
அப்பனே மறுதோன்றி வாகைநெல்லி
தேடுமே பூவரசு மருதுவன்னி
சிறப்பான கிளுவையொடு நுணாவேர்தானே. 962

தானென்ற கருவேலும் வர்த்தங்கிபூவா
சார்பாக யின்பூரல் கசிக்காயோடு
வானென்ற யிவ்வகையின் பட்டையெல்லாம்
வளமாகச் சமபாகம் நிறுத்துக்கொண்டு
கோனென்ற வுரலிலிட்டு யிடித்து நையக்
கொட்டியே பாண்டத்தில் தண்ணீர்விட்டுப்
பானென்ற எட்டிலென்றாய்க் காய்ச்சிக்கொண்டு
பக்குவமாய் வடித்திறுத்து அயப்பாண்டத்தூற்றே. 963

ஊற்றியபின் படிகாரஞ் சேருஒன்று
ஒளிவான கெந்தகந்தான் பலமும்நாலு
மாற்றியபின் தாளகமும் பலமும்ரண்டு
மாசற்ற துரிசியது பலமும்நாலு
சாற்றியபின் பூநீறுபலமும் ரண்டு
சாரித்து ஆதளையின் பாலினாலே
ஏற்றியபின் கியாழத்தில் கூடவிட்டு
எலியாலம் பால்சேரு கூடவாரே. 964

வார்க்கவே நல்லெண்ணெய் நாலுசேரை
வளமாகக் காய்ச்சியெல்லாங் குழம்பாய்ப்பண்ணி
ஏர்க்கவே கலயத்தில் வார்த்துக்கட்டி
இச்சையாம் படிகத்தின் மாவில்விட்டு
தோர்க்கவே யரைத்து நாற்சாமமட்டுந்
தெல்லுப்போல் வில்லைபண்ணிச் சரவுலையில்வைத்து
பார்க்கவே துருத்தியிட்டு யிருபுறமுமூது
படிகமது செம்பாகும் பண்பாய்வாங்கே. 965

வாங்கியே செம்பெல்லா மெடுத்துக்கொண்டு
வளமான கறடெடுத்துத் தயிலத்தாலாட்டிப்
பாங்கியே முன்போல வைந்துதரமூதிப்
பருவமாய்ச் செம்பெல்லா மெடுத்துக்கொண்டு
ஓங்கியே குளிகைக்குச் செம்பையீய
ஒடுகிற கெவுனத்தி லிருளெல்லாந் தீர்க்குந்
தாங்கியே யிச்செம்பு மதியிலீயச்
சார்பாகப் பனிரண்டு மாற்றுமாமே. 966

சங்குசெம்பு

மாற்றான படிகத்தைப் போலேயப்பா
வளமான சங்கத்தைச் செம்புபண்ணு
கூற்றான குளிகைக்குக் கொடுத்தாயானால்
கொடுவேக மோடையிலே நாதம்பண்ணும்

நாற்றான தநுவிளைந்து நெல்லானாப்போல்
நலமான சங்கத்தி லுயர்த்திவேதை
மூற்றான தேவிவிடுபட்டுப் போவாள்
முழங்கியதோர் சங்கத்தைச் செந்தூரித்துண்ணே. 967

உண்ணவே சங்கத்தின் செம்புகேளு
ஒலியாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கண்ணவே ஐவேலிக் கொட்டைகோவை
கலந்துநின்ற முசுமுசுக்கை மணித்தக்காளி
பண்ணவே அமுக்குறா ஆறுந்தானும்
பழம்வாங்கிச் சமமாக நிறுத்துக்கொண்டு
திண்ணவே நிழலுலர்த்திப் பூப்புடத்தில்
சிறப்பாக வாங்கியல்லோ தயிலஞ்செய்யே. 968

செய்யப்பா தயிலத்தை விட்டு ஆட்டு
சிறக்கவே யெண்சாமம் வில்லைகட்டி
மெய்யப்பா ரவிதனிலே யுலரப்போடு
மெதுவாகச் சீலைமண் ணேழுசெய்து
வையப்பா வாலுகையில் தீயைமூட்டு
மைந்தனே கைபாக நழுகிடாமல்
பொய்யப்பா போகாமல் சரவுலையிலூது
போக்கெல்லா மணிமணியா யிறங்கும்பாரு. 969

இறங்குகின்ற சத்தெல்லா மெடுத்துக்கொண்டு
எளிதாகக் கரடுக்கு முன்மருந்துகூட்டி
அறங்குகின்ற தயிலத்தா லரைத்தெடுத்து
அடவாக வில்லைகட்டிச் சரவுலையிலூது
தறங்குகின்ற சத்தெல்லா மெடுத்துக்கொண்டு
சார்பாக முன்போல வுருக்குஅப்பா
உறங்குகின்ற ஆனையைப்போல் சத்துவேக
மொருநொடிக்குள் சூதமது விரைத்துப் போமே. 970

போமென்ற சூதத்தில் தங்கஞ்சேர்த்துப்
பூவையாம் நாகமிட்டுக் கெந்தியிட்டு
ஆமென்ற வாலுகையில் செந்தூரித்தா
லருணன்போல் செந்தூர மாகும்பாரு
ஒமென்ற நவலோகம் நூற்றுக்கொன்றீ
உயர்ந்ததுவும் பதினாறு மாற்றுகாணும்
தாமென்ற செந்தூரங்குன்றி யுண்ணு
சதகோடி வருஷமெல்லா மொருநாளாமே. 971

வக்கிராந்த சத்து

ஆமென்ற வக்கிராந் தசத்துகேளு
அப்பனே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
ஒமென்ற வெண்காரம் பலந்தானைந்து
உயர்ந்துநின்ற கெந்தகமும் பலந்தானைந்து

தாமென்ற கல்வத்திலிதனைப் போட்டுச்
சாரித்து அலரிப்பூச் சாற்றினாலே
தேமென்ற வில்லைகட்டி யுலரப்போட்டுச்
சிறப்பான சரவுலை யிலூதிடாயே. 972

ஊதிடவே வுருகியெல்லாஞ் சத்தாய்வீழு
முற்றுநன்றா யாராய்ந்து பொருக்கிக் கொண்டு
காதிடவே கறட்டையெல்லா முன்போலாட்டிக்
கலங்காதே துருத்திகொண்டு சட்டமாயூது
கோதிடவே ஐந்துதர முருக்கித்திரு
குறிப்பான சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
வாதிடவே காரமிட்டு வுருக்கியாட்டு
மைந்தனே தங்கமிட்டுத் தகடுவாரே. 973

தங்கமிட்ட தகட்டின்மேற் பூசக்கேளு
தன்மையாய்ச் சூதமொடு தாளகமுங்கெந்தி
பங்கமிடத் தங்கயிடை நிறுத்துக்கொண்டு
பரிவான கல்வமிட்டு முலைப்பாலாட்டி
துங்கமிடக் கட்டிமேற் பூசிப்பூசித்
துடியான மூன்றுபுடம் போட்டெடுத்து
நங்கமிட்ட நவலோகம் நூற்றுக்கொன்றீ
நலமான மாற்றதுவும் பனிரண்டாமே. 974

உலகவாதி

ஆமென்ற வுலகத்தோர் வாதந்தேடி
ஆராய்ந்து சரக்குகளைப் பார்த்துப்பார்த்து
போமென்று யிதனாலே சீவனங்கள்பண்ணப்
புல்லர்கள் தானெட்டு பேர்பத்து பேர்கூடி
காமென்ற யோசனைதான் மிகவும்பண்ணி
கலந்துநின்ற சாத்திரத்தில் மறைத்துப்போட்டார்
நாமென்ன செயநீரில் பார்ப்பதென்று
நலமாகச் சாறுவிட்டு அரைப்பார்பாரே. 975

அரைத்துமே புடம்போட்டு சரக்கைப்பனியில்வைத்து
ஆகாகா செயநீர் தானாச்சுதென்பார்
நிரைத்துமே புடம்போட்டுச் சரக்கைக்கட்டி
நேராக வாச்சுதென்று லோகத்தீய்ந்து
கரைத்துமே செம்பையிட்டுக் காரீயங்குத்தி
கசடகற்றி யூதியே யுரைத்துப்பார்த்து
மறைத்துமே நால்மாற்று ஆச்சுதென்று
மயங்குவா ருலகத்துச் சண்டிதானே. 976

சண்டிகள் தான் மெத்தவுண்டு வுலுத்தமாண்பார்
தருகுரும் பனதிலொருவன் பொன்னைச்சேர்த்து
மண்டியே கடைதனிலே வுரைத்துக்காட்டி
மனதுநொந்து புண்ணாகிப் போட்டபொன்போய்

தண்டியே ஒருகாசு ரண்டுகாசு
சார்பாகப் பின்னொன்று பார்ப்போமென்று
மண்டியே நான்போட்டே னீயும்போடென்று
மயிர்பிடித்துச் சண்டையிட்டு வழக்கம்பாரே. 977

வழக்கிட்டுச் சண்டைகொண்டு பின்னொருவன்
வந்துவாதி யொருபரதேசி வந்தானப்பா
நழக்கிட்டுத் தொழில்செய்து கடையில்விற்றான்
நான்பார்த்தேன் வெகுசுளுவு நீயும்பாரு
அழுக்கிட்டு ஒன்றோடே ஒன்றைச் சேர்த்து
அமர்த்தியவர் புடம்போடப் புகைந்துபோகு
புழுக்கிட்டு யிப்படியே சாகுமட்டும்
புலம்பியிரந் துண்டவர்கள் கோடியாமே. 978

இறந்திட்டார் சித்தர் சர்வாதிஞானி
யியல்பான சாத்திரத்தை ஆராய்ந்துபார்த்து
மறந்திட்டார் கருவையெல்லா மனதிலெண்ணி
மகத்தான பெரியோர்க்குத் தொண்டுபண்ணித்
திறந்திட்டார் குருசொன்ன மொழியைத்தானுஞ்
சிவயோக மார்க்கத்தின் வழியிற்சென்று
அறந்திட்டா ராத்தாளைக் கேட்டுக்கேட்டு
அவள் சொன்னபடி செய்வார் பெரியோர்தானே. 979

பெரியோர்க ளென்றுசொன்ன மொழியேதுக்குப்
பேரின்பச் சாத்திரத்தி லுரைத்ததாலே
பெரியோர்களாவது வுமேதாலென்றால்
பொய்மறந்து மெய்யுரைத்த பிரதாபத்தாலே
பெரியோர் களான தென்ன யோகநிஷ்ட்டை
பேரான கற்பமுண்டு காயசித்திசெய்தார்
பெரியோர்கள் குருபதத்தை மறவாமலென்றும்
போசாம லூமையைப் போலிருப்பார்பாரே. 980

பாரப்பா நிர்மூட வாதி கட்குப்
பலியாது யேமமென்ற வித்தைதானும்
நேரப்பா பொய்சொல்லும் புலையருக்கு
நிச்சயமாய்க் காணுகிற யோகம்பொய்யாம்
நேரப்பா காமமென்ற கர்மிகட்குத்தானுஞ்
செயமான காயசித்தி சோபம்பொய்யாந்
தூரப்பா குருசொன்ன மொழியுமாந்த
துட்டருக்குச் சகலநூலெல்லாம் பொய்யே. 981

பொய்யென்ற வார்த்தையது சொன்னானாகில்
போக்கோடே யேழுசென்ம புலையனாவான்
பொய்யென்ற காயசித்தி யென்றுசொன்னால்
பிறந்திடுவான் கழுதையென்ற சென்மமாகப்

பொய்யென்று யோகத்தைச் சொன்னானாகில்
புளுவான பாழ்நரகில் வீழ்வான்பாவி
பொய்யென்று பூசையைத்தான் தூசித்தோர்க்கும்
பேராக மூவேழு வங்கஷமும்பாழாமே. 982

பாழாகும் வஸ்துசுத்தி பானந்தன்னைப்
பதையாமற் சொன்னோர்க்கு அல்லலுண்டாம்
கூழாகுங் கஞ்சிக்கி ஏங்கிஏங்கிக்
கொடிதான பெருவயிறு யீளையெய்தி
மீளாகுங் குணம்வலி பித்துகொண்டு
மிகையெய்தி நகையெய்தி வீடுதோறும்
நாளாக யிரப்புண்டு கொடுப்பார்கைபார்த்து
நமனுக்குப் பகையாகி நரகெய்துவானே. 983

சகஸ்திரசத்து

எய்தவே சகஸ்திரமாஞ் சத்துகேளு
இதமான ஆதளையின் பால்தானல்லோ
கொய்தவே யெருக்கம்பால் சேரையொன்று
கோழிமுட்டை வெண்கருவுஞ் சமனாக்கூட்டி
பைதவே வெண்காரம் பலந்தானைந்து
பகருகின்ற கெந்தகந்தான் பலமும்நாலு
நைதவே துரிசியது பலமுமூன்று
நாட்டிடுவாய் தாளகமும் பலமும்ரண்டே. 984

ரண்டெல்லாம் பொடிபண்ணிப் பாலிற்போட்டு
நேர்ப்பான பன்றிநெய்யு மிருசேரைவிட்டு
பண்டெல்லா மயச்சட்டிக்குள்ளே வார்த்துப்
பருவமா யடுப்பேற்றி யெரித்துவாங்கிக்
கொண்டெல்லாங் குழம்பான பதத்திற்கிண்டிக்
கொட்டியே கலயத்திற் கட்டிவைத்துத்
துண்டெல்லாஞ் சகஸ்திரமாம் வேதையிலேபோட்டுத்
துவளவரை யெண்சாமம் வில்லைகட்டே. .985

வில்லைகட்டிச் சரவுலையிற் போட்டுவூது
மேலான சத்தெல்லாங் கழன்றுவீழும்
கல்லைகட்டி சத்தெல்லாம் பொருக்கிகொண்டு
கறடெடுத்துத் தயிலத்தி லரைத்துவூது
தில்லைகட்டி ஐந்துதர மூதுவூது
சிறப்பாகச் சத்தெல்லா மொன்றாய்ச்சேர்த்து
முல்லைகட்டிக் காரமிட்டு வுருக்கினாக்கால்
முத்துபோல் வெளுப்பாகுஞ் சத்தாகும்பாரே. 986

சத்தெடுத்துப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
தங்கமது நாலுக்கு ஒன்றுயிட்டு
பத்தெடுத்து நாகமது அரைப்பலந்தான் போட்டு.
பரிவாக வுருக்கியொன்றாய்ச் சூதம்போட்டுக்

கொத்தெடுத்துக் கெந்தகத்தை ரண்டுபலம்போட்டுக்
குறிப்பாகக் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
மத்தெடுத்து அந்திமல்லிச் சாற்றாலாட்டி
வகையாகப் பொடிபண்ணிக் குப்பிக்கேற்றே. 987

குப்பிக்கே யேற்றிடுவாய் வாலுகையில்வைத்துக்
கூசாமற் பனிரண்டு சாமந்தீப்போடு
குப்பிக்கே சூரியன்போற் சிவந்துகாணுந்
துடியாகப் பணவிடைதான் தேனிலுண்ணு
சிப்பிக்கே வுடலைப்போல் கனசட்டைதள்ளுந்
தேசியைப் போல் நடப்பதற்கு லெகுவுண்டாகும்
அப்பிக்கே ஆயிரத்துக் கொன்றேயீய
மறுபதென்று மாற்றாகு மறிந்துகொள்ளே. 988

அண்டசத்து

கொள்ளென்ற அண்டோடு சத்துபண்ணிக்
குன்றிமணித் தோல்போக்கிப் படிதானொன்று
அள்ளென்ற ரோமமது பலந்தான்பத்து
அப்பனே அண்டத்தின் மேலேசுத்தி
தள்ளென்ற கெசபுடத்தி னீற்றிக்கொண்டு
தயவாகப் பற்பத்தைக் கவசஞ்செய்ய
முள்ளென்ற முசலெலும்புத் தூள்தான்பத்து
முயற்சியா யெருக்கம்பால் விட்டு ஆட்டே. 989

ஆட்டியே யைந்தாநாள் வில்லைபண்ணி
அழகான பூப்புடத்தில் தயிலம்வாங்கிப்
பூட்டியே கலயத்திற்கட்டிவைத்துப்
பொரித்தெடுத்த முட்டைத்தோல் பலமும்பத்து
நீட்டியே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
நினைவாக வெண்காரம் பலமுமைந்து
தீட்டியே வீரமது பலமும்ரண்டு
சிறப்பாகக் கூடயிட்டுத் தயிலத்தாலாட்டே. 990

ஆட்டியே மூன்றுநாள் வில்லைகட்டி
அசங்காமல் சரவுலை யிலைந்துதரமூது
பூட்டியே சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
பொரிக்கார மிட்டுருக்கி யொன்றாய்ச்சேர்த்து
வாட்டியே ஒன்றுக்கு நாலுதங்க்
மருவிநின்று வுருகையிலே கூடவிட்டுத்
தீட்டியே நாகமிட்டுச் சூதமிட்டுச்
சிறப்பாகக் கெந்தியிட்டுக் களங்கமாமே. 991

ஆமிந்தக் களங்கெடுத்து நவலோகத்தி
லந்நூற்றுக் கொன்றிடவே யைம்பத்தைந்து
வாமிந்தப் பொன்னதுவும் பச்சைபோல்காணும்
வாய்ப்பாக்த் துப்பியிலே செந்தூரித்துண்ணு

சேமிந்தச் சடந்தானும் பச்சைநிறமாகுந்
தேகமென்றால் பொற்சிலை போலமுந்திக்காணுங்
காமிந்தக் கற்பாந்த கோடிகாலங்
காண்ணுமே யணுகாமல் சித்தியாமே. 992

நாகபற்பம்

சித்தியாம் வெகுசுளுக்கு நாகபற்பம்
திறமாகக் கேளுங்கள் மாணாக்காளே
பத்தியாம் நாகமது பலந்தான்பத்து
பகருகின்ற இலுப்பைநெய்யில் சாரம்போட்டு
முத்தியா மூவாறு தரந்தான்சாய்த்து
முசியாமல் தகடுதட்டிப் புளியிலைபோல்நறுக்கிக்
கத்தியாங் கடுகொரு பலந்தானைந்து
காரமா மிளகாயும் பலமுமஞ்சே. 993

அஞ்சான அபினைந்து பலமுந்தூக்கி
அழகான எலுமிச்சம் பழச்சாறுவிட்டு
துஞ்சான மூன்றுநாள் நேயமுடனரைத்து
துடியாக வழித்தெல்லாம் குழம்பாய்வைத்து
பிஞ்சான தகட்டுக்குப் பூசுபூசு
பேராக வாகையுட பட்டைவாங்கி
தஞ்சான திடித்துநன்றாய்த் தகடுவைத்து
சார்பாக மேல்மூடி புடத்தைபோடே. 994

மூடியே சீலைசெய்து அவிர்ப்புடமாய்ப்போட்டு
முயற்சியாய்ப் பத்துவிசை போட்டெடுத்து
ஆடியே விளக்கெண்ணெய் விட்டுருக்கி
அப்பனே நாகத்தைக் கிண்ணி பண்ணிக்கொண்டு
நாடியே கண்ணிநிரை சூதமப்பா
நலமான தாளகமுஞ் சரியாய்க்கூட்டி
தேடியே தேசிச்சாற் விட்டரைத்து
சிறப்பாக் கிண்ணிதனிலுள்ளே பூசே. 995

பூசியே வாலுகையில் சட்டிவைத்துப்
பொருந்தவே மணல்விட்டு அடியிற்றானும்
நேசியே யதின்மேலே யுப்புவிட்டு
நினைவாகக் கிண்ணிதனைப் பதித்துவைத்து
தேசியே யெலுமிச்சம்பழச்சாறுதானுஞ்
சிறப்பாக எரியிட்டுச் சுருக்குப்போடு
மாசியே பதினைந்து நாள்தானிதையை
மறவாமல் பேரூட்டிடுவா யிரவு பகல்தானே. 996

தானாகு மெலிமிச்சம் பழச்சாறுதானுஞ்
சாதகமாய் வற்றவற்றச் சுருக்குப்போடு
பானாகும் பதினைந்து நாள்தான்சென்றால்
பக்குவமா யெடுத்துவைப்பாய் பீங்கானுக்குள்

கானாகு மல்லிகைப் பூப்போலநிற்குங்
கசடற்ற செம்பிலே நூற்றுக்கொன்று
பேோளாகு மெழுகிலொட்டிக் கொடுத்தாயானால்
குறையாது பனிரண்டு மாற்றுமாமே. 997

வெள்வங்க பற்பம்

ஆமப்பா துரிசியது பலமுமொன்று
அழகான தாளகமும் பலமுமொன்று
வேமப்பா கள்ளிப் பால்வார்த்தரைத்து
விளங்கவே மூன்றுநா ளாகுமட்டும்
தாமப்பா குன்றிபோ லுண்டைப்பண்ணி
சார்பான வெள்ளீயம் பலந்தானாலு
போமப்பா குகையில்நின்று வுருகும்போது
போக்கன வுண்டையெல்லாங் கிராசம்போடே. 998

போட்டுடனே வுண்டையெல்லா மானபின்பு
பொடிபண்ணிச் சாரத்தூள் மேலேபோட்டு
ஆட்டுடனே கற்றாழஞ் சாற்றில்சாய்த்து
அடவாக யேழுதரமுருக்கிச் சாய்ப்பாய்
பூட்டுடனே வங்கத்தில் சமனாய்வெள்ளி
பொலிவாக வுருக்கியல்லோ கிண்ணிவார்த்து
மாட்டுடனே கிண்ணியிடை சூதம்வீர
மருவியதோர் வெள்ளையென்றபாஷாணங்காணே. 999

காணிந்த மருந்தெல்லாங் கல்வத்திட்டு
கடிதான யெருக்கம்பால் வார்த்துஆட்டிப்
பூணிந்த மருந்தெல்லாங் கிண்ணிக்குள்பூசிப்
பேரான வாலுகையின் மேலேவைத்து
ஆணிந்த வடுப்பேற்றிப் பட்சமொன்று
ஆறாமலெரியிட்டு அப்பால் வாங்கித்
தோணிந்தப் பீங்கானி லெடுத்துவைத்து
சூட்சமாங் குருவாகும் நூற்றுக்கொன்றீயே. 1000

ஈவதுதான் வங்கத்திற் செம்புதன்னி
லெடுத்துப் பாரிதுபத்து ஐந்துமாற்று
ஆவதுதான் சூதமது வெள்ளியாகு
மதிகமாம் பித்தளையும் வெள்ளியாகும்
போவதுதானே மவித்தை யிதுதானப்பா
பூடடினேன் தொந்தங்கள னேகங்கோடி
தேவதுதான் வெள்ளிவித்தை சுருக்குமெத்த
சிவசிவா சித்தர்சொன்னார் கரைகாணேனே. 1001

கரைகாணாச் சாத்திரங்கள் மெத்தவுண்டு
காரணமாங் காலாங்கி நாயானர்தாமும்
நிரைகாணா ஏழுலட்சம் விரித்துச் சொன்னார்
நேர்ப்பாக விரிவையெல்லாம் பார்த்துப்பார்த்து

உரை ாணச் சூத்திரமாய்ச் சுருக்குஅப்பா
 புற்பனமாந் தொழில்வகை யெல்லாஞ்சொன்னேன்
பரைகாணா யென்னூலைப் பொய்யென்றெண்ணிப்
 பாழாகும் நரகத்தி லெய்துவாரே. 1002

எய்துவா ரவிகோடி நரகத்தில்தானு
 மேனமென்ற பிறப்பாகச் சபிப்பாளாத்தாள்
அய்துவார் வாதம்பொய் யென்றுசொன்னா
 லாகாகா வங்கிஷங்கள் குடும்பமெல்லாம்
நய்துவார் நரகெய்தி வறுமையாகும்
 நாதாக்கள் பெரியோர்க ளிட்டசாபங்
கொய்துவாரா னாலுந்தீர்க்கக்கூடா
 கொடுஞ் சத்திரிஷி யிட்டசாபந்தானே. 1003

தானான குருவுடைய பதத்தைப்போற்றி
 சமுசயங்களி ருந்ததெல்லாங் கேட்டுக்கேட்டு
கோனான குருசொல்ல வாதம்பாரு
 குருவில்லா திருந்தாக்கால் நூலைப்பாரு
ஆனான நூலால்வாதம் பார்த்தா
 லணுகாது வாதமொன்றுந் தலைகீழாகுந்
தேனான சூதத்தின் சாமமட்டுந்
 தியங்கியே நரகெய்தி மாளுவானே. 1004

குளிகை சாரணை

மாளாமற் கனமான கற்பமுண்ணு
 மாயியைத்தான் பூசைபண்ணு மயக்கம்போக
தாளாமல் வாசியைத்தான் பூட்டிவாங்கிச்
 சதாநித்தம் குருபதத்தில் சரணம்பண்ணு
ஆளாம லம்பலத்தில் மனதையூனு
 ஆனந்த மாவதற்கு அமுதமுண்ணு
மீளாமற் கெவனத்தி லேறவென்றால்
 விடுஞ்சூதம் பசிக்குண்ண மருந்துகேளே. 1005

கேளுநீ யானையென்ற சூதராசன்
 கெவுனத்திற் பறக்குகின்ற மார்க்கமெல்லாம்
வேளுநீ பரிசத்தி லேமமாக
 விளங்கியதோர் பகலிரவு மொன்றாய்க்காட்ட
தாளுநீ நிமைக்குமுன்னே கோடிகாதஞ்
 சஞ்சரித்து அடுக்கெல்லாந் தாண்டியேற
மீளுநீ யட்டமா சித்தியாட
 'ருந்துவடவாக்கினிபோல் பசியுண்டாக்கே. 1006

ஆக்குவது சூதமது குகையில்நின்று
 அமளியா யுருகையிலே பூநாகசத்தை
நோக்குவது சமனாகக் கொடுத்துவாங்கி
 நேராகப் புடமிட்டு விடுவித்தாக்கால்

தேக்குவது சூதமென்ன ராசாவுக்குச்
சிவனுண்ட ஆலம்போல் பசியுண்டாகும்
நீக்குவது அரசனைப்போல் நினைத்ததெல்லாம் வெல்லும்
நேரிட்ட கெந்திசத்தை யிட்டுத்தாண்டே. 1007

தாண்டியேபின் னுபரசங்க ளெல்லாமூட்டு
தனித்தபின்பு மூலிகைக்குச் சத்தையூட்டு
தீண்டியபின் நவலோக மிட்டுத்தீரு
திறமாகப் புடத்தையிட்டு நவாலிட்டிணமூட்டு
வேண்டியபின் தனித்ததங்கச் செம்பையூட்டு
மேலான மணிபார்த்தா லருணனைப்போலாகுந்
தூண்டியே யிவ்வளவுங் கடந்துபோச்சு
சுகமான செம்பையினிச் சொல்லக்கேளே. 1008

குகைக்குள்பூச மருந்து

சொல்லவே குகைக்குள்ளே மருந்துபூசந்
துடியான சிலைகெந்தி நிமிளைக்காந்தம்
கொல்லவே பூநாக மிவைதானைந்து
கொடிதாகச் சமபாகம் நிறுத்துக்கொண்டு
கல்லவே கஞ்சாவின் விரையினொக்க
கலரவே ரோமத்தின் றயிலம்வார்த்து
பல்லவே மூன்றுநா ளாட்டியாட்டிப்
பக்குவமாய் ரோமத்தின் றயிலம்வாரே. 1009

வார்த்துமே யரைத்துநன்றாய்க் குகையிற்பூசி
வாகாகக் கட்டினதோர் சூதம்வைத்து
ஏர்த்துமே வுருகையிலே பூநாகசத்தை
இதமான சூதத்தி னிடையேதாக்கு
போர்த்துமே புடந்தானுஞ் சொல்லக்கேளு
புகழான வாளமத்தை சித்திரமூலங்
கோர்த்துமே தொடையோடு முள்ளங்கிதாழை
கொடிதான நாயுருவி வமுரிகூட்டே. 1010

கூட்டுநீ புரசோடு தேவதாரி
கொடிக்கள்ளி புனமுருங்கை சதுரக்கள்ளி
மாட்டுநீ யெள்ளோடு புறாவினெச்சு
மகத்தான பதினைந்தும் வெவ்வேறேவாங்கித்
தீட்டுநீ வெவ்வேறாய்ச் சுட்டுச்சாம்பல்
திறமாக வகைவகையாய்ப் படியளந்துபோட்டு
மூட்டுநீ பாண்டத்திற் கொட்டிநீயு
மூத்திரந்தான் பதினைந்து படியும்வாரே. 1011

படியைந்து கோமியத்தைக் கூடவாரு
பாங்கான கழுதையொடு குதிரயானை
நெடி.யைந்து ஆடோடு நாலுங்கேளு
நிலவரமா யமுரிபடி யைந்துவாரு

கொடியைந்து படிதானும் நாற்பதாச்சு
கூசாதே சாம்பலுக்குள் கரைத்துவைத்து
தெடியைந்து மூன்றுநாள் தெளிவைவாங்கிச்
சிறப்பாக வடுப்பேற்றி யெரித்திடாயே. 1012

எரித்திடவே குழம்புபோல் வருதல்கண்டு
இணங்கனொடு படிகாரம் சந்திரனுப்பு
அரித்திட்டுக் கல்லுப்பு சத்திசாரம்
ஆதியாம் நவச்சாரம் எவட்சாரந்தான்
பொரித்திட்ட வெங்காரஞ் சவர்க்காரந்தான்
புகழான கெந்தியுப்பு வளகிலுப்பு
சரித்திட்டு கமல்நுரையு மன்னபேதி
சார்பான துரிசியொடு பூநீறுதானே. 1013

புடத்துக்குராசன்

தானான வகைக்கொன்று பலமுமைந்து
சார்பாகப் பொடிபண்ணிக் குழம்பிலிட்டுப்
பானான பாஷாண நிலையைக்கேளு
பரிவான கெந்தியொடு சங்குசுண்ணந்
தேனான வீரமொடு வகைக்குமொரு பலந்தான்
சிறக்கவே எருக்கம்பால் படிதான்வாரு
கானான குழம்புதனி லொக்கவிட்டுக்
கலரவே யடுப்பெரித்து மெழுகுபோல்வாங்கே. 1014

வாங்கியே பீங்கானில் பதனம்பண்ணி
வளமான நெற்குழியில் புதைத்துவைத்து
பாங்கியே பட்சத்திற் பிறகுவாங்கிப்
பார்க்கையிலே புடராச னென்றுபேராம்
தேங்கியே கோபமாம் ருத்திரனாஞ்
சிங்கமாங் கொடுஞ்சூர வசுரனாகுங்
கோங்கியே கொடுங்கால விஷமதாகுங்
குளிகைக்குட் புடந்தானுஞ் சுருக்காம்பாரே. 1015

ப்பாரென்ற புடந்தானுஞ் சாத்திரத்தினுள்ளே
பலபலவாய்ச் சொன்னார்கள் நாதாக்கள்சித்தர்
நேரென்ற திருமூலர் ஆயிரத்தில்சொன்னார்
நேர்ப்பான காலாங்கி சொல்லக்கேட்டுத்
தேனென்ற வெழுநூற்றிற் றிறந்துசொன்னேன்
சிறப்பான சாறணைதான் செய்யுமார்க்கம்
வானென்ற ஆகாச வீதியோடில்
மயங்காமல் சிறுபிள்ளை யோடுங்காணே. 1016

காணிந்தச் சூதம்நின்று அருகும்போது
கலங்காதே சமபாகஞ் சத்தையூட்டு
பூணிந்த ரசம்பத்து சத்துபத்து
பொலிவாக வுருகையிலே புடமொன்றுநிட்டு

ஆணிந்த சத்துட[illegible] கமெல்லா
மப்பனே ப[illegible]லவாம் வர்ணங்காணும்
தோணிந்தச் சூதத்தை நிறுத்துப்பார்க்கத்
துடியாக மணியிடையே நிற்குமென்னே. 1017

என்னவே புடத்துக்கு யேதுஒப்பு
ஈசனுட புடந்தானுந் தோற்றுப்போகு
மன்னவே மணித்தாயார் சொல்வள்யானும்
வகைவகையாய்ச் சோதித்து யானுங்கண்டேன்
கன்னவே யுபரசங்கள் நூற்றிரண்டுபத்துங்
காரசாரங்கள் முதலிரு பத்தைந்து
பன்னவே பாஷாண மறுபத்துநாலும்
பாங்கான நவலோகம் நவாஷ்ட்டினமூட்டே. 1018

ஊட்டியே யிப்படிதான் சாறணையேசெய்யில்
ஒன்றாச்சுக் கெவனமது நூற்றுக்கோடி
மாட்டியே மறுதரந்தான் விடுவித்தாக்கால்
மகத்தான ஆயிரமாங் காதமோடும்
நீட்டியே ரவிதனிலே யீய்ந்தாயானால்
நிகரான சிகாரவரை காணலாகும்
ஆட்டியே நாலுதரம் விடுவித்தேற
அப்பனே லட்சமாங் காதம்போமே. 1019

போமெனவே ஐந்துதரம் விடுவித்தேறப்
பொருந்தஒரு கோடிக்கே யோடும்பார்
தாமெனவே ஆறானால் பரிசைவேதை
தாண்டியே யேழுதரங் கடிந்துயேறு
ஆமெனவே லக்கினங்கள் சொல்லப்போகா
அண்டொணா லோகத்தில் தெரிசவேதை
நாமெனவே காண்கிலென் சித்தவேதை
நண்ணியே யூதுகிலே வேதையாமே. 1020

வேதையாஞ் செப்பிடிலோ ரூபவேதை
விளங்கியே பழுக்கவென்றால் பழுக்கும்வேதை
காதையாங் குளிகைதனைக் காதில்வைத்துக்
கடுகியே யுரைப்பெல்ல பொன்னுமாகு
மாதையாம் பொன்னென்றே உன்னநெஞ்சில்
மலைகளெல்லாம் பொன்னாகும் மக்காள்பாரும்
பாதையாம் பகலிரவு மொன்றாய்ப்போகும்
பராபரத்தாய் சிவன்வந்து பூசிப்பாரே. 1021

பாருங்கள் உபரசங்கள் நூற்றிரண்டுபத்தும்
பாஷாண மூலிகையின் சத்துகூட
கோருமே நவலோகம் நவாஷ்ட்டிணங்கள்
குறிப்பாகக் குளிகைக்குக் கொடுத்துருக்கில்

வீருமே மாற்றதுவு மிருபதாகும்
விண்ணுலகி லிவ்வேதை கி டப்போமோ
ஆருநீ விடுவித்தால் சகடுமாச்சு
அறிந்தந்தப் படிசெய்வா னரனுமாமே. 1022

ஆமிந்த மார்க்கமாய்ச் சூதத்துக்கு
அணைத்தணைத்துச் சத்துகளை யீயானாகில்
போமிந்தக் கெவுனமோ சித்துபொய்யாய்ப்
போனமட்டுங் கண்டலைந்து பழுத்துமாய்வான்
காமிந்த வுபரசங்கள் பொன்னேயாச்சு
கடுஞ்சூத ராயனங்கே பகளித்தாக்கால்
தாமிந்த நாகமுண்ட சூதங்கேளு
தனிவேதை யாத்தாளு மறியாள்கேளே. 1023

கேளுநீ பனிரண்டாங் குளிகைதன்னில்
கெடியான சுரபியொடு போகந்தன்னை
வாளுநீ ரண்டுநவ லோகம்போது
மற்றமற்ற குளிகைதனை விடுவித்தேறு
வேளுநீ சத்துகளை யூட்டியூட்டி
விடுவித்துச் சாரணைதான் செய்யாவிட்டால்
தாளுநீ கெவுனமது எடுத்துஓடா
தனித்துமே பரிசத்தில் வேதையில்லையென்னே. 1024

என்னவே சாரணையைத் தீர்க்கமாய்ச்செய்யில்
எடுத்தோடு மண்டமெல்லாம் பதமுந்தாண்டி
பன்னவே ரவிகோடி யிடியோகோடி
பரிதியிலே கணங்களெல்லா மயங்கிப்போகும்
தன்னவே குளிகையினால் மேற்கொண்டோடுஞ்
சந்திரனி லோடையிலே நடுக்கங்காணும்
மன்னவே குளிகைதன்னால் குளிரும்போகு
மாயமாஞ் சொருபமெல்லாம் வெளியாய்ப்போமே. 1025

வெளியாகச் சூதத்தைக் கட்டாவிட்டால்
விரைந்தேறும் ஞானமெல்லாம் பொய்யாய்ப்போகும்
ஒளியான யோகமது பாழாய்ப்போகும்
உற்பனமாங் காயசித்தி யொன்றுமாகும்
அளியான ஆதார குறியுமில்லை
அணுகையிலே வேதிக்கு மேமமில்லை
நெளிதான மனதாலே யோகம்பார்பார்
நிர்மூட ஞானியென்று சொல்வார்பாரே. 1026

பாரப்பா மூலவன்னி துலங்கினாக்கால்
பளிச்சென்று ஆறுதலம் ஒளியாய்க்காணும்
நேரப்பா மேலாறும் வெளியாய்ப்போகும்
நேரான சாத்திரந்தா னாறுங்காணுஞ்

சேரப்பா பராபரையின் செயலுங்காணுஞ்
சேர்ந்தநிட்களமதுதான் வெளியாய்பபோகும்
ஆரப்பா நிராகாரத் தடங்கினோர்க்கு
மாதியந்த நாமமற்ற அந்தந்தானே. 1027

சிங்கி

தானென்ற சிங்கியொன்று சொல்லக்கேளு
சாதகமா யிதுலெக்கு முன்னேபாரு
ஏனென்ற வெழுநூற்றி லொன்றேசிங்கி
யிதமான வுடும்பாமை அழுங்கினோடு
கானென்ன தாயீசல் மாட்டினுடகொழுப்பு
கலந்தைந்தும் ஐங்கழஞ்சு கொழுப்புதூக்கி
பானென்ற புழுகைந்து சவாதுஐந்து
பருவமுட னொன்றாகப் பண்ணிக்கொள்ளே. 1028

கொள்ளையிலே பரிச்சுன்னந் துரிசுசுன்னங்
கொடிதான பூரமென்ற சுன்னமூன்றும்
விள்ளயிலே யொவ்வொன்று கழஞ்சுதூக்கி
விரவியொன்றாய் மத்தித்துக் கல்வத்திலப்பி
நள்ளவே ரயியில்வைத்துக் காந்திகாட்ட
நலம்பெறவே தயிலமாம் வழித்துவாங்கு
துள்ளவே நில்லாமல் நன்றாய்வாங்கு
துடியான பீங்கானில் வைத்துக்கொள்ளே. 1029

வைத்தபின்பு கூடயிட மருந்துகேளு
வளமான வெண்காரம் சாரம்கெந்தி
கைத்தபின்பு சவ்வீரம் அரிதாரம்பூரங்
கருநாபி கஸ்தூரி தொட்டிகூட
வைத்தபின்பு வகையொன்று பணந்தனொன்று
பண்பான வொன்பதையுங் கல்வத்திட்டு
தைத்ததிலே யரைத்துநன்றாய்த் தயிலத்தில்சேர்ந்து
சாங்கமாய் வைத்திடவே சிங்கியாச்சே. 1030

ஆச்சப்பா சூதமது கருத்துகொண்டு
அழகாகுங் கல்வத்தில் நிறுத்துவிட்டு
பாச்சப்பா சிங்கியொரு பொட்டுப்போடப்
பதையாமல் சேருரசம் வெண்ணெயாகும்
தேச்சப்பா கிளிபோலே கட்டிக்கொண்டு
சிறப்பான சூடனுட தீயில்வாட்டி
ஒச்சென்ற கரண்டியிலே எண்ணெய்குத்தி
யுருக்கிடவே வெள்ளிபொன் போலாடும்பாரே. 1031

ஆடுகிற சூதமென்ற ஆனைபட்டுதானால்
ஆகாச வாதமென்ன மசகமாச்சு
நாடுவாரிச்சூதம்தாழ் வடமாய்க்கோர்த்து
நல்மாக்ச சுகாசனத்தி லிருந்துகொண்டு

ஊடுவார் சிவசிவா வென்றுமுட் –
வுவந்துமுன்னே பஞ்சகர்த்தாள் நிற்பார்பாரு
தேடுவார் கேட்டதெல்லா மீவாரீசன்
செகசால வித்தையெல்லாந் தெளிந்துபோமே. 1032

போமென்ற சங்கினால் கட்டுச்சூதம்
புகழாக வோரிடைக்குத் தங்கம்நாலு
ஆமென்ற சுண்ணாம்புக் குகையில்வைத்து
அப்பனே புடம்போட்ட தங்கம்நீறும்
நாமென்ற நவலோக மாயிரத்துக்கோடு
நாமறியோ மிதனுடைய வர்ணந்தன்னை
ஓமென்ற பரிதிபோல் நிறமேயாகும்
உத்தமனே வெகுசுருக்கு ஓடிப்பாரே. 1033

ஓட்டுவது சவர்க்காரச் சுன்னந்தொட்டு
உப்பினுட வுறுதிதொட்டு வுயர்ந்துஓடும்
ஆட்டுவது வர்னமென்ன சூதத்தாலே
ஆச்சரியஞ் சிவப்பென்ன கெந்தியாலே
பூட்டுவது தங்கத்தால் காரத்தாலே
பூப்போலாஞ் சுன்னமென்ன வீரத்தாலே
நாட்டுவது விண்ணான பூரத்தாலே
நலமான வாதமிதி லடங்கிப்போச்சே. 1034

சவர்க்காரச்சுன்னம்

போகாமல் சவர்க்காரச் சுன்னஞ்சொல்வேன்
பொற்கொடிக்கு யீசனன்று புகழ்ந்தவாறு
வேகாமல் பூநீறு பதக்குவாரி
விரைந்துவொரு பாண்டத்தி லளந்துபோட்டு
ஏகாமல் மனுஷனுட அமுரிதானு
மிதமாகப் பதினாறு படிதான்வார்த்து
சாகாமல் மூன்றுநாள் கலக்கிவைத்துச்
சார்ந்தபின்பு நாலாநாள் தெளிவைவாங்கே. 1035

வாங்கியந்தத் தெளிவிலே கல்லுச்சுண்ணம்
வளமாகத் நிறுத்தியதைப் படிரண்டுபோட்டுத்
தேங்கியதை மூன்றுநாள் கலக்கிவைத்துச்
சிறப்பாக நாலாநாள் தெளிவைவாங்கி
ஓங்கியொரு படிதானுங் கல்லுப்புப்பொடித்து
வொக்கவந்த தெளிவிலே கரைத்துப்போடு
தாங்கியே நாலாநாள் தெளிவைவாங்கிச்
சமர்த்தாக வடிகனத்த சட்டியிலேவூற்றே. 1036

ஊற்றியே வெடியுப்புச் சீனந்தானு
முயர்ந்துநின்ற துரிசியொடு சாரம்வீரம்
ஆற்றிய வெள்ளையென்ற பாஷாணந்தா
னப்பனே வகைக்குமொரு பலந்தான்றூக்கிச்

சாற்றியே கல்வத்திற் பொடித்துமைப்பால்
சார்பாக முன்தெளிவி லொக்கப்போட்டுப்
போற்றியே யீசான பூசைபண்ணிப்
புகழாக வடுப்பேற்றி யெரித்திடாயே. 1037

எரித்திட்டுத் தீபம்போ லடிபற்றாம
லிதமாக வயத்துடுப்பால் கிண்டிக்கிண்டி
வரித்திட்டுக் குழப்புபோல் வருகக்கண்டு
வாகான நல்லேண்ணெய் சேரைவார்த்து
தரித்திட்டு மெழுகுபோல் வில்லைபண்ணிச்
சமரசமாய் ரவியிலிடக் காய்ந்தபின்பு
மரித்திட்டு மல்லிகையின் சாறுவாங்கி
வரிசையாய்த் தோய்த்தெடுத்து ரவியிற்போடே. 1038

போட்டுவா தினமேழு புத்தோட்டுக்குள்
பொலிவான யெண்ணெயெல்லா மோடேயுண்டு
காட்டுவாய் கறுப்பாக யிருக்கும்பாரு
கண்டுநீ மயங்காதே பாக்குபோல்சீவி
நீட்டுவாய் சீலைதனைக் கீழேபோட்டு
நேராக மல்லிகையி னிலைபரப்பி
மாட்டுவாய் சீவல்தனை மேலேவைத்து
மல்லிகையி னிலையாலே மூடிப்போடே. 1039

மூட்டியே நெல்லதனைப் பாண்டத்திட்டு
முயற்சியாய்த் தண்ணீரில் பிசறிக்கொண்டு
நீட்டியே யடுப்பேற்றி யதன்மேற்சீலை
நேர்பாக வைத்தெரித்து நினைவாய்வாங்கி
வாட்டியே மேற்சட்டி கவிழ்த்துமூடி
மயங்காதே யாவிகண்ட பதத்தில்வாங்கு
தேடியே சீவெல்லா மொன்றாய்ப் போகுந்
திறமான ரவிதனிலே காயப்போடே. 1040

காய்ந்தபின்பு யிலைபரப்பி நெற்பாண்டத்திட்டுக்
காரியமாய் முன்போலே அவித்தெடுத்து
மாய்ந்தபின்பு ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
மறுக்காலு மருந்ததனைச் சீவலாக்கிக்
காய்ந்தபின் புயிலைபரப்பி அவித்தெடுத்துக்
கவனமாய் மூன்றுதர மானபின்பு
ஒய்ந்தபின்பு வில்லைப்போல் பண்ணிக்கொண்டு
வுற்பனமாய் கீழ்மேலுங் கற்சுன்னம்வையே. 1041

வையப்பா சீலைக்குள் கிளிபோற்கட்டு
வளமாகச் சட்டியிலே வோடுநடுவேவைத்து
மெய்யப்பா மேலாக வட்டவோடு
மெல்லிதாய்த் தமருமொரு நூறுமிட்டுச்

செய்யப்பா கட்டியின்மே லூரப்போட்டுச்
சிறப்பாக மல்லிகையி னிலைதுவைத்து
கொய்யப்பா தண்ணியிலே போட்டுக்காய்ச்சி
குறிப்பாக சத்துவாரத்தால் விட்டுநீற்றே. 1042

நீற்றியபின் னாவியெல்லாம் வெளிபோகாமல்
நேர்பாகச் சட்டியால் மூடிப்போடு
ஆற்றியபின் மருந்தெடுத்துக் காயப்போட்டு
அப்பனே மறுசீலைக் குள்ளேவைத்து
சாற்றியபின் முன்போலே நீற்றுநீற்றுச்
சாதகமாய்ப் பதினொருக் கால் நீற்று நீற்று
மாற்றியபின் மருந்தெடுத்து அண்டோட்டிலிட்டு
வளமான மேல்மூடிச் சீலைசெய்யே. 1043

செய்திட்டு யைந்தெருவில் புடத்தைப்போடு
திறமாகச் சவர்க்காரச் சுன்னமாகக்
கொய்திட்ட சித்தரெல்லாம் வள்ளைதன்னைக்
குவிந்தபடி சொல்லாமல் மறைத்துப்போட்டார்
உய்திட்டுப் பிள்ளைகள்தான் பார்த்துப்பார்த்து
வுலகத்தோர் கரிகொண்ட காசில்லாமல்
எய்திட்டு ஏங்கியே வறுமைபூண்டு
இறந்திறந்து போனவர்கள் கோடிதானே. 1044

தானென்ற நூல்பார்த்து வுலகவாதி
தவித்துமே மனம்புண்ணாய் வெறுமையுற்று
வானென்ற வுலகத்தோர் சிரிக்கக்கேட்டு
மருட்கொண்ட பிசாசுபோல் வாயுலர்த்தி
ஊனென்ற சொத்துக்கு மிடமில்லாம
லுண்பாரை யுடுப்பாரைப் பார்த்துயேங்கி
நானென்ற ஆணுவத்தால் கெட்டோமென்று
நாய்போலத் திரிந்துமண்ணுள் மாளுவாரே. 1045

மாளாம லிருக்கவல்லோ வழலைதன்னை
மறையாமல் சொல்லிவிட்டே னெழுநூற்றுக்குள்ளே
கோளான சீஷருக்கு நூலியவேண்டாங்
கொடுத்தாக்கால் ரவிகோடி நரகமெய்தும்
தாளான என்னூலில் வழலைதன்னைச்
சாற்றினே னொருசொல்லுந் தவறில்லாமல்
நாளான அம்பரத்துக் கொப்பாய்ச் சொன்னேனே
நாதாக்கள் பதமறியச் சொன்னேன் காணே.. 1046

காணப்பா புடம்போட வழலைதன்னைக்
கடுங்காரச் செயநீரில் தோய்த்துப்போடு
பூணப்பா ஏழுநாள் ரவியிற்போட்டுப்
பேரான சுன்னமென்ற குகையிலூது

தோணப்பா யெடுத்துடனே பூப்போலநிற்கும்
தொடுகுறிபோல் சரக்கையெல்லாந் துடியாமற் கொல்லும்
வீணப்பா கெடுகாதே என்னூலைப்பாரு
வேதாந்த மாயியைத்தான் பூசிப்பாயே. 1047

பூரச்சுன்னம்

பூசித்து வழலையைத்தான் சுன்னம்பண்ணு
புத்திகெட்ட வாதிகளே மற்றொன்றாகா
நேசித்து வழலையினி லுப்பைக்கட்டு
நிலைத்தபின்பு பூரத்தைச் சுன்னம்பண்ணு
ஆசித்துப் பூரத்தால் தாளகத்தைப்பண்ணு
அதீதமாந் தாளகத்தால் வங்கத்தைநீற்று
வாசித்து வாலைதனைப் பார்த்தாலாமோ
வாதமென்ன கொஞ்சத்தி லாமோசொல்லே. 1048

சொல்லென்ற வங்கத்தில் துரிசிதனைநீற்று
துரிசியினால் சிங்கிபண்ணு சூதங்கட்டு
மல்லென்ற சூதத்தால் காயசித்தி
மக்களே கெவனத்தி லெட்டெட்டுஞ்சித்தி
அல்லென்ற கேழ்வியினால் வாதஞ்சுட்டு
ஆற்றாமல் பொய்யென்றா லென்னசொல்வேன்
நில்லென்றா லெறிந்தகல்லும் நிற்குமோசொல்
நிர்மூட வாதிகளே வழலைநீபாரே. 1049

பாரென்ற வழலையென்ற சுன்னமொன்று
பரிவாகச் சுன்னமொன்று கூட்டியாட்டே
நேரென்ற சலமாகுஞ் சலத்தினுள்ளே
நேர்ப்பாகக் கற்பூரம் வாரியிட்டுக்
காரென்ற ரவியில்வைத்து வுப்பாய்ப்பண்ணிக்
கடுகஐந்து சுண்ணமதில் வைத்துவூற்ற
தூரென்ற மல்லிகைப்பூப் போலாஞ்சுன்னந்
துரிசான சாரயிடை சுன்னங்கூட்டே. 1050

சாரநீர் வுப்புக்கட்டு

சாரமிட்ட செயநீராம் வீரம்போட்டு
தயங்காத கல்லுப்புச் சூடன்தானும்
ஆரமிட்ட வெடியுப்புச் சீனக்காரம்
ஐந்தையுந்தான் வகைக்குரண்டு பலமேகூட்டி
காரமிட்ட செயநீரா லரைத்தரைத்துக்
கடுரவியிற் போட்டுவா தினந்தானேழு
தாரமிட்ட சுண்ணாம்பு போலேயாகுந்
தயங்காத குழம்புபோல் பண்ணிக்கொள்ளே. 1051

பண்ணியதோர் குழம்புக்குள் பாறையுப்பு
பலம்பத்து நிறுத்தெடுத்து பாக்குபோல
ஒண்ணியதோர் குழம்புக்குள் பிசறிவாட்ட
வுற்றுநன்றாய்க் குழம்பையெல்லாம் பிரட்டிப்போடு

நண்ணியதோர் தீயிற்குள் முதிரவாட்டி
நலமான வுவர்மண்ணுங் கிளிஞ்சிநீறுங்
கண்ணியதோ ரமுரிவிட்டுப் பிசைந்துகொண்டு
கடுகவே கீழ்மேலு மடைபோல்மூடே. 1052

மூடியே சட்டியிலே யிட்டுநன்றாய்
முதிர்ந்தபின்பு அன்பதெரு வடுக்கிப்போடு
நாடியே குளிர்ந்தபின்பு எடுத்துப்பாரு
நலமான தங்கம்போ லிறுகிக்கட்டும்
சூடியே கவசமெல்லாந் தள்ளிப்போட்டுத்
துடியான சுட்டுகொடி யிலையைவாங்கித்
தேடியே பழச்சாறு யிட்டரைத்துத்
திறமாகக் கவிசித்துப் புடத்தைப்போடே. 1053

புடம்போட்டு வுப்புமணி பார்த்தால்மக்காள்
பேரான முத்துமணி போலக்காணும்
விடம்போட்ட சிவன்வந்து நிர்த்தஞ்செய்வார்
வேதாந்த மாயியிங்கே யட்டசித்தியாவாள்
தடம்போட்ட நிராதார வெளியுஞ்சொல்வான்
சதாநித்தங் குருபதத்திற் சரணம்பண்ணி
விடம்போட்டு யுப்புமணி செபித்தாலையா
மகத்தான சித்தியுமா மாட்டிப்பாரே. 1054

உப்புபாத்திரம்

மாட்டிப்பார் மெழுகாலே கிண்ணிபண்ணி
மண்கட்டி மெழுகதனைத் தள்ளிப்போட்டு
ஊட்டிப்பா ருப்புருக்கி யதிலேவார்த்து
உத்தமனே வுப்பினுட கிண்ணிதன்னில்
தீட்டிப்பா ரடித்தூரில் சீலைசெய்து
சிறப்பான வாலுகையின் மேலேவைத்து
வாட்டிப்பார் சூதமது சிறங்கைவிட்டு
மயிற்கொன்றைச் சாற்றினால் சுருக்குப்போடே. 1055

சுருக்கிடவே சூதமது வெண்ணெய்போலாந்
துடியான சூடனுட தீயில்வாட்டி
மருக்கிடவே கரண்டிதனி லெண்ணெய்குத்தி
யுருக்க மணிபோல நின்றாடுங் கரியினுள்ளே
உருக்கிடவே செம்பட்டில் தாழ்வடமாய்க் கோர்த்து
உத்தமனே ஐந்தெழுத்து மெட்டெழுத்துமோதி
நருக்கிடவே மனோன்மணித்தாய் முன்வந்துநிற்பாள்
நாடினதெல்லாஞ் சொல்லி ரட்சிப்பாளே. 1056

ரட்சிக்க வுப்பைநன்றாய்க் கட்டியாடு
நாதாந்த வழலையைத்தான் முன்னேபண்ணு
பட்சிக்கச் சூதத்தைச் செந்தூரம்பண்ணு
பார்க்கவே வேணுமென்றால் சாரணையைத்திரு

சூட்சிக்குள் வாயுவெல்லா மறுத்துத்தள்ளு
குடிலமாம் நாகத்தில் வழலைவாங்கு
பிட்சையெடுத் துண்ணாம லிரும்பாட்டிப்பாரு
பெண்மாய்கை தனையறுத்துப் பின்பாய்நில்லே. 1057

நில்லென்றால் வாழ்வுனக்கு நிற்குமோடா
நேராக வழலையது சிக்கினாக்கால்
அல்லென்ற குபேரனைப்போல் வாழ்வுண்டாகு
மாதித்த னுள்ளளவு முண்டுடுக்கலாகும்
கல்லென்ற கல்லுப்பு ரட்டிற்றானால்
காரமாஞ் சூதத்தைக் கவ்விக்கொல்லும்
மல்லென்ற சூதத்தி லெட்டெட்டுஞ்சித்தி
வாய்வீண ராய்த்திரிந்தால் மண்ணாய்ப்போமே. 1058

போகாம லுப்பைமுந்திக் கட்டியுண்ணு
பொய்யொன்றுஞ் சொல்லாதே புகழாம்பெண்ணை
ஏகாதே மனதுதனி லிச்சியாதே
யெவ்வுயிருந் தன்னியிர்போ லெண்ணிப்பாரு
வேகாத காலேது என்றுபாரு
வெளியோடே மனந்திருந்தி யொண்ணப்பாரு
பாகாமல் வாசியைத்தான் மூலத்திலுன்னு
பராபரியைப் பூசித்துப் பானம்பண்ணே. 1059

பானமென்றால் வெகுபிரிய மென்தாய்க்கப்பா
பரிவான சுத்தியொடு பலகாரமன்னம்
ஊனமில்லாப் புஷ்பமொடு வைத்துப்பூசி
வுயர்ந்தமணித் தாயார்க்கு வூட்டியபின்பு
தானமென்ற குருவுக்கு வுடல்பொருளுமாவி
தயவுடனே குருவுக்குத் தாரையூற்றி
வானென்ற மூலத்தில் வாசியைத்தான் மூட்டி
வாசிவா வென்று சொல்லிப் பானம்பண்ணே. 1060

பண்ணவே போகமுனி வயித்தியகோர்வை
பாடினேன் சித்தாக்கா மென்றுசொல்லி
திண்ணமுடன் வயித்தியத்தின் சார்புநூலை
திரட்டிவைத்தே னிந்நூலுக் குறுதிமெத்த
வண்ணமுடன் செய்பாக மறிந்துசெய்தால்
வலுவான நோயகன்று புனிதனாவாய்
எண்ணமுடன் காவியமாய்ப் பெருநூலாக
இயற்றினே னாயிரமு முற்றதாமே. 1061

போகர் வயித்தியம் முற்றிற்று

❀❀❀

அரும் பொருள் விளக்கம்

கரிமுகவன்- யானையைப் போன்ற முகத்தை உடையவன் விநாயகன்.

கருக்கள் - மறைமுகமாக இருப்பவை
கொட்டினேன்- தாராளமாகக் கொடுத்தேன்
திரிகோணம் - மூன்று கோடுகள் இணைந்த சக்கரம்.
ஒளியோங்காரம் - பிரணவ ஜோதி
கதலிப்பூ - வாழைப்பூ
பானு- சூரியன், கோடிபானு- கோடி சூரியன்.

அட்டமாசித்திகள் 1. அனிமா : ஆன்மாவைப் போலாதல். 2. மகிமா: மகத்துவம் பெறுதல். 3. கரிமா : எவ்வளவு உறுதியான பொருளாயினும் ஊடுருவிச் செல்லுதல் .4. லகிமா : லகுத்தன்மை அடைதல், 5. பிராப்தி : வேண்டியதை அடையும் திறன். 6. பிரகாமியம் : நிறைவு பெற்ற தன்மை. 7. ஈசத்துவம் : சகலவற்றிலும் மேன்மை அடைதல். 8. வசித்துவம்: எல்லாவற்றையும் தன் வசப்படுத்தும் ஆற்றல்.

தளம் - இதழின் அடிப்பாகம்
வாசி - மூச்சு
கும்பி - கும்பஹம் செய், மூச்சை உள்ளே அடக்கு
பூரி - பூரகம் செய், மூச்சை உள்ளே வாங்கு
ஊது - வெளியே விடுதல், ரேசி, ரேசகம்
புரியட்டம் - சூட்சும தேகம்.

யோகம் : சிவாத்மா பரமாத்மாவுடன் இணைவதற்கான சாதகம்.

உற்பனம் : தோன்றல்
சொக்கு : மனதை நிலைக்கச் செய்.
மருவி : சேர்ந்து
பாச்சலாய் - விடா முயற்சியுடன்
உன்னி - நினைத்து, சலிக்கும் - வெறுக்கும்
நெட்டிட்டேனும் - வேகமாக மேல் நோக்கிச் செல்லும்
வெகுண்டு - பயந்து, கடிகை - நொடி
தூட்டமாய் - பேரிரைச்சலாய். சுழி - சுழல்காற்று.
தேசி - கழுதை சோடசம் - பதினாறு
மாத்திரை- அளவு.

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கலீம் கங்கங் கணபதேயே நமஹ. இது மஹா கணபதி மந்திரம்.

பரிசம்- தொடும் உணர்ச்சி ஊறு - ருபம் - ஒளி
கந்தம் - மணம்
சுருதியந்தம் - உபநிடதம்
பிருத்வி : பூமிமண் அப்ப, நீர், வாயு : காற்று - தேயு.

நீ : ஆகாயம், விண்வெளி இவை பஞ்ச பூதங்கள்
வ ரதத்தம் - வரதஹஸ்தம், வழங்கும் கை.
அபயம் - தஞ்சம் (அளிக்கும் கை)

கமண்டலம் : கரகம் அட்சமாலை : ருத்திராட்ச மாலை பத்ம தளம் : தாமரை இதழ். பத்மமணி - தாமரை மணி (யாலாகிய மாலை) அசபா மந்திரம் ஹம்ச காயத்ரி.

சிங்குவை ஜிஹ்வா -நாக்கு
கதித்த : சுரக்கும் படியான
மச்சை : எலும்பினுள் இருக்கும் குழம்பு,
திரோதானம் : மறைத்தல்
சகத்திரம் : ஆயிரம்.

அட்டாங்கம் : யோகத்தின் எட்டு அங்கங்கள். அவை - இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

ஆர்ந்திட்டு : பொருந்தி நின்று எட்டெட்டு சித்தி

கெடி : கடிமணம், மனோ வாகனம் : மனமே வாகன மாய், வாசி : மூச்சு, திரேதையின் : மறைத்தல் (மாயை)

சாக்கிரம் : விழிப்பு

சங்கல்பம் : மனஉறுதி, விகல்பம் : மனமாறுபாடு.

சட்டை : மேல் தோல், போர்வை.

பஞ்சதாட்சரி : பதினைந்து எழுத்துக்களாலான தேவி மஹா மந்திரம்.

நந்தி ஏழாயிரம் : நந்தி தேவர் இயற்றிதாகச் சொல்லப்படும் நூல்.

நீர்க்காய் : தேங்காய்

கஞ்சன் : பிரமன், கஞ்சனதுபதி : பிரமன் இருப்பிடம், அதாவது சுவாதிட்டானம்.

மாலிருக்கும் பதி : மணி பூரகம்.
கமனம் : கமனக்குளிகை
சதம் : ஸ்திரம், நிலை
கமலினி : ஒருவகை இரச மணி, கசைத்திட்ட : கட்டிய.

சாரணை : இரசமணிக்கு தீட்சை செய்விக்கும் முறை. குரு : உலோகங்கள், உபரசங்கள், பற்ப செந்தூரங்களை கட்டவும், வீரியப்படுத்தவும் பயன்படும் முக்கியமானமருந்து.

லயம்: ஒன்றித்தல்
நயனம்: மெருகு
கருப்பான பாகு : கரும்புப் பாகு.
மிடுக்காய் : மேன்மையாய்
தேகம் தூக்கும் : உடல் மேலெழ செய்யும்.
சமாதி : யோகத்தின் இறுதி நிலை.
மகாபோதம் : மகாஞானம்

எய்தாமல் : அமையாமல், நன்பதே : நன்மையே.

நாதம் : 10 வித ஒலிகள். சுத்தசைதன்ய : உண்மையான தூய ஆன்மா.

ஓதம் : கடல்

வராட்டியன் : விராட் புருஷன் (விஸ்வரூபம்)

மற்கடம் : குரங்கு, மந்தி, பெண் குரங்கு (மனதை குறிப்பவை)

சிற்பறை : ஒன்மணித்தாய்

ஆங்காரம் : நான், எனது எனும் எண்ணம்

இரும்பாக : குறும்புத் தனமாக

கை தட்டாது : தடையில்லாமல்

மருள் : மயக்கம், மகாபோகி : அதிகமாக போகம்,

துய்ப்பவன் : தூசகன் பலரையும் பழிப்பவன்.

அழம்பன் : கேடு செய்பவன்

தக்கான : மேலான, தண்ம வரை : புருவமத்தி வரை அசங்கமில்லாத : விரையில்லாத.

தூரான் : தூற்றுபவன்.

எரிமுகத்தன் : சிடுமூஞ்சி, துடுக்கன் : விரைந்து தீமை செய்பவன். சண்டாளன்: தகாத முறையில் நடப்பவன்.

ஈனன் : திடமில்லாதவன், வீணாங்கன் : பயனற்ற வாழ்க்கை நடத்துபவன்.

வாதி : குதர்க்கமாக விவாதிப்பவன், தர்க்கன் : எடுத்ததெற்கெல்லாம் தர்க்கம் செய்யும் குணமுள்ளவன்.

யாக நூல் - யாகம் செய்வது பற்றி விளக்கும் நூல்- காக நூல்- காயநூல் (உடல் நலம் தரும் மருந்துவ நூல்) நாக நூல் - தேவநூல் (கடவுள் தன்மை பொருந்திய நூல்) ஞான நூல்- கடவுள் தன்மை அடைய வழி கூறும் நூல்- தருமி - அறவழி நிற்பவன். கூர்மி - புத்தி கூர்மைஉள்ளவன் கர்மி - விதிப்படி கர்மங்களை செய்பவன்.

சாந்தன் - அமைதி உடையவன்

அவதூதி - ஆச்சாரங்களை கடந்தவன், முகடு -உச்சி

பருமதி நல் ஊறல் - முழுநிலவிருந்து ஊறும் அமுதம் பரம ஒளி - ஒளிப்பாழ்.

எழுவகை தோற்றம் - தேவர், மனிதர், விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, தாவரம் என்பவை.

திர்க்கம் - தீர்க்கதரிசனமு உடையவன் [illegible]

வன்னி : தீ, சுழுத்தி : ஆழ்ந்த உற[illegible]

உற்பனம் - தோன்றும் : லயம் - கலததல்.

ஓடுகினம் : மறைதல், பா?கைடாழ் : வழங்குவ்ரன்

உதகத்தால் கொண்டவர் : நீரால் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டு பெற்றுக் கொண்டவர்.

அந்தம் - அழகு : குளபதம்: நெற்றி வரை.

சோமசடை : திங்கள் அணிந்த சடை : மருவும் :கூடும்

மனம் ஜெயித்தால் : உள்ளத்தை அடக்கினால்.

தாமரை
நூலகம்